Sri Murthi Krishnan

சொக்கன் செட்டி.

[துப்பறியும் நாவல்]

படியுங்கள்

வடுவூர்

K. துரைசாமி ஐயங்கார் B.A.

M.S. ராமுலு கம்பெனி

234, எஸ்.பிளனேட் - MADRAS

சொக்கன்செட்டி

[ஓர் துப்பறியும் நாவல்]

வடுவூர்
கே. துரைசாமி ஐயங்கார் B.A.

எம்.எஸ்.ராமுலு கம்பெனி
286, எஸ்பிளனேட் - சென்னை-1.

பதிப்புரை

நவரஸம் ததும்பும் நாவல்களில் "சோக்கன் செட்டி" யும் ஒன்று. வடுவூர்-துரைசாமி ஐயங்காரின் அற்புதப் படைப்பு; துப்பறியும் நவீனம்.

இதில் பழம் புலிக்தும், புதுப் புலிக்தும் நடக்கும் போட்டிப் பந்தயம் படிக்கப் படிக்கப் பரவச மூட்டும். கௌரவ இன்ஸ்பெக்டர் ஜெனரல் திகம்பர சாமியார் துப்பறிபவராகத் தோன்றி யாவரையும் திகைப்புறச் செய்யும் அற்புதத் திருவிளையாடல்கள் அடங்கிய கதை. இன்பச் சுவையை அனுபவிக்க விரும்புகிறவர்களுக் கேற்றது "சோக்கன் செட்டி"!

வெளியிடுவோர்.

இரண்டாம் பதிப்பு: அக். 1952

விலை ரூபாய் 2—0—0

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

சொக்கன் செட்டி

அல்லது

புதுப்புலிக்கும் பழம் புலிக்கும் போட்டிப் பந்தயம்!

—○—

1

கோட்டகைக் குப்பன்—கூத்துச் சுப்பன்

"அது சரிதான். இந்தக் கொட்டகையின் சொந்தக்காரர் எங்கே இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமோ?" என்று வினவிவிட்டு ஒரு மனிதர் தமக்கெதிரில் தட்டில் இருந்த இட்டிலியின் துண்டொன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். அவருடைய பார்வை எதிரில் சிறிது தூரத்திலிருந்த ஓட்டல்காரரின் மேல் சென்றது.

அந்தப் புது மனிதருக்கு வயது சுமார் நாற்பது இருக்கலாம். அவர் ஒற்றைநாடியான சரீரமுடையவராயிருந்தமையால் சற்று உயரமாயிருப்பவரைப் போலக் காணப்பட்டார். அவருக்கு எதிரிலிருந்த ஓட்டலின் சொந்தக்காரர், "ஏன்? என்ன விசேஷம்? அந்தக் கொட்டகையில் ஏதாவது நாடகம் நடத்தப் போகிறீர்களா?" என்று வினவினர்.

புது மனிதர்:—நான் நாடகம் நடத்தப் போவதில்லை. வேறு ஒரு காரியமாகக் கேட்கிறேன்.

ஓட்டல்காரர்:—அவர் இந்த ஊருக்கு வெளியிலிருக்கும் ஒரு பங்களாவில் இருக்கிறார். அவரை உங்களுக்குத் தெரியுமா?

புது மனிதர்:—அவரை எனக்குத் தெரியாது. இப்போது அவர் இந்தக் கொட்டகையில் நாடகம் நடத்துகிறாரல்லவா? அவரே அதை நடத்துகிறாரா, இல்லாவிட்டால் வேறே கம்பெனிக்காரர்கள் இங்கே வந்து நடத்திவிட்டுப் போகிறார்களா?

ஓட்டல்காரர்:—இரண்டும் உண்டு.

புது மனிதர்:—அவர் எப்படிப்பட்ட மனிதரென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?—என்று வினவியபடி இன்னொரு இட்டிலித் துண்டை வாயில் போட்டுக் கொண்டார்.

ஓட்டல்காரர்:— அவரோடு நான் அதிகமாய்ப் பழகினதில்லை. அதனால் அவருடைய விஷயம் எதுவும் எனக்கு சரியாய்த் தெரியாது. ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் அவர் மிகவும் நல்லவர்தான். அவர் காப்பி சாப்பிடுவதற்கு சாயங்கால வேளைகளில் இங்கே வருவார்.

புது மனிதர் :— (இன்னொர் இட்டிலித் துண்டை வாயில் போட்டுக்கொண்டு) சரிதான். நீங்கள் ஒரு காரியம் செய்ய முடியுமா?—என்றார்.

அதைக் கேட்ட ஓட்டல்காரர் இட்டிலி சாப்பிட்டதற்குக் காசு கொடுக்காமல் கடன் சொல்லிவிட்டுப் போகப் போகிறாரோ, இல்லாவிட்டால், காசு இல்லாமல்

சாப்பிட்டு விட்டதற்காக ஏதாவது கதை சொல்லப் போகிருரோ என்று சந்தேக மடைந்தவராய் மற்ற வரைப் பார்த்தார்.

அந்தப் புது மனிதர் உடனே, "வேறென்றுமில்லே. நான் இந்த ஊருக்குப் புதியவன். இந்த ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லே. அதனல், என்னேடு நான் இதோ கொண்டுவந்திருக்கும் டிரங்குப் பெட்டியை இங்கேயே வைத்துவிட்டுப் போய், கொட்டகையின் சொந்தக்காரரைப் பார்த்துவிட்டு, வருகிறேன்; திரும்பி வந்த உடன் எடுத்துக்கொண்டு போகிறேன்" என்று கூறிவிட்டு சிறிது தூரத்தில் வைக்கப்பட்டிருந்த டிரங்குப் பெட்டியைக் காட்டினர்.

ஓட்டல்காரர் உடனே, "அது ஒரு பிரயாசையா. பெட்டி இருக்கட்டுமே. அதோ ஒரு காகிதக் கட்டு வைத்துக்கொண் டிருக்கிறீர்களே! அது என்ன ?" என்ருர்.

புது மனிதர்:—அது ஒரு நாடகம்.

ஓட்டல்காரர்:—ஓஹோ! இது இன்னும் அச்சாக வில்லேபோ லிருக்கிறது ?

புது மனிதர்:— (புன்சிரிப்புடன்) இன்னும் அச்சாக வில்லே. ஒரு வாரத்திற்கு முன்புதான் இதை எழுதி முடித்தேன்—என்று கூறிவிட்டு மிகுந்திருந்த இட்டிலியை சாப்பிட்டுவிட்டு, காப்பிக் கொண்டுவரும்படி சொல்ல, ஓட்டல்காரர் அம்பியை ஏவினர்.

ஓட்டல்காரர்:—ஓஹோ! நீங்களே இதை எழுதினீர்களா! சரிதான். இந்த நாடக சம்பந்தமாகத்தான் கொட்

டகையின் சொந்தக்காரரைப் பார்க்கவேண்டு மென்கி றீர்களா ?

புது மனிதர் :— ஆம். அதற்காகத்தான் அவரைப் பார்க்கப் போகிறேன்.

ஓட்டல்காரர் :— கொட்டகையின் சொந்தக்காரரை இதற்கு முன்பு உங்களுக்குத் தெரியுமோ ?

புது மனிதர்:—அவரை நான் பார்த்ததுமில்லை. அவர் யாரென்பதும் எனக்குத் தெரியாது.

ஓட்டல்காரர்:—நிரம்பவும் பிரபலமான ஆசாமி ஒரு வர் நாடகம் எழுதுகிறரே! அவரா நீங்கள் ?

புது மனிதர்:—ஓஹோ! அவரைப் பற்றிச் சொல்லு கிறீர்களோ ! நான் அவ்வளவு பிரபலமானவனில்லை. நான் எழுதிய முதல் நாடகமே இதுதான்.

ஓட்டல்காரர் :— அப்படியா ! உங்களுடைய பெய ரென்னவோ ?—என்று வினவினர். அதே சமயத்தில் காப்பி வந்து சேர்ந்தது. புது மனிதர் காப்பியை ஆற்றிய படி, "என்னுடைய பெயரைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்க மாட்டீர்கள். என்னை சுப்பிரமணியன் என்று சொல்லுவார்கள்—என்றார்.

ஓட்டல்காரர்:—ஓஹோ ! அப்படியா! நீங்கள் வேறு ஏதாவது காரியமாகக் கொட்டகையின் சொந்தக்கார ரைப் பார்க்க விரும்புகிறீர்களோவென்று நினைத்தேன். இப்போதுதான் எனக்கு விஷயம் விளங்குகிறது. இந்தக் கொட்டகையின் சொந்தக்காரர் ஒரு மாதிரியான மனி தர்; 'தானென்று' எண்ணும் மமதை சுவபாவமுடைய வர். அவரிடம் நீங்கள் சிபார்சில்லாமல் சுலபமாய்ப் பேசி உங்களுடைய காரியத்தை முடித்துக்கொள்ள

முடியாது. ஏனென்ருல், போன வருஷம் என்னுடைய தம்பி உங்களைப்போலவே ஒரு நாடகம் எழுதி எடுத்துக் கொண்டுபோய் அவரைப் பார்க்க முயன்ருன். அவரை சுலபத்தில் பார்க்க முடியவில்லை. சுமார் 20 தடவைகள் அலைந்த பிறகு, அவரைக் கண்டு பேசினுன். அவர் அதைப் படித்துப் பார்க்காமலே கதை உபயோகப் படாது என்று சொல்லிவிட்டார். ஆனுல் உங்களுடைய சங்கதி எப்படியோ அது எனக்குத்தெரியாது. யாராவது உங்களுக்கு சிபார்சுக் கடிதம் கொடுத்திருக்கிருர்களா?

புது மனிதர்:—(காப்பியை சிறிது சாப்பிட்டுவிட்டு) அப்படியா சங்கதி! நான் சிபார்சுக் கடிதம் கொண்டு வரவுமில்லை; அது வேண்டுமென்றும் எனக்குத் தோன்ற வில்லை.

ஓட்டல்காரர்:— (சற்று யோசித்த பிறகு) அப்படி யானுல், நான் உங்களுக்கு ஒரு யுக்தி சொல்லிக் கொடுக் கிறேன். கேளுங்கள்.

புது மனிதர்:—சொல்லுங்கள்.

ஓட்டல்காரர்:—இந்த ஊரில் கவிராயர் ஒருவரிருக் கிருர். அவர், கொட்டகையின் சொந்தக்காரருடைய வீட்டின் முன்புறத்தில் தினம் ராமாயணம் வாசிக்கிருர் அவர்தான் கொட்டகைக்காரருக்கு வேண்டியவர். அவரை உங்களுக்கு நான் பரிச்சயம் செய்து வைக்கி றேன். அவர் மூலமாய் நீங்கள் கொட்டகையின் சொந் தக்காரரைப் பாருங்கள்.

புது மனிதர்:—அவர் சிபார்சு செய்தால் கொட்டகை யின் சொந்தக்காரர் என்னுடைய விஷயத்தை கவ னிப்பா ரல்லவா?

ஓட்டல்காரர்:—ஆம். அதைத்தான் நான் சொல்லு கிறேன்.

புது மனிதர்:— (மறுபடியும் சிறிது காப்பி சாப் பிட்டுவிட்டு) உங்களுடைய தம்பி எழுதின நாடகம் என்னவாயிற்று?

ஓட்டல்காரர்:- நல்லவேளையாக அதை வேறொருவர் வாங்கிக் கொண்டார்.

புது மனிதர்:—அந்த சமயத்தில் இந்தக் கவிராயருக் கும் உங்களுக்கும் பழக்க மில்லையா?

ஓட்டல்காரர்:—அந்த சமயத்தில் அவர் இந்த ஊரி லில்லை; வெளியூருக்குப் போயிருந்தார். அதோடு அவ ருடைய சிபார்சு வேண்டுமென்று நாங்கள் நினைக்க வில்லை.

புது மனிதர்:—அந்த மனிதர் சொன்னால் அவர் கேட் பாரா என்பதுதான் எனக்கு சந்தேகமா யிருக்கிறது.

ஓட்டல்காரர்;— அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவர் ராமாயணம் வாசிப்பதற்காக அவருடைய வீட்டிலேயே ஒருவேளை சாப்பாடு சாப்பிடு கிறார். அவரிடத்தில் கொட்டகையின் சொந்தக்கார ருக்கு பயபக்தி விசுவாசம் அதிகம். அதனால்தான் சொல் லுகிறேன்.

புது மனிதர்:— (காப்பி சாப்பிட்டுவிட்டு) கவிராய ருடைய ஜாகை எங்கே இருக்கிறது?—என்று வின வினார்.

ஓட்டல்காரர் அதற்கு மறுமொழி கூறுவதற்குள், சுமார் 60 வயது மதிக்கக்கூடிய ஒருவர் அங்கே வந்து சேர்ந்தார். அவருடைய முகம் முழுதிலும் விபூதிப் பட்

டைகள் காணப்பட்டன. அவருடைய கழுத்தில், இரண்டு வடமுள்ள ஒரு ருத்திராக்ஷ மாலே காணப்பட்டது. அவர் இடுப்பில் துணியைப் பஞ்ச கச்சம் வைத்துக் கட்டிக்கொண் டிருந்தார்; அதனுல் துணி கணைக்காலுக்குமே லிருந்தது. அந்த துணிக்குமேல் இன்ஞெரு துணியை மூன்று விரற்கடை அகலத்திற்குக் கொசுவி அவர் தமது இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண் டிருந்தார். ஆள் ஆஜானுபாகுவாய்ப் பெருத்த தொந்தியுடன் காணப்பட்டார். அவரைக் கண்டதும் ஓட்டல்காரர், "வாருங்க கவிராயரே! இப்போது உங்களேப் பற்றிதான் பேசிக்கொண் டிருந்தோம்" என்ருர்.

கவிராயர் புன்சிரிப்புடன் நிதானமாக நடந்துவந்து அங்கிருந்த ஒரு மேஜையின்மேல் உட்கார்ந்துகொண்டு "என்ன விசேஷம்?" என்ருர்.

ஓட்டல்காரர்:—(புது மனிதரைச் சுட்டிக் காட்டி) இவரை உங்களுக்குத் தெரியுமா?

கவிராயர்:— (புது மனிதரைப் பார்த்துவிட்டு) தெரிய வில்லேயே! உங்களுக்கு இந்த ஊர்தானே?

புது மனிதர்:—நான் இந்த ஊரான் இல்லே.

கவிராயர்:—(ஓட்டல்காரரை நோக்கி) என்னேப் பற்றி ஏதோ பேசினதாகச் சொன்னீர்களே! என்ன பேசினீர்கள்?—என்ருர். நடந்த விஷயங்களே யெல்லாம் ஓட்டல்காரர் கூறினுர். கவிராயர் அதைக்கேட்ட பிறகு புது மனிதரை நோக்கி, "அப்படியா! நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். இன்றைக்கு நான் சுந்தரகாண்டம் வாசிக்கப் போறேன். அந்த சமயத்தில் நீங்கள் அங்கே வந்தால் நான் அவருக்கும் உங்களுக்கும் பரிச்சயம்

பண்ணி வைக்கிறேன். அது சரிதான். நீங்கள் என்ன நாடகம் எழுதி இருக்கிறீர்கள்?'' என்று வினவினார்.

புது மனிதர்:—ராமாயணத்திலிருந்து ஒரு பாகத்தை எடுத்து எழுதியிருக்கிறேன். பாதுகா பட்டாபிஷேகம் உங்களுக்குத் தெரிந்ததுதானே. அதைத்தான் எழுதி யிருக்கிறேன்.

கவிராயர்:—(சந்தோஷத்தோடு) அப்படிச் சொல் லுங்கள்! ராமாயணம் அவருக்குப் பிடிக்கும். நான் கட்டாயம் சிபார்சு பண்ணுகிறேன்; சாயங்காலம் கட் டாயம் 7-மணிக்கெல்லாம் வாருங்கள்—என்றார்.

அதற்குமேல் சிறிது நேரம் வரையில் அவர்கள் பேசிக்கொண் டிருந்த பிறகு கவிராயர் புறப்பட்டுப் போய்விட்டார். அது சாப்பாடு ஓட்டலாகையால் சுப் பிரமணியன் என்னும் அந்தப் புது மனிதர், தாம் அங்கேயே சாப்பிடுவதாகக் கூறிவிட்டார். அவர் அந்த ஊருக்குப் புதியவ ராதலால் அதைச் சுற்றிப் பார்ப் பதில் அன்றைய பொழுதைக் கழித்தார்.

மாலை ஆறேமுக்காமல் மணிக்கு ராமாயணம் வாசிக்கப்படு மிடத்தை அவரடைந்தார். அப்போது கவிராயர் அங்கே காணப்படவில்லை யாகையால் கொட் டகையின் சொந்தக்காரரது வீட்டிற்குள் ளிருப்பா ரென் றெண்ணியபடி உள்ளே நுழைந்து நடையை யடைந்து தலையை நீட்டி அப்பால் பார்த்தார். உள்ளே காணப்பட்ட ஒரு சாய்மான நாற்காலியில் ஒருவர் சாய்ந்திருந்தது தெரிந்தது. இருவரும் ஒருவரை யொரு வர் பார்த்தனர். நாற்காலியில் படுத்திருந்தவர் உடனே, ''யாரையா அது? வெளியில் போம். வெளியில்தான் காலக்ஷேபம் நடக்கும். அங்கே போம்'' என்றார்.

உடனே சுப்பிரமணியன் புன்னகையுடன், "நான் காலக்ஷேபத்திற்காக வரவில்லை. கவிராயரைப் பார்ப்பதற்காக வந்தேன்; அவர் இங்கே உள்ளே இருக்கிறாராவென்று பார்த்தேன்" என்றார்.

மற்றவர்:—நீர் யார்? கவிராயரை எதற்காகத் தேடுகிறீர்?

சுப்பிரமணியன்:—அவரை ஒரு முக்கியமான காரியத்திற்காகத் தேடுகிறேன். அவர் என்னைப் பற்றி உங்களிடம் சொல்லி யிருப்பாரே.

மற்றவர்:—அப்படியா! உம்முடைய பெயரென்ன? நீர் யார்?

சுப்பிரமணியன்:— என்னுடைய பெயர் சுப்பிரமணியன். நான் ஒரு நாடகம் எழுதி யிருக்கிறேன்.

மற்றவர்:— நான் இதற்கு முன் உம்முடைய பெயரை கேட்டதேயில்லை. இருந்தாலும் பரவாயில்லை. என்ன நாடகம் எழுதி யிருக்கிறீர்?

சுப்பிரமணியன்:— ராமாயாணத்தி லிருந்து நான் ஒரு பாகத்தை யெடுத்து நாடகமாய் எழுதி யிருக்கிறேன்.

மற்றவர்:—(வியப்பைத் தோற்றுவித்த குரலில்) என்ன! ராமாயாணமா! அதில் எந்த பாகத்தை எழுதி யிருக்கிறீர்?

சுப்பிரமணியன்:— பாதுகா பட்டாபிஷேகத்தை எழுதி யிருக்கிறேன்.

மற்றவர்:— அப்படியா! நான் சொல்லுகிறேனே யென்று நீர் வித்தியாசமாய் நினைத்துக் கொள்ளக்

கூடாது. ஜனங்களுக்கு ராமாயணத்திலிருந்த மதிப்பு இந்தக் காலத்தில் போய்விட்டது. ஆகையால் பாதுகா பட்டாபிஷேகத்தை எழுதுவதற்கு பதிலாக நீர் வேறு எதையாவது எழுதியிருந்தால் நான் பார்த்திருப்பேன். நீர் இதை யெல்லாம் எழுதுவதில் பயனில்லை. சமூக சம்பந்தமான நாடகமே இப்போது தேவை.

சுப்பிரமணியன்:—அப்படியானால் நாம் ஒரு ஏற்பாட்டை செய்து கொண்டால், நான் சமூக சம்பந்தமான நாடகம் ஒன்றை எழுதுகிறேன்.

மற்றவர்:—அதற்கு எந்த ஏற்பாடும் அவசியமில்லை. அதை நீர் எழுதி எப்போது கொண்டு வந்தாலும் நான் உடனே அதை வாங்கிக்கொள்ளுகிறேன். அதை நீர் எழுதுவதற்கு எவ்வளவு காலமாகும்?

சுப்பிரமணியன்:—சுமார் ஒரு மாத காலமாகும்.

மற்றவர்:—சரி, ஒரு மாதத்தில் எழுதிக் கொண்டு வாரும்—என்றார். சுப்பிரமணியன் அதை ஏற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு தாம் இருந்த ஓட்டலை யடைந்தார். மறுநாள் அந்த ஊரில் ஒரு வீட்டில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு,அவர் தமக்கு எழுதுவதற்கு வேண்டிய உபகரணங்களை வைத்துக் கொண்டு நாடகம் ஒன்றை எழுத ஆரம்பித்தார். சுமார் ஒருமாத காலத்தில் நாடகம் முடிவடைந்தது.

அடிக்கடி ராமாயணக் கவிராயர் அங்கே வந்து அவருடைய நாடகத்தை படித்து அதைப் பற்றி தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டேயிருந்தார்; சுப்பிரமணியன் அதை முடித்து, எடுத்துக் கொண்டு கொட்டகையின் சொந்தக்காரரை மறுபடியும் பார்க்கச் சென்றார். கொட்டகையின் சொந்தக்கார

ரைக் கண்டு அவரிடம் விஷயத்தைச் சொல்லவே, அவர் தாம் கதையைப் படித்துப் பார்த்துவிட்டு அதன் பிறகு பணம் கொடுப்பதாய்க் கூற, சுப்பிரமணியன் அவரிடம் அதைக் கொடுத்துவிட்டுத் தமது இருப்பிடத்தை அடைந்தார்.

சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு அவர் மறுபடியும் போய்ப் பார்க்க, தமக்கு அதிக வேலை யிருப்பதாயும், அதனால் இடை யிடையில் அவகாச மேற்படும்போது தான் வாசிப்பதாயும், அதனால் இன்னும் படித்தாக வில்லை யென்றும், படித்த வரையில் நாடகம் சுமாராக இருப்பதாயும் கூறவே, சுப்பிரமணியன் சந்தோஷ மடைந்தவராய்ப் புறப்பட்டுச் சென்றார். மேலும் சில வாரங்கள் கழிந்தன. அப்போது மறுபடியும் சுப்பிர மணியன் போய்ப் பார்க்க, அவர் ஜுரத்துடன் படுத் துக்கொண் டிருந்ததாயும், அவரை அப்போது பார்க்க முடியாதென்றும் அவருடைய வேலைக்காரன் கூறின னாலும், சுப்பிரமணியன் வீட்டிற்குள் போய்ப் பார்த் தார். கொட்டகையின் சொந்தக்காரர் ஒரு கட்டிலின் மேல் படுத்திருந்தார். சுப்பிரமணியனைக் கண்டதும் அவர் முக்கி முனகியபடி கட்டிலில் புரண்டு படுத்துக் கொண்டு, "ஓகோ! நீங்களா! வாருங்கள். எனக்கு ஜுரமென்று வேலைக்காரன் சொல்ல வில்லையா?" என்றார்.

சுப்பிரமணியன்:—சொன்னான். அதனால்தான் நான் உங்களைப் பார்க்க உள்ளே வந்தேன். உடம்பு இப் போது எப்படி யிருக்கிறது?

மற்றவர்:—மிகவும் கேவலமா யிருக்கிறது. நீங்கள் எப்போது வருவீர்களென்று நான் எதிர்பார்த்துக்

கொண்டுதா னிருந்தேன். நல்ல வேளையாக நீங்களே வந்துவிட்டீர்கள். அந்த நாடகம் அவ்வளவு திறமென்று சொல்லுவதற் கில்லை; சுமாராகத்தா னிருக்கிறது. அதில் அநேக இடங்களில் விஷயங்களை யெல்லாம் மாற்ற வேண்டும். நான் திருத்தி வைத்திருக்கிறேன். அதேபோல நீங்கள் மறுபடியும் எழுதி எடுத்துக்கொண்டு வாருங்கள்—என்று கூறிவிட்டு, "வேலாயுதம்! வேலாயுதம்!" என்று கூப்பிட்டார். உடனே வேலைக்காரன் அங்கே வந்து சேர்ந்தான். அவர் அவனை நோக்கி, "பீரோவின்மேல் ஒரு காகிதக் கட்டை வைத்திருக்கிறேன். அதை எடுத்துக் கொண்டுவா" என்றார். வேலாயுதம் புறப்பட்டுப் போய்த் திரும்பி வந்து, "அங்கே காகிதக் கட்டு எதையும் காணேன்!" என்றான்.

மற்றவர்:— (வியப்பைத் தோற்றுவித்த குரலில்) என்ன! காணோமா! நான் ஐந்தாறு நாட்களுக்கு முன்பு அங்கே யிருந்த பழைய பத்திரிகைகளின்மேல் வைத்திருந்தேனே! பீரோவின்மேல் வைத்திருப்பவைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டுவா.

வேலாயுதம்:—அப்படிச் சொல்லுங்கள். இப்போது சமீபத்தில் அங்கே வைத்தீர்களோவென்று நான் நினைத்தேன். ஆறு நாட்களுக்கு முன்பு பீரோவின்மே லிருந்தவைகளை யெல்லாம் பழைய காகிதம் வாங்கிக்கொள்ளும் ஒருவனுக்கு அம்மாள் எடுத்துப்போடச் சொன்னார்கள். அவன் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். இவரும் பழைய காகிதம்தான் வாங்குகிறவர்போ லிருக்கிறது. அவன் வீசைக்கு 2 அணு கொடுத்தான். இவர் எவ்வளவு கொடுப்பாராம்?

மற்றவர்:—(கோபத்துடன்) என்னைக் கேட்காமல் நீங்கள் ஏன் காகிதத்தை எடுத்துப் போட்டீர்கள்? உங்களுக்கு புத்தி கொஞ்சங்கூட இல்லையே! அந்தக் காகிதக் கட்டு ஒரு நாடக மல்லவா! எதிரே நிற்காதே போ அப்பால்—என்றார்.

வேலாயுதம்:—அது என்ன வென்று எனக்குத் தெரியாது. நான் எடுத்துப் போட்டுவிட்டேன்.

மற்றவர்:— தெரியா திருக்கும்போது நீ எப்படி எடுத்துப் போட்டாய்? என்று கூறி அதட்டினார். நடந்த விஷயத்தைக் கேட்டுவிட்டு திடுக்கிட்டுக் குன்றிப்போன சுப்பிரமணியனை நோக்கி அவர், "என்னிடத்தில் கொடுத்தது நகல் பிரதிதானே? நீங்கள் இன்னொரு அசல் பிரதி வைத்திருக்கிறீர்க ளல்லவா?" என்றார்.

சுப்பிரமணியன்:- என்னிடம் வேறு பிரதியில்லையே. இப்படி நடக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. எதிர் பார்த்திருந்தால் இன்னொரு பிரதி எழுதி வைத்துக் கொண் டிருந்திருப்பேன். ஆனால் நாடகம் முழுவதும் நன்றாக நினைவிருக்கிறது.

மற்றவர்:—நல்ல வேளை! அப்படியானால் நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். எந்த விஷயத்தையும் விட்டுவிடா மல் முன் போலவே அதை எழுதுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?

சுப்பிரமணியன்:—(சற்று யோசித்து) சுமார் 2 வாரங்க ளாகும்.

மற்றவர்:—அப்படியானால் எழுதிக்கொண்டு வாருங் கள்—என்றார். சுப்பிரமணியன் தள்ளாடியபடி நடந்து தாம் சாப்பிடும் ஓட்டலை நோக்கிச் சென்றார். நடந்த

விஷயத்தை ஓட்டல்காரரிடம் தெரிவிக்கலா மென்பது அவருடைய எண்ணம். ஆகவே அவர் ஓட்டலின் முன் புறத்தை யடைந்தார்.

வழக்கத்திற்கு மாருக ஓட்டலின் கதவு திறக்கப் படாமல் மூடி வைக்கப்பட் டிருந்தது. உடனே அவர் அருகிலிருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்குப் போய், அதன் காரணத்தை விசாரிக்க, ஓட்டல் திவாலாய் விட்டதாயும், அதனுல் மூடப்பட்டு விட்டதாயும், ஓட்டல் முதலாளிக்கு கடன் ஏராளமா யிருந்த தாகையால் அவர் புதுச்சேரிக்கு ஓடிப்போய்விட்ட தாயும் கடைக்காரன் கூறினுன். அதைக் கேட்ட வுடன் சுப்பிரமணியன் திடுக்கிட்டார். ஏனெனில் அவர் அந்த ஊருக்கு வந்தபோது கொண்டு வந்திருந்த 800 ரூபாயையும் ஓட்டல்காரரிடம் நம்பிக்கையின்மேல் கொடுத்து வைத்திருந்தார். பணம் போய்விட்டது. அவரிடம் அந்த சமயத்தில் இருந்த 5 ரூபாயைத் தவிர வேறு பணமில்லை. எனவே அவர் விசனத்தி லாழ்ந்து தமது அறையை யடைந்து முக்காடிட்டுப் படுத்துக் கொண்டார். அன்றைய தினம் முழுதும் அவர் சாப்பிட வில்லை. மறுநாள் அவர் ஒருவித முடிவை யடைந்தார். அந்த ஓட்டல் மூடப்பட்டு விட்டமையால், வேறு ஓட்டலில் அவர் சாப்பிடும்படி ஆய்விட்டது. அதற்கு அவர் தம்மிட மிருந்த பணத்தைக் கொடுக்க நேரிட்ட தாகையால் கதையை எழுதி முடிக்கும் வரையில் அந்த 5 ரூபாயிலேயே தம்முடைய காலக்ஷேபத்தை நடத்த வேண்டு மாகையால் அவர் இரண்டு வேளைச் சாப்பாடு, இரண்டு வேளை டீப்பன் ஆகியவைகளை ஒரே வேளைச் சாப்பாட்டோடு நிறுத்திக் கொண்டதன்றி, கதையை சீக்கிரம் எழுதி முடிக்க வேண்டுமென்று தீவிரமாகப்

பிரயத்தனம் செய்யலானார். இரண்டு வாரங்கள் சென்றன. கதை முடியவில்லை. கதையின் பின்பாதி பாகம் அவருக்கு சரியான நினைவிற்கு வரவில்லை. அதனால் அவர் எழுதுவது தடைபட்டுப் போயிற்று. தம்முடைய உண்மையான நிலைமையைக் கொட்டகையின் சொந்தக்காரரிடம் கூறி, முன் பணம் ஏதாவது வாங்க அவருக்குக் கிலேசமாயிருந்த தாகையால் அவர் தம்முடைய நிலைமையை வெளியிடாம லிருந்தார். இரண்டு வாரங்களுக்கு முன்பு அவர் எப்படி யிருந்தாரோ அதில் பாதியாக அவருடைய உடம்பு இளைத்து விட்டது. கண்கள் பெரிதும் குழிவடைந்து போயின. அவருடைய துணிகளில் அழுக்கு அடைய வாரம்பித்தது. அவருடைய தலை மயிர் சிக்குப் பிடித்துக்கொள்ளத் தொடங்கியது. அதோடு துணிகளும் கொஞ்சம் கொஞ்சமாய் கிழிய வாரம்பித்தன. சாப்பாட்டிற்காக செலவு பண்ணுவதுடன் எழுதுவதற்குக் காகிதம் முதலியவை வாங்குவதால் அவரிடமிருந்த பணம் இரண்டு வாரத்தில் அநேகமாய்க் கரைந்து போய்விட்டது அவரிடம் ஒரு நாள் மாலை இரண்டே காலணு மிச்சமிருந்தது. ஓட்டல் சாப்பாட்டிற்கு 4 அணு கொடுக்க வேண்டு மாகையால், அவர் இரண்டேகாலணுவை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று யோசிக்கலானார். அவருக்கு பந்துக்களோ யாருமில்லை. ஆகையால் யாரிடமும் பணம் கடன் கேட்பதற்கும் வழியில்லை. அதோடு அவருடைய சொந்த ஊரிலிருந்த ஒரு வீட்டை விற்றுக் கடன்களையெல்லாம் தீர்த்த பிறகு மிகுந்த 800-ரூபாயோடு அவர் அந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். அந்தப் பணம் ஏற்கெனவே குறிப்பிட்டபடி போய்விட்டது. தம்முடைய சொந்த ஊரில் தமக்குத் தெரிந்தவர்கள் யாராவது

இருக்கிறார்களா வென்று எண்ணமிடலானார். யாரு மிருந்ததாய்த் தெரியவில்லை. அவருக்குத் தெரிந்த எல்லோரும் வெளியூருக்குப் போய்விட்டபடியால் அவருக்குப் பணம் கிடைக்க எவ்வித வழியுமில்லை. அதனால் அவர் ஓட்டலை யடைந்து காலணா கொடுத்து ஓர் இட்டலி வாங்கிக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு அதை சாப்பிட்டுவிட்டுத் தண்ணீரைக் குடித்து அன்றைய பொழுதைப் போக்கினார்; இட்டலியை சாப்பிட்டபடி மேலும் சில நாட்கள் பொழுது போக்கினார். அவருடைய சரீரம் மிகவும் பலஹீனமா யிருந்தபடியால் அவர் எழுதிக்கொண் டிருக்கும்போது அடிக்கடி அவர் மயங்கி விழுந்து விடுவதும், பிறகு மயக்கம் தெளிந்து எழுந்திருப்பதுமா யிருந்தார். அவரிட மிருந்த இரண்டேகாலணாவும் செலவழிந்து போய்விட்டது. இரண்டு நாட்கள் அந்த ஓர் இட்டலிக்கும் வகை இல்லாமல் எழுதி நாடகத்தை ஒருவிதமாக முடித்து அதை எடுத்துக்கொண்டு தள்ளாடியபடி கொட்டகையின் சொந்தக்காரருடைய வீட்டிற்குச் சென்றார். அந்த வீட்டின் முன் புறத்தை யடைந்த சமயத்தில் ஒரு கல் தடுக்கவே அவர் கீழே விழுந்துவிட்டார். உடனே தெருவில் போவோர் வருவோ ரெல்லோரும் கும்பலாய்க் கூடி ஒருவரோ டொருவர் பலவிதமாகப் பேசிக்கொண்டனர்.

ஒருவன்:—இவன் பெருத்த குடிகாரண்டா! கொஞ்சம் குறைவாகத்தான் குடித்தால் என்ன!

இன்னொருவன்:— ஆமாங்கறேன். நான் தினம் எம்பிட்டோ சாப்பிட்றேன். எனக்கு மயக்கமே வர மாட்டேங்குது. இவன் இப்பதான் குடிக்கறதுக்கு ஆரம்பிச்சிருக்கான்போ லிருக்குது!

வேறொருவன்:— அதுக்கெல்லாம் பழக்கம்தான் காரணம்—என்று கூறிவிட்டு, ஸ்மரணையற்றுக் கிடந்த சுப்பிரமணியனுடைய வாயில், அருகிலிருந்த ஒரு குழாயிலிருந்து பிடித்துக்கொண்டு வந்த தண்ணீரை ஊற்றி, முகத்தை ஈரத் துணியால் ஒற்றினான். சுப்பிரமணியன் கண்களைத் திறந்துகொண்டு தம்மைச் சுற்றிலும் ஏராளமான ஜனங்கள் நின்றதைப் பார்த்து, நடந்த விஷயத்தை எண்ணி வெட்கிப்போய் மெதுவாக எழுந்திருக்க முயன்றார்; ஆனால் அவருடைய உடம்பு அவருடைய விருப்பம்போல் இயங்க மறுத்தது. அவர் முன்போலக் கீழே சாய்ந்தார்.

அப்போது, கொட்டகையின் சொந்தக்காரருடைய மனைவி மாடியிலிருந்து அதைப் பார்த்துக்கொண்டிருந்தமையால், அந்த அம்மாள் வேலாயுதத்தைக் கூப்பிட்டு, "வீதியில் ஒருவன் திடீரென்று கீழே விழுந்தான். அவனைச் சுற்றி ஜனங்கள் கும்பலாய் நிற்கிறார்கள். அவனைப் பார்த்தால் எனக்குச் சந்தேகமா யிருக்கிறது" என்றாள். வேலாயுதமும் பார்த்துவிட்டு, "ஆமாம். அப்படித்தா னிருக்கிறது" என்றான். அப்போது மறுபடியும் சுப்பிரமணியன் மெதுவாக எழுந்திருந்து நின்றார். உடனே ஒருவன், "ஏனப்பா! கொஞ்சம் குறைவாகத்தான் சாப்பிடக் கூடாதா?" என்றான். சுப்பிரமணியன், "நான் குடிகாரனில்லை" என்று கூறியபடி மெதுவாகக் கொட்டகையின் சொந்தக்காரருடைய வீட்டை நோக்கி நடக்க, மாடியிலிருந்து பார்த்துக் கொண் டிருந்த அம்மாள் உடனே வேலாயுதத்தினிடம், "அவன் நம் வீட்டிற்குத்தான் வருகிறான் சீக்கிரம் ஓடி வாசற் கதவை மூடு" என்றாள். வேலாயுதம் ஓடிப் போய்த் தெருவுக் கதவை மூடித் தாளிட்டான். அதைக்

கண்ட சுப்பிரமணியன் வியப்படைந்து, "இரப்பா; கதவை மூடாதே. திற" என்றார். வேலைக்காரன் கதவைத் திறக்காமலே, "போகப் போகிறாயா! உதை வேண்டுமா?" என்று உரக்கக் கூச்சலிட்டான். அதைக் கேட்ட சுப்பிரமணியன் வியப்படைந்து, "நான் எஜமானரைப் பார்க்க வேண்டும். கதவைத் திற" என்றார்.

உள்ளே இருந்த, கொட்டகையின் சொந்தக்காரர் அதைக் கேட்டு வேலாயுதத்தை அப்பால் போகச் சொல்லிவிட்டுத் தெருவுக் கதவைத் திறந்து சுப்பிரமணியனை நோக்கி, "யாரப்பா நீ?" என்றார். சுப்பிரமணியன், "நீங்கள் சொன்னபடி நாடகத்தை எழுதி முடித்து விட்டேன்" என்றார். கொட்டகையின் சொந்தக்காரர் வியப்புடன் அவரை நோக்கி, "நீயா நாடகம் எழுதியிருக்கிறாய்? உன்னை யார் எழுதச் சொன்னது?" என்று வினவினார்.

சுப்பிரமணியன்:—நான் ஒரு மாதத்திற்கு முன்பு உங்களைக் கடைசியாகப் பார்த்துவிட்டுப் போனது உங்களுக்கு நினைவிருக்கலாம். என்னுடைய நாடகத்தைப் பழைய காகிதம் வாங்குகிறவனுக்குப் போட்டு விட்டதாய்ச் சொன்னீர்கள். அதனால் மறுபடியும் எழுதி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

மற்றவர்:—ஓஹோ அப்படியா! சரி; அதைக் கொடுத்து விட்டுப் போங்கள்.

சுப்பிரமணியன்:--உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்; உள்ளே வரலா மல்லவா?

மற்றவர்:—சரி, வாரும்—என்றார். சுப்பிரமணியன் உள்ளே போய்ச் சேர்ந்தார். தெருவிலிருந்த ஜனங்

களில் பலர் புறப்பட்டுச் சென்றனர். சிலர் அங்கேயே நின்றுகொண் டிருந்தனர். சுப்பிரமணியன் உள்ளே நுழைந்தவுடன் தம்முடைய நிலைமையை ஒருவாறு தெரிவித்து, தமக்குப் பணம் ஏதாவது கொடுக்க வேண்டு மென்றும், பின்னுல் கணக்குப் பார்த்துக் கொள்ளலா மென்றும் கூறவே, அவர், "அடாடா! இந்தக் கதையைத் திருத்தி ஒழுங்காக்கினுல் அன்றி இது எனக்கு உபயோகப்படாது. அதுவன்றி நானே இதற்குப் பணம் கொடுக்க இயலாது. ஏனென்ருல் இன்னும் இரண்டு கூட்டாளிக ளிருக்கிருர்கள். இந்த நாடகத்தை வாங்கிக்கொள்ள அவர்களும் சம்மதப் பட்டாலன்றி பணம் பெயராது. நான் அவர்களிடம் விஷயத்தை சொல்லுகிறேன். எதற்கும் இந்த நாட கத்தை கொடுத்துவிட்டுப் போங்கள். மறுபடியும் நாளைய தினம் நீர் வந்தால் எங்களுடைய முடிவைச் சொல்லுகிறேன்" என்ருர்.

சுப்பிரமணியன்:—அப்படியே செய்யலாம். ஆனுல் இன்றைய சாப்பாட்டிற்குப் பணம் அவசியம் வேண் டுமே.

மற்றவர்:—அதற்கு நான் என்ன செய்கிறது? இன் றைய தினம் எப்படியாவது பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொள்ளும். நாளைய தினம் உமக்கு அநேக மாகப் பணம் கிடைத்துவிடும். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்—என்ருர். சுப்பிரமணியன் அங்கிருந்து புறப்பட்டு தம்முடைய அறையை அடைந்தார்; அடைந்தவர் மாலை 4 மணி வரையில் படுத்திருந்தார். அதன் பிறகு அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது. அந்த வீட்டில் அவரோடு குடியிருந்த வேருெருவரிடம் அவர் தம்முடைய டிரங்கு பெட்டியை 8 அணுவிற்கு விற்று

விட்டு, ஓட்டலை யடைந்து ஒழுங்கான சாப்பாடு சாப்பிட்டார். அதோடு அன்றைய பொழுது கழிந்தது. மறு நாள் பகலிலும் அவர் இன்னொரு நான்கணு செலவு செய்து சாப்பிட்டு மாலை சுமார் 4 மணிக்கு கொட்டகையின் சொந்தக்காரருடைய வீட்டை யடைந்தார். அப்போது ராமாயணக் கவிராயர் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். கொட்டகையின் சொந்தக்காரர் வீட்டில் இருக்கிறாரா என்று அவரிடம் சுப்பிரமணியன் விசாரிக்க, கொட்டகையின் சொந்தக்காரர் முதல்நாளிரவு வெளியூருக்குப் புறப்பட்டுப் போய்விட்டதாயும், திரும்பிவர 20 நாட்க ளாகுமென்றும் அவர் கூறினர். அதைக் கேட்டவுடன் சுப்பிரமணியன் திடுக்கிட்டுப் போய் வேலாயுதத்தைக் கூப்பிட்டுக் கேட்க, அவனும் அதே செய்தியைக் கூறி உறுதிப்படுத்தினன். கொட்டகையின் சொந்தக்காரருடைய கூட்டாளிக ளிருவருடைய விலாசங்களையும் சுப்பிரமணியன் கேட்க, அவர்களும் ஊருக்குப் போய்விட்டதாய் வேலாயுதம் கூறினன். தாம் என்ன செய்வதென்பதை யறியாமல் அவர் சிறிது நேரம் தயங்கி நின்ற பிறகு, அதுவரையில் அவரை இன்னரென்று அடையாளம் கண்டுகொள்ளாமலிருந்த ராமாயணக் கவிராயரிடம் நடந்த விஷயங்களை யெல்லாம் அவர் கூறினர். அதைக் கேட்ட ராமாயணக் கவிராயர் வியப்படைந்ததுடன் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துவிட்டு, அந்த ஊரிலிருந்த ஒரு வாரப் பத்திரிகை ஆபீஸில் குமாஸ்தாவாக இருந்த ஒருவரைத் தமக்குத் தெரியுமென்றும், அவரிடம் சுப்பிரமணியனை அழைத்துப் போவதாகவும், அந்தப் பத்திரிகையில் ஏதாவது எழுதுவதற்கு அந்த குமாஸ்தா சிபார்சு செய்வாரென்றும் கூறவே, சுப்பிரமணியன்

அதற்கு இசைந்தார். இருவரும் அந்த வாரப் பத்திரிகை ஆபீஸை அடைந்தனர். சுப்பிரமணியன் உள்ளே நுழைய வெட்க மடைந்தமையால், அவரை வெளியி லேயே நிற்க வைத்துவிட்டு, ராமாயணக் கவிராயர் உள்ளே சென்றார். சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு கவிராயர் வெளியில் வந்து சுப்பிரமணியனைக் கூப்பிட, சுப்பிரமணியன் தமக்கு நல்ல காலம் பிறந்து விட்டதாகக் கருதி சந்தோஷத்துடன் உள்ளே நுழைந் தார்.

உட்புறம் சென்றவுடன் கவிராயர் குமாஸ்தாவிற் கும், சுப்பிரமணியனுக்கும் பரிச்சயம் செய்து வைத் தார். குமாஸ்தா சுப்பிரமணியனை அழைத்துக்கொண்டு ஆசிரியருடைய அறையை அடைந்தார்.

குமாஸ்தா:—(சுப்பிரமணியனைச் சுட்டிக் காட்டி) இவர் நல்ல கதைகள் எழுதுகிறவராம். என்னுடைய சிநேகிதர் ஒருவர் சிபார்சு செய்தார். அதனால் இவரை அழைத்து வந்திருக்கிறேன்.

ஆசிரியர்:—(தம்முடைய மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு சுப்பிரமணியனைப் பார்த்து விட்டு) ஏனையா நீர் எந்த மாதிரி கதைகள் எழுதுகிறீர்?

சுப்பிரமணியன்:—நான் எந்த மாதிரியான கதையை யும் எழுதுவேன்.

ஆசிரியர்:—'எழுதுவேன்' என்று சொல்லுகிறீரே! அப்படியானால் இதுவரையில் எதையும் எழுதியதில்லை என்றல்லவா அர்த்தமாகிறது.

சுப்பிரமணியன்:— இதுவரையில் நான் இரண்டு நாடகங்கள் எழுதி இருக்கிறேன்.

ஆசிரியர்:— ஓஹோ! அப்படியா! அவைகளைக் கொண்டு வந்திருக்கிறீரா?

சுப்பிரமணியன்:—அவைகளை நான் கொண்டுவர வில்லை. ஏனென்றால்,

ஆசிரியர்:—(இடை மறித்து) ஏனென்றால் அவை கள் பத்திரிகையில் பிரசுரமாவதற்கு அருகமானவைக ளல்ல, அப்படித்தானே! ஏனையா வீணாகப் புளுகுகிறீர்! இப்போதுதான் புதிதாய் எழுதப் பழகுகிறேனென்று சொல்லுகிறதுதானே!

சுப்பிரமணியன்:—(கோபத்துடன்) ஒரு நாடகம் என்னுடைய வீட்டி லிருக்கிறது. இன்னொன்று இந்த ஊரிலிருக்கும் நாடகக் கொட்டகையின் சொந்தக்கார ரிடம் இருக்கிறது.

ஆசிரியர்:—அப்படிச் சொல்லும். இப்போதுதான் விஷயம் விளங்குகிறது. நேற்று சாயங்காலம் அவர் என்னிடம் அதைக் காட்டினார். நீர்தான் அதை எழுதி னவரோ! சரிதான். உம்முடைய நடை சுத்த மோசம். பள்ளிக்கூடத்தில் இரண்டாவது வகுப்பில் படிக்கும் பையன்கூட அவ்வளவு மோசமாய் எழுதமாட்டான். ஒரு பக்கத்திற்கு சுமார் 200 பிழைக ளிருக்கின்றன.

சுப்பிரமணியன்:— நீங்கள் வேறு எதையோ பார்த்துவிட்டுத் தவறுதலாகச் சொல்லுகிறீர்கள். நான் எழுதியதை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்.

ஆசிரியர்:— உம்முடைய பெயர் சுப்பிரமணியன் தானே?

சுப்பிரமணியன்:—(வியப்புடன்) ஆம்.

ஆசிரியர்:—அதில் உம்முடைய பெயர்தா னிருந் தது. உம்முடைய நாடகத்தை நான் பார்த்திருக்கிறே னென்று இப்போதாவது தெரிந்து கொண்டீ ரல்லவா? ஆகையால் நீர் எழுதிக் கொடுத்தால் அதற்கு இப்போது செலவு எதுவுமில்லை.

சுப்பிரமணியன்:-(எழுந்திருந்து) நான் வருகிறேன்.

ஆசிரியர்:— பொறுமையா. நீர் எழுதிய வசனம் தான் அப்படி இருக்கிறது. உமக்குப் பாட்டுக் கட்டத் தெரியுமா?

சுப்பிரமணியன்:—தெரியும். அப்படித் தெரிந்திருந் தாலும் உங்களுடைய பத்திரிகைக்கு நான் எழுதித்தர முடியாது—என்று கூறிவிட்டுப் புறப்பட யத்தனித் தார்.

ஆசிரியர்:— விஷயத்தைச் சொல்லுவதற்கு முன் னரே உமக்கு இப்படிக் கோபம் வருகிறதே! உம்மு டைய நாடகத்தை நானும் படித்துப் பார்த்தேன். அதைப்போல் குப்பையாகவும் ஆபாஸமாகவும் வேறு எதுவு மிருக்காது. அது அவ்வளவு கேவலமா யிருக் கிறது. நல்லதாக வேறு ஒன்று எழுதிக்கொண்டு வந் தால், நாங்கள் யோசனை செய்கிறோம்.

சுப்பிரமணியன்:— கொட்டகையின் சொந்தக்கார ரிட மிருந்த நாடகம் உங்களிடம் எப்படி வந்தது?

ஆசிரியர்:—என்னை யாரென்று நினைத்தீர்? நானும் கொட்டகைக்குச் சொந்தக்காரன் தான்.

சுப்பிரமணியன்:—கொட்டகையின் சொந்தக்காரர் கள் எத்தனை பேர்கள்?

ஆசிரியர்:—நான்கு பேர்கள். மூவர் ஊருக்குப் போய் விட்டார்கள். நீர் அதை எதற்காகக் கேட்கிறீர்?

சுப்பிரமணியன்:—எல்லோரும் ஊருக்குப் போய் விட்டதாய் வேலாயுதம் சொன்னான்.

ஆசிரியர்:—ஓஹோ!சரிதான். நீர் ஏதோ ஒரு நாடகத்தை வீட்டில் வைத்திருப்பதாய்ச் சொன்னீரே! அதை எடுத்துக்கொண்டு வாரும்.

சுப்பிரமணியன்:— அதை நீங்கள் எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா?

ஆசிரியர்:—அதைப் படித்துப் பார்க்காமலே நான் எப்படிச் சொல்ல முடியும்?

சுப்பிரமணியன்:— அப்படியானால் நான் அதை எடுத்துக்கொண்டு வருகிறேன்—என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்று குமாஸ்தாவி னறையில் உட்கார்ந்திருந்த கவிராயரிடம், ஆசிரியருக்கும் தமக்கும் நடந்த சம்பாஷணையைக் கூற, கவிராயர் தாம் புறப்பட்டுப் போவதாய் குமாஸ்தாவிடம் கூறிவிட்டுப் புறப்பட்டார். இருவரும் தெருவை அடைந்தவுடன் கவிராயர் சுப்பிரமணியனிடம், "உங்களைப் பார்க்க எனக்கே வருத்தமாய் இருக்கிறது. இனியாவது உங்களுக்கு நல்ல காலம் பிறக்கலாம்" என்றார்.

சுப்பிரமணியன்:— பாதுகா பட்டாபிஷேகத்தை நான் இவரிடம் கொண்டுவந்து கொடுக்கப் போகிறேன்.

கவிராயர்:—அதைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, விஷயம் என்னவாயிற் றென்பதை குப்புசாமியின் வீட்டிற்கு வந்து என்னிடம் தெரிவியுங்கள். நான் அங்கேதான் இருப்பேன்.

சுப்பிரமணியன்:—*நீங்கள் ராமாயணம் வாசிக்கும் வீட்டி லிருப்பவருடைய பெயரா அது?*

கவிராயர்:—ஆம்.

சுப்பிரமணியன்:—*சரி. அப்படியே செய்கிறேன்— என்றார். அதன் பிறகு அவர்க ளிருவரும் பிரிந்தனர். சுப்பிரமணியன் தம்முடைய வீட்டை யடைந்து பாதுகா பட்டாபிஷேக நாடகத்தை எடுத்துக்கொண்டு மறுபடி பத்திரிகாலயத்தை அடைந்தார்.*

ஆசிரியர் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "அடாடா! இந்தக் குப்பையையா கொண்டு வந்தீர்கள்! இந்தக் காலத்தில் இதெல்லாம் யாருக்குப் பிடிக்கிறது? சரித்திர சம்பந்தமான கதையா யிருந்தால் எல்லோரும் படிப் பார்கள். நீங்கள் ஒரு கதை எழுதுவதானால் எவ்வளவு காலம் பிடிக்கும்?" எனறார்.

சுப்பிரமணியன்:—*சுமார் ஒரு மாதமாகும்.*

ஆசிரியர்:—*(சிறிதுநேரம் மௌனமாகவே யோசனை செய்த பிறகு) சரி; சரித்திர சம்பந்தமான கதை எழுதும். கதை எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? வீரம், சோகம் முதலியவைகள் நிறைந்தவையாய் இருக்க வேண்டும். சிவாஜியைப் பற்றி எழுதுகிறீரா?*

சுப்பிரமணியன்:—*எழுதுகிறேன்.*

ஆசிரியர்:—*சரி, இந்தப் பாதுகா பட்டாபிஷேகம் இங்கேயே இருக்கட்டும். எனக்கு அவகாச மிருக்கும் போது நான் படித்துப் பார்க்கிறேன். நன்றாக இருக்கு மானால் உடனே உமக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு இதை நான் எடுத்துக் கொள்ளுகிறேன்.*

சுப்பிரமணியன்:— இப்போது எனக்குப் பணம் ஏதாவது வேண்டுமே.

ஆசிரியர்:—(வியப்புடன்) என்ன! பணமா! நீர் பேசுவது விஞேதமா யிருக்கிறதே! உமக்குப் பத்திரிகையின் சங்கதி முன்பின் தெரியாதுபோ லிருக்கிறதே. பத்திரிகாலயங்களில் என்ன வழக்கம் தெரியுமா? கட்டுரைகளைப் பிரசுரம் செய்த பிறகே பணம் கொடுப்பது வழக்கம். அதைத் தெரிந்து கொள்ளாமல் நீர் முன்ஞலேயே பணம் கேட்பது வேடிக்கையா யிருக்கிறதே!

சுப்பிரமணியன்:—எனக்கு அந்த விஷயம் தெரியும். ஆஞலும் நீங்கள் இரக்கப்பட்டு ஏதாவது கொடுக்க வேண்டும். ஏனென்ருல் என்னுடைய நிலைமை அவ்வளவு கேவலமா யிருக்கிறது நான் சொல்லுவதை நீங்கள் ஒருவேளை நம்பமாட்டீர்கள். நான் சரியானபடி ஆகாரம் சாப்பிட்டு சுமார் ஒன்றரை மாத காலமாகிறது.

ஆசிரியர்:—(சிறிதுநேரம் மௌனமா யிருந்த பிறகு) உம்மைப் பற்றி சிபார்சு செய்தாரே அந்த மனிதருடைய வீட்டில் நீர் சாப்பிடலாமே!

சுப்பிரமணியன்:—அவரே வேருெருவர் வீட்டில் சாப்பிட்டுக்கொண் டிருக்கிருர். எனக்கு எப்படி அவர் சாப்பாடு போடுவார்?

ஆசிரியர்:—சரி. அப்படியாஞல் ஒரு காரியம் செய்யும். நான் இப்போது ஒரு ரூபாய் தருகிறேன். அதை எடுத்துக்கொண்டு போய் இரண்டு நாட்கள் பொறுத்து மறுபடியும் வந்து பாரும். அப்போது என்னுடைய முடிவைச் சொல்லுகிறேன்—என்று கூறிவிட்டு, ஒரு

ரூபாயை எடுத்துக் கொடுத்தார். சுப்பிரமணியன் அதைப் பெற்றுக்கொண்டு, "அப்படியானல் சிவாஜி யைப் பற்றி எழுதச் சொல்லுகிறீர்களா?" என்று வினவினர்.

ஆசிரியர், "ஆம். அதை எழுதி சீக்கிரம் முடித்துக் கொண்டு வரவேண்டும்" என்று கூறவே, சுப்பிரமணி யன் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போய் குப்புசாமியினுடைய வீட்டை யடைந்து ராமா யணக் கவிராயரிடம் நடந்த விஷயத்தைக் கூறிவிட்டு தம்முடைய அறைக்குச் சென்று அந்த வீட்டில் குடி யிருந்த ஒருவருடைய பிள்ளையிட மிருந்து இந்துதேச சரித்திர புஸ்தகத்தை வாங்கி வைத்துக்கொண்டு சிவாஜி யைப் பற்றிப் படித்த பிறகு, அன்றைய தின மிரவே காலணு தகர விளக்கொன்றை மண்ணெண்ணெயுடன் வாங்கி வந்து, காகிதம் முதலியவற்றுடன் உட்கார்ந்து எழுதலானர். இரண்டு நாட்களுக்குள் பாதி தீர்ந்து போகவே, கதை முழுதையும் தாம் சீக்கிரம் எழுதிக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுப் பணம் வாங்கி வரலாமென்ற எண்ணத்துடன் இன்னு மிரண்டு நாட் களில் அதை எழுதி முடித்துவிட்டுப் பத்திரிகாலயத்தை யடைந்தார். அப்போது பகல் 3 மணி சமயம். தெருவி லிருந்த சேவகன் அவரிடம், "யார் நீங்கள்? எங்கே போகிறீர்கள்?" என்று வினவினன்.

சுப்பிரமணியன்:— நான் ஆசிரியரைப் பார்க்க வேண்டும்.

சேவகன்:—அவர் உங்களை வரச்சொல்லி யிருக் கிருரா?

சுப்பிரமணியன்:—ஆம்.

சேவகன்:—இப்போது சமயம் எப்படி யிருக்கிறது என்று பார்த்துவிட்டு வருகிறேன்—என்று கூறிவிட்டு உள்ளே போய் இரண்டு நிமிஷங்களில் திரும்பிவந்து, "உங்களுடைய பெயரைச் சொன்னேன். நீங்கள் யாரென்பது அவருக்குத் தெரியவில்லையாம்" என்முன். உடனே சுப்பிரமணியன், "நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதைக் கொண்டுபோய்க் கொடு" என்று கூறிவிட்டு ஒரு கடிதம் எழுதி, தாம் கொண்டுவந்திருந்த சிவாஜி நாடகத்தின் கையெழுத்துப் பிரதியையும் அதோடு கொடுத்து அனுப்பினர்.

சேவகன் உள்ளே போய்த் திரும்பி வந்து, நீங்கள் கொடுத்ததை, "அவரிடம் கொடுத்தேன். அவர் படித்துப் பார்த்தார். நீங்கள் ஏற்கெனவே கொடுத்திருப்பதையே அவர் இன்னும் படித்தாகவில்லையாம்; இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்து உங்களை வரச் சொல்லுகிருர்" என்முன்.

சுப்பிரமணியன்:—அந்த மாதிரி செய்ய முடியாது; நான் இப்போதே அவரைப் பார்க்க வேண்டும்.

சேவகன்:—அது ஆகாத காரியம். எஜமானருடைய உத்தரவில்லாமல் நான் உள்ளே யாரையும் விடக் கூடாது.

சுப்பிரமணியன்:—அப்படியானல் நீ ஒரு காரியம் செய். நான் அவரை அவசரமாய்ப் பார்க்க விரும்புவதாக அவரிடம் சொல்.

சேவகன்:— நான் உங்களுடைய கடிதத்தைக் கொண்டு போனபோதே அவர் கோபித்துக் கொண்டார். ஏனென்முல், ஏதோ ஒரு முக்கியமான காரியத்தை

அவர் கவனித்துக்கொண் டிருக்கிறார். மறுபடியும் நான் போனால் என்னுடைய வேலை போய்விடும். நீங்கள் இரண்டு நாள்கள் பொறுத்தே வந்து சேருங்கள்.

சுப்பிரமணியன்:— அவரிடம் மறுபடி கேட்க உனக்கு அச்சமா யிருந்தால் நான் சொல்லுகிறபடி யாவது செய். நான் மறுபடியும் ஒரு கடிதம் தருகிறேன்; அதையாவது கொண்டுபோய்க் கொடு.

சேவகன்:—அதுவும் நடக்காத காரியம். அவருக்குக் கடித மெழுதி அனுப்ப விரும்பினால் நீங்கள் அதை தபாலில் அனுப்புங்கள்.

சுப்பிரமணியன்:—(சற்று நேரம் யோசித்த பிறகு) அவருடைய வீடு எங்கே யிருக்கிறது?

சேவகன்:—அவர் வெளியூரி லிருக்கிறார்; தினம் மோட்டாரில் இங்கே வருகிறார்.

சுப்பிரமணியன்:—அவருடைய வீட்டிற்குப் போய் அவரைப் பார்க்கலாமென்று நினைத்தேன். அதுவும் முடியாமல் போய்விட்டது. அவர் மாலையில் எத்தனை மணிக்கு இங்கிருந்து போவார்?

சேவகன்:—அந்தச் சங்கதி எனக்குத் தெரியாது. அவர் எப்போது வேண்டுமானாலும் புறப்பட்டுப் போவார்—என்றான். தாம் அந்தக் கட்டிடத்தி னருகிலேயே இருந்து ஆசிரியர் வெளியில் வரும்போது பார்க்க வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு சுப்பிரமணியன் வெளியிலேயே காத்துக்கொண் டிருந்தார்.

மாலை ஐந்தரை மணி ஆயிற்று. ஆபீஸி லிருந்தவர்கள் வெளியில் வந்தனர். ஆனால் ஆசிரியர் மாத்திரம் வரவில்லை. மணியும் மெதுவாக 7 ஆயிற்று. அந்தப்

பத்திரிகாலயத்திற்கு எதிர்ப்புறத்திலிருந்த ஒரு வீட்டின் திண்ணையில் உட்கார்ந்தபடி அங்கேயே பார்த்துக்கொண்டிருந்த சுப்பிரமணியன் பசியினாலும் களைப்பினாலும் சோர்ந்து அப்படியே ஸ்மரணையற்றுச் சாய்ந்துவிட்டார். அவர் மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்தபோது தெருவில் ஜனநடமாட்ட மிருந்ததுடன் நன்றாக வெளிச்சம் உண்டாயிருந்தது. வெயில் மிகவும் உக்கிரமாயிருந்தது. எதிரிலிருந்த பத்திரிகாலயம் மூடப்பட்டிருந்தது. ஆனால் முன்புறத்தில் முதல் நாள் அவர் பார்த்த அதே சேவகன் காணப்பட்டான். அவர் அவனைக் கூப்பிட்டார். அவன் வராமல் அங்கேயே நின்றபடி, "ஏன் கூப்பிடுகிறீர்கள்?" என்று வினவினான்.

சுப்பிரமணியன்:-இப்போது மணி என்னவாகிறது?

சேவகன்:—இப்போது ஒரு மணி இருக்கும்.

சுப்பிரமணியன்:—(வியப்புடன்) அப்படியா! நேற்று சாயங்கால மல்லவா நான் இங்கே படுத்தேன். இன்று ஒரு மணி வரையில் தூங்கி இருக்கிறேனே! ஏன் இன்றைய தினம் ஆபீஸ் திறக்கப்படவில்லை?

சேவகன்:—இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை. அதனால் ஆபீஸ் திறக்கப்படவில்லை—என்று கூறிவிட்டு மறைவான ஓர் இடத்திற்குப் போய்விட்டான்.

சுப்பிரமணியன் எழுந்திருக்க முயன்றார். அவருடைய சரீரம் சிறிதும் அசையவில்லை. அப்போது அவருக்குக் கடுமையான ஜுரமடித்துக்கொண்டிருந்தது. அரை மணி நேரத்திற்குப் பிறகு அவர் மறுபடியும் தமது நினைவை இழந்தார். அதற்குப் பிறகு அவர் மறுபடி சுய நினைவை யடைந்து கண்களைத் திறக்கப் பிரயத்தனம் செய்தபோது எதிரிலிருந்த ஆபீஸின் கதவு

திறக்கப்பட் டிருந்தது தெரிந்தது. தாம் கண்ட விஷயங்களெல்லாம் கனவென்று அவர் எண்ணிக்கொண்டார். ஆசிரியர் அன்றைய தினம் தம்மை வரச்சொன்ன விஷயம் அவருடைய நினைவிற்கு வரவில்லை. அன்றைய பொழுதும் கழிந்தது. மறுபடியும் கண்களைத் திறந்த போது தாம் ஒரு கட்டிலில் படுத்திருந்ததாக உணர்ந்து அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அவருக் கருகில் ஒரு தாதி காணப்பட்டாள். அவள் அவருடைய வாயில் ஏதோ மருந்தை ஊற்றவே, அவர் நித்திரை செய்யத் தொடங்கினர். இரவும் பகலும் மாறி மாறி வந்து கொண்டும் போய்க்கொண்டு மிருந்தன. கடைசியாக ஒரு நாள் பகலில் சுப்பிரமணியன் தமது கண்களைத் திறந்து தாதியிடம், "நான் இங்கே எப்படி வந்தேன்" என்ருர்.

தாதி:—நீ ஒரு வீட்டுத் திண்ணையில் ஜுரத்துடன் படுத்துக்கொண் டிருந்தாயாம். அந்த வீட்டுக்காரர் உன்னை இந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

சுப்பிரமணியன்:— நான் வந்து எத்தனை நாளாகிறது?

தாதி:—இரண்டு வாரங்க ளாகின்றன. நீ யார்? அந்த வீட்டுத் திண்ணையில் நீ ஏன் படுத்திருந்தாய்? டாக்டர் உன்னிடம் இதையெல்லாம் விசாரிக்கச் சொன்ஞர். உன்னுடைய சொந்தக்காரர்களுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டும்.

சுப்பிரமணியன்:—எனக்கு சொந்தக்காரர் யாருமில்லை.

தாதி:—போலீஸார் பத்திரிகையில் உன்னுடைய அடையாளங்களைப் போட்டு விளம்பரம் செய்தார்கள். இதுவரையில் யாரும் வரவில்லை.

சுப்பிரமணியன்:—என் விஷயத்தில் போலீஸார் தலையிட வேண்டிய காரணமென்ன?

தாதி:-இப்படி அநாதரவாயும், ஆபத்தான நிலைமையிலும் யாராவது இருந்தால் நாங்கள் உடனே போலீஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவர்கள் இம்மாதிரி வரும் நோயாளிகள் யாரென்பதைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்வார்கள். அதோடு கைரேகை அடையாளம் முதலியவைகளை எடுத்து அவர் பழைய கேடியாயென்று பார்ப்பார்கள்.

சுப்பிரமணியன்:—அப்படியானால் போலீஸார் என்னுடைய கைரேகை அடையாளத்தை எடுத்துக் கொண்டார்களா?

தாதி:—எடுத்துக் கொண்டார்கள்—என்றாள்.

அப்போது ஒரு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவரும் ஒரு ஜெவானும் அங்கே வந்தனர். இன்ஸ்பெக்டர் தாதியை அப்பால் அழைத்துக்கொண்டுபோய், "நோயாளியினுடைய நிலைமை இப்போது எப்படி யிருக்கிறது?" என்று வினவினர்.

தாதி:— இப்போது ஜுரம் சுமாரா யிருக்கிறது. இவன் யாரென்பதை விசாரித்தேன். இவன் தனக்கு சொந்தக்காரர் யாருமில்லை யென்று சொல்லுகிறான்.

இன்ஸ்பெக்டர்:—இவனுடைய பெயரை விசாரிக்கவில்லையே?

தாதி:—இன்னும் கேட்கவில்லை.

அது டெலிபோன் கம்பெனியாரால் வெளியிடப்பட்ட விலாச ஜாப்தா. அதில் இன்னின்ன நம்பருள்ள டெலிபோன் இன்னின்னருடைய கட்டிடத்தி லிருக்கிறது என்ற விலாசம் கொடுக்கப்பட் டிருக்கும். 5030-ம் நம்பருக்கு எதிரில்,

செல்லப்பா பிள்ளை,

நமசிவாய முதலி தெருவு

—என்ற விலாசம் காணப்பட்டது. அவர் உடனே புஸ்தகத்தை மேஜையின்மேல் வைத்துவிட்டு எழுந்திருந்தார். அதே சமயத்தில் ஸப்-இன்ஸ்பெக்டர் விநாயகம் பிள்ளை அங்கே வந்து, "தந்தியை அனுப்பி விட்டேன்" என்றார். உடனே சமயசஞ்சீவி நடந்த விஷயங்களை அவரிடம் தெரிவித்து, தாம் செல்லப்பா பிள்ளையின் வீடு வரையில் சென்று வருவதாய்க் கூறிய பின் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு வெளியில் போய் சிறிது நேரத்தில் நமசிவாய முதலி தெருவை யடைந்தார். அந்தத் தெருவில் இரண்டு பக்கங்களிலும் பங்களாக்களே ஏராளமாகக் காணப்பட்டன. தாம் செல்லப்பா பிள்ளையின் பங்களாவை எப்படிக் கண்டுபிடிப்பதென்பதைப் பற்றி அவர் யோசனை செய்தார்.

அப்போது அந்த ரஸ்தாவில் ஜன நடமாட்டமே காணப்படவில்லை. சமயசஞ்சீவி அருகில் காணப்பட்ட ஒரு பங்களாவிற்குள் நுழைந்து அதிலிருந்த ஒரு மனிதரிடம் செல்லப்பா பிள்ளையின் பங்களாவைப் பற்றி விசாரித்தார்.

அந்த மனிதர் வியப்பைத் தோற்றுவித்த குரலில், "என்ன விசேஷம்? ஏன் செல்லப்பா பிள்ளையின் பங்களாவைப் பற்றி விசாரிக்கிறீர்கள்?" என்றார்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவி தமது முகத்தைச் சுருக்கிக் கொண்டார். அதுவே செல்லப்பா பிள்ளையின் பங்களாவா யிருக்க வேண்டு மென்றும், தாம் தவறுதலாய் அதிலேயே நுழைந்து அவரிடமே கேட்டிருக்க வேண்டுமென்றும உணர்ந்து, ஏதாவதொரு சமாதானம் சொல்லிவிட்டு தாம் போய்விட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு, "விசேஷ மொன்றுமில்லை. சும்மா தான் அவரைப் பார்க்க வேண்டும்" என்றார்.

மற்றவர்:—நான் தான் செல்லப்பா பிள்ளை. சும்மா எதற்காக என்னைப் பார்க்கிறது? நீர் யார்?

சமயசஞ்சீவி:—என்னை மானேஜர் அனுப்பினார்.

செல்லப்பா பிள்ளை:—எந்த மானேஜர்?

சமயசஞ்சீவி:—பத்திரிகை ஆபீஸ் மானேஜர்.

செல்லப்பா பிள்ளை:— எதற்காக உம்மை அனுப்பினார்?

சமயசஞ்சீவி:—கொஞ்ச நேரத்திற்கு முன் டெலிபோன் மூலமாய் ரங்கசாமி அவரைக் கூப்பிட்டானும்; தான் தவறு செய்து விட்டதாயும், அவரையும் உங்களையும் தொலைக்க ஏற்பாடு செய்துகொண் டிருப்பதாயும் அவன் சொன்னானும். அதை உங்களிடம் சொல்லி விட்டு வரச் சொன்னார் மானேஜர்.

செல்லப்பா பிள்ளை:— அப்படியா! நீ அவருடைய மனிதனென்பது எனக்கு எப்படி நிச்சயப் படுகிறது?

சமயசஞ்சீவி:—அதற்கு ஓர் அடையாளம் சொல்லுகிறேன். சற்று முன்பு அவர் உங்களுடன் டெலிபோன் வழியாகப் பேசி இதை உங்களிடம் சொன்னா ரல்லவா!

செல்லப்பா பிளளை:—டெலிபோன் மூலம் சொன்னால், உன்னை மறுபடி ஏன் அனுப்ப வேண்டும். நீ எந்த மானேஜரைப் பற்றிப் பேசுகிருய்? ரங்கசாமி என்பவன் யார்?

சமயசஞ்சீவி:—பத்திரிகை ஆபீஸ் மானேஜரைப் பற்றி தான் சொல்லுகிறேன். ரங்கசாமியைப் பற்றி என்னைவிட உங்களுக்கு அதிகமாய்த் தெரியுமே.

செல்லப்பா பிள்ளை:—அப்படியா! சரி; நான் ஒரு கடிதம் தருகிறேன். அதைக் கொண்டுபோய் மானேஜரிடம் கொடுக்கிருயா?

சமயசஞ்சீவி:—கொடுக்கிறேன்—என்ருர்.

செல்லப்பா உண்மையில் கடிதம் எழுதிக் கொடுக்க விரும்பவில்லை. அம்மாதிரி சொல்லிவிட்டு அவரை நிற்க வைத்துவிட்டு, தாம் உள்ளே சென்று மானேஜரை டெலிபோன் மூலம் கூப்பிட்டு அதைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்பதே அவருடைய எண்ணம். எனவே அவர் சமயசஞ்சீவியை நிற்க வைத்துவிட்டு உள்ளே சென்ருர். தாம் செய்ய நினைத்ததைப் பற்றி சமயசஞ்சீவி சந்தேகம் கொண்டு பின்னுலேயே வந்து கவனிப்பாரென்று அவர் எண்ணவில்லை யாகையாலும், அவருக்கு சந்தேக முண்டாகும்படி தாம் நடந்துகொள்ளக் கூடாதென்று எண்ணிஞராதலாலும், செல்லப்பா பிள்ளை பின்புறம் திரும்பிப் பார்க்காமலே உள்ளே சென்ருர்.

அவர் டெலிபோன் வழியாக மானேஜரைக் கூப்பிடுவாரோ என்னும் சந்தேகம் அப்போது சமயசஞ்சீவிக்குத் தோன்றிய தாகையால், அவர் ஓசை செய்யாமல் செல்லப்பா பிள்ளைக்குப் பின்னுகவே தொடர்ந்து வந்து பார்க்க, எதிரிலிருந்த ஓர் அறைக்குள் செல்லப்பா

பிள்ளை அப்போதே டெலிபோன் ரிஸீவரைக் கையி லெடுத்ததைப் பார்த்தார்; தாம் வெளியில் போய்விட லாமா வென்று அவர் எண்ணினர். ஆனல் அது சரி யான யோசனையாகப் படவில்லை ஏனெனில், தம்மைப் பற்றி இனி அவர்கள் எச்சரிப்படைந்து விடுவதுடன், ரங்கசாமியைப் பற்றி எதுவும் பேசமாட்டார்க ளாகை யால், அவர்களை தாம் சாமர்த்தியமாக ஏமாற்றி உண் மையை அறிய வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு அவர் அங்கேயே நின்று கவனித்தார்.

செல்லப்பா பிள்ளை:— (டெலிபோனில்) நீங்கள் மானேஜர்தானே!—என்ருர். சற்று மௌனம்.

செல்லப்பா பிள்ளை:-அப்படியா! இப்போது இங்கே ஓர் ஆள் வந்திருக்கிருன். அவனை நீங்கள் அனுப்பினீர் களா?—என்ருர். மறுபடியும் சற்று மௌனம்.

செல்லப்பா பிள்ளை:— அப்படியா! அவன் உங்களு டைய ஆள் இல்லையா! ரங்கசாமி டெலிபோன் மூலம் உங்களையும் என்னையும் பயமுறுத்தியதாக இவன் சொல்லுகிருனே! (மறுபடியும் மௌனம்)

செல்லப்பா பிள்ளை :—அப்படியா! இவன் யாரென் பது தெரியவில்லையே! இவனுக்கு நம் விஷயம் எப்ப டித் தெரிந்திருக்கும்? (மறுபடியும் மௌனம்)

செல்லப்பா பிள்ளை:—இவனை சாமர்த்தியமாக விசா ரித்து, உள்ளே அழைத்து வந்து, ஓர் அறையில் அடைத்துப் பூட்டிவிடுகிறேன். இவன் நீங்கள் சொல்லு கிறபடி ரங்கசாமியினுடைய ஆளாய்த்தான் இருக்க வேண்டும்—என்று கூறிவிட்டு டெலிபோன் ரிஸீவ ரைக் கொக்கியில் மாட்டினர். சமயசஞ்சீவி ஐயர்

உடனே வேகமாய் வெளியில் போய் முன்னர் இருந்த இடத்தில் நின்றார்.

செல்லப்பா பிள்ளை அங்கே வந்து புன்னகை ததும்பிய முகத்துடன், "முதலில் நான் கடிதம் எழுதலா மென்று நினைத்தேன் ஆனால் அது அபாய கரமானதென்று இப்போது படுகிறது; ஆகையால் உன்னிடம் வாயாலேயே சங்கதியைச் சொல்லுகிறேன். அதை மானேஜரிடம் சொல். நாம் இங்கே யிருந்து பேசுவது சரியல்ல. உள்ளே போவோம் வா" என்றார்.

சமயசஞ்சீவி உடனே அவருக்குப் பின்னால் நடந்து சென்றார். இருவரும் உட்புறத்திலிருந்த ஒரு கூடத்தை அடைந்தவுடன், அங்கே மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு கத்தியை செல்லப்பா எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "உன்னுடைய பெயரென்ன?" என்றார்.

சமயசஞ்சீவி:— என்னைப் பற்றி நீங்கள் இதற்கு முன் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள்.

செல்லப்பா:—(கத்தியை பயங்கரமாய்க் காட்டியபடி) பரவாயில்லை. நீ அதைச் சொல்லலாம்.

சமயசஞ்சீவி:— என்னை ரங்கசாமி என்று சொல்வார்கள்.

செல்லப்பா:—(திடுக்கிட்டு) என்ன! ரங்கசாமியா!

சமயசஞ்சீவி:—ஆம். என் பெயர் அதுதான்.

செல்லப்பா:—மானேஜருக்கும் உனக்கும் எவ்வித மான சம்பந்தமு மில்லை யென்பதையும் இப்போது போன் மூலம் நான் தெரிந்துகொண்டேன்.

சமயசஞ்சீவி:—அவர் என்ன சொல்லுகிறார்?

செல்லப்பா:-உன்னிடம் விசாரிக்கச் சொல்லுகிருர். நீ எதற்காக இங்கே வந்தாய்? ரங்கசாமி டெலிபோன் மூலம் மானேஜரைப் பயமுறுத்தியது உனக்கு எப்படித் தெரிந்தது?

சமயசஞ்சீவி:—நான்தான் ரங்கசாமி யென்று சொல்லுகிறேனே! அதனுல்தான் அந்த விஷயம் எனக்குத் தெரிகிறது. நான்தான் அவரை பயமுறுத்தினேன். உங்க ளிருவரையும் தொலேக்க நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

செல்லப்பா:-நீ எங்களேத் தொலேக்கவா போகிருய்! நீதான் இப்போது தொலேந்துபோகப் போகிருய். என் கையில் என்ன இருக்கிற தென்பதை கவனித்தாயா?—என்று கூறியபடி கத்தியைக் காட்டினுர்.

அதற்கு சமயசஞ்சீவி மறுமொழி கூறவில்லே. செல்லப்பா மேலும் பேசத் துடங்கி, "நான் இங்கே இருக்கிறே னென்பது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்ருர்.

அதற்கும் மறுமொழி கிடைக்கவில்லே. செல்லப்பா சிறிது நேரம் மௌனமாய் இருந்து எதைப் பற்றியோ யோசித்த பிறகு, "அப்படித்தா னிருக்க வேண்டும். கந்தன் சொன்னுனு? அவன்தான் அன்றைய தினம் நான் வந்தபோது தெருவுக் கோடியில் என்னேப் பார்த்தவன். அவனே உனக்குத் தெரியுமா?" என்ருர்.

சமயசஞ்சீவிக்கு கந்தன் யாரென்பது தெரியாதானுலும், அவன் யாரென்று தெரிந்துகொள்ள எண்ணி அவர், "கந்தனே உமக்குக்கூடத் தெரியுமா!" என்று வியப்பாகக் கூறினுர்.

அப்போது அந்த வீட்டின் வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்ற ஓசை உண்டாயிற்று. உடனே செல்லப்பா பிள்ளை, "அதோ மானேஜரே வந்துவிட்டார்" என்றார். அடுத்த நிமிஷம் மானேஜர் அங்கே வந்து நின்று, சமயசஞ்சீவியைப் பார்த்துவிட்டு, "ஓஹோ! நீயா! நீ வேலைக்காக வந்ததாய் ஆபீஸில் என்னிடம் சொன்னாயே! இதற்குள் இங்கே எப்படி வந்தாய்? அப்போது டெலிபோனில் நான் பேசியதை நீ கேட்டாயா?" என்றார்.

உடனே செல்லப்பா, "இவன் யாரென்று நினைக்கிறாய். இவன்தான் ரங்கசாமி. அந்த அயோக்கிய நாய் கந்தனிருக்கிறானே, அவனே சங்கதியை இவனிடம் சொல்லியிருக்கிறான். அதனால் இவன் இங்கே சுலபமாக வந்துவிட்டான்" என்றார்.

மானேஜர்:—(சமயசஞ்சீவியை நோக்கி) நன்றாக வசமாய் இப்போது நீ எங்களிடம் மாட்டிக்கொண்டாய். உன்னை நான் இதோ போலீஸாரிடம் ஒப்புவிக்கப் போகிறேன்.

செல்லப்பா:—அது நல்ல யோசனையாகப் படவில்லை. நாம் இவனை இங்கேயே பலி போட்டுவிடுவோம்.

சமயசஞ்சீவி:—நான் கேட்ட கேள்விக்கு உத்தரம் சொல்லவில்லையே! கந்தனை எப்படி உங்களுக்குத் தெரியும்?

செல்லப்பா:—(கோபத்தோடு) அவனை உனக்கு எப்படி தெரியுமோ, அப்படியேதான் எங்களுக்கும் தெரியும். கந்தனையும் சாமர்த்தியமாக இங்கே கொண்டு வந்து, இருவரையும் சேர்த்து கயிற்றினால் கட்டி கிணற்றில் தள்ளி விடவேண்டும்.

மானேஜர்:—அது நல்ல யோசனைதான். கந்தன் இப்போது எங்கே இருப்பா னென்பது தெரிய வில்லையே.

செல்லப்பா:—அந்த விஷயம் நிச்சயமாகும் வரையில் இவனை இங்கேயே கைகால்களைக் கட்டிப் போட்டு வைத்திருப்போம்—என்றார். அப்போதும் சமயசஞ்சீவி சாந்தமாய் நிற்க, இருவரும் அவரைப் பிடித்துக் கட்டி விட்டனர்.

சமயசஞ்சீவி தாம் கட்டப்பட்டதைத் தடுக்காமலும், அதற்கு முன்னால் அங்கிருந்து தப்பி ஓடிவிட முயலாமலு மிருந்தது அவர்க ளிருவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கிய தானாலும், அதன் உண்மைக் காரணத்தைப் பற்றி அவர்கள் சிறிதும் சம்சயிக்கவில்லை.

அதன் பிறகு அவர்களிருவரும் அந்தக் கட்டிடத்திலேயே வேறோர் இடத்தை யடைந்து தணிவான குரலில் பேசிக்கொண்டதை சமயசஞ்சீவி உணர்ந்தா ராலும், அவர்கள் என்ன பேசினார்க ளென்பதை அறிய முடியவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு செல்லப்பா பிள்ளை அங்கே வந்து சேர்ந்தார். அப்போது மோட்டார் புறப்பட்டுச் சென்ற ஓசை கேட்டது. அதனால் மானேஜர் புறப்பட்டுப் போயிருக்க வேண்டு மென்பது சுலபத்தில் விளங்கியது.

செல்லப்பா அந்த இடத்தில் சமய சஞ்சீவி யிருந்ததை மறந்து விட்டவர்போல் தமது காரியங்களைச் செய்து கொண்டே யிருந்தார். அன்றைய பகல்பொழுது கழிந்தது. மாலை சுமார் 6 மணிக்கு செல்லப்பா பிள்ளை புறப்பட்டு வெளியில் சென்றார். ஏதோ ஒரு கதவு மூடப்பட்டு தாளிடப் பெற்ற ஓசையும், கொத்து சாவியின் ஓசையும் கேட்கவே, செல்லப்பா பிள்ளை கதவைப்

பூட்டிக்கொண்டு வெளியில் போகிறாரென்றும், அப்போது தம்மைத் தவிர அந்த வீட்டிற்குள் வேறு யாருமில்லையென்றும் உணர்ந்து, தம்முடைய கட்டுகளை அவிழ்த்துக் கொள்ள அதுவே தகுந்த சமயமென்று சமயசஞ்சீவி முடிவு செய்துகொண்டார்.

செல்லப்பா பிள்ளை தம்மைக் கட்டியதற்குமுன் கையில் வைத்திருந்த கத்தி அப்போது தமக்குச் சிறிது தூரத்திலிருந்த மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்தது அவருக்குத் தெரிந்ததாகையால், அவர் மெல்ல உருண்டபடியே அந்த மேஜையினருகில் சென்று எழுந்திருந்து நின்று, கட்டப்பட்டிருந்த கைகளை நீட்டி, கத்தியை எடுக்க முயன்றார். மேஜை மிகவும் விசாலமானதா யிருந்தமையாலும், அந்தக் கத்தி மேஜையின் நடுவில் வைக்கப்பட்டிருந்ததாகையாலும், அது எட்டவில்லை ஆகவே அவர் கீழே உட்கார்ந்து படுத்து உருண்டு, ஒரு மூலையில் காணப்பட்ட கைத்தடி யொன்றை எடுத்துக்கொண்டு மறுபடியும் மேஜையி னருகில் வந்து, அந்தக் கைதடியினால் கத்தியைக் கீழே தள்ளிவிட்டு தடியை மேஜையின்மேலேயே வைத்துவிட்டுக் கீழே உட்கார்ந்து, மெதுவாகக் கத்தி விழுந்திருந்த இடத்தை யடைந்து, அதை வாயினால் கௌவி யெடுத்து கைகளில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அறுக்கலானார். இரண்டு கைகளும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட் டிருந்தன வாதலால் வாயினால் கத்தியைப் பிடித்துக்கொண்டு ஒழுங்காய் உபயோகப் படுத்த முடியவில்லை யாகையால், கயிற்றை சுலபமாக அறுக்க இயலவில்லை. கயிறு கொஞ்சம் கொஞ்சமாகவே அறுந்ததாகையால் சுமார் அரை மணி நேரத்தில் கைகள் விடுவிக்கப் பட்டன. அதன் பிறகு கால் கட்டுகளை சுலபமாக அறுத்துக்கொண்ட

சமயசஞ்சீவி எழுந்திருந்து நான்கைந்து தடவைகள் உலாவி இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்ட பிறகு, அந்த வீடு முழுதையும் சுற்றிப் பார்த்து, அதன் அமைப்பைத் தெரிந்து கொண்டார். அவர் கட்டப் பட்டுக் கிடந்த ஹாலில் மாத்திரம் மேஜை முதலிய முக்கியமான சாமான்களிருந்தமையால், அவர் அந்த இடத்திற்கே திரும்பி வந்து மேஜையின் சொருகு பெட்டியைத் திறந்தார். அதற்குள் பல கடிதங்கள் காணப்படவே அவர் அவைகளை ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்துவிட்டு முன்போலவே வைத்துவிட்டார்.

ஒரு கடிதம் அடியில் வருமாறு எழுதப்பட் டிருந்தது. "இன்றைய தினம் இரவு அந்த வழியாகவே போகப் போகிருர்கள். அவர்கள் வேறு வழியாகப் போவார்களோ என்ற சம்சயம் வேண்டியதில்லை. அவர்கள் வேறு வழியாகப் போகாதபடி நான் பார்த்துக் கொள்ளுகிறேன். வண்டியில் மூன்று பேர்கள்தா னிருப்பார்கள்" என்று எழுதப்பட் டிருந்ததை அவர் படித்தார். அதில் தேதி கையெழுத்து ஆகியவை இல்லையாதலால், அது எப்போது யாரால் எழுதப்பட்டது என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதாயினும், காகிதம் பழுத்துப்போ யிருந்ததனுல் அது பல வருஷங்களுக்கு முன்னர் எழுதப்பட்டததாகத் தோன்றியது. அதை அவர் தமது சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்ட பிறகு சொருகு பெட்டியை உள்ளே தள்ளி மூடி விளக்கை யணைத்துவிட்டு, அந்த வீட்டைவிட்டு எப்படி வெளியில் போவது என்று யோசிக்கலானுர். அவர் தமது கட்டுகளை அவிழ்த்துக்கொண்டாராஞலும், அந்த வீட்டைவிட்டு வெளியில் போக முடியாத நிலைமையில் அவர் இருந்தார். ஏனெனில், வீட்டின் முன்

புறத்திலிருந்த ஒரு கதவைத் தவிர வெளியில் போகக் கூடிய வேறு வழி காணப்படவில்லை. வெளிக் கதவு வெளிப்புறத்தில் பூட்டப்பட் டிருந்தது.

அவர் உடனே டெலிபோன் யந்திரத்தி னருகில் சென்று ரிஸீவரைக் கையிலெடுத்து வைத்துக்கொண்டு, போலீஸ் ஸ்டேஷனில் விநாயகம பிள்ளை யிருக்கிறரா வென்று விசாரிக்க, அவர் விட்டிலிருந்தா ரென்பதை ஸ்டேஷனில் அப்போது இருந்த ஒரு ஜெவான் மூலம் தெரிந்து கொண்டு மேலே ஏதோ கூறமுயன்ற சமயத்தில் தெருக் கதவு திறக்கப்பட்ட ஓசையை கேட்டு ரிஸீவரை சடக்கென்று கொக்கியில் மாட்டிவிட்டு இருளில் சுவரின் ஓரமாய் ஒன்றி நின்றுர். பூட்டை விலக்கிய மனிதர் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து மறுபடியும் கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டதையும் சமயசஞ்சீவி கவனித்தார்.

அடுத்த நிமிஷம் ஒரு மின்சார விளக்கின் வெளிச்சம் வட்டவடிவமாக உட்புறத்தில் தெரிந்தது. வெளியிலிருந்து வந்த மனிதர் மின்சாரக் கைவிளக்கின் வெளிச்சத்தோடு வந்து மேஜையி னருகில் சென்றுர். சமயசஞ்சீவி ஓசை செய்யாமல் மெதுவாக நடந்து அப்பால் பாய்ந்து, ஒரு மூலையிலிருந்த கட்டிலின் அடியில் மறைவாக உட்கார்ந்திருந்தபடி கவனித்தார். புதிதாக வந்தவர், வீட்டிலிருந்த மின்சார விளக்கைக் கொளுத்தாதது சமயசஞ்சீவிக்கு வியப்பை யுண்டாக்கியது. வந்தவர் செல்லப்பா பிள்ளை அல்லவோ என்ற சந்தேக முண்டாயிற்று. எனவே சமய சஞ்சீவி அவருடைய சாயலை கவனித்தார். அவர் செல்லப்பா பிள்ளைபோல் காணப்படவில்லை.

வந்தவர் உடனே மேஜையி னருகில் சென்று அதன் சொருகு பெட்டியை வெளியில் இழுத்து, உள் புறத்தில் மின்சார விளக்கின் வெளிச்சத்தைக் காட்டியபடி உள்ளேயிருந்த காகிதங்களை யெல்லாம் எடுத்து ஒவ்வொன்ருய்ப் பார்த்த பிறகு முன் போலவே அதற்குள் வைத்தார். அதை கவனித்துக்கொண் டிருந்த சமய சஞ்சீவி அந்த மனிதர் எதையோ தேடுகிருர் என்று யூகித்துக் கொண்டார். அப்போது கைவிளக்கு அணைந்து விட்ட தாகையால், அங்கே என்ன நடந்த தென்பது தெரியாமல் போனதானுலும், அங்கே உண்டான ஓசை களினுல், அந்த மனிதர் புறப்பட்டுப் போனதாக சமய சஞ்சீவி உணர்ந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு தெருவுக்கதவு திறக்கப்பட்ட ஓசை கேட்கவே, சமய சஞ்சீவி தான் மறைந்திருந்த இடத்தைவிட்டு உடனே வெளிப் பட்டு தெருக்கதவை நோக்கி விரைந்து சென்று அதை இழுத்தார். அதே சமயத்தில் அது வெளியில் இழுக்கப் பட்டதானுலும், அடுத்த நிமிஷம் கதவு தடாரென்று திறந்து கொண்டது. வெளியில் சென்ற மனிதர் கதவை விட்டு விட்டு, ஓடி மறைந்து போனுர். சமயசஞ்சீவி உடனே தெருவை யடைந்து கதவை மூடி பூட்டை எடுத்து மாட்டி, பூட்டியதைப் போல் அழுத்தி வைத்து விட்டு, அப்பால் சென்று பங்களாவைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் பார்த்தார். எங்கேயும் மனிதர் எவரும் காணப்படவில்லை யாகையால், அந்த மனிதர் வெளியில் ஓடிப்போயிருக்க வேண்டுமென்று யூகித்துக்கொண்டு, செல்லப்பா பிள்ளை திரும்பி வருவதற்குள் தாம் போய் விடவேண்டு மென்று முடிவு செய்துகொண்டு, அவர் வேகமாக நடந்து, சிறிது தூரத்தில் முன்புறத்திலிருந்த ரஸ்தாவை யடைந்து அதில் செல்ல வாரம்பித்தார்.

தெருவில் அரை பர்லாங்குக்கு ஒன்ருயிருந்த லாந்தர் கம்பங்களில் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. அவர் ஒரு ராந்தல் கம்பத்தைக் கடந்து அப்பால் சென்ற சமயத்தில், தரையில் காணப்பட்ட தமது நிழலுக்குப் பக்கத்தில் இன்னெருவருடைய நிழல் தெரியவே, எவரோ பின்னல் வருகிருரென்று யூகித்து சமய சஞ்சீவி பின்னல் திரும்பிப் பார்த்தார். அப்போது ரஸ்தாவில் இடது பக்கத்திேைரமாய் வந்துகொண் டிருந்த ஒருவர் பக்கத்திலிருந்த வீட்டிற்குள் சடக்கென்று நுழைந்ததைப் பார்த்துவிட்டு, மேலும் செல்லலானர். சமய சஞ்சீவி அடுத்த லாந்தர் கம்பத்தண்டை சென்றபோது மறுபடியும் அந்த நிழல் ரஸ்தாவில் தெரியவே, சமயசஞ்சீவி திரும்பிப் பார்த்தார். அப்போதும் ரஸ்தாவின் வலது பக்கத்தில் வந்துகொண்டிருந்த அந்த மனிதர் அருகிலிருந்த ஒரு வீட்டிற்குள் நுழைந்தார்.

தம்மை எவராவது பின் துடர்கிருரோ வென்ற சந்தேகம் ஐயருக்குத் தோன்ற வாரம்பித்தது. அதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு அவர் நிதானமாக நடந்து சிறிதுதூரம்சென்று திடீரென்று முகத்தைப் பின்புறம் திருப்ப, அப்போது மறுபடியும் அதே மனிதர் அருகிலிருந்த ஒரு கட்டிடத்தில் நுழைந்ததைப் பார்த்தார். அவருடைய சந்தேகம் உறுதிப் பட்டது. அதனல், பின்னல் வந்த மனிதர் யாரென்பதைக் கண்டு பிடிக்க வேண்டு மென்றும், தம்மை அவர் துடர முடியாதபடி செய்துவிட வேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டு சமயசஞ்சீவி வேகமாய் நடந்து தெருவுக் கோடியை யடைந்து திருபிப் பார்த்தார். தெருவில் தூரத்தில் ஒருவர் ரஸ்தாவி னேரமாக உட்கார்ந்து ஒன்றுக்குப் போகிறவர்போல் காணப்

பட்டதை கவனித்தார். மறைந்து கொள்ளுவதற்குத் தகுதியான கட்டிடம் அருகில் இல்லாமையால் அந்த மனிதர் அம்மாதிரி தந்திரம் செய்கிருரென்று சமயசஞ்சீவி உடனே யூகித்துக் கொண்டார். ஒருகால், அவர், செல்லப்பா பிள்ளையின் வீட்டிற்குள் வந்த மனிதரா இருப்பாரோ என்று சந்தேகித்த சமயசஞ்சீவி அருகில் சிறிது தூரத்தில் முடக்கில் நின்றுகொண் டிருந்த ஒரு ஜெவானுக் கருகில் சென்று, "130! நான் இன்ஸ்பெக்டர்; பேசாமல் என்னேடு வா" என்று தணிவான குரலில் கூறிவிட்டு, பக்கத்தில் இருந்த கட்டிடத்திற்குள் நுழைந்தார். ஜெவான் அவர் உண்மையில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்பதைக் கண்டுகொண்டா ஞதலால், அவர் தன்னைக் கூப்பிட்டதற்கு ஏதாவது காரணமிருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண்டு விசையாக நடந்து சென்று அந்த கட்டிடத்திற்குள் புகுந்தான்.

அது ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம்; அதன் விசாலமான திண்ணையில் நின்ற சமயசஞ்சீவி, "ஜெவான், நீ இப்போது இங்கே வந்ததை யாராவது பார்த்தார்களா?" என்ருர்.

ஜெவான்:—யாரும் பார்க்கவில்லை.

இன்ஸ்பெக்டர்:—நீ ஒரு காரியம் செய். இப்போது நான் ஒரு கேஸைப்பற்றி ஓர் இடத்திற்குப் போகிறேன். என் பின்னல் எவனே ஒருவன் துடர்ந்து வருகிருன். அவன் யாரென்பது எனக்குத் தெரியவில்லை. நீ உன்னுடைய உடுப்பு வெளியில் தெரியாதபடி மறைத்துக் கொண்டு வெளியில் நடந்துபோ. நான் இங்கே வந்ததை அவன் கவனித்திருப்பான். நீ வெளியில் போனல் நான் தான் புறப்பட்டுப் போகிறேனென்று நினைத்துக்

கொண்டு அவன் உன்னைப் பின் துடர்வான். அவனுக்குப் பின்னுல் நான் வருகிறேன். நீ இரண்டு தெருவுகளுக் கப்பால் போனவுடன் உன்னுடைய மூட்டத்தை விலக்கி விடு. நீ ஜெவான் என்பதை அவன் அறிந்து கொள்வ துடன் தான் தவறுதலாக உன்னைத் துடர்ந்து வந்ததைக் கண்டுகொள்ளுவான். நீ உடனே சாமர்த்தியமாக மறைந்து போய்விடு. அப்போது இன்னும் வேடிக்கை யாய் இருக்கும். அவனை நான் பின் துடர்ந்து வந்து அவன் யாரென்பதை யறிகிறேன்.

ஜேவான்:—நல்ல வேளையாக என்னுடைய உடுப் பிற்குள் நான் துணியையும் கட்டிக்கொண்டிருக்கிறேன் —என்று கூறிவிட்டு அதை யவிழ்த்து உடுப்பின்மேல் கட்டிக்கொண்டான். சமயசஞ்சீவி அதுவரையில் மேலே போட்டுக்கொண்டிருந்த தமது அங்கவஸ்திரத்தை அவ னிடம் கொடுக்க, அவன் அதை வாங்கி முக்காடிட்டுத் தன் உடம்மை மறைத்துக்கொண்டு புறப்பட்டான். சமயசஞ்சீவி, "உடம்பு முழுதையும் மறைத்தாய்; கால் பட்டையை அவிழ்க்கவில்லையே. அதையும் அவிழ்த்து எடுத்துக்கொள். நீ இப்போது பூட்ஸ் போட்டுக்கொள் ளாம லிருப்பது நன்மையாகத்தா னிருக்கிறது" என்ருர்.

ஜெவான் கால்களில் கட்டிக்கொண்டிருந்த நாடாப் பட்டிகளை அவிழ்த்து சட்டைப்பைக்குள் வைத்து மறைத்துக் கொண்டான். சமயசஞ்சீவி உடனே, "இப் போது சரியாய்ப் போய்விட்டது. நீ நிதானமாக நடந்து போனுல், பின்னுல் வருபவன் நீ யாரென்பதை யூகிக்க அவகாசமேற்படும். ஆகையால் வேகமாய்ப் போ" என் ருர். ஜெவான் உடனே வேகமாய் ரஸ்தாவை யடைந்து மளமளவென்று நடந்து சென்ருன். இன்ஸ்பெக்டர்

அங்கேயே ஒளிந்து நின்றபடி ரஸ்தாவை கவனித்தார்; அடுத்த நிமிஷம் ரஸ்தாவில் ஒரு மனிதர் வந்து அப்பால் சென்றதைப் பார்த்தார். அந்த மனிதரே தம்மைத் துடர்ந்து வந்தவராக இருக்கவேண்டுமென்று எண்ணிக் கொண்டு இன்ஸ்பெக்டர் அவரை நன்ருக கவனித்துப் பார்க்க, அந்த மனிதர் ஒரு வைத்தியரைப் போலக் காணப்பட்டார். நாடி பார்க்கும் குழாய் அவருடைய கழுத்தில் தொங்கிக்கொண் டிருந்தது. அதைக் கண்ட சமயசஞ்சீவி வியப்படைந்தார். யாரோ ஒரு வைத்தியர் தம்மைத் துடர்ந்து வரக் காரணமெதுவுமில்லை யாகை யால், அந்த சமயத்தில் ரஸ்தாவில் அவர் தற்செயலாய் வந்திருக்க வேண்டுமென்றும், தம்மைத் துடர்ந்து வந்த மனிதர் இன்னும் வரவில்லை என்றும் எண்ணி அங் கேயே நின்ருர். வைத்தியர் இரண்டு கட்டிடங்களுக் கப்பாலிருந்த ஒரு கட்டிடத்திற்குள் நுழைந்ததை அவர் கவனித்து, தம்முடைய யூகம் சரியான தென்றும், யாரோ ஒரு நோயாளியைப் பார்க்கவே அவர் அந்த அகாலத்தில் வந்திருக்க வேண்டுமென்றும் நினைத்துக் கொண்டு, தம்மைத் துடர்ந்து வந்த மனிதர் வருகிருரா வென்று பார்க்க வெளியில் தலையை நீட்டினுர். ஆனுல் வேறு எவரும் அங்கே வரவில்லை யாகையால், சமயசஞ் சீவி வியப்படைந்தார்.

மேலும் சுமார் ஐந்து நிமிஷ நேரம் கழிந்தது. தம்மை யாரோ துடர்ந்து வந்ததாய்த் தாம் நினைத்தது தவரு யிருக்கவேண்டுமென்று அவர் எண்ணிக்கொண்டு தெருவை யடைந்து அதில் செல்லலானுர். சிறிது தூரம் சென்றவுடன், அவர் மறுபடியும் திரும்பி தமக்குப் பின் ஞல் யாராவது வருகிருர்களாவென்று பார்த்தார். அப் போது ரஸ்தாவில் பல ஜனங்கள் போய் வந்தனராத

லால், அவர் எதிர் பார்த்த மனிதர் வந்தாரா இல்லையா என்பது விளங்கவில்லை. அன்றைய தினம் காலையி லிருந்து அவருக்கு ஆகாரமில்லை யாகையால், அவர் அருகிலிருந்த ஓர் ஓட்டலில் நுழைந்து ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு, சில பலகாரங்களை வரவழைத்து வைத்துக்கொண்டு உண்ணத் தொடங்கினுர்.

அந்தக் கட்டிடத்தின் முன்புற வாசற்படி அவருக்கு சிறிது தூரத்தில் இருந்ததாகையால், அவர் அதன் வழி யாகப் போவோர் வருவோரை கவனித்தபடியே சாப் பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவர் ஏற்கெனவே சந்தித்த டாக்டர் அங்கே வந்து நுழையவே, சமயசஞ் சீவி வியப்படைந்தவராலும், அதைக் காட்டிக்கொள் ளாமல் வலது கையை எதிரிலிருந்த மேஜையின்மேல் ஊன்றிக்கொண்டு அதன் உள்ளங்கையை வலது பக்கத் துக் கன்னத்தில் வைத்துத் தம்முடைய முகத்தை அவர் கவனிக்க முடியாதபடி மறைத்துக் கொண்டு, டாக்டர் என்ன செய்கிறுர் என்று கவனித்தார். டாக்டர் அவ ரிருந்த திசையில் தமது முகத்தைத் திருப்பாமல் ஒரு மூலையில் தனியா யிருந்த ஒரு மேஜைக்குச் சென்று அருகி லிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, கழுத் திலிருந்து தொங்கிக்கொண் டிருந்த நாடிக் குழாயை சட்டைப் பைக்குள் சொருகிக் கொண்டு, அங்கிருந்த பாலக்காட்டு அம்பியை அழைத்து காப்பி கொண்டு வரச் சொன்னுர்.

அம்பி காப்பி கொண்டு வந்து வைத்தான். டாக்டர் அதை எடுத்து நிதானமாக ஆற்றத் தொடங்கினுர். அவருடைய காரியங்களை யெல்லாம் சமயசஞ்சீவி கவ னிக்க ஆரம்பித்தார். டாக்டர் ஒரு கையில் காப்பியை

வைத்துக் கொண்டு தமது சட்டைப்பையி லிருந்து ஒரு காகிதமும் பென்ஸிலும் எடுத்து வைத்துக் கொண்டு ஏதோ எழுதலானுர். சிறிது நேரத்தில் அதை எழுதி முடித்தவுடன் டாக்டர் சமயசஞ்சீவியை நோக்கி, "என் தலையில் கையை வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்? உங்களுக்கு உடம்பு சரியா யில்லையா?" என்று வினவினுர்.

சமயசஞ்சீவி:-(திடுக்கிட்டு) ஆம்; உடம்பில் ஏதோ கோளாறு ஏற்பட் டிருக்கிறது.

டாக்டர்:— (புன்சிரிப்புடன்) பித்தம் அதிகப்பட் டிருக்கும். நீங்கள் கையை இப்படி வைத்துக்கொண் டிருப்பதி லிருந்தே உங்களுக்குத் தலை நோகிற தென் பது தெரிகிறது.

சமயசஞ்சீவி:—ஆம்—என்று கூறிவிட்டு பலகாரங் களை சாப்பிடத் தொடங்கினுர். டாக்டர் தாம் எழுதிய காகிதத்தை தம்முடைய சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு, தாம் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு சரே லென்று எழுந்திருந்து சமயசஞ்சீவியி னருகில் வந்து நின்று, "நாக்கை வெளியில் நீட்டுங்கள்; பார்க்கிறேன்" என்ருர்.

சமயசஞ்சீவி புன்சிரிப்புடன், "இப்போது நாக்கை எப்படி நீட்டுகிறது? வாயில் இருக்கும் தோசை கீழே விழுந்து விடுமே" என்ருர்.

டாக்டர் புன்சிரிப்புடன், "வாயி லிருப்பது கீழே விழுந்தால் பீடைவிட்ட மாதிரி" என்ருர்.

சமயசஞ்சீவி வாயி லிருந்ததை விழுங்கிவிட்டு நாக்கை நீட்ட, அதை டாக்டர் பார்த்துவிட்டு, "சரி;

கண்ணைப் பார்க்கிறேன்" என்று கூறி அவருடைய கண்ணிமைகளைப் பிதுக்கிப் பார்த்தபின், உங்களுக்கு உடம்பு நிரம்பவும் கேவலமா யிருக்கிறது. நீங்கள் டானிக் சாப்பிட வேண்டும்" என்று கூறி தம்முடைய நாடி பார்க்கும் குழாயை காதில் மாட்டிக் கொண்டு அவருடைய தேகம முழுதையும் பரீட்சித்துப் பார்த்தார். அப்படிப் பார்த்த காலத்தில் டாக்டர் திடீரென்று நிமிர்ந்து உச்சிமேட்டைப் பார்க்க, அதைக் கண்டு வியப்படைந்த இன்ஸ்பெக்டரும் சரேலென்று மேலே நிமிர்ந்து, அங்கே எதையும் காணுமல் கீழே குனிந்து டாக்டரைப் பார்த்தார். டாக்டர் நாடி பார்க்கும் குழாயைத் தம்முடைய சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு, "நீங்கள் தகுந்த மருந்து சாப்பிட வேண்டும் இல்லாவிட்டால் உடம்பு சீக்கிரம் இளைத்து விடும்" என்று கூறிவிட்டுத் தாம் முன்னர் உட்கார்ந்திருந்த நாற்காலியி னருகில் சென்று உட்கார்ந்து கொண்டு காப்பி சாப்பிடத் தொடங்கினுர். இரண்டொரு நிமிஷ நேரம் கழிந்தது. அப்போது இன்ஸ்பெக்டர், தாம் பலகாரங்கள் சாப்பிட்டதற்காகப் பணம் கொடுப்பதற்குத் தமது சட்டைப் பையில் கையை விட்டார். ஏனெனில் பையில் பண மிருந்ததா இல்லையா என்பது அப்போது நினைவிற்கு வர வில்லை. அவர் ஒவ்வொரு பையாக பார்த்துக் கொண்டே வர, ஒரு பையில் அவர் வைத்திருந்த பணம் இருந்தது. ஆனுல் அவர் செல்லப்பா பிள்ளையின் வீட்டில் மேஜையிலிருந்து எடுத்துத் தமது சடடைப் பையில் வைத்திருந்த கடிதம் காணப்பட வில்லை, அவர் அபாரமான வியப்படைந்து தவிககத் தொடங்கினுர். அவர் கடிதத்தை சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்ட பிறகு

எந்த இடத்திலும் குனிந்து பார்க்கவில்லை யாகையால் அது கீழே விழுந்திருக்கும் என்ற சந்தேகத்திற்கும் இட மில்லாதிருந்தது. ஆகவே, அது எப்படித்தான் காணு மல் போயிருக்கு மென்று சமயசஞ்சீவி யோசனை செய் தார். அவருக்கு உடனே விஷயம் விளங்க ஆரம்பித் தது. டாக்டர் மேலே பார்ப்பதுபோல் நடித்துத் தாமும் மேலே பார்க்கச் செய்து, அந்த சமயத்தில் நாடி எப்படி அடித்துக் கொள்ளுகிறது என்பதை கவனிப் பவரைப் போல் நடித்து சாமர்த்தியமாய்த் தமது பையில் தெரிந்த கடிதத்தை எடுத்திருக்க வேண்டு மென்று யூகித்துக் கொண்டு, சரேலென்று எழுந் திருந்து டாக்டருக் கருகில் சென்று., அவருடைய தோளின்மேல் கையை வைத்து, "யாரையா நீர் ? உம் முடைய பெய ரென்ன?" என்று வினவினுர்.

டாக்டர் வியப்பைக் காட்டிய முகத்துடன், "நீர் இந்த ஊர் மனித ரில்லை என்பது, என்னைக் கேட்ட கேள்வியி லிருந்து நன்ருய் விளங்குகிறது, நீர் எந்த ஊர்க்காரரர்?" என்ருர்.

சமயசஞ்சீவி:—இந்த மாதிரி கதை பேச நானும் அறிவேன். விஷயத்தை ஏன் மூடிப் பேச வேண்டும். நீர் என் னுடைய சட்டைப் பையி லிருந்து எடுத்த கடி தத்தை முதலில் இப்படிக் கொடும்.

டாக்டர்:—அடே யப்பா! அதைக் கண்டு பிடிக்க இவ்வளவு நேரமாயிற்ரு! இங்நெரம் தூங்கினீரா?

சமயசஞ்சீவி:—ஒருவருடைய சட்டப்பையி லிருக் கும் பொருளை எடுப்பது திருட்டுக் குற்றம் என்பது உமக்குத் தெரியு மல்லவா?

டாக்டர்:— ஒரு வீட்டிற்குள் நுழைந்து ஒரு பொருளை எடுப்பது மாத்திரம் குற்றமல்லவா. ஆகையால் நீர் கொல்லன் உலையில் ஊசி விற்க வேண்டாம். உம்முடைய கடிதத்தை நீர் எங்கே போட்டீரோ! என்னைக் கேட்கிறீரே. நான் உம்முடைய சட்டைப் பையிலிருந்து எடுத்தேனென்பதற்கு ஏதாவது ஆதாரமிருக்கிறதா? நீர் எந்தக் கடிதத்தைப் பற்றிப் பேசுகிறீரென்பதே எனக்குத் தெரியவில்லையே.

சமயசஞ்சீவி:— உம்முடைய சாமர்த்தியப் பேச்சு போதும். நிறுத்தும் — என்று கூறியபடி எழுந்து டாக்டருடைய சட்டைப் பைகளையெல்லாம் சோதனை செய்யத் தொடங்கினர். உடனே டாக்டர், "ஐயா நன்ருகப் பார்த்துக் கொள்ளும்" என்று கூறி, தம்முடைய சொக்காய் முதலியவைகளின் பைகளையெல்லாம் திறந்து திறந்து காட்டினர். ஆனல், கடிதம் எங்கும் காணப்படவில்லை. அது மாயமாய் மறைந்துவிட்டது. சமயசஞ்சீவி, "நீர் கொஞ்சதூரம் நகர்ந்து நில்லும். காலிற் கடியில் வைத்துக்கொண்டு அதன் மேல் நிற்கிறீரோ வென்று நினைக்கிறேன்" என்ருர். டாக்டர் உடனே அப்பால் நகர்ந்து கொண்டார். தரையிலும் கடிதம் காணப்படவில்லை. சமயசஞ்சீவி டாக்டருடைய நாடி பார்க்கும் குழாவையும் எடுத்து ஆட்டிப் பார்த்தார். அதற்குள் காகிதம் சொருகப்பட்டிருந்ததாகவும் தோன்றவில்லை.

அப்போது அங்கே வந்த ஓட்டல் வேலைக்காரன் மேஜையின்மேலிருந்த பாத்திரங்களை எடுக்க முயல, உடனே டாகடர். "பாத்திரங்களை எடுக்க வேண்டாம். நான் இன்னம் காப்பி சாப்பிட்டாக வில்லை" என்ருர். சமயசஞ்சீவி உடனே, "ஓஹோ! பாத்திரத்தினடியில்

கடிதத்தை மறைத்து வைத்திருக்கிறீரோ'' என்று கூறியபடி மேஜையின்மே லிருந்த காப்பிப் பாத்திரங் களை யெடுத்துப் பார்க்க, கடிதம் அங்கும் காணப்பட வில்லை. உடனே டாக்டர் சமயசஞ்சீவியை நோக்கி, ''ஏனையா! உமக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? இவ்வளவு தூரம் சோதனை போட்டும் உமக்கு இன்னம் திருப்திப்பட வில்லையா? நான் திருடன் என்ற எண் ணமோ?'' என்றார்.

சமயசஞ்சீவி அதற்கு மறுமொழி கூற வில்லை. கடிதம் எப்படி மறைந்திருக்கு மென்ற நினைவிலேயே அவருடைய கவனம் சென்றது. சாதாரணமாக அம் மாதிரி பொருள் மறைக்கப்பட வேண்டுமானால், பொருளைப் பறி கொடுப்பவர் அதை எங்கு தேடமாட் டாரோ அங்குதான் அது இருக்கும் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. டாக்டரிடம் அந்தக் கடித மில்லை யாகையால் தாம் அவரைப் பிடித்துக் கொள்ள முடியாது என்பதும் ஐயருக்கு விளங்கியது. அதனால் அவர் தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியி னரு கில் சென்று அங்கிருந்த நாற்காலி, மேஜை ஆகிய இரண்டி னடியிலும் தேட ஆரம்பித்தார். நாற்காலியி னருகில் கீழே தரையில் ஒரு காகிதம் கிடைக்கவே, அதை அவர் உடனே எடுத்துக் கொண்டார். அதைக் கண்ட டாக்டர் புரளியாகச் சிரித்து, ''பார்த்தீர்களா! நான் சொன்னது சரியாய்ப் போய் விட்டது. எங் கேயோ கடிதத்தைப் போட்டுவிட்டு என்னைக் கேட்டீர் களே!'' என்றார். சமயசஞ்சீவி அதை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு டாக்டர் யாரென்பதை அறிய வேண்டும் என்று முடிவு செய்துகொண்டு, ''நான் தவறுதலாய் நினைத்து விட்

டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய சட்டைப்பை முதலியவைகளை நான் பார்த்ததற்காக ஆயாசப்பட மாட்டீர்க ளென்று நம்புகிறேன்" என்றார்.

டாக்டர்:-(புன் சிரிப்புடன்) எனக்கு அதைப் பற்றி ஆயாச மொன்று மில்லை. உங்களுடைய தவறை நீங்கள் உணரும்படி எவ்வாறு செய்வதென்று எனக்குக் கவலையா யிருந்தது, நல்ல வேளையாகக் கடிதம் அகப்பட்டு விட்டது.

சமயசஞ்சீவி :— அதிருக்கட்டும். என்னுடைய உடம்பின் நிலைமை கேவலமாய் இருப்பதாகச் சொன்னீர்களே! அதற்கு என்ன மருந்து சாப்பிட வேண்டுமென்பதை நீங்கள் சொல்ல வில்லையே; அந்த மருந்து உங்க ளிடமே அகப்படுமா?

டாக்டர்:-அதற்கென்ன, நான் மருந்து தருகிறேன். உங்களுடைய விலாசத்தை எழுதிக் கொடுத்தால் நான் நாளைய தினம் காலையில் வந்து உங்களைப் பார்க்கிறேன்.

சமயசஞ்சீவி:— உங்களுக்கு அந்தப் பிரயாசை கொடுக்க எனக்கு விருப்ப மில்லை. உங்களுடைய வீட்டிற்கு நானே வருகிறேன். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

டாக்டர்:—நான் அடுத்த தெருவி லிருக்கிறேன்.

சமயசஞ்சீவி;— அடுத்த தெருவென்றால் நான் ஊரெல்லாம் அலைய வேண்டியதுதான். அந்தத் தெருவினுடைய பெயரைச் சொல்லுங்கள். அப்போதுதான் நான் சுலபமாக உங்களுடைய வீட்டிற்கு வரலாம்.

டாக்டர்:—வெள்ளாளத் தெருவில் 12-ம் நம்பர் வீடு.

சமயசஞ்சீவி:—உங்களுடைய பெயரென்னவோ?

டாக்டர்:—என்னை டாக்டர் சுந்தரம் பிள்ளை என்று சொல்லுவார்கள். உங்களுடைய பெயரென்ன?

சமயசஞ்சீவி:—என்னை நாராயணசாமி என்று சொல்லுவார்கள். நான் பிள்ளையார் கோவில் தெருவில் 15-ம் நம்பர் வீட்டி லிருக்கிறேன். எனக்கு நேரமாகிறது. நான் போய் வருகிறேன்—என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். டாக்டரும் எழுந்தார்; இருவரும் ஓட்டல் காரருக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்த பிறகு தெருவை யடைந்தனர். இருவரும் லோகாபிராமமாகப் பேசியபடி அதே தெருவில் சிறிது தூரம் சென்றனர். அது கடைத்தெரு வாதலால் இரண்டு பக்கங்களிலும் ஏராளமான கடைக ளிருந்ததுடன் ஜனநடமாட்டமும் அதிகமா யிருந்தது. ஒரு ஜவுளிக் கடைக்கு முன்னால் துணிகள் ஏலம் போட்டதை அவர்கள் பார்த்தனர். டாக்டர் உடனே சமயசஞ்சீவியின்மேல் கையை வைத்து, "வாருங்கள். எந்த மாதிரியான துணிகள் ஏலம் போடுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்" என்று கூறியபடி அவரை இழுத்துக்கொண்டு கும்பலில் புகுந்தார். சமயசஞ்சீவி முன்னாலும், டாக்டர் அவருக்குப் பின்னாலும் நின்றுகொண்டு துணிகளைப் பார்த்தனர். அங்கு ஏராளமான ஜரிகைத் துணிகளும், விலையுயர்ந்த இதர ஜவுளிகளும் காணப்பட்டன. அப்போது ஏலம் போடப்பட்ட துணி ஒரு ஜரிகை அங்கவஸ்திரமா யிருந்த தாகையால் சமயசஞ்சீவி தாமும் ஏலத்தில் கலந்துகொள்ளலா மென்று நினைத்தார். அப்போது ஏலக்காரன், "15 ரூபாய்க்கு விற்ற துணி ஒரு ரூபாய்—ஒரு ரூபாய்—ஒருதரம் ஒரு ரூபாய்—இரண்டுதரம் ஒரு

ரூபாய்—இந்தமாதிரி துணி உங்களுக்கு ஒரு ரூபாய்க்குக் கிடைக்காது—ஒரு ரூபாய்—ஒரு ரூபாய்—ஒரு தரம்—இரண்டுதரம்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே இருந்தான். சமயசஞ்சீவி உடனே, "ஒண்ணரை ரூபாய்" என்றார். ஏலம் போட்டவன், "ஒண்ணரை ரூபாய்" என்று கூச்சலிடத் தொடங்கினான். சுமார் கால்மணி நேரம் நாவறண்டு போகும் வரையில் அவன் கதறியும் யாரும் அதற்குமேல் கேட்கவில்லையாகையால், அவன் அதை சமயசஞ்சீவிக்குக் கொடுத்துப் பணம் பெற்றுக்கொண்டு வேறு துணியை ஏலம் போட ஆரம்பித்தான்.

அப்போது சமயசஞ்சீவி தற்செயலாய் பின்புறம் திரும்பிப் பார்க்க, டாக்டர் காணப்படவில்லை. அவர் வியப்படைந்து கும்பலை விட்டு வெளியில் வந்து, டாக்டரைத் தேடிப் பார்த்தார். டாக்டர் எங்கும் காணப்படவில்லை; அவர் மாயமாய் மறைந்து போய்விட்டார். ஐயர் தமது சட்டைப் பையில் கடிதம் பத்திரமா யிருக்கிறதா வென்று பார்க்க, அது இருந்தது. அவர் அதை நான்காக மடித்து வைத்திருந்தார். ஆனால் அது அப்போது எட்டாக மடித்து வைக்கப்பட் டிருந்தது. அதைக் கண்டவுடன் அவர் வியப்படைந்தவராய், அதை சட்டையை விட்டு வெளியில் எடுத்துப் பார்க்க, அது பழுத்துப்போன பழைய காகிதமா யிராமல் வெளுப்பாயிருந்த வேறொரு காகிதமா யிருந்தது. அவர் வியப்புடன் அதைப் பிரித்துப் பார்த்தார். அது காலிக் காகிதமா யிருந்தது. தம்மிடமிருந்த கடிதத்தை மறுபடியும் டாக்டரே அபகரித்திருக்க வேண்டுமென்றும், அம்மாதிரி அபகரிக்கவே தம்மை அந்தக் கும்பலுக்குள் அவர் அழைத்துக்கொண்டு வந்திருக்க வேண்டு

மென்றும் சமயசஞ்சீவி உடனே அநுமானித்துக் கொண்டார்.

அவர் அங்கிருந்து புறப்பட்டு பத்து நிமிஷங்களுக்குப் பிறகு வெள்ளாளத் தெருவை அடைந்தார். 12-ம் நம்பர் வீடு எங்கிருந்தது என்று தேடிக் கண்டுபிடிக்க மேலும் சுமார் பத்து நிமிஷ காலம் பிடித்தது. ஆனால் அது வீடல்ல; அது ஒரு காடிகானவா யிருக்கவே, டாக்டர் தம்மிடம் பொய்யான விலாசத்தைக் கொடுத்து தம்மை ஏமாற்றி விட்டாரென்று அவர் அறிந்தார். காடிகானவின் முன்புறத்தில் ஓர் ஆதிதிராவிடன் காணப்பட்டான். அவன், அவர் தயங்கித் தயங்கி நின்றதைப் பார்த்துவிட்டு, "ஏஞ்சாமீ! என்ன பாக்கிறீங்க?" என்று வினவினன்.

சமயசஞ்சீவி:—ஒருவர் தம்முடைய வீட்டின் நம்பர் 12 என்று சொன்னர். இது வீடுபோல் இல்லை; அதனல் முழிக்கிறேன்.

நந்தனர்:—ஆரு சாமீ அப்பிடிச் சொன்னவிக?

சமயசஞ்சவி:-ஒருடாக்டர். அவருடைய பெயர் சுந்தரம் பிள்ளை. தம்முடைய வீட்டு விலாசத்தைக் கொடுப்பதாய்ச் சொல்லிவிட்டு, அவர் இந்த காடிகானவினுடைய விலாசத்தை எனக்குக் கொடுத்திருக்கிருர்.

நந்தனர்:— (கலகல வென்று நகைத்து) நல்ல கதைங்க இது! அந்த டாக்கிட்டரு கெட்டிக்காரரு தானுங்க. டாக்கிட்டரு இஞ்சே ஆருமில்லீங்களே. உள்ளற கோச்சுவண்டி இருக்குதுங்க. நாந்தேன் வண்டிக்காரன். நானு அண்ணுடம் இங்கிட்டுதான் படுத்து மொடங்கிக்கிறதுங்க—என்ருன்.

உடனே சமயசஞ்சீவி புறப்பட்டார். இரண்டு கட்டிடங்களுக்கு அப்பால் சென்றபோது, அவருடைய மனதில் ஒரு சந்தேகம் உதிக்க வாரம்பித்தது. ஆகவே அவர் திரும்பி வேகமாக வந்து, அந்த நந்தனுரை நோக்கி, "ஏனப்பா, உன்னுடைய பெயரென்ன?" என்ருர்.

நந்தனுர்:—எம்பேரு, வந்து வந்து, பாவாடைங்க.

சமயசஞ்சீவி:—சீக்கிரத்தில்தான் பெயரை உற்பத்தி செய்கிருய். வேஷத்திற்குத் தகுந்த பெயர்தான். ஆனுலும் நான் ஏமாறவில்லை, நீர் டாகடர் சுந்தரம் பிள்ளையென்பது எனக்குத் தெரியும். என் கடிதத்தை இப்படி எடும்—என்ருர்.

நந்தனுர்:—(கலகலவென்று நகைத்து)என்ன சாமி! என்னமோ சொல்றீங்களே! நானு டாக்கிட்டரா! அப்பிடியானு எனக்கு அதிட்டந்தானுங்க. மெய்யா எம்பேரு பாவாடெதாஞ்சாமீ—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள்,

சமயசஞ்சீவி:—(இடைமறித்து) அந்த வேடிக்கையெல்லா மிருக்கட்டும். எனக்கு நேரமாகிறது. கடிதத்தை எடும். நான் உம்முடைய சங்கதியைத் தெரிந்துகொண்டேன். நீர் யார் ஐயா? உண்மையைச் சொல்லும்.

நந்தனுர்:— எம்பேருதான் பாவடேன்னு சொன்னேனே! நீ திரியும் என்னு கேக்கறே? எம்பேரு அதுதானு இல்லையான்னு சந்தேவமா யிருந்தா, எம் பொஞ்சாதி உள்ளற தூங்கரு, அவ கிட்ட கேக்கலாம்.

சமயசஞ்சீவி:—சரி; அவளை வெளியில் கூப்பிடு—என்ருர்.

உடனே நந்தனர் கதவைத் திறந்து, "தே! தே! எளுங்கறேன் எளு; இந்த ஐயா ஒன்னெப் பாக்கனு மாம்" என்று கூப்பிட்டான். ஆனல் உள்ளே எந்த விதமான ஓசையும் உண்டாக வில்லை. அவன் வியப் போடு பேசத் துடங்கி, "அடியாத்தே, இந்தப் பொம் புளெ எப்பிடித்தேன் கும்பகருணஞ் சேவிக்கருங்க றேன்! அவ எந்திரிக்கமாட்டா சாமீ. நீங்களே உள் ளற தூருங்க" என்ருன்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவி எண்ண மிடலானர். உண்மையில் அவனுடைய மனைவி உட்புறத்தி லிருந் தால் அவன் நந்தனு ரென்பது உண்மையாதலால், தாம் பார்த்துவிட்டுப் போய்விடலா மென்று அவர் கருதி, "சரி. நான் உள்ளே போய், அவள் இருக்கிருளா என் பதைப் பார்க்கிறேன். அது வே போதுமானது" என்று கூறிவிட்டுக் கதவி னருகில் வந்தார். உடனே நந்தனர், "இதா வத்தி பொட்டி கீதுங்க. உள்ளற தூந்து கொளுத்திப் பாருங்க எசமான். கதவெ அதிய மாத் தொறந்தா, காத்துலே குச்சி நிண்டு பூடுங்க" என் ருன். சமயசஞ்சீவி உட்புறத்தை யடைந்து நெருப்புக் குச்சியைக் கிழித்தார். உட்புறம் காலியா யிருந்ததை யும், உள்ளே எதுவு மில்லை யென்பதையும் அந்த வெளிச்சத்தால் அவர் அறிந்தார். அதோடு அந்த நந்த னருடைய முகம் டாக்டர் சுந்தரம் பிள்ளையின் முகத் தைப்போ லிருந்ததையும் அவர் கவனித்தார். அப் போது கதவும் தடாரென்ற ஓசையுடன் மூடிக் கொண் டது. "ஏய் கதவைத் திற" என்று சமயசஞ்சீவி உடனே கூச்சலிட, அதற்கு மறுமொழி கிடைக்க வில்லை. அவர் கதவை இழுத்துப் பார்க்க, அது திறந்து கொள்ள வில்லை.

அவர் தமது பலம் முழுதையும் உபயோகப்படுத்தி கதவை இழுத்து இழுத்துப் பார்க்க, கடைசியில் கதவு திறந்து கொண்டது. ஆனல் வெளிப் புறத்தில் நந்தஞர் காணப்பட வில்லை. பாவாடையப்பர் மாயமாய் மறைந்து போய் விட்டார். இன்ஸ்பெக்டர் தெருவின் இரண்டு பக்கங்களிலும் பார்க்க, அவன் எங்கும் காணப் பட வில்லை. அவர் மறுபடியும் நெருப்புக் குச்சியைக் கிழித்துப் பார்க்க, கதவு தாளிடப் படாமல் ஒரு கயிற் றினல் கட்டப்பட் டிருந்த தென்பது தெரிந்தது. அப் போது கதவில் ஒரு கயிறு தொங்கிக்கொண் டிருந்த தால் அது விளங்கியது. லாயத்தின் கதவில், "இந்த லாயம் குடிக்கூலிக்கு விடப்படும்!" என்று எழுதப்பட் டிருந்த ஒரு விளம்பர அட்டை தொங்கிக்கொண் டிருந் ததையும அவர் பார்த்தார். உடனே அவருக்கு விஷயங் கள் விளங்க வாரம்பித்தன.

அவர் லாயத்தின் கதவை மூடிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார். அப்போது விநாயகம் பிள்ளை அங்கே காணப்பட்டார். அவரிடம் அன்றையதினம் நடந்த விஷயங்களை யெல்லாம் சமயசஞ்சீவி கூறிய பிறகு, டெலிபோன் யந்திரத்தின் அருகில சென்று ரிஸீவரைக் கையிலெடுத்துக் கொண்டு, கமிஷனருடைய ஆபீஸ் நம் பரைக் கூப்பிட்டார். உடனே மறு பக்கத்தி லிருந்து, "ஹலோ! யாரது?" என்று ஒருவர் கேட்ட குரலோசை உண்டாயிற்று.

சமயசஞ்சீவி:—நான் இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி; ஸ்டேஷனி லிருந்து பேசுகிறேன். நான் டிப்டி கமிஷ னருடன் பேச வேண்டும்.

மற்றவர்:- நான் டிப்டி கமிஷனர்தான். என்ன விசேஷம்?

சமயசஞ்சீவி:— நான்கு நாட்களுக்கு முன்பு ரங்க சாமியின் வழக்கில் நான் தலையிடும்படி நேரிட்ட தல்லவா? அந்த வழக்கில் நான் மேல்நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாமா?

டிப்டி கமிஷனர்:-ஓ, எடுத்துக் கொள்ளலாம். குற்றவாளியே இன்னும் அகப்படவில்லையாமே?

சமயசஞ்சீவி:—ஆம். அந்த வழக்கு வேறு டிவிஷன் சப்-இன்ஸ்பெக்டரிடம் இருக்கிற தாகையால், அதை ஆராய்வதில் சில இடைஞ்சல்க ளிருக்கின்றன. ஆகையால் என்னை அந்த டிவிஷனுக்கு மாற்றிவிட்டால் நான் சீக்கிரமாய் ஆராய்வேன்.

டிப்டி கமிஷனர்:— அப்படியே செய்யலாம். அந்த டிவிஷன் இன்ஸ்பெக்டரை இந்த டிவிஷனுக்கு மாற்றி விடலாம். இப்போது என்ன செய்துகொண் டிருக்கிறீர்?

சமயசஞ்சீவி:—அந்த வழக்கில் ஆராய்ச்சி செய்து சில விஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறேன். வழிப்பறி நடத்தியவர்களைக் கூடிய சீக்கிரத்தில் பிடித்துவிடலா மென்ற நம்பிக்கைக்கு இடம் இருக்கிறது.

டிப்டி கமிஷனர்:— அப்படியானல் நான் உம்மை அந்த டிவிஷனுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆனல், காரியம் பலிக்க வேண்டும். பலிக்காவிட்டால் அனுவசியமாக உம்மை மாற்றியதைப் பற்றி மேலதிகாரி அதிருப்தி யடைவார்.

சமயசஞ்சீவி:—காரியம் பலிக்கும்படி நான் முயற்சி செய்கிறேன்.

டிப்டி கமிஷனர் :—அதைத்தான் நானும் கோருகி றேன்—என்ருர். அவ்வளவோடு அவர்களுடைய சம்பா ஷணை முடிவடைந்தது.

சமயசஞ்சீவி ரிஸீவரைக் கொக்கியில் மாட்டிவிட்டு தம்முடைய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு விநாய கம் பிள்ளையை நோக்கி, "அநேகமாய் நாளையதினம் முதலே நான் ரங்கசாமியின் வழக்கு பதியப்பட் டிருக் கும் டிவிஷனுக்குப் போய்விடுவேன். வழக்கு முடிந்த வுடன் உம்மையும் அந்த டிவிஷனுக்கே அழைத்துக் கொள்ளுகிறேன். இல்லாவிட்டால், நானே இங்கே திரும்பி வந்துவிடுகிறேன்" என்று கூறி சிறிது நேரம் மௌனமா யிருந்தபிறகு, "தந்தி யனுப்பினீரே! அதற்கு உத்தரம் ஏதாவது வந்ததா?" என்று வினவினுர்.

விநாயகம் பிள்ளை :—வந்திருக்கிறது. அந்த ஊரில் ரங்கசாமி எங்குமில்லை யென்றும், அப்படி அவன் அங்கே வந்தாலும் அவனை உடனே பிடித்து இங்கே யனுப்புவ தாகவும் அந்த ஊர் சப் இன்ஸ்பெக்டர் மறுமொழி அனுப்பி யிருக்கிருர்.

சமயசஞ்சீவி:—அந்த மறுமொழிதான் வருமென்று நான் எதிர்பார்த்ததுதானே. நான் வீட்டிற்குப் போகி றேன். ஏதாவது விசேஷம் நேர்ந்தால் எனக்குத் தெரி யப்படுத்தும். 130 இங்கே வருவான். அவனிடம் என் னுடைய அங்க வஸ்திர மிருக்கிறது. அதை வாங்கி வைத்துக் கொள்ளும். நாளைய தினம் காலையில் நான் அதை எடுத்துக் கொள்ளுகிறேன்—என்று கூறியபடி ஸ்டேஷனை விட்டு புறப்பட ஆரம்பித்தார். உடனே விநாயகம் பிள்ளை, "இன்னொரு விஷய மிருக்கிறது. யாரோ ஒருவர் உங்களைப் பார்க்க வேண்டு மென்று

இன்று பல தடவைகள் இங்கே வந்தார். நீங்கள் இங்கே இல்லையாகையால், அவர் புறப்பட்டுப் போய்விட்டார்'' என்றார். உடனே சமயசஞ்சீவி, ''அப்படியா! அவர் யாரென்பதை விசாரித்தீரா?'' என்றார். விநாயகம் பிள்ளை, ''விசாரித்தேன். அவர் விவரம் எதையும் தெரிவிக்கவில்லை'' என்றார். சமயசஞ்சீவி, ''அவர் மறுபடியும் வந்தால் அவர் யாரென்பதையும், என்ன காரியமாக என்னைப் பார்க்க விரும்புகிறாரென்பதையும் விசாரியும்'' என்று கூறிவிட்டு வெளியில் சென்று சிறிது நேரத்தில் தமது வீட்டை யடைந்தார்.

அடைந்தவர் தாம் அந்த வழக்கில் எப்படி ஆராய்ச்சி செய்யலா மென்பதைப் பற்றி யோசனை செய்தபடி அன்றைய தின மிரவெல்லாம் இருந்தார்; ரங்கசாமியைக் கண்டு வாரப் பத்திரிகையின் மானேஜரும், செல்லப்பா பிள்ளையும் ஏன் பயப்படுகின்றனர், அவர்களுக்குள் என்ன விதமான விரோதமிருக்கும். செல்லப்பா பிள்ளையைப்போல ஆசிரியர் இருப்பதாயும், ரங்கசாமி தவறுதலாய் அவருடைய மோட்டார் வண்டியை நிறுத்தி வழிப்பறி நடத்தியதாயும் டெலிபோன் மூலம் மானேஜர் கூறியது உண்மையான விஷயம் என்றே வைத்துக் கொண்டாலும், செல்லப்பா பிள்ளை மீது ரங்கசாமி பழிக்குப் பழி வாங்க வேண்டிய காரணமென்ன, செல்லப்பா பிள்ளை ரங்கசாமிக்கு ஏற்கெனவே ஏதாவது கெடுதல் செய்திருப்பானா, அந்த அநாமதேயக் கடிதத்தை யார் எழுதியிருப்பார்கள், டாக்டர் சுந்தரம் பிள்ளை அந்தக் கடிதத்தைத் தம்மிடமிருந்து அபகரிக்க வேண்டிய காரணமென்ன என்று தமக்குத் தாமே பலவாறு எண்ணமிட்டபடி சமயசஞ்சீவி அந்த இரவைப் போக்கினார்; மறுநாள் காலையில் போலீஸ்

ஸ்டேஷனை யடைந்து தாம் கவனிக்க வேண்டியகடமைகளை யெல்லாம் கவனித்த பிறகு இன்னொரு டிவிஷனிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது ஸ்டேஷனில் இருந்த சப்-இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி ஐயரை மரியாதையாக வரவேற்று நாற்காலியில் உட்கார வைத்தார்.

சமயசஞ்சீவி:—(புன்சிரிப்புடன்) வழிப்பறி வழக்கு என்ன நிலைமையி லிருக்கிறது?

மற்றவர்:—அதே நிலைமையில்தா னிருக்கிறது. ரங்கசாமி யென்னும் சுப்பிரமணியன் இன்னும் அகப்படவில்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் ஒரு சங்கதி வெளியாயிற்று. இந்த ஊரில் குப்புசாமி என்று ஒருவ ரிருக்கிறார். அவருடைய வீட்டில் ஒரு கவிராயர் ராமாயணம் வாசித்துக்கொண் டிருக்கிறார். அவருக்கும் எனக்கும் கொஞ்சம் பரிச்சயம் ஏற்பட்டது. அவர் சற்று முன்பு இங்கே வந்துவிட்டுப் போனார். அவர் சில சங்கதிகள் சொன்னார். ரங்கசாமி நாடகம் எழுதுகிறவனும்; அவன் குப்புசாமியிடம் ஒரு நாடகமும், இந்த வழிப்பறியில் சம்பந்தப்பட்ட வாரப் பத்திரிகை ஆசிரியருக்கு 2 நாடகங்களும் கொடுத்தானும். அதற்கு அவர்கள் பணம் கொடுக்க வில்லையாம். தன்னை அவர்கள் ஏமாற்றியதற்காக அவன் அப்படிப் பழி தீர்த்துக் கொண் டிருக்க வேண்டுமென்று அர்த்த மாகிறது.

சமயசஞ்சீவி:—கவிராயரே அப்படிச் சொன்னாரா?

மற்றவர்:—மற்ற விஷயங்களை அவர் சொன்னார். கடைசி யூகம் என்னுடையது.

சமயசஞ்சீவி:— அவர்கள் பணம் கொடுக்காமல் அவனை ஏன் ஏமாற்றினார்களாம்?

மற்றவர்:—அவர்கள் ஏமாற்றவில்லை. குப்புசாமி முதலில் ஒரு நாடகத்தை வாங்கிக் கொண்டாராம். அவருடைய வேலைக்காரன் அதைப் பழைய காகிதம் வாங்குகிறவனிடம் அஜாக்கிரதையாகப் போட்டுவிட்டானும். இரண்டாவது தடவை சுப்பிரமணியன் எழுதிக் கொடுக்க, அதை குப்புசாமி வாங்கி வைத்துவிட்டு அவசரமாய் ஊருக்குப் போய்விட்டாராம். ஆகவே• அவருக்கு ஒரே நாடகத்தை இரண்டு தடவைகள் ரங்கசாமி எழுதிக் கொடுத்தானும். வாரப் பத்திரிகை ஆசிரியர் மறுபடி வந்து பார்க்கும்படி சொன்னுராம்; அப்போது அவர் ஏதோ முக்கியமான வேலையை கவனித்துக்கொண் டிருந்தாராம். அவர் அதனுல் ரங்கசாமியை மறுபடி வரச் சொன்னுராம். அவன் அங்கே போகவேயில்லையாம்.

சமயசஞ்சீவி:—ஆகவே, தவறு முழுதும் ரங்கசாமியின்மேல் இருக்கிற தென்கிறீர்களா?

மற்றவர்:—ஆம். அது நிதரிசனமாய்த் தெரிகிறதே.

சமயசஞ்சீவி:—அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அந்த சமயத்தில் அவன் ஜுரமாகவல்லவா படுத்திருந்தான்.

மற்றவர்:—உடம்பு குணமான உடன் அவன் அந்த ஆசிரியரைப் பார்த்திருக்கலா மல்லவா; அப்படிச் செய்யாமல் அவன் ஏன் வழிப்பறி நடத்தினன்.

சமயசஞ்சீவி:—அதற்காக அவன் வழிப்பறி நடத்துவானு வென்பதுதான் எனக்கு சம்சயமாய்ப் படுகிறது. ஆசிரியரை நேரில் கண்டு கேட்பதல்லவா சுலபமான காரியம். அதைவிட்டு ஒரு முட்டாள்கூட இந்த மாதிரி

யான குற்றத்தைச் செய்திருக்க மாட்டானே. அதை நீங்கள் கவனிக்க வில்லையே!

மற்றவர்:—அதை நான் கவனிக்காமல் இருக்க வில்லை. ஆசிரியர் பணத்தையும் கொடுக்க மாட்டார், நாடகங்களையும் கொடுக்கமாட்டார் என்ற நினைவின் மேல் அவன் ஆத்திரமடைந்து அம்மாதிரி செய்திருக் கலா மல்லவா.

சமயசஞ்சீவி:—(புன்சிரிப்புடன்) நான் ஒரு காரிய மாக இந்தப் பக்கம் வந்தேன். அதோடு, உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாமென் றெண்ணினேன். சரி, நான் போய் வருகிறேன்—என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு வெளியில் சென்றார்.

அவர் அப்போது தம்முடைய உத்தியோக உடுப்பு களைப் போட்டுக்கொண் டிருக்கவில்லை யாகையால், அவர் இன்ன உத்தியோகம் வகிப்பவ ரென்பது யூகிக் கக்கூடாததா யிருந்தது. கந்தன் என்பவன் யாரென்ப தையும், அவனுடைய இருப்பிடம் எங்கே இருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டவராய் அவர் தம்முடைய வீட்டை யடைந்து ஒரு பூசாரியைப்போல் வேஷம் போட்டுக் கொண்டார். தலையில் அழுக்கடைந்த ஒரு பழைய துணியினால் தலைப்பாகை கட்டிக்கொண்டார். முகத்தில் ஒரு பெரிய மீசையை ஒட்ட வைத்துக்கொண்டு, குங்கு மத்தை வாரி முகம் முழுதிலும் பூசிக்கொண்டார்; அதோடு ஓர் உடுக்கையும் கையில் எடுத்துக்கொண்டு கொஞ்ச நேரத்திற்குப் பிறகு செல்லப்பா பிள்ளையின் பங்களாவிற்குள் நுழைந்து நின்றுகொண்டு புரும் புரும் புரும் புரும் என்று உடுக்கைத் தட்டி குறி

சொல்ல ஆரம்பித்தார். "இந்த வூட்டு ஐயாவுக்கு ஒரு அபாயம் வரப்போவுது; இந்த வூட்டு ஐயாவுக்கு ஒரு அபாயம் வரப்போவுது; இந்த வூட்டு ஐயாவைக் கெடுக்கறத்துக்கு ஒருத்தன் களம்பி இருக்கருன். அம்மாடி அம்மாடீ பலுக்குடீ தேவியாரே. நெசத்தைச் சொல்லம்மே; கூசாதே கூசாதே" என்று திருப்பித் திருப்பி நான்கைந்து தடவைகள் கூறவே, அப்போது இருந்த செல்லப்பா பிள்ளை சரேலென்று வெளியில் வந்தார். அவருடைய முகம் வெளுத்துபோ யிருந்தது. அவர் "டேய்! போடா வெளியில். உன்னை யார் வீட்டிற்குள் அழைத்தது! குறிகாரனுடைய சேதி யாருக்கும் தெரியாதென்று நினைத்தாயா! சாமர்த்தியமாகப் பேசி, அவரவர்கள் தங்களுக்குத்தான் சொல்லுகிறுன் என்று நம்பும்படி செய்வது உங்கள் வழக்கமல்லவா. நீ குறிசொன்னது போதும் போ வெளியில்'' என்ருர்.

குறிகாரன்:—அம்மாடி தாயாரே! ஐயா கோவிச்சுக்கிருரே! பலுகம்மா, பலுகம்மா. ஐயா நமபருப்பலே பலுகம்மா! மறைக்காமே மெய்யை சொல்லம்மே—என்று கூறி உடுக்கை அடித்துவிட்டு செல்லப்பாவை நோக்கி, "சாமீ! ஓங்கிளுக்கு ஒருத்தராலே பெரிய அபாயம் வரப்போவுது; கட்டாயமா வரப்போவுது; நீங்க நம்புங்க. அசட்டையாத் தள்ளாதீங்க—என்ருன்.

செல்லப்பா:— டேய்! மரியாதையாக வெளியில் போகிருயா, மாட்டாயா?

குறிகாரன்:—சாமீ! ஒரு பளய கிளிசல் குடுங்க சாமி. அதியமா ஒண்ணும் வாணுங்க. நானு காசு பணம் கேக்கலீங்க.

செல்லப்பா:— இங்கே எதுவும் இடையாது. காலை வேளையில் இங்கே வந்து தாறுமாருய் உளறுகிருயா! நீ போகாவிட்டால் நிச்சயமாய் உதை தின்பாய்; உன் இடுப்புத்துணி கிழிசலாய்விடும்.

குறிகாரன்:—சாமீ! அப்பிடி யெல்லாம் சொல்லா தீங்க. ஓங்கிளுக்கு அபாயம் வரப்போற சமயத்துலே அந்தப் பரதேவைக்குக் கோவம் வராப்புலே பேசாதீங்க. சாமி, ஒரு மனுசன் உங்களே சர்க்காருலெ காட்டிக் குடுக்கறத்துக்காவ உங்களைத் தேட்ருன். அவன் கடிய இஞ்சே வரப்போருன் சாமீ.

செல்லப்பா:-(வியப்புடன்) என்ன! என்ன சொல்லு கிருய்?

குறிகாரன்:— ஓங்களே ஒருத்தன் விரோதிக்கிட்ட காட்டிக் குடுத்துப்புட்டான். அந்த விரோதி இஞ்சே வரப்போருன்.

செல்லப்பா:—அப்படியா! இதெல்லாம் உனக்கு எப் படித் தெரியும்?

குறிகாரன்:—நம்ப கொல தேவதை சொல்லுதுங்க சாமீ. நம்ப வாயிலே பொய்யி வராதுங்க சாமீ!—என் ருன்.

அதே சமயத்தில் பங்களாவின் முன்புறத்தில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு வர் கீழே இறங்கினர் அவர் ஒரு தக்க கனவானென் பது அவருடைய தோற்றத்திஞலேயே தெரிந்தது. அவர் வண்டியிலிருந்து இறங்கியவுடன், அந்த பங்களாவிற் குள் நுழைந்ததை செல்லப்பாவும் சமயசஞ்சீவியும் பார்த்தனர். புதியதாக அங்கே வந்த மனிதர் முகத்தில்

கிர்தாமீசை வைத்துக்கொண்டு, கண்களுக்கு குளிர்ச்சிக் கண்ணுடி மாட்டிக்கொண் டிருந்தார். தலையில் ஒரு பெரிய தலைப்பாகை காணப்பட்டது. அவர் ஆங்கிலேய தோரணையில் உடுப்புக ளணிந்துகொண் டிருந்தார்.

அவர் செல்லப்பா பிள்ளையைப் பார்த்து, "இது தானே செல்லப்பா பிள்ளையினுடைய பங்களா?" என்று வினவினுர்.

செல்லப்பா:—ஆம். நான்தான் செல்லப்பா பிள்ளை. நீங்கள் யாரென்பது தெரியவில்லையே! நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள்.

மற்றவர்:—பரவாயில்லை. நான் அவசரமாய்ப் போக வேண்டும். ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போக வேண்டும். நான் நின்றே பேசிவிட்டுப் போகிறேன். மானேஜர் உங்களிடத்தில் ஒரு சங்கதி கேட்டுக்கொண்டு வரச்சொன்னுர். யாரோ ஒருவனும்—அவனுடைய பெயர் என்னவோ என்று சொன்னுர்—ஆம், ஆம்—இப் போது நினைவிற்கு வருகிறது. கந்தசாமி என்பவனைப் பற்றி உங்களிடம் ஏதோ சொன்னுராம். அந்த விஷயம் என்னவாயிற் றென்று கேட்டுக்கொண்டு வரச்சொன் ஞர்.

செல்லப்பா:-அப்படியா! அவனை இங்கே அழைத்து வர நேற்றையதினம் நான் அவனிடம் போனேன். அவன் அகப்படவில்லை. அதனுல் இப்போது இன்னும் கொஞ்ச நேரத்தில் மறுபடி போகிறேனென்று அவரிடம் சொல் லுங்கள். நீங்கள் யார்?

மற்றவர்:— நான் மானேஜருக்கு வேண்டியவன் தான்; நல்லது, நான் போய் வருகிறேன்—என்று கூறி விட்டு, வேகமாய் வெளியில் சென்று மோட்டாரில்

ஏறிக்கொண்டார். வண்டி உடனே புறப்பட்டுப் போய் விட்டது. அந்த சம்பாஷணையை மௌனமா யிருந்தபடி கவனமாய்க் கேட்டுக்கொண் டிருந்த சமயசஞ்சீவிக்கு திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றவாரம்பித்தது. அப் போது அங்கே வந்துவிட்டுப் போன மனிதரை அதற்கு முன் தாம் எங்கேயோ பார்த்த மாதிரி யிருக்கிறதென்று அவருக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அது யாரா யிருக்குமென்று அவர் யோசிக்கலானார். அவருடைய அகக்கண்ணில் டாக்டர் சுந்தரம் பிள்ளையின் உருவம் முதலில் வந்து நின்றது டாக்டர் என்று தெரிவித்துக் கொண்ட அந்த மனிதரைப்போல இப்போது வந்த மனி தரும் இருக்கிறார் என்று அவர் எண்ணினார்.

அப்போது செல்லப்பா பிள்ளை, "நீ ஏதோ சொன் னாயே! அது மெய்தானா? நீ இன்னும் விவரமாய்ச் சொல்ல முடியுமா?" என்று வினவவே, சமயசஞ்சீவி திடுக்கிட்டு சுய உணர்வை யடைந்தவராய், "அம்பிட் டுத்தானுங்க. அதுக்குமேலே நானு அதியமாச் சொல்ல முடியாதுங்க. எசமான் ஒரு கிளிசல் துணிகூட குடுக்க மாட்டேங்குறீங்க" என்று கூறிவிட்டு வெளியில் சென் றார். சென்றவர் வீதியை யடைந்து இரண்டு கட்டிடங் களுக் கப்பாலிருந்த ஒரு கட்டிடத்தின் முன்னாலிருந்த கைப்பிடிச் சுவரின்மேல் உட்கார்ந்துகொண்டு, தம்மு டைய கந்தைத் துணியொன்றை எடுத்துத் தைப்பதைப் போல் நடித்தபடி செல்லப்பாவின் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தார். சிறிது நேரத்தில் செல்லப்பா பிள்ளை கந்தசாமியின் வீட்டிற்குப் போவாரென்றும், அவரைப் பின்துடர்ந்து தாமும் போய்க் கந்தசாமியின் வீட்டைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் தீர்மானித் துக் கொண்டே அவர் அம்மாதிரி அங்கு காத்திருந்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு செல்லப்பா பிள்ளை வெளியில் வந்தார். அவர் குறிகாரனைப் பார்த்தாராஞலும், அவனை சட்டைசெய்யாமல் அவனிருந்த இடத்திற்குப் பக்கமாகவே வந்து வீதியோடு நடந்து சென்றார். அவர் சுமார் ஒரு பர்லாங்கு தூரம் போனபிறகு தாம் மௌனமாக அவரைப் பின் தொடர்ந்தால் சந்தேகம் கொள்வாரென் றெண்ணி, உடுக்கை அடித்து, "நல்ல காலம் பொறக்கப்போவுது. நல்ல காலம் பொறக்கப் போவுது" என்று கூறியபடி நிதானமாக சமயசஞ்சீவி பின்ஞல் வந்துகொண் டிருந்தார். அவர்கள் தெருவுக் கோடியை அடைந்த சமயத்தில் ஒரு தயிர்க் கூடைக் காரன் பின்ஞல் வந்ததை சமயசஞ்சீவி கவனித்தார். அவர்கள் மூவரையும் தவிர அப்போது தெருவில் ஜன நடமாட்டம் காணப்படவில்லை.

செல்லப்பா பிள்ளை உடனே வேரெரு தெருவில் திரும்பி அதிலேயே செல்லலாஞர். சமயசஞ்சீவி பின் துடர்ந்தார். அந்தத் தெருவிலிருந்த ஓர் ஓட்டு வீட்டின் முன்புறத்தை யடைந்த செல்லப்பா தெருத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு மனிதனை நோக்கி, "ஏனப்பா சந்தசாமி! நேற்று சாயங்காலம் வந்து உன்னைத் தேடினேன். உன்னைக் காணவில்லை; நீ எங்கே போயிருந்தாய்?" என்று வினவியபடி எதிரிலிருந்த திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். சமயசஞ்சீவி அடுத்த வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு மறுபடியும் துணி தைப்பதுபோல நடந்தபடியே அவர்களுடைய சம்பாஷணையை கவனிக்கலாஞர். அப்போது, "தயிரு தயிரு!" என்ற ஒரு கூச்சல் கேட்கவே, அவர் கவனித்தார். முன்னர் காணப்பட்ட அதே தயிர்க்காரன் தயிர் விற்றபடி நிதானமாக வந்துகொண் டிருந்தான்.

தயிர்க்காரன் கந்தசாமியிருந்த வீட்டிற்கு எதிர்த்த வீட்டின் திண்ணையின்மேல் தயிர்க் கூடையை இறக்கி வைத்துவிட்டு மடியிலிருந்த சில்லறைகளை எடுத்து வைத்துக் கொண்டு எண்ணியதை சமயசஞ்சீவி பார்த்து விட்டு மறுபடியும்முன்போல் குனிந்துகொண்டு தமது தையல் வேலையை கவனிக்கலானார்.

அப்போது அடுத்த வீட்டிலிருந்த இருவரும் அடியில் வருமாறு சம்பாஷித்தனர்.

கந்தசாமி:—நான் ஊரிலில்லை. என்னை எதற்காகத் தேடினீர்கள்?

செல்லப்பா பிள்ளை:—எதற்குமில்லை. நீ இப்போது என்ன செய்துகொண் டிருக்கிறாய்? ஏதாவது உத்தியோகத்தி லிருக்கிறாயா? இல்லாவிட்டால் சும்மாதானிருக்கிறாயா?

கந்தசாமி:—உத்தியோகமா! எனக்கு எவன் உத்தியோகம் கொடுக்கக் காத்திருக்கிறான்! நான் சும்மாதானிருக்கிறேன்.

செல்லப்பா பிள்ளை:—நான் எதற்காகக் கேட்கிறேன் தெரியுமா? எனக்கு ஓர் ஆள் வேண்டும். நீ வேலை எதுவுமகப்படாமையால் துன்பப்பட்டுக்கொண் டிருந்தது எனக்குத் தெரியும். ஆகையால் உன்னை வேலைக்கு வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு தேடினேன்.

கந்தசாமி:—அப்படியானால் நான் வருகிறேன். எப்போது முதல் வேலைக்கு வரச்சொல்லுகிறீர்கள்?

செல்லப்பா பிள்ளை:—இப்போதுமுதலே வரலாம்.

கந்தசாமி:— இங்கே கொஞ்சம் அலுவல் இருக்கிறது. அதை முடித்துக்கொண்டு இன்னும் கால்மணி நேரத்தில் வருகிறேன்.

செல்லப்பா பிள்ளை:—சரி; அப்படியே செய்; நான் போகிறேன்—என்று கூறி திண்ணையைவிட்டு எழுந்திருந்து வீதிக்குச் சென்ருர். சென்றவர் தெருக்கோடியையடைந்து மறைந்த வரையில் சமயசஞ்சீவி காத்திருந்தார். அதன் பிறகு அவர் திண்ணையை விட்டிறங்கி கந்தசாமியின் வீட்டு வாசலில் போய் நின்று, "நல்ல காலம் பொறக்கப் போவுது. நல்ல காலம் பொறக்கப் போவுது. ஆனு ஒரு கண்ட மிருக்குது. அதுலே தப்பிச்சுக்கிணு ஐயா அமோகமா யிருப்பாரு; ஐயா அமோகமா யிருப்பாரு" என்று இரண்டு மூன்று தடவைகள் கூறி உடுக்கையை புரும் புரும் புரும் புரும் என்று மேன் மேலும் தட்டினுர்.

உடனே கந்தசாமி, "வீட்டில் யாரு மில்லை; போ அப்பா" என்று கடுகடுப்பாகக் கூறினுர்.

சமயசஞ்சீவி:—எசமான், ஒரு பழைய கிளிசல் துணி குடுக்கணும்; ஓங்க பேரேச் சொல்லிக் கட்டிக்குவேன்; புரும் புரும் புரும் புரும்—(உடுக்கைத் தட்டுகிருர்)

கந்தசாமி:—இங்கே துணி யெதுவுமில்லை. அரிசி கொண்டு வந்து போடுகிறேன்—என்று கூறிவிட்டு உள்ளே போனுர். வீட்டின் உள் அமைப்பை கவனிக்க வேண்டுமென்று எண்ணிய சமயசஞ்சீவி சரேலென்று நடையில் தாவி அப்பால் தலையை நீட்டி உள்பக்கத்தை பார்த்தார்.

உட்புறத்தில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு கூடங்களும், ஒவ்வொரு கூடத்திலும் இரண்டிரண்டு

அறைகளும், நடுவில் நான்கு தாழ்வாரங்களால் சூழப் பட் டிருந்த முற்றமும் இருந்ததையும், வலது பக்கத்தி லிருந்த ஓர் அறைக்குள் கந்தசாமி நுழைந்ததையும் பார்த்துவிட்டு, அங்கிருந்து சரேலென்று வெளியில் வந்து தெருவை யடைந்து முன்போல் நின்றுகொண் டிருந்தார். அப்போதும் எதிர்வீட்டுத் திண்ணையில் சில்லறையை யெண்ணிக்கொண் டிருந்த தயிர்க்காரன் அந்த வேலையை ஊக்கமாய் கவனிப்பவன்போ லிருந் தான். சமயசஞ்சீவி செய்த காரியத்தை அவன் கவனித் ததாய்த் தோன்றவில்லை.

கந்தசாமி கையில் அரிசியுடன் வெளியில் வர, சமயசஞ்சீவி அதைப் பெற்றுக்கொண்ட பிறகு, "ஒங்க கையெ நீட்டுங்க; பாக்கலாம்" என்றார். கந்தசாமி உடனே கையை நீட்டவே, சமயசஞ்சீவி அதைப் பார்த்துவிட்டு, "இதோ பாத்தீங்களா? இதுதான் தான்ய ரேகை, இது தன ரேகை, இது ஆயுள் ரேகை, இது குசரேகை, இது சனி ரேகை, இந்த ரேகை அந்த ரேகை வளியாப் போவுது; அது இந்த ரேகை வளியாப் போவுது; ஒங்கிளுக்குக் கண்ணாளம் இன்னம் ஆவ லேப்போ லிருக்குது. ஒரு வேளை கண்ணாளம் ஆயிருந் தா லூ மிருக்கலாம்னு தோணுது" என்றார்.

கந்தசாமி:—ஆம். எனக்கு இன்னம் கலியாணம் ஆகவில்லே. அது உனக்கு எப்படித் தெரிந்தது?

சமயசஞ்சீவி:—அது மாத்தரமில்லீங்க. இன்னும் கூடச் சொல்லலாம். நூத்துக்குள்ளற ஒரு தொகை சொல் லுங்க.

கந்தசாமி:—இருபத்தைந்து.

சமயசஞ்சீவி:— (கண்களை மூடிக்கொண்டு ஜெபம் செய்பவரைப்போல் நடித்து) ஓங்க உசிருக்கு அபாயம் வரும்போலத் தோணுது. ஓங்களுக்கு இப்ப வயசு என்னுங்க?

கந்தசாமி:—முப்பதாகிறது.

சமயசஞ்சீவி:—சரியான வயசெச் சொல்லுங்க.

கந்தசாமி:—சரியான வயது முப்பதுதான்.

சமயசஞ்சீவி:— (முகத்தைச் சுளித்துக்கொண்டு கந்தசாமியின் கையை விட்டுவிட்டு) ஒண்ணும் சொக மில்லீங்க—என்று கூறியபடி புறப்பட்டுப் போகத் தொடங்க, கந்தசாமி, "இரப்பா! இதற்குள் போகி ருயே! 'சொகமில்லீங்க' என்கிருயே. ஏன் அப்படிச் சொல்லுகிருய்?" என்ருர்.

சமயசஞ்சீவி:—(திரும்பி வந்து) ஓங்களுக்கு ஒரு கண்டம் வரப்போவுது. இப்ப ஓங்களுக்கு சரியான தெசை யில்லீங்க. இந்த சமயத்துலே நீங்க வெளீலே எங்கனெயாச்சும் போனு வூட்டுக்குத் திரும்பி வாரத் துக்கு முடியாதுங்க. அதுனலே வூட்டைவுட்டே போவாணுங்க.

கந்தசாமி:— (திடுக்கிட்டு) ஓ! நான் வெளியில் போகக் கூடாதா?

சமயசஞ்சீவி:—ஆமாங்க. போனு, பெரிய அபாயம் நேருங்க.

கந்தசாமி:—என்ன அபாயம் வரும்?

சமயசஞ்சீவி:—உசிருக்கே அபாயம் வருங்க. அது வும் ஒரு விரோதியாலே வரும். இப்ப கொஞ்ச நேரத்

துக்கு மின்னாலேகூட நீங்க ஓங்க விரோதியெப் பாத்திருக்கணுமே!

கந்தசாமி:—எனக்கு விரோதி யாரு மில்லையே!

சமயசஞ்சீவி:—(கூரையைக் காட்டி) அதோ உச்சி மோட்டுலெ எச்சிணி தேவதை யிருந்து என்ன சொல்லுது பாத்தீங்களா? ஓங்க விரோதியெ இப்ப கால்மணி நேரத்துக் குள்ளற நீங்க பாத்திருக்கணுமாம். நெசத்தை மறைக்காதீங்க.

கந்தசாமி:— (திடுக்கிட்டு) வியப்பைத் தோற்றுவித்த குரலில்)என்ன! இப்போது இங்கே வந்துவிட்டுப் போனவரா என்னுடைய விரோதி?

சமயசஞ்சீவி —இப்ப ஆரு வந்தாங்களோ, அது எனக்குத் தெரியாதுங்க. கால் மணிக் குள்ளற ஓங்க விரோதி இஞ்சே வந்திட்டுப் போயிருக்கணும்.

கந்தசாமி:- நீ சொல்வது வேடிக்கையா யிருக்கிறது. அவருக்கும் எனக்கும் விரோத மில்லையே! (சிறிது நேரம் மௌனமா யிருந்து யோசித்த பிறகு) எங்களிருவருக்கும் விரோதம் உண்டாவதற்குக் காரண மில்லையே!

சமயசஞ்சீவி:—ஓங்க விரோதியெ நீங்க எப்பவோ ஒரு தெருவுக் கோடீலே பாத்திங்களாம். அது மொத அவருக்கும் ஓங்கிளுக்கும் பகை.

கந்தசாமி:— அவரை நான் தெருவுக் கோடியில் பார்த்ததாக நினைவில்லையே—என்று கூறிவிட்டு சற்று மௌனமா யிருந்த பிறகு, "ஓஹோ! அதுவா! சுமார் 2 வருஷ காலத்திற்கு முன் ஒரு நாளிரவு அவரைப் பார்த்தேன். அதைச் சொல்லுகிறாயா?" என்றார்.

அப்போதும் எதிர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண் டிருந்த தயிர்க்காரன் ஏதோ எழுதிக்கொண் டிருந்தான். அவன் கணக்கெழுதிஞனென்பதை அவன் வைத்துக்கொண் டிருந்த சிறிய கணக்கு நோட்டு புஸ்தகம் காட்டியது.

கந்தசாமி கூறியதைக் கேட்ட சமயசஞ்சீவி மறுபடியும் உச்சிமேட்டில் அவருடைய கண்களுக்கு மாத்திரம் தெரிந்தும், மற்றவர்களுடைய கண்களுக்குத் தெரியாமலும் இருந்த எக்ஷணி தேவதையைப் பார்ப்பதைப்போல் நடித்து, "அண்ணைக்கி அதே ரைஸ்தாவிலே ஒரு வளிப்பறி நடந்ததா எச்சிணி தேவதை சொல்லுதுங்க" என்ருர்.

கந்தசாமி:—ஆம், ஆம். உண்மைதான். நீ சரியாய்த்தான் சொல்லுகிருய். நீ சொல்லுகிறபடியே அதே வீதியின் வடக்குக் கோடியில் இவரையும் இன்னெருவரையும் பார்த்தேன். இருவரும் வேகமாய் எங்கேயோ போனுர்கள்.

சமயசஞ்சீவி:— இன்னெருத்தரைப் பார்த்ததாச் சொன்னீர்களே! அவுரும் இவரைச் சேந்தவருதானு ?

கந்தசாமி:— ஆம். அவர் பெரிய உத்தியோகத்திலிருக்கிருர். இவர் ஏன் என்மேல் பகை வைத்திருக்கிருர் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லப்பா—என்று கூறிய சமயத்தில் எதிர்த்த வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த தயிர்க்காரன் திருப்பதிப் பிரார்த்தனைக்காக வளர்த்திருந்த தனது தாடியை ஒருமுறை தடவிக்கொடுத்து, மீசை உதடுகளில் படாமல் ஒதுக்கிவிட்டுக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு வந்து அவர்களினருகில் நின்றுகொண்டு குறிகாரனை நோக்கி, "ஏனப்பா!

ஓங்கள்ளே சிலபேருக்கு மைபோட்டுப் பார்க்கத் தெரியு மின்னு சொல்லிக்கிறுங்களே. ஓனக்கும் அது தெரி யிமா?'' என்றுன்.

சமயசஞ்சீவி:—தெரியும் அப்பா; நீ என்னுத்துக்குக் கேக்கறே?

தயிர்க்காரன்:— மை போட்டுப் பாத்தா, ஓடனே ஆஞ்சநேயரு வருவாராம்; அவருகிட்டெ நமக்கு வேணுங்கற சங்கதியே எளுதிக் காட்டினு, அவுரு சவாப்புக் குடுப்பாராம். அது அம்பிட்டும் மெய்தானே? —என்றுன்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவிக்கு உடனே ஒருயுக்தி தோன்றியது. தயிர்க்காரன் நல்ல சமயத்தில் தமக்கு அந்த யுக்தியைச் சொல்லிக் கொடுத்தானென்று நினைத்து அவர் உள்ளூற சந்தோஷ மடைந்து அந்த யுக் தியை உபயோகித்து, கந்தசாமி சொல்ல வேண்டிய விஷயத்தை எழுதி வாங்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, "ஏப்பா! ஓனக்கு என்ன பாக் கணம்? தச்சணை எட்டணு வெக்கணம். வெக்கறயா?'' என்றுர்.

கந்தசாமி:— (வியப்புடன் குறிகாரனை நோக்கி) உனக்கு மை போட்டுப் பார்க்கத் தெரியுமா?

சமயசஞ்சீவி:—அல்லாம் தெரியுஞ்சாமி; ஓங்க சங்க தியை ஒரு காயிதத்துலே எளுதிக்குடுங்க. அதுக்கு அடிலே ஆஞ்சநேயரு சவ்வாப்பு எளுதிக் குடுப்பாரு. ரைஸ்தாவுலே அவிங்க ரெண்டு பெரையும் கண்ட வெபரத்தை யெல்லாம் எளுதிக் குடுங்க. அவிங்களேப்

பத்தி ஓங்கிளுக்கு என்னு தெரியணம் அப்பிடீங்கறத்தை யும் எளுதுங்க.

தயிர்க்காரன்:—காயிதம் வேணுங்களா? இதோ தாறேன்—என்று கூறிவிட்டுத் தன்னுடைய நோட்டுப் புஸ்தகத்தி லிருந்து ஒரு காகிதத்தைக் கிழித்தெடுத்து, அதையும் தன்னுடைய பென்சிலையும் கொடுத்தான். கந்தசாமி அதைப் பெற்று காகிதத்தில் எழுதி வைத்துக்கொண்டு, "மை தயாரா யிருக்கிறதா?" என்றார்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவி என்ன செய்வது என்று யோசிக்கலானார். அப்போது தயிர்க்காரன், "பளைய மை ஒதவாதுங்க. அப்பப்ப புச்சா சேஞ்சுக் கணுங்க நாம்ப தயார்ப் பண்ணிக்கிடலாம். மஞ்சளே சுட்டு கருக்கிப் பொடிபண்ணி விளக்கெண்ணெயோடே கொளைச்சுக்கணும்; அம்பிட்டே" என்றான். கந்தசாமி உடனே, "நான் மஞ்சளும், எண்ணெயும் கொடுக்கி றேன். வா உள்ளே போவோம்" என்று கூறியபடி உள்ளே செல்ல, சமயசஞ்சீவி அவனைத் தொடர்ந்து உள்ளே போய்ச் சேர்ந்தார். தயிர்க்காரனும் அங்கே வந்து எட்டிப் பார்த்துக்கொண்டு நின்றமையால், அவன் இருந்தது இடைஞ்சலா யிருக்குமென் றெண் ணிய கந்தசாமி, "நீ ஏன் நிற்கிறாய்? நீ போய் உன் வேலையைப் பார்" என்றான். தயிர்க்காரன் அசட்டு நகையாக நகைத்து, "அதெப்பத்திப் பரவாயில்லீங்க; நானு எத்தினியோ எடங்கள்ளே மைபோட்டுப் பாக்க றத்தை பாத்திருக்கேனுங்க. நீங்க சொம்மாப் பாருங்க. இவன் பாத்து ஒழுங்காச் சொன்னா நானும் ஒரு சங்க தியைப் பாக்கணம். அதுக்காவத்தான் நிக்கிறேன்" என்றான். அவன் அம்மாதிரி கூறவே, அவனைத் துரத்த

வழியில்லை யென்று கண்டுகொண்ட கந்தசாமி மௌனமா யிருந்தான்.

உடனே கந்தசாமி ஒரு மஞ்சள் கிழங்கு, விளக்கெண்ணெய் ஆகியவற்றுடன் வந்து சேர்ந்தான். சக்கரம் போட்டு அதன்மேல் காகிதத்தை மடித்து வைக்க வேண்டு மென்று தயிர்க்காரன் கூறவே, அதைக் கேட்டும் கேட்காதவர்போல் நடித்த சமயசஞ்சீவி, ஒரு சக்கரம் கிழித்தார். கந்தசாமி தான் எழுதவேண்டியதை எழுதி காகிதத்தை மடித்து வைத்துவிட்டு, மை தயாரிக்க அடுப்பங்கரைக்குச் சென்ருன். அப்போது தயிர்க்காரன் சமயசஞ்சீவியை நோக்கி, "நீயும் போப்பா; அவருக்கு என்ன தெரியும்" என்ருன்.

உடனே அவரும் உள்ளே சென்று மையைத் தயாரித்துக்கொண்டு கந்தசாமியுடன் வந்தார். அவர்கள் வைத்துவிட்டுப்போன காகிதம் வைத்தபடியே இருந்தது.

தயிர்க்காரன், "சரி; எனக்கு நேரமாவுது; நானு போயி ஒரு சுத்து சுத்திக்கிட்டு வாறேன். பாருங்க" என்று கூறியபடி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு அந்த வீட்டுத் திண்ணையி லிருந்த தனது கூடையை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அவன் அப்பால் போகவே, சமயசஞ்சீவிக்கு ஒழுங்காக மூச்சு வந்தது. தாம் இனி சுலபத்தில் கந்தசாமியை ஏமாற்றிவிட்டு கடிதத்தை எடுத்துக்கொண்டு போகலா மென்று அவர் எண்ணினர். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் மையை வெற்றிலையில் வைத்துப் பார்த்து ஆஞ்சநேயரிடம் கேள்வி கேட்பதுபோல் நடித்து, அன்றைய தினம் ஆஞ்சநேயர் வரவில்லை யாகையால் தாம் மறுபடியும்

மறுநாள் வந்து மை போடுவதாகக் கூறிவிட்டு, கடிதத்தை எடுத்துக்கொண்டு வெளியில் போய்விட்டார். மறுநாள் அவசியம் வரும்படியாக கந்தசாமி பல தடவைகள் வற்புறுத்திக் கூறினான்.

சமயசஞ்சீவி தெருவுக்கோடியை அடைந்தவுடன் தமது சட்டைப் பையில் கையை விட்டு கந்தசாமி எழுதி மடித்து வைத்த காகிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். பார்க்கவே, அவர் பிரமித்துப் போனார். ஏனென்றால், அது எழுத்துக்களே இல்லாத வெற்றுக் காகிதமா யிருந்தது. அதைக் கண்டு சமயசஞ்சீவி பேந்தப் பேந்த விழித்தபடி அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

3

கள்ளனிடம் திருடிய போலீஸ் கள்ளன்

அப்போது ஸப்-இன்ஸ்பெக்டர் விநாயகம் பிள்ளை என்ன செய்துகொண் டிருந்தா ரென்பதை நாம் கவனிக்க வேண்டிய தவசியம். இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி ரங்கசாமியின் வழக்கைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார் என்பதை விநாயகம் பிள்ளை தெரிந்துகொண் டிருந்தார். ஏற்கெனவே, சுமார் இரண்டரை வருஷங் களுக்கு முன் ரங்கசாமி வழிப்பறி நடத்திய குற்றத்திற் காக தண்டனை யடைந்தா னென்பதும் அவருக்குத் தெரிந்த விஷயமே. அதோடு நான்கு நாட்களுக்கு முன் னர் மறுபடியும் நடந்த வழிப்பறியில் ரங்கசாமி சம்பந் தப்படுகிறான் என்னும் விஷயம் மோட்டார் வண்டியில் அகப்பட்ட ரங்கசாமியின் கைரேகை அடையாளங்களி னால் விளங்கியது. அதோடு அன்றையதினம் மாலையில் சமயசஞ்சீவி அதைப் பற்றிய தகவல்களைக் கூறவே, அதைக் கேட்ட விநாயகம் பிள்ளை அந்த வழிப்பறியில் ஏதோ மர்மம் அடங்கி யிருக்கிறது என்றும், அதனா லேயே சமயசஞ்சீவி அவ்வளவு அக்கரையோடு வேலை செய்கிறார் என்றும் சந்தேகம் உண்டாயிற்று. அவர் வேறு டிவிஷனுக்கு மாற்றப்பட்டு விட்டதால், தாம் அவருடைய ஆராய்ச்சியில் அவருக்கு உதவியா யிருக்க முடியாதென்று பிள்ளை உணர்ந்தார். ஆகவே, சமய சஞ்சீவிக்குத் தெரியாமல், தாமும் அதில் வேலை செய்ய வேண்டு மென்று விநாயகம் பிள்ளை தீர்மானித்துக் கொண்டு மறுநாள் காலை சுமார் 9 மணி சமயத்திற்கு

அதாவது சமயசஞ்சீவி கந்தசாமி எழுதிக் கொடுத்த காகிதத்தைப் பறிகொடுத்துவிட்டு நின்ற சமயத்தில், தாம் ஒரு வாரத்திற்கு ரஜா எடுத்துக் கொள்ளுவதாய் ஒரு கடிதம் எழுதி தபாலில் போட்டுவிட்டுத் தம்முடைய வீட்டிலிருந்து புறப்பட்டு செல்லப்பாவினுடைய பங்களாவை நோக்கி நடக்கலானுர். அதுஇன்ன இடத்திலிருந்த தென்பதை அவர் சமயசஞ்சீவியிடத்திலிருந்து தெரிந்துகொண்டிருந்தா ராகையால் சிறிது நேரத்தில் அவர் அந்த பங்களாவிலிருந்த தெருவை அடைந்தார்.

அப்போது தெருவில் காணப்பட்ட சிலரிடம் செல்லப்பாவின் பங்களாவைப்பற்றி அவர் விசாரித்துவிட்டு, அந்த பங்களாவை அடைந்து அதன் முன்புறத்தில் தெருவிலேயே நின்றுகொண்டு யோசனை செய்யலானுர். கந்தசாமி என்னும் ஒருவன் அந்தக் கேஸில் முக்கியமாய் சம்பந்தப் படுகிருனென்று இன்ஸ்பெக்டர் கூறிய விஷயம் அவருடைய நினைவிற்கு வந்தது. ஷி கந்தசாமியின் விலாசம் செல்லப்பா பிள்ளை, மானேஜர் ஆகிய இருவருக்கும் மாத்திரம் தெரியுமென்றும் அவர் கேள்வியுற்றிருந்தார். ஆகையால் தாம் ஏதாவது யுக்தி செய்து செல்லப்பா பிள்ளையிடம் அந்த விலாசத்தை அறிய வேண்டுமென்று அவர் முடிவு செய்து கொண்டார்.

அப்போது அந்தக் கட்டிடத்தின் ஒரு ஜன்னல் வழியாக செல்லப்பா பிள்ளை வாசலைப் பார்த்து கந்தசாமி வருகிருரா வென்று கவனித்தா ராதலால், விநாயகம் பிள்ளை நின்றதை அவர் பார்த்தார். அவருடைய தோற்றம் அவர் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் என்பதை நன்ருகக் காட்டிய தாகையால், செல்லப்பா பிள்ளை திடுக்கிட்டார். அவருடைய உடம்பு நடுங்கியது. சில

வருஷங்களுக்கு முன்னர் நடந்த ஏதோ ஒரு சம்பவம் அவருடைய அகக்கண்ணில் தோன்றியது. எவருக்கும் தெரியாதென்று தாம் எண்ணியிருந்த அந்த விஷயம் போலீஸார் வரையில் போயிருக்குமோ வென்று சந்தேகித்து, விநாயகம் பிள்ளை என்ன செய்கிறாரென்பதை செல்லப்பா பிள்ளை உற்று கவனித்தார்.

விநாயகம் பிள்ளை அப்போது பங்களாவிற்குள் நுழைந்து, கூடத்தினருகில் நெருங்கி, "ஐயா, ஐயா" என்று இரண்டு தடவைகள் கூப்பிட்டார். தாம் சந்தேகித்தது நிச்சயமாய் விட்டதோவென்று செல்லப்பா பிள்ளை எண்ணி திகில் கொண்டு நடுங்கினார். அவர் மெல்ல வெளியில் வந்து சப்-இன்பெக்டரிருந்த இடத்தை அடைந்து, எதையுமறியாதவர்போல் நடிக்கத் தொடங்கி, "யாரப்பா நீ? என்ன வேண்டும்?" என்றார்.

விநாயகம் பிள்ளை :— (அவருக்கு போலீஸ் சலாம் வைத்த பிறகு) என்ன ஐயா, இதற்கு வலது பக்கத்திலிருக்கும் பங்களாவில் யார் இருக்கிறார்கள்?

செல்லப்பா பிள்ளை:—(வியப்படைந்தவராய்) அதை ஏன் கேட்கிறாய்?

விநாயகம் பிள்ளை:—நான் போலீஸ் ஜெவான். பக்கத்திலுள்ள பங்களாவிலிருப்பவர்களைப் பற்றி ஒரு காரணத்திற்காக எனக்கு சில விஷயங்கள் தெரியவேண்டும். அதற்காகத்தான் கேட்கிறேன்.

செல்லப்பா பிள்ளை:—(சற்று யோசித்த பிறகு) அந்த பங்களா 6 மாத காலமாகக் காலியாயிருந்தது; சுமார் இரண்டு நாட்களுக்கு முன்புதான் யாரோ அதில் புதி

தாகக் குடி வந்திருக்கிறுர்கள். அவர்கள் யாரென்பது எனக்குத் தெரியவில்லை.

விநாயகம் பிள்ளை:— அப்படியா! எத்தனை பேர்கள ளிருக்கிறுர்கள் என்பது தெரியுமா?

செல்லப்பா பிள்ளை:—யாரோ இரண்டு பேர்கள் என் கண்ணில் பட்டார்கள். அவர்களைத் தவிர வேறு யாரை யும் நான் பார்க்கவில்லை. இன்னும் யாராவது இருந்தாலு மிருக்கலாம். நான் அதை நிச்சயமாய்ச் சொல்லுவதற் கில்லை.

விநாயகம் பிள்ளை:— (ஒரு காகிதத்தில் அவைகளை எழுதிக்கொண்ட பிறகு) நீங்கள் இந்த பங்களாவின் சொந்தக்காரரா? இல்லாவிட்டால் நீங்கள் இதில் குடி யிருக்கிறீர்களா?

செல்லப்பா பிள்ளை:-நான் இங்கே குடியிருக்கிறேன்.

விநாயகம் பிள்ளை:-உங்களுடைய பெயரென்னவோ?

செல்லப்பா பிள்ளை:—இதையெல்லாம் ஏன் காகிதத் தில் எழுதிக் கொள்ளுகிறுய்?

விநாயகம் பிள்ளை:—பக்கத்து பங்களாவைப் பற்றி விசாரித்துக் கொண்டு வரும்படி சப்-இன்ஸ்பெக்டர் என்னை அனுப்பிஞர்; இன்ஞரிடத்தில் விசாரித்தேன் என்று நான் எழுதிக்கொள்ள வேண்டாமா? அதற்கா கத்தான் கேட்கிறேன்.

செல்லப்பா பிள்ளை:—கோர்ட்டுக்கு வந்து அலையும் விஷயமாஞல், என்னை இதில் சம்பந்தப் படுத்த வேண் டாம்.

விநயகம் பிள்ளை:—நீங்கள் கோர்ட்டுக்கு வரவேண் டிய அவசிய மில்லை.

செல்லப்பா பிள்ளை:—அப்படியானால் நான் என்னுடைய பெயரைச் சொல்லுவதைப் பற்றி ஆட்சேபனை எதுவு மில்லை, என்னை செல்லப்பா பிள்ளை யென்று சொல்லுவார்கள்.

விநாயகம் பிள்ளை:—(அதை எழுதிக்கொண்டு) உங்களுக்கு என்ன உத்தியோகமோ?

செல்லப்பா பிள்ளை:—எனக்கு உத்தியோகம் எதுவும் கிடையாது.

விநாயகம் பிள்ளை:—அப்படியானால் என்ன செய்து கொண் டிருக்கிறீர்கள்?

செல்லப்பா பிள்ளை:—சும்மாதா னிருக்கிறேன்.

விநாயகம் பிள்ளை:-(காகிதத்தை சட்டைப் பையில் வைத்துக்கொண்டு) நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும். மாடிக்குப் போய் நான் பக்கத்துப் பங்களாவைப் பார்க்க வேண்டும். அதனால் உங்களுக்கு எந்தவிதமான இடைஞ்சலும் உண்டாகாது. இரண்டே இரண்டு நிமிஷங்கள் பார்த்துவிட்டுப் போய்விடுகிறேன்.

செல்லப்பா பிள்ளை:—சரி; அப்படியே பாரப்பா— என்று கூறிவிட்டு விநாயகம் பிள்ளையை உள்ளே அழைத்துக்கொண்டு சென்று, உட்புறத்தி லிருந்த ஒரு படிக்கட்டின் வழியாக மாடியை அடைந்தார். விநாயகம் பிள்ளை செல்லப்பா பிள்ளையின் பங்களாவின் கட்டிட அமைப்பை நன்ருய்க் கவனித்துக்கொண்ட பிறகு மாடியை அடைந்து அங்கிருந்த ஒரு ஜன்னலின் வழியால் அடுத்த பங்களாவைப் பார்ப்பவர் போல நடித்து திடீரென்று. "அடாடா! என்னுடைய மோதிரம் விரலை விட்டு நழுவி அடுத்த பங்களாவில் விழுந்து விட்டதே" என்று கூறி கையை உதறிக்கொண்டார்.

செல்லப்பா பிள்ளை வியப்போடு, "என்ன! மோதிரமா விழுந்துவிட்டது! எங்கே விழுந்துவிட்டது?" என்றார்.

விநாயகம் பிள்ளை:— (அடுத்த பங்களாவில் கீழே இருந்த தரையைச் சுட்டிக்காட்டி) அதோ அந்த இடத்தில்தான் விழுந்தது. அதை எடுக்க வேண்டுமே.

செல்லப்பா பிள்ளை:— அங்கே போய் எடுத்துக் கொள்ளேன்.

விநாயகம் பிள்ளை:— நான் அந்த பங்களாவிற்குள் போவதா யிருந்தால், இங்கே வந்தேயிருக்க மாட்டேனே! நான் அவர்களை கவனிப்பது அவர்களுக்குத் தெரியக்கூடாது என்றல்லவா இங்கே வந்தேன். நீங்கள் தான் இந்த சமயத்தில் உதவி செய்ய வேண்டும். நீங்கள் அடுத்த பங்களாவிற்குள் போய் அதை எடுத்துக் கொண்டு வரவேண்டும். பிரயாசையைப் பாராமல் எனக்காக கொஞ்சம் தயவு செய்ய வேண்டும்.

செல்லப்பா பிள்ளை:—(சற்று தயங்கி) இந்த பங்களாவில் என்னைத் தவிர வேறு யாரு மில்லையே!

விநாயகம் பிள்ளை:—அதனால் என்ன? நான் பங்களாவிற்குள் வேறே யாரும் நுழையாதபடி பார்த்துக் கொள்ளுகிறேன். நானும் இங்கேயே நிற்கிறேன். நீங்கள் போய் எடுத்துக்கொண்டு வாருங்கள்—என்றான். செல்லப்பா பிள்ளை அவருடைய வேண்டுகோளை மறுக்க மாட்டாதவராய்ப் புறப்பட்டு வெளியில் சென்றார்.

விநாயகம் பிள்ளை அந்தக் கட்டிடத்தின் பல பாகங்களையும் ஆராய வாரம்பித்தார். அவர் மாடி முழு

வதையும் பார்த்த பிறகு, கீழ்பாகத்தை அடைந்து சுற்றிப் பார்த்துவிட்டு முன்பக்கத்தில் நின்று செல்லப்பா பிள்ளையின் வருகைக்காகக் காத்திருந்தார். அவர் வந்து சேரவில்லை; அடுத்த பங்களாவில் மோதிரம் அகப்படவில்லை யாகையால் அதை அவர் தேடிக் கொண் டிருந்தார்.

அப்போது திடீரென்று டெலிபோன் யந்திரத்தின் மணி கணகண வென்று ஒலிக்கவே, விநாயகம் பிள்ளை அதனருகில் சென்று ரிஸீவரை எடுத்து காதில் வைத்துக்கொண்டு, "ஹலோ! யாரது?" என்று வினவினர்.

மறுபத்தி லிருந்தவர்:—நான் ஆபீஸிலிருந்து பேசுகிறேன். எந்த ஆபீஸி லிருந்து பேசுகிறே னென்பது உனக்கே தெரியும். கந்தசாமியின் விஷயம் என்ன வாயிற்று? அவனை விசாரித்தாயா? அவன் மூலமாய்த் தான் ரங்கசாமிக்கு சங்கதி தெரிந்ததா?

விநாயகம் பிள்ளை:— அவனை எப்படி விசாரிப்பது என்பது எனக்குத் தெரியவில்லை.

மறுபக்கத்தி லிருந்தவர்:— என்ன, நீ பேசுவது வேடிக்கையா யிருக்கிறதே! இது ஒரு பிரயாசையான காரியமா! உன்னல் முடியாவிட்டால் நான் விசாரிக்கிறேன். என்ன சொல்லுகிருய்?

விநாயகம் பிள்ளை:—நீங்கள் எப்படி விசாரிக்கப் போகிறீர்கள்?

மறுபக்கத்தி லிருந்தவர்:— இரண்டரை வருஷங்களுக்குமுன் அவன் நம்மைப் பார்த்ததை ரங்கசாமியிடம் சொன்னனு என்று விசாரிக்க வேண்டும்.

விநாயகம் பிள்ளை:—அப்படி அவனிடம் கேட்டால் அவன் அதற்கு உத்தரம் சொல்லுவானா?

மறுபக்கத்தி லிருந்தவர்:— நாம் சாமர்த்தியமாகத் தான் விசாரிக்க வேண்டும். நான் பகல் ஒரு மணிக்கு உன்னை உன்னுடைய பங்களாவில் பார்க்கிறேன்.

விநாயகம் பிள்ளை:— சரி. அப்படியே செய்யுங்கள் —என்றார். அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந்தமையால் விநாயகம் பிள்ளை ரிஸீவரைக் கொக்கியில் மாட்டிவிட்டு அப்பால் செல்ல முயன்றார்.

ஆனால் மறுபடியும் டெலிபோனில் மணி யடித்தது. ஆகவே, அவர் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு, "ஹலோ! யாரது?" என்று கேட்டார். மறுபக்கத்தி லிருந்தவர், "நீர் யார்? செல்லப்பா பிள்ளை தானே?" என்றார்.

விநாயகம் பிள்ளை:—ஆம். நீங்கள் யார்?

மறுபக்கத்தி லிருந்தவர்:—நீர் பேசுவது சரியாகக் காதில் விழவில்லை. உரக்கப் பேசும்.

விநாயகம் பிள்ளை:— நான் செல்லப்பா பிள்ளை. நீங்கள் யார்?

மறுபக்கத்தி லிருந்தவர்:— நீர் மூன்று மாதமாய் பங்களாவின் வாடகையைக் கொடுக்காமல் சால்ஜாப்பு சொல்லிக் கொண்டு வருகிறீர்; இனி நான் பொறுக்க முடியாது. பணத்துக்கு என்ன சொல்லுகிறீர்?

விநாயகம் பிள்ளை:—(அதற்கு என்ன பதில் கூறுவதென்பதை யறியாமல் சற்று தயங்கிய பிறகு) கூடிய சீக்கிரம் கொடுத்து விடுகிறேன். கொஞ்சம் தயவு செய்யுங்கள்.

மறுபக்கத்தி லிருந்தவர்:—அந்தக் கதை யெல்லாம் இனி பலிக்காது. நீர் பணத்தை இன்னும் 24 மணி நேரத்திற்குள் கொடுக்காவிட்டால் உம்முடைய சாமான்கள் நடு வீதிக்குப் போய்ச் சேரும். 24 மணி நேரத்திற்குள் பங்களாவையும் காலி செய்வதற்காக உமக்கு ஒரு மாத நோட்டீஸிற்குப் பதிலாக ஒரு மாத வாடகையைத் தள்ளிக் கொடுத்து விடுகிறேன். பாக்கி இரண்டு மாத வாடகையை வைத்துவிட்டு உடனே காலி செய்ய வேண்டியது வாயால் சொல்லுவது போதாவிட்டால் வக்கீல் நோட்டீஸ் அனுப்புகிறேன். என்ன சொல்லுகிறீர்?

விநாயகம் பிள்ளை:—யோசனை செய்துதான் பதில் சொல்ல வேண்டும். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்— என்று கூறிய சமயத்தில், அங்கே செல்லப்பா பிள்ளை வந்து சேர்ந்தார். விநாயகம் பிள்ளை டெலிபோன் மூலமாய்ப் பேசியதை அவர் கண்டு வியப்புடன், "யாருடன் பேசுகிறாய்?" என்றார். விநாயகம் பிள்ளை டெலிபோனிலுள்ள ரிஸீவரின் வாயைக் கையால் மூடிக்கொண்டு அவர் பக்கம் திரும்பி, "டெலிபோன் மூலம் யாரோ கூப்பிட்டார்கள்; யார் என்று விசாரிக்கிறேன். அவர் இந்த பங்களாவின் சொந்தக்காரராம். அவர் இன்னும் 24 மணி நேரத்திற்குள் இதைக் காலி செய்யச் சொல்லுகிறார். வாடகை பாக்கி உடனே தேவையாம்" என்றார். செல்லப்பா பிள்ளை உடனே டெலிபோனண்டை போய் ரிஸீவரை எடுத்து கையில் வைத்துக்கொண்டு, "ஐயா, வீட்டுக்கார ஐயா! நீங்கள் பணத்தைப்பற்றி கவலைப் படவேண்டாம். நீங்கள் இங்கே வாருங்கள்; வாடகைப் பணத்தை உடனே கொடுத்து விடுகிறேன். நான் பங்களாவைக் காலி செய்யவில்லை. உங்களுக்குச் சேரவேண்

டிய வாடகையை யெல்லாம் வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றார்.

மறுபக்கத்தி லிருந்தவர்:—சரி, இன்னும் அரைமணி நேரத்தில் நான் வருகிறேன். இனி ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதத்திலேயே ஒழுங்காகக் கொடுப்பதா யிருந் தால், நீங்க ளிருக்கலாம்; இல்லாவிட்டால் நீங்கள் காலி செய்து விடுங்கள்.

செல்லப்பா பிள்ளை:—இனி பணம் ஒழுங்காய் வந்து விடும்; அதைப் பற்றி நீங்கள் இனி அதிகம் சொல்ல வேண்டாம்—என்றார்.

அதோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந் தது. அவர் ரிஸீவரைக் கொக்கியில் மாட்டிவிட்டு, விநா யகம் பிள்ளையின் பக்கம் திரும்பி, "அந்த மோதிரம் அகப்படவே யில்லை. இவ்வளவு நேரம் தேடினேன். உப யோகம் இல்லை; அது எத்தனை பவுன்?'' என்றார்.

விநாயகம் பிள்ளை:—அது கிட்டத்தட்ட அரைப் பவு னிருக்கும். சரி; போனால் போகிறது; நான் உங்களுக்கு அநாவசியமான பிரயாசை கொடுத்ததுதான் மிகுந்தது போலிருக்கிறது.

செல்லப்பா பிள்ளை:—நீயே போய் நன்றாகத் தேடிப் பார், உன் மனம் திருப்தி யடைய வேண்டாமா.

விநாயகம் பிள்ளை:—நான் போய்த் தேடுவதா யிருந் தால், உங்களை அனுப்பி இருப்பேனா. என்னுடைய சிநேகிதன் ஒருவ னிருக்கிறான். அவனை அனுப்புகிறேன். அவனும் போய்ப் பார்க்கட்டும்.

செல்லப்பா பிள்ளை:— அவனும் போலீஸில் இருப் பவன் தானே?

விநாயகம் பிள்ளை:— (சற்று தயங்கிய பிறகு) எதற்காகக் கேட்கிறீர்கள்?

செல்லப்பா பிள்ளை:-சும்மாதான் கேட்டேன். இஷ்டமிருந்தால் சொல்லு, இல்லாவிட்டால் சொல்ல வேண்டாம்.

விநாயகம் பிள்ளை:—(புன்சிரிப்புடன்) ஆம்; அவனும் போலீஸ்காரன் தான். அவனை இங்கே யனுப்புகிறேன். அது எந்த இடத்தில் விழுந்தது என்பதை மாத்திரம் அவனுக்குக் காட்டிவிடுங்கள். இல்லா விட்டால் அவன் பங்களா முழுதும் தேடிக்கொண் டிருப்பான். அதற்குள் வேறு யாராவது அந்த மோதிரத்தை யெடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். என்னுடைய ஆள் வந்தால் அவனுடைய பெயரை விசாரியுங்கள். அவன் தன்னுடைய பெயர் கந்தசாமி என்று சொன்னால் அவன் என்னுடைய ஆள் என்று நீங்கள் கண்டுகொள்ளுங்கள்.

செல்லப்பா பிள்ளை:— (வியப்புடன்) என்ன! அவனுடைய பெயரென்ன?

விநாயகம் பிள்ளை:—அவனுடைய பெயர் கந்தசாமி யென்று சொன்னேனே, காதில் விழவில்லையா? அந்தப் பெயரைக் கேட்டவுடன் நீங்கள் ஆச்சரியமாய்க் கேட்பதைப் பார்த்தால், அந்தப் பெயருள்ள வேறொருவரை உங்களுக்குத் தெரியும்போ லிருக்கிறது!

செல்லப்பா பிள்ளை:—(அசட்டுப் புன்னகை செய்து) ஆம். அதனால்தான் கேட்டேன்; உன்னுடைய சிநேகிதன் எங்கே யிருக்கிறான்?

விநாயகம் பிள்ளை:—அவன் பக்கத்தில்தா னிருக்கிறான். உங்களுக்குத் தெரிந்த கந்தசாமி யென்பவன் என்

னுடைய சிநேகிதன்தானு அல்லவா என்று தெரிந்து கொள்வதற்கு சுலபமான வழி ஒன்று இருக்கிறது. உங்கள் கந்தசாமி ஏதாவது உத்தியோகத்தி லிருக்கிருனு?

செல்லப்பா பிள்ளை:— இல்லை. அவனை நான் என்னிடமே வேலைக்கு வைத்துக் கொள்ளப் போகிறேன்—என்றுர். பிறகு எதையோ எண்ணி, தாம் அதை அவரிடம் சொல்லிவிட்டதைப் பற்றித் தமது உதட்டைக் கடித்துக்கொண்டு மறுபடி பேசத் தொடங்கி, "அவனை வேலைக்கு வைத்துக் கொள்ளலாமா வென்று யோசனை செய்துகொண் டிருக்கிறேன். இன்னம் எந்த முடிவிற்கும் நான் வரவில்லை" என்றுர்.

விநாயகம் பிள்ளை:— என்னுடைய சிநேகிதனும் வேலை யில்லாமல்தா னிருக்கிருன். நீங்கள் குறித்த கந்தசாமி இங்கே பக்கத்தில்தானே இருக்கிருன்?

செல்லப்பா பிள்ளை:— பக்கத்தில்தா னிருக்கிருன். உன்னுடைய சிநேகிதனும் பிள்ளையார் கோவில் தெருவிலா இருக்கிருன்?

விநாயகம் பிள்ளை:—அப்படிச் சொல்லுங்கள். அதே பேர்வழியைத்தான் நானும் சொல்லுகிறேன். அவன் பிள்ளையார் கோவில் தெருவில்தான் இருக்கிருன். அவனை அனுப்புகிறேன்—என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் போவதுபோல் நடித்தார்.

உடனே செல்லப்பா பிள்ளை கையமர்த்தி, "அவனை உனக்கு எப்படித் தெரியும்?" என்றுர்.

விநாயகம் பிள்ளை, "எப்படியோ பழக்கமாய்விட்டது" என்றுர். உடனே செல்லப்பா, "சரி. நீ போய் அவனைக் கட்டாயம் அனுப்பு" என்றுர். விநாயகம்

பிள்ளை உடனே வெளியில் போய்விட்டார். செல்லப்பா பிள்ளை கடைசியாகக் கூறிய சொல்லி லிருந்து அவர் என்ன காரணத்தினுலோ கந்தசாமியை சந்திக்க விரும் புகிரு ரென்பதை விநாயகம் பிள்ளை யறிந்து கொண் டார். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் பிள்ளையார் கோவில் தெருவை யடைந்த சமயத்தில் ஒரு வீட்டின் முன் புறத்தில் ஒரு குறிகாரன் நின்றதைக் கண்டார்.

அந்த வீட்டின் திண்ணையில் உட்கார்ந்திருந்த இன்னொரு மனிதனும் அவனும் பேசிய சில சொற் களும் அவருடைய காதில் விழுந்தன.

குறிகாரன்:— அந்தத் தயிர்க்காரன் ஆருங்கறது தெரியல்லீங்க. அவன் தான் அந்தக் கடுதாசியெ எடுத் துக்கிட்டுப் போயிருக்கணுங்க. இல்லாட்டி அது காணு மெப் போறத்துக்கு வழி யில்லீங்க.

மற்றவர்:—அவன் பெரிய மோசக்காரனு யிருக் கிருன் அதை எதற்காக அவன் எடுத்துக்கொண்டு போயிருப்பான். நீ எட்சணி தேவதையிடம் அதைப் பற்றிக் கேட்க முடியாதா? மற்ற எல்லா சங்கதிகளை யும் நீ கண்டுபிடித்திருக்கிருய்; அதுதானு முடியாத காரியம்—என்ருர்.

அப்போது விநாயகம் பிள்ளை அவர்களுக் கருகில் போய் நின்றுகொண்டு குறிகாரனுடைய தோளின் மேல் கையை வைத்து, "ஓஹோ! மந்திரவாதி வேஷம் போட்டு பணம் பறிக்கிருயா?" என்று கூறியபின் வீட்டுக்காரரை நோக்கி, "இவன் மந்திரவாதி யென்று உங்களிடம் சொன்னுனு? இவனை நம்பி நீங்கள் உங்கள் பொருளைக் கொடுத்து விட்டீர்களா?" என்ருர்.

மற்றவர்:—நான் எதையும் கொடுக்கவில்லை. ஏன் இவன் சரியான குறிகார னல்லவா?

விநாயகம் பிள்ளை:—(குறிகாரனை நோக்கி) டேய், இவருக்கு என்ன செய்வதாய்ச் சொன்னுய்?

குறிகாரன்:— மேலே கைபோடாதேப்பா. எடு கையை. நீ ஆரப்பா? ஒன்னை ஆரு கூப்பிட்டாக.

விநாயகம் பிள்ளை:—என்னிடத்திலா நீ உன்னுடைய வேலைத் திறத்தைக் காட்டுகிருய். இவருக்கு நீ என்ன செய்வதாகச் சொன்னுய்? நிஜத்தைச் சொல். இல்லா விட்டால் என்னேடு ஸ்டேஷனுக்கு வரவேண்டும்.

குறிகாரன்:—டேசனுக்கு நானு வரணுமா! இதோ வாறேன். எனக்கு யாருகிட்டெயும் அச்சமில்லே அண்ணே—என்று கூறியபடி நடக்கலானுன். விநாயகம் பிள்ளையும் அவருடன் சென்ருர். சுமார் பத்து வீடுகளுக் கப்பால் சென்றவுடன் சமயசஞ்சீவி, "ஐயா! விநாயகம் பிள்ளை! உம்மால் என்னுடைய வேலை எவ்வளவு தூரம் கெட்டுப்போய்விட்டது தெரியுமா! நல்ல சமயத்தில் நீர் வந்து கெடுத்துவிட்டீர்" எனவே, விநாயகம் பிள்ளை திடுக்கிட்டார். ஏனென்ருல் சமயசஞ்சீவி ஐயரே குறி காரனுய் வந்திருக்கிருர் என்பது அப்போதுதான் அவ ருக்குத் தெரிந்தது.

உடனே அவர் வியப்புடன், "அடாடா! நீங்களா! யாரோ ஒரு பூசாரி மந்திரவாதி மாதிரி நடித்து பணம் பறிக்க முயற்சிக்கிரு ரென்றல்லவா நான் நினைத்து விட்டேன். கந்தசாமி என்பவருடைய இருப்பிடத்தை யறிய ஏதாவது யுக்தி செய்யவேண்டு மென்று சொன் னீர்களே! அதை நான் கண்டுபிடித்து விட்டேன். அவன் இந்தத் தெருவில்தா னிருக்கிருன்" என்ருர்.

சமயசஞ்சீவி வியப்புடன், "நீர் எப்படிக் கண்டு பிடித்தீர்" என்றார். விநாயகம் பிள்ளை தான் செய்த தந்திரத்தைத் தெரிவித்தார்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவி, "நீர் சாமர்த்திய மாகத்தான் வேலை செய்திருக்கிறீர். நீர் என்னை மிரட் டியபோது, நான் கந்தசாமியுடன்தான் பேசிக்கொண் டிருந்தேன். நீர் இப்போது இங்கே வந்ததும் ஒரு விதத்தில் நல்லதாய் முடிந்தது. கந்தசாமியிட மிருந்து எப்படி மறுபடியும் எழுதி வாங்குவதென்று நினைத் தேன். அதற்கு இப்போது வழி ஏற்பட்டுவிட்டது. நீர் என்னோடு கந்தசாமி பிள்ளையின் வீட்டிற்கு வந்து, நான் உண்மையை வெளியிட்டு விட்டதாயும், அதனால் அவன் வாக்குமூலம் கொடுக்க வேண்டு மென்றும் மிரட்டி விஷயங்களை யெல்லாம் எழுதச் செய்து காகி தத்தை வாங்கிக் கொள்ளும்" என்றார்.

உடனே இருவரும் கந்தசாமியின் வீட்டை யடைந்தனர். சமயசஞ்சீவி ஐயர் கூறிய யுக்தி பலித் தது. விநாயகம் பிள்ளை மிரட்டவே கந்தசாமி நிகழ்ந்த விஷயங்களை ஒப்புக்கொண்டு தமது வாக்கு மூலத்தை மறுபடி எழுதிக் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்டு இருவரும் அவ்விடத்தை விட்டுச் சென்ற னர். இரண்டு தெருவுகளுக் கப்பால் சென்றதும் விநாய கம் பிள்ளை, "நான் இனி என்ன செய்ய வேண்டும்?" என்றார்.

சமயசஞ்சீவி, "நீர் தெரிந்துகொண்ட விஷயத்தை யும், கந்தசாமி எழுதிக் கொடுத்திருப்பதையும் வைத் துக்கொண்டு பார்த்தால், ஒரு முக்கியமான சந்தேகம் உண்டாகிறது. சுமார் இரண்டரை வருஷங்களுக்கு

முன், முதல் தடவையாக ரங்கசாமி நடத்தியதாகச் சொல்லப்படும் வழிப்பறி நடந்த அதே சமயத்தில் அதே தெருவில் ஒரு கோடியில் மானேஜரையும் செல்லப்பா பிள்ளையையும் கந்தசாமி பார்த்ததாய்ச் சொன்னனல்லவா; அவர்க ளிருவரும் ஏன் வழிப்பறி நடத்தியிருக்கக் கூடாது. வழிப்பறி நடத்தி விட்டு வந்த சமயத்தில் அவர்களைக் கந்தசாமி பார்த்திருக்க வேண்டுமென்று மானேஜர் அஞ்சுவதி லிருந்து இது விளங்குகிற தல்லவா. இவர்க ளிருவரும் செய்த குற்றத்திற்காக ரங்கசாமி தண்டனை யடைந்திருக்க வேண்டும். அதனுல் ரங்கசாமி தங்கள்மேல் பழிக்குப்பழி வாங்குவதாய் இவர்கள் எண்ணிக்கொண் டிருக்கிருர்கள் என்பதும் தெரிகிறது. பழைய வழக்கு உமக்கு நினைவிருக்கிற தல்லவா?'' என்ருர்.

விநாயகம் பிள்ளை:—நன்ருக நினைவிருக்கிறது. அப்போதும் ரங்கசாமியின் கைரேகைகள் அந்த வண்டியிலகப்பட்டன. பிறகு அவனை யாரோ ஒருவர் பார்த்ததாய்க் கூறவே, அவனைத் தேடிப்பிடித்துப் பார்த்தபோது வண்டியி லிருந்த கை ரேகை அவனுடையது என்பது வெளியாயிற்று. அவன் அந்த சமயத்தில் எங்கே என்ன செய்துகொண் டிருந்தா னென்பதை மெய்ப்பிக்க ஒரு சாக்ஷியிருப்பதாய் அவன் சொன்னுன். ஆனுல் அந்த மனிதர் அகப்படவில்லை. அதனுல் அந்த மாதிரி மனிதர் யாரும் இல்லை என்று எல்லோரும் யூகித்தனர். அதனுல் அவனுக்கு தண்டனை கிடைத்தது.

சமயசஞ்சீவி:— ஆம். இப்போதும் அதேபோல வாரப் பத்திரிகை ஆசிரியருடைய மோட்டாரில் மறுபடியும் ரங்கசாமியின் கைரேகை அடையாளங்க ளிருக்

கின்றன. நான் எதற்காக இந்த வழக்கில் ஆராய்ச்சி செய்கிறேனென்பது உமக்குத் தெரிகிறதா?

விநாயகம் பிள்ளை:—தெரிய வில்லையே!

சமயசஞ்சீவி:— அப்படியானால் நான் சொல்லு கிறேன் கேளும். இந்த இரண்டு வழக்குகளும் ஒரே மாதிரி இருக்கின்றன. அதனால், இரண்டு வழிப்பறி களையும் நடத்தியவர்கள் வெவ்வேறு ஆட்கள் அல்ல வென்பது நன்றாய் விளங்குகிற தல்லவா?

விநாயகம் பிள்ளை:—ஆம்.

சமயசஞ்சீவி:—இரண்டு தடவைகளிலும் கொள்ளை யடித்தவர்கள் இரண்டு பேர்கள். அவர்கள் வண்டியி லுள்ள மெத்தை முதலியவைகளை யெல்லாம் புரட்டி யிருக்கின்றனர். எதற்காகப் புரட்டினார்கள்? இரண்டு பேர்களும் அம்மாதிரி செய்திருந்தால், இருவருடைய கைரேகைகளு மல்லவா வண்டியி லிருக்கும். அப்படி யில்லாமல் ஒருவனுடைய கைரேகை மாத்திர மிருக்க வேண்டிய காரண மென்ன?

விநாயகம் பிள்ளை:— வண்டியில் தங்களுக்கு உப யோகப்படக்கூடிய பொருள் ஏதாவது இருக்கிறதா வென்று அவர்கள் தேடிப் பார்த்திருக்கலாம். ஒருவன் தன் கையில் கையுறையைப் போட்டுக்கொண் டிருக்க லாம்.

சமயசஞ்சீவி:—நீர் சொல்லுகிறபடியே ஒருவன் அதைப் போட்டிருந்ததாக வைத்துக் கொள்ளுவோம். அவன் அவ்வளவு ஜாக்கிரதையா யிருந்தபோது அவனோ டிருந்தவன் மாத்திரம் அஜாக்கிரதையாகக் கையுறையில்லாமல் இருக்க வேண்டிய காரணமென்ன?

ஆகையால் நீர் சொல்லும் சமாதானம் பொருத்தமான தாகத் தோன்றவில்லை.

விநாயகம் பிள்ளை:— தன்னை யாரும் பிடித்துக் கொள்ள முடியாது என்றெண்ணி ஒருவன் அசட்டு தைரியமாய் வெறுங் கையோடு வந்திருக்கிறுன் என்று தான் நினைக்க வேண்டும்.

சமயசஞ்சீவி:— அதற்கு அப்படி சமாதானம் சொல்லுகிறீ ரல்லவா? முதல் தடவை ரங்கசாமி, தான் தன்னுடைய கைரேகையால் அகப்பட்டுக் கொண்ட விஷயத்தை, அந்த வழக்கு விசாரணை நடந்தபோது அறிந்துகொண் டிருப்பா னல்லவா? இப்போது வழிப் பறி நடந்தபோது அவன் மறுபடியும் அகப்பட்டுக் கொள்ளாம லிருக்க கையுறையை உபயோகப் படுத்தி யிருப்பா னல்லவா?

விநாயகம் பிள்ளை:— அது முக்கியமான கேள்வி தான். அதில் உங்கள் அபிப்பிராய மென்ன?

சமயசஞ்சீவி:—வழிப்பறி நடத்தியவர்க ளிருவரும் கையுறைகள் போட்டுக்கொண் டிருக்க வேண்டு மென்றே நான் நினைக்கிறேன். ஒருவனுடைய கைரேகை வண்டியி லகப்பட்டதி லிருந்து, அவர்க ளிருவரில் ஒருவருடைய ரேகைதான் அது என்று நாம் சொல்ல லாமா? ஏற்கெனவே வண்டியில் ஷி ரேகைகள் இருந் திருக்கலாம். வழிப்பறி நடந்தபிறகு பார்த்தபோது ஷி ரேகை யடையாளங்க ளகப்பட் டிருக்கலாம். ஆகையால் இரண்டு தடவைகளிலும் வழிப்பறி நடந்த தற்கு முன்னர் வண்டியில் ரங்கசாமியின் ரேகை அடை யாளங்கள் எப்படி வந்தனவென்று நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இரண்டரை வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட ரேகை அடையாளங்களைப் பற்றி நாம் இப்போது ஆராய்ச்சி செய்வது சாத்தியமானதல்ல. ஐந்து நாட்களுக்கு முன் பத்திரிகை ஆசிரியர் வண்டியில் போனதற்கு முன்பு அதை எங்கே விட்டு வைத்திருந்தார். அந்த வண்டியில் ஏதோ காரணமாய் ரங்கசாமி ஏறி, பல இடங்களிலும் கையை வைத்திருக்கலாமல்லவா. ரங்கசாமியை யாரோ கொண்டுபோய் மறைத்து வைத்திருக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆகையால் அவன் சுயேச்சையாய் மோட்டாரினருகில் வந்திருக்க மாட்டான். யாராவது அவனை பலவந்தமாய்க் கொண்டுவந்து அவனுடைய கைரேகைகள் வண்டியில் படும்படி செய்திருக்கலாம். ஆகையால் அந்த ஆசிரியருடைய மோட்டார் எங்கு நிறுத்தப்பட்டிருந்ததென்பதையும், வழிப்பறி நடந்த தினத்தில் அதனருகில் யார் யார் போனார்கள் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். வண்டியோட்டியினிடம் அதை நாம் தந்திரமாய் விசாரிக்க வேண்டும். ரங்கசாமி மறைத்து வைக்கப்பட வேண்டுமானால், ரங்கசாமி மறைவதால் யாருக்கு என்ன விதமான ஆதாயம் ஏற்படுமென்பதை நாம் ஆராய வேண்டும். ரங்கசாமி ஆஸ்பத்திரியிலிருந்தபோது மறைந்திருக்கிறான். அவன் ஆஸ்பத்திரியிலிருந்ததை அறிந்திருக்கக் கூடியவர் யார் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இம்மூன்று விஷயங்களையும் கண்டுபிடித்தால், உண்மை அநேகமாய் விளங்கிவிடும். நமக்கு இப்போது கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து வாரப்பத்திரிகை மானேஜரும் செல்லப்பா பிள்ளையும் ஷி வழிப்பறிகளை நடத்தியவர்களோ என்னும் சந்தேகம் உண்டாகிறது.

ஆகையால் அவர்களை நாம் முக்கியமாய் கவனித்தாக வேண்டும். ரங்கசாமியிடம் அவர்கள் அஞ்ச வேண்டிய காரண மென்ன வென்பதையும் நாம் கண்டுபிடித்தாக வேண்டும். அதோடு, டாக்டர் சுந்தரம் பிள்ளை யென்னும் பெயருடன் ஓர் ஆசாமி திரிகிறான். அவனுக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்த மென்பது விளங்கவில்லை. ஆகையால் அவன் யார் என்பதையும், அவனைப் பற்றி அறியக்கூடிய எல்லாத் தகவல்களையும நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதோடு இன்னொரு விஷயமு மிருக்கிறது. நம்முடைய உத்தியோக ஹோதாவில் சட்ட ரீதியாக என்ன செய்ய வேண்டியிருக்கிறதென்றால் நமக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்ப சாக்ஷியங்களைக் கொண்டு நாம் ரங்கசாமி குற்றவாளி என்று கருதி, அவன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்க வேண்டியதாகிறது. அதற்காக ஏற்கெனவே டெலிபோன் மூலமாயும் தந்திகளின் மூலமாயும் அவனுடைய அங்க அடையாளங்களைத் தெரிவித்து அவனை எங்கே கண்டாலும், பிடித்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அதோடு இன்னொரு யுக்தியும் நாம் செய்ய வேண்டும். ரங்கசாமி சிறிது காலமாக நாடகம் எழுதுவதற்கு ஆரம்பித்திருக்கிறான். அதனால் ஓர் இடத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அந்த விலாசத்தைப் போட்டு தினசரிப் பத்திரிகைகளிலும், வாரப் பத்திரிகைகளிலும் ஒரு விளம்பரம் வெளியிட வேண்டும். அதாவது, ஒரு ஸினிமாக் கம்பெனியார் படங்கள் தயாரிக்க விரும்புவதாயும், அதற்கு வேண்டிய நாடகங்களை எழுதிக் கொடுக்க விரும்புகிறவர்கள் விண்ணப்பம் அனுப்பலாம் என்றும் வெளியிட வேண்டும். ரங்கசாமி விண்ணப்பம் அனுப்பினாலும் அனுப்பலாம். அவன்

தன்னுடைய பெயரை மாற்றி வேறு பெயருடன் எழுதினாலும் எழுதலாம். நீர் வாரப்பத்திரிகை ஆசிரிய ரிடம் ரங்கசாமி எழுதிக் கொடுத்திருக்கும் நாடகத்தில் ஏதாவதொரு பக்கத்தை வாங்கி வைத்துக்கொண்டிரும். அதையும் விண்ணப்பங்கள் வந்தவுடன் அவைகளையும் நாம் நம்முடைய ஆபீஸ் கையெழுத்துப் பரிசோதக ரிடம் அனுப்பி ரங்கசாமியினுடைய விண்ணப்ப மிருக் கிறதா என்று கண்டு, அவன் அதில் கொடுத்திருக்கும் விலாசத்திற்குப் போய் அவனைப் பிடிக்கலாம்.

விநாயகம் பிள்ளை:—அதில் தான் நமக்கு நம்பிக்கை யில்லையே! எதற்காக அநாவசியமாகப் பணத்தைச் செலவழித்து ஓர் இடத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்ளுகிறது. நாம் இடம் எடுத்துக்கொள்ள வேண் டிய அவசியமே இல்லை. பத்திரிகாலயத்தார் மேல் பார்த்து நமக்குக் கொடுப்பது என்று விலாசம் கொடுப் பதே போதும். பத்திரிகை ஆபீஸிற்கு விண்ணப்பங்கள் வந்தால் அவர்கள் அவைகளை வைத்திருப்பார்கள். நாம் அவைகளை வாங்கிக் கொள்ளலாம்.

சமயசஞ்சீவி:— அதுவும் நல்ல யோசனைதான். விளம்பரம் யார் வெளியிடுகிறார்கள் என்பதுகூட பத் திரிகை ஆபீஸில் யாருக்கும் தெரியக்கூடாது. உண்மை யில் சினிமாக்காரர்கள் அதை வெளியிடுவதாகவே எல்லோரும் நினைக்கும்படி நாம் நடந்துகொள்ள வேண் டும். சரி; நாம் வீட்டிற்குப் போவோம்—என்றார்.

சிறிது நேரத்தில் சமயசஞ்சீவி ஐயர் தம்முடைய வீட்டை யடைந்து தம்முடைய வேஷத்தைக் கலைத்து விட்டு விநாயகம் பிள்ளையை தினசரிப் பத்திரிகாலய மொன்றிற்கு அனுப்பிவிட்டு வாரப் பத்திரிகை நடத்தப்

படும் ஆபீஸிற்குப் போவதற்காகப் புறப்பட்டார். அப்போது தெருவில் சில பையன்கள் நாடக விளம்பரங்களைக் கொடுத்துக்கொண்டு போகவே, அவர் ஒன்றைப் பெற்றுக் கொண்டார். சமூக சம்பந்தமான ஒரு நாடகம் நடத்தப்படப் போவதாக அதில் விளம்பரம் செய்யப் பட்டிருந்தது. உடனே அவர் தம்முடைய முந்தைய தீர்மானத்தை மாற்றிக்கொண்டு, நாடகக் கொட்டகையின் சொந்தக்காரருடைய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது அங்கே வீட்டின் திண்ணைகளுக்கு நடுவில் கவிராயர் நின்றுகொண்டிருந்தார். சமயசஞ்சீவி உடனே அவருக் கருகில் சென்று, "குப்புசாமி இருக்கிறாரா?" என்று விசாரித்தார். குப்புசாமி உள்ளே இருந்ததாய்க் கவிராயர் கூறவே, சமயசஞ்சீவி உள்ளே சென்றார்.

அப்போது குப்புசாமி தமது இயற்கையின்படி சாய்மான நாற்காலியில் சாய்ந்திருந்தார். சமயசஞ்சீவி உள்ளே வந்ததும், குப்புசாமி, "யாரையா நீர்? எங்கே வந்தீர்?" என்றார். அவர் வினயமாகப் பேசாமல் அம்மாதிரி பேசவே, அவர் அகம்பாவம் பிடித்தவரென்று சமயசஞ்சீவி யூகித்துக்கொண்டு, "நான் ஒரு சினிமாக் கம்பெனியின் முதலாளி. உங்களிடம் தற்கால குடும்ப சம்பந்தமான நாடகம் ஏதாவது இருந்தால் அதை வாங்கலாமென்று வந்தேன்" என்றார். உடனே குப்புசாமி மிகவும் மரியாதையாகப் பேசத் துடங்கி, "இதோ இந்த நாற்காலியில் உட்காருங்கள்" என்று கூறி ஒரு நாற்காலியைக் காட்டி உபசரித்துவிட்டுப் பேசத் துடங்கி, "ஏதாவது ஒரு கதையைச் சொல்லிக்கொண்டு யாசகம் வாங்க யாராவது அடிக்கடி வந்துவிடுகிறார்கள். அப்படி இருக்குமோ என்று தவறாக நினைத்துவிட்டேன்" என்றார்.

சமயசஞ்சீவி:-(புன்சிரிப்புடன்) நீங்கள் சமாதானம் சொல்ல வேண்டிய அவசியமே யில்லை. அதிருக்கட்டும். இன்றைய தினம்கூட சமூக சம்பந்தமான ஏதோ ஒரு நாடகம் நடத்தப் போவதாய் ஒரு விளம்பரம் பார்த்தேன்.

குப்புசாமி:—ஓஹோ! அப்படியா! எப்போது பார்த்தீர்கள்?

சமயசஞ்சீவி:—கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் பார்த்தேன். இந்த நாடகத்தை நான் இதற்குமுன் பார்த்ததாய் நினைவுண்டாகிறது. இது சுப்பிரமணியம் என்னும் ஓர் ஆசிரியரால் எழுதப்பட்டது என்றுகூட நினைவுண்டாகிறது. அந்த நாடகம்தானே இது?

குப்புசாமி:— (வியப்பைக் காட்டிய முகத்துடன் அவரைப் பார்த்து) உங்களிடம் யார் அப்படிச் சொன்னது? அது அவ்வளவும் தவருன சங்கதி. இந்த நாடகத்தை நானே எழுதினேன். சுப்பிரமணியம் என்பவர் யார்? அவர் நாடகம் எழுதுகிறவரா?

சமயசஞ்சீவி:— (குப்புசாமியினுடைய முகமாறுதலைக் கவனித்தாராலும் அதைக் காட்டிக்கொள்ளாமல்) அவரும் நாடகம் எழுதுகிறவர்தான். அவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?

குப்புசாமி'—கேள்விப்பட்டதில்லையே!

சமயசஞ்சீவி:-அவர் அவ்வளவு பிரபலமான ஆசிரியரல்ல. அதனுல் அவரை உங்களுக்குத் தெரிந்திருக்காது. அதிருக்கட்டும். உங்களிடம் எத்தனை நாடகங்கள் தயாரா யிருக்கின்றன?

குப்புசாமி:-இன்றைய தினம் நடத்தப்படப்போகும் நாடகம் ஒன்றுதா னிருக்கிறது—என்றார்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவி, அந்த நாடகம் சுப்பிரமணியனுடைய தென்றும், அதற்கு அவனுக்குப் பணங் கொடுக்காமலும் அவனுடைய உத்தர வில்லாமலும் நாடகம் நடத்தப் போவதாகவும், குப்புசாமி பெருத்த அயோக்கியனு யிருக்கவேண்டு மென்றும் உடனே தீர்மானித்துக் கொண்டார். அவர் மிகவும் விநயமாகப் பேசத்துடங்கி, "உங்களிடம் புராண சம்பந்தமான நாடகமாவது, சரித்திர சம்பந்தமான நாடகமாவது இருக்கிறதா?" என்று விசாரித்தார்.

குப்புசாமி:—ஒவ்வொரு தினுசிலும் ஒவ்வொன்று இருக்கிறது. இந்த மூன்று நாடகங்களுக்கும் என்ன கொடுப்பீர்கள்?

சமயசஞ்சீவி:—மூன்றையும் இப்படி எடுங்கள். அவைகளை நான் இங்கேயே ஒரு தடவை புரட்டிப் பார்த்துவிடுகிறேன். உடனே நாம் ஒரு முடிவிற்கு வரலாம். இன்னொரு விஷயம். அந்த இரண்டு நாடகங்களையும் நீங்கள் தானே எழுதினீர்கள்?

குப்புசாமி:—ஆம். நான்தான் எழுதினேன்—என்று கூறிவிட்டு அருகிலிருந்த ஒரு பீரோவின் கதவைத் திறந்து, அதிலிருந்து மூன்று காகிதக் கட்டுகளை எடுத்து வெளியில் போட்டார். அவைகளை வாங்கிக்கொண்ட சமயசஞ்சீவி உடனே கட்டுகளை அவிழ்த்துப் பார்த்தார். மூன்று நாடகங்களில் ஒன்று பாதுகா பட்டாபிஷேகமாயிருந்தது. அதில் முதல் ஐந்து பக்கங்கள் காணப்படவில்லை. ஆருவது பக்கத்திலிருந்து நாடகம் ஆரம்பமாயிற்று. அவர் முதல் ஐந்து பக்கங்களையும் தேடிப்

பார்க்க, அவை அகப்படவில்லை, அவர் குப்புசாமியை நோக்கி, "தாகமா யிருக்கிறது. கொஞ்சம் மோர் கிடைக்குமோ?" என்ருர். குப்புசாமி உடனே எழுந்து அப்பால் போய்விட்டார். சமயசஞ்சீவி மற்ற இரண்டு பிரதிகளையும் பார்த்தார். அவைகளும் சுப்பிரமணிய னுடையவைகளா என்பது நிச்சயமாய்த் தெரியவில்லை யாகையால், அவர் பாதுகா பட்டாபிஷேகத்தின் நடுவி லிருந்து நான்கு பக்கங்களை எடுத்து மடித்துத் தமது சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டார்.

அடுத்த நிமிஷம் குப்புசாமி ஒரு பாத்திரத்தில் மோருடன் வந்து அதைக் கொடுக்க, சமயசஞ்சீவி அதை வாங்கிப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, காகிதக் கட்டுகள் மூன்றையும் குப்புசாமிக் கருகில் வைத்தபடி, "சரி; நான் இவைகளை எடுத்துக் கொள்ளுகிறேன். ஒப் பந்தம் எழுதிக் கொள்வோமா?" என்ருர். குப்புசாமி உடனே காகிதம், இங்கிபுட்டி, பேணு முதலியவைகளைக் கொண்டுவந்து வைத்து, "இவைகளுக்கு எவ்வளவு பணம் கொடுப்பீர்கள்? அதை முடிவு கட்டாமல் நாம் என்ன எழுதுகிறது?" என்ருர்.

சமயசஞ்சீவி:— துகையைக் குறிப்பிட வேண்டிய இடத்தை மாத்திரம் காலியாக விடுங்கள். மற்றவை களை எழுதுவோம். பிறகு நாம் பேசி அதையும் குறிப் போம்—என்ருர். உடனே குப்புசாமி ஒரு ஒப்பந்தம் எழுதினர். அதை சமயசஞ்சீவி வாங்கி மடித்துத் தமது சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு, "இதை நான் என் கூட்டாளியிடம் காட்டி, பணத்தைப் பற்றி அவ ருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு வருகி றேன். அப்போது இதைப் பூர்த்தி செய்துகொள்ளு வோம். உடனே பூராத் துகையையும் நான் கொடுத்து

விடுகிறேன். மூன்று நாடகங்களுக்கும் நீங்கள் எவ்வளவு எதிர்பார்க்கிறீர்கள்?'' என்றார்.

அதற்கு குப்புசாமி, ''ஒவ்வொன்றிற்கும் பதினாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். இன்றைய தினம் காலையில் இன்னொரு சினிமாக்காரர்கூட வந்து கேட்டு விட்டுப் போயிருக்கிறார். அவர் ஒன்பதாயிரம் ரூபாய்க்கு முடிப்பதாகச் சொன்னார். அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் பதினாயிரம் விகிதம் கொடுத்தால், உங்களுக்கே கொடுக்கிறேன்'' என்றார்.

சமயசஞ்சீவி, ''சரி. நான் மறுபடி சாயங்காலம் வருகிறேன்'' என்று கூறி விடைபெற்று, அங்கிருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் தமது வீட்டை யடைந்தார். அப்போது விநாயகம் பிள்ளை அங்கே காத்துக் கொண் டிருந்தார். தாம் விளம்பரம் போடுவதற்கு ஏற்பாடு செய்து விட்டதாக அவர் தெரிவித்தார்.

உடனே சமயசஞ்சீவி தாம் போலீஸ் உத்தியோகஸ்தர் என்பது தெரியாதபடி தமது உடைகளை மாற்றிக்கொண்டு விநாயகம் பிள்ளையுடன் வாரப்பத்திரிகை ஆபீஸை அடைந்து தலைமை ஆசிரியரைக் கண்டு, சினிமாவுக்கு உதவக்கூடிய நாடகம் ஏதாவது அவரிடம் அகப்படுமா வென்று விசாரித்து, சுப்பிரமணியனுடைய நாடகம் இருக்குமானால், அதன் பக்க மொன்றை சாமர்த்தியமாக எடுத்து வரும்படி திட்டம் செய்து விநாயகம் பிள்ளையை அவரிடம் அனுப்பிவிட்டு, தாம் தலைமை ஆசிரியருடைய மோட்டார் வண்டி நிறுத்தப் பட் டிருந்த இடத்தை யடைந்தார். குப்புசாமி சுப்பிரமணியனுடைய மூன்று நாடகங்களை வைத்திருந்ததை அவர் பார்த்தா ரானாலும், ஆசிரியரிடத்தில் கொடுக்கப்

பட்ட இரண்டு நாடகங்களும் அவரிடத்தி லிருந்து குப்புசாமியிடம் வந்துவிட்டனவா வென்று அறிந்து வரவே, அவர் விநாயகம் பிள்ளையைத் தலைமை ஆசிரியரிடம் அனுப்பினார்.

வண்டியண்டை சென்ற சமயசஞ்சீவி அவ்விடத்தில் இருவர் நின்று சம்பாஷித்துக்கொண் டிருந்ததை மறைவி லிருந்து கவனித்தார். அவர்களிருவரில் ஒருவன் வண்டியோட்டி; மற்றவன் இன்னான் என்பது அவருக்குத் தெரியவில்லை.

வண்டியோட்டி:—அன்றைய தினம் சாயங்காலம் வண்டி புறப்பட்டதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தான் நான் மோட்டாரைக் கழுவி சுத்தப்படுத்தினேன்.

மற்றவன்:—ஒவ்வொரு நாளும் நீ அப்படித்தான் செய்வது வழக்கமோ?

வண்டியோட்டி:—ஆம்.

மற்றவன்:— கொஞ்சமும் விடாமல் மோட்டார் முழுதையும் துடைத்தாயா? இல்லாவிட்டால் வெளிப்புறத்தை மாத்திரம் துடைத்தாயா?

வண்டியோட்டி:—வண்டியின் வெளிப்புறம் முழுதிலும் ஜலத்தை ஊற்றித் துடைத்தேன்; உட்புறத்தில் ஜலம் விடாமல் துணியால் மாத்திரம் துடைத்தேன்.

மற்றவன்:—வண்டியைத் துடைத்த பிறகு என்ன செய்தாய்?

வண்டியோட்டி:-வண்டியின் பக்கத்திலேயே நின்று கொண் டிருந்தேன். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எசமானர் வந்து வண்டியி லேறிக்கொண்டார்.

மற்றவன்:— அந்த சமயத்தில் உன்னைத் தவிர மோட்டாருக் கருகில் யாராவது வந்தார்களா?

வண்டியோட்டி:—யாரும் வரவில்லை.

மற்றவன்:—நன்ருக நினைத்துப் பார்த்துச் சொல். மோட்டாரைத் துடைத்த பிறகு துடைத்த துணியையோ, தண்ணீர்ப் பாத்திரத்தையோ கொண்டு போய் வைப்பதற்கு நீ எங்கேயும் போகவில்லையா?

வண்டியோட்டி:— நான் எங்கேயும் போகவில்லை. இதோ பார்த்தீர்களா தண்ணீர்க் குழாயை. இது மோட்டாரின் பக்கத்திலேயே இருக்கிறது. வண்டியில் காலி பெட்ரோல் டப்பா வொன்று இருக்கிறது. குழாயிலிருந்து அந்த டப்பாவில் தண்ணீரைப் பிடித்துப் பிடித்து வண்டியின் மேல் ஊற்றிக் கழுவிய பிறகு காலி டப்பாவை வண்டிக்குள் வைத்தேன். வண்டியில் கால் வைத்து ஏறும் பலகையின் ஒரு பக்கத்தில் ஆயுதப் பெட்டி அதோ இருக்கிறது. அதற்குள் அந்தத் துணியை வைத்தேன். ஆகையால், நான் வண்டியை விட்டு அப்பாலிப்பால் போக வேண்டிய அவசியமே ஏற்படவில்லை.

மற்றவன்:—அதன்பிறகு பீடி, வெற்றிலை பாக்கு முதலியவை எதையாவது வாங்க நீ எங்கேயும் போகவில்லையா?

வண்டியோட்டி:—அவைகள் என்னிடம் இருந்தன. அதனல் நான் போகவில்லை.

மற்றவன்:—நீ இப்போது சொன்ன தகவல்களை மறுபடியும் வேறு எங்கேயாவது சொல்ல நேருமானல் சொல்லுவா யல்லவா?

வண்டியோட்டி:—(வியப்புடன்)வேறு எந்த இடத்தில் நான் சொல்லும்படியா யிருக்கும்?

மற்றவன்:—கோர்ட்டில் சொல்லும்படியா யிருக்கும்.

வண்டியோட்டி:—சொல்லுகிறேன்.

மற்றவன்:— அதிருக்கட்டும். இன்னொரு விஷயமிருக்கிறது. இந்த ஆபீஸில் வேலை பார்க்கிறவர்கள், அல்லது, உனக்குத் தெரிந்தவர்கள் வந்து உன்னிடம் பேசியபடி மோட்டாரி னருகில் நின்றுகொண் டிருந்தார்களா?

வண்டியோட்டி:—இல்லை; இல்லை.

மற்றவன்:—நம்முடைய போலீஸ் இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி இதுவரையில் இங்கே வரவில்லையா?

வண்டியோட்டி:—வரவில்லை—என்றான். அதுவரையில் அங்கே நடந்த சம்பாஷணையைக் கேட்ட சமயசஞ்சீவி, வண்டிக்காரனுடன் பேசினவன் ஒரு போலீஸ் ஜெவானா யிருக்கவேண்டு மென்றும், அவன் மிக சாமர்த்தியமாய்க் கேள்விகள் கேட்கிறா னென்றும் எண்ணி தூரத்தில் போய் நின்று கொண்டார்.

அவர் எந்த விஷயத்தைப் பற்றி விசாரிப்பதற்கு அங்கு வந்தாரோ அது சுலபத்தில் தெரிந்து போனது பற்றி சந்தோஷ மடைந்தா ரானாலும், இன்னொரு விதத்தில் விசன மடைந்தார். அவர் ஏற்கெனவே செய்திருந்த அநுமானங்க ளெல்லாம் வண்டியோட்டியின் வாக்குமூலத்தினால் அடிபட்டுப் போக, ரங்கசாமியே குற்றவாளியா யிருக்க வேண்டு மென்று எண்ண வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனாலும் அவர் வண்டியில்

ரங்கசாமியின் கைரேகை அடையாளம் எப்படி வர முடியும் என்று மறுபடி யோசிக்கலானார். அதற்கு ஒரு வழி இருப்பதாகத் தோன்றியது. ஒருகால் வண்டி யோட்டியே ரங்கசாமியா யிருந்தால், வண்டியில் அவனுடைய கைரேகை அடையாளம் விழுந்திருக்குமல்லவா. ஆனாலும் அந்த உத்தேசம் அசம்பாவிதமாகத் தோன்றியது. ஏனெனில், ரங்கசாமியை அவர் பார்த்திருந்தா ராதலால், வண்டியோட்டி அவனைப்போல் இருக்கவில்லை யென்பது நிதரிசனமாகத் தெரிந்தது. அதோடு ஆசிரியரும் வண்டியோட்டியை சுப்பிரமணியன் என்ற பெயரால் கூப்பிடாமல், வேறு பெயரால் கூப்பிட்டதை அவர் கவனித்திருந்தார். ஆகவே, அவன் சுப்பிரமணியனா யிருக்கமுடியா தென்று அவர் முடிவு செய்துகொண்டு, கைரேகை அடையாளம் விழுந்ததற்கு வேறு ஏதாவது காரணமிருக்குமா வென்று யோசிக்கத் தொடங்கினார்.

"கைரேகை அடையாளம் பொய் சொல்லாது" என்று டிப்டி கமிஷனர் கூறியது அடிக்கடி அவருடைய நினைவிற்கு வந்தது. ஆனாலும் அவருடைய ஒழுங்கான சொந்த மனசாட்சி, "அவன் யோக்கியன்போல் காணப்படுகிறான். அவன் ஆஸ்பத்திரியிலிருந்து திடீரென்று மறைய காரணமில்லை. ஏற்கெனவே கைரேகை அடையாளத்தினால் தண்டனை யடைந்தவன் மறுபடியும் போலீஸாரிடம் கைரேகை அடையாளம் அகப்படும்படியான தவறைச் செய்ய மாட்டான். ஆகையால் இதில் ஏதோ மோசடி யிருக்கிறது" என்று கூறியது.

மறுபடியும் போலீஸ் மனசாட்சி, தான் ஆஸ்பத்திரியி லிருந்தபோது தன்னுடைய கைரேகை அடையாளத்தைப் போலீஸார் எடுத்துத் தன்னைக் கேடி

யென்று கண்டுகொண்டார்களாகையால், தான் இனி எங்கே சென்ருலும் அவர்கள் தன்னை கண்காணிப்பார்களென்றும், அதனுல் தன்னுடைய பழைய தொழிலைச் செய்ய முடியாது என்றும் எண்ணி திடீரென்று ரங்கசாமி மறைந்திருக்கலாம். அவனே மறுபடியும் வழிப்பறி நடத்தியதனுல் கைரேகைகள் மோட்டாரில் காணப் படுகின்றன" என்று கூறியது.

இவ்வாறு அவருடைய மனதில் ஒன்றுக்கொன்று மாருன பல எண்ணங்கள் உண்டாயினவாலுைம், முடிவில் சொந்த மனசாட்சியே தலையெடுத்து நின்றது. ரங்கசாமி குற்றவாளி யல்லவென்பதை நிரூபிக்க ஏதாவது ஆதார மிருக்கிறதாவென்று அவர் மறுபடி ஆராயத் தொடங்கி, அவனுடைய கைரேகை மோட்டாரில் எப்படி வந்திருக்கும் என்பதைப் பற்றியே முக்கியமாய் சிந்தித்தார். ஆனுல் அதை அப்போதே நிச்சயிக்க இயலவில்லை யாகையால் அவர் அதைப் பற்றி பின்னர் முடிவு கட்டலாமென்று கருதி, அந்த வண்டியோட்டியிடம் மற்றவன் பேசிவிட்டுப் போனபிறகு அவனைத் துடர்ந்து சென்று, அவனிடம் பேசி அவன் எந்த டிவிஷனைச் சேர்ந்த ஜெவானென்பதையும், அந்த வழக்கு விஷயமாய் ஆராய்வதற்கு அவனை யார் அனுப்பினுர்களென்பதையும் விசாரிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்.

அந்த சமயத்தில் விநாயகம் பிள்ளை பத்திரிகாலயத்தின் உட்புறத்தி லிருந்து வெளியில் வந்தார்; வந்தவர் சமயசஞ்சீவியிடம், "நான் போய் விசாரித்தேன். அவரிடம் நாடகம் எதுவு மில்லையாம். குப்புசாமியிடம் மூன்று நாடகங்கள் இருக்கின்றனவாம். அவரிடம் போய் வாங்கிக்கொள்ளச் சொல்லுகிருர். அதிலிருந்து

குப்புசாமியிடம்தான் ரங்கசாமியின் நாடகங்க ளிருக்கின்றன வென்று அர்த்தம் ஆகிறது'' என்றூர்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவி தாம் தெரிந்து கொண்டு வந்த சங்கதிகளைக் கூறி, வண்டியோட்டியுடன் பேசிக்கொண் டிருந்த ஜெவானுக்காகக் காத்திருப்பதாய்ச் சொன்னூர். விநாயகம் பிள்ளை அந்த மனிதரைப் பார்த்துவிட்டு, "இவன் நம் இலாகாவைச் சேர்ந்தவன்போல் இல்லையே! இவனை இதற்கு முன் நான் எப்போதும் போலீஸ் உடுப்பில் பார்த்ததாகவே நினைவில்லையே" என்றூர்.

சமயசஞ்சீவி:—ஒருவேளை இவன் சி. ஐ. டி. இலாகா ஆசாமியோ என்னவோ?

விநாயகம் பிள்ளை:—அப்படி இருந்தாலும் இருக்கலாம். (இன்னொரு தரம் அந்த மனிதனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்து) இவன் இப்போது வைத்திருக்கும் மீசையை எடுத்து விட்டால், எப்படி இருப்பான்?—என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார்.

சமயசஞ்சீவி:— அப்படியானுல், மீசை இல்லாமலிருக்கும் இவனைப் போன்ற வேருேர் ஆசாமியை யாவது உமக்குத் தெரியுமா?

விநாயகம் பிள்ளை:—இவனுக்கு மீசை யில்லா திருந்தால், நேற்று போலீஸ் ஸ்டேஷனில் வந்து உங்களைத் தேடிய ஆசாமி யென்றே சொல்லி விடலாம். அதோடு டாம்பீகமான உடுப்பையும் இவனுக்கு அணிவிக்க வேண்டும்.

சமயசஞ்சீவி:—ஒரே இரவிற்குள் ஒரு மனிதனுக்கு இவ்வளவு பெரிய மீசை முளைப்ப தென்றுல், அது

மாஞ்செடி முளைக்க வைக்கிற கதைதான். ஒருவேளை, இவன் நீர் பார்த்த ஆசாமியா யிருக்கமாட்டான்; இல்லாவிட்டால், இவன் வேஷதாரியா யிருக்க வேண் டும்—என்றார்.

அப்போது அவர்க ளிருவரும் எந்த மனிதனைப் பற்றிப் பேசினார்களோ, அந்த மனிதன் அவர்கள் நின்றுகொண் டிருந்த இடத்திற்கு எதிர்த்த திக்கில் விரைவாய்ச் செல்லத் துடங்கினான்.

அதைக் கண்ட சமயசஞ்சீவி, "நான் முன்னால் போகிறேன். நீர் பின்னாகவே மெல்ல வாரும்" என்று விநாயகம் பிள்ளையிடம் கூறிவிட்டு, அந்த மனிதனைத் தொடர்ந்து சென்றார். அந்த மனிதன் விரைவில் தெருவுக் கோடியை அடைந்து அங்கே காணப்பட்ட ஒரு குறுக்குத் தெருவில் திரும்பினான். அப்போது அவன் தற்செயலாய்ப் பின்புறம் பார்த்து, சமயசஞ்சீவி வந்துகொண் டிருந்ததை கவனித்தான். ஆகவே, அவன் தெருவின் முனையில் திரும்பியதும், அங்கே காணப் பட்ட ஒரு சிறிய பிள்ளையார் கோவிற்குள் சடக்கென்று நுழைந்தான். நுழைந்தவன், இருண்ட ஒரு சிறிய பிராகாரத்துட னிருந்த அந்தக் கோவிலின் முன் புறத் தில் வாசற்படிக்கு இரண்டு பக்கங்களிலு மிருந்த திண்ணைகளில் ஒன்றின்மேல் ஏறி மறைந்து நின்று கொண்டான். திறந்து வைக்கப்பட் டிருந்த கதவு அத் திண்ணையை முக்கால் பாகம் வரையில் மறைத்துக் கொண் டிருந்ததாகையால், அவன் மறைந்திருந்தது வெளியில் தெரியவில்லை.

சிறிது நேரத்தில் சமயசஞ்சீவி அந்தக் கோவி லண்டை வந்து சேர்ந்து, அந்த மனிதன் காணப்படா

மையால் ஆச்சரிய மடைந்தார். முன்னுல் சென்றுகொண் டிருந்த மனிதன் அதற்குள் எப்படி மறைந்திருப்பா னென்று யோசித்தபடி பக்கத்தி லிருந்த பிள்ளையார் கோவிலைப் பார்க்க, அவருக்கு உடனே ஒரு சந்தேகம் உண்டாயிற்று. தாம் அவனை கவனித்ததை அவன் எப்படியோ தெரிந்துகொண்டு, அந்த கோவிலிற்குள் நுழைந்து மறைந்துகொண் டிருப்பானே வென்ற நினைவுண்டாகவே, அவர் உடனே கோவிலிற்குள் நுழைந்தார்.

அவருக்குப் பின்னுல் வந்த விநாயகம் பிள்ளை அங்கு வந்து பார்க்க, முன்னுல் சென்ற இருவரும் மாயமாய் மறைந்து போனதைக் கண்டு, அவர்கள் அதே தெருவோடு ஓடி போயிருக்க வேண்டுமென்று எண்ணி தாமும் ஓட்டமாய் ஓடி, கோவிலைக் கடந்து தெருவுக் கோடிக்குப் போய், அங்கிருந்து திரும்பிய வேருெரு தெருவில் குதிரைப் பந்தயம் விடத் தொடங் கினுர்.

கோவிலிற்குள் நுழைந்த சமயசஞ்சீவி கதவிற்குப் பின்னுல் தேடிப் பார்க்காமல் பிராகாரத்திற்குள் சென் ருர். திண்ணையி லிருந்த மனிதன் உடனே கீழே இறங்கி, அவருக்குப் பின்னுகவே பிராகாரத்தில் நுழைந்தான். பிராகாரம் இருளடர்ந்ததா யிருந்த தாகையால், சமய சஞ்சீவி குருடனைப்போல் கைகளை முன்புறம் நீட்டிக் கொண்டு சென்று, பிராகாரத்தைச் சுற்றி ஒரு பிரதட் சிணம் வந்து முன்புறத்தை யடைந்தார். கோவிலிற்குள் யாருமில்லை யென்று அவர் கருதினு ராலுைம், தமக்குப் பின்னுல் யாரோ நடந்து வந்தது போன்ற ஓசை அடிக் கடி உண்டானதாக அவர் உணர்ந்தார். ஆகையால், அவர் சரேலென்று திரும்பி பின்புறம் பார்த்தார்.

ஆனுல் எவரும் காணப்படவில்லை. அதைப் பற்றிய சந்தேகத்துடன் அவர் முன்புறத்தை யடைந்து கதவி னருகில் நின்றுகொண்டு விநாயகம் பிள்ளையைப் பார்த்தார்.

சமயசஞ்சீவியைத் தேடிக்கொண்டு ஓடிய விநா யகம் பிள்ளை நெடுந்தூரம் போய்ப் பார்த்து, அவரைக் காணுமல் வியப்படைந்தார். அப்போதே அவருடைய மனதில் ஒரு சந்தேகம் உதிக்கலாயிற்று. அதாவது வழியில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது நினைவிற்கு வந்தது. அதற்குள் அவர்க ளிருவரும் நுழைந்திருப் பார்களோ வென்பதை எண்ணுமல் தாம் அவ்வளவு தூரம் வந்துவிட்டதற்காக வருத்த மடைந்தவராய், அவர் மறுபடியும் திரும்பி ஓடிவந்து கோவிலின் முன் புறத்தை யடைந்தார். அப்போது அங்கே நின்ற சமய சஞ்சீவி, அவரிடம், "உள்ளே இருளா யிருக்கிறது; பிராகாரத்தில் எங்கேயாவது அந்த ஆள் மறைந்திருக்க வேண்டுமென்று நம்புவதற்கு இடமிருக்கிறது. ஆகை யால் நெருப்புக் குச்சியைக் கிழித்து வெளிச்சம் உண் டாக்கிக்கொண்டு நீர் ஒரு பக்கமும், நான் ஒரு பக்கமும் போய்த் தேடுவோம்" என்ருர்.

விநாயகம் பிள்ளை தம்முடைய சட்டைப் பையி லிருந்த ஒரு நெருப்புப் பெட்டியை உடனே வெளியில் எடுத்து அதற்குள் ளிருந்து சுமார் பத்துக் குச்சிகளை எடுத்துக்கொண்டு, பெட்டியில் குச்சியைக் கிழிப்பதற் காக மருந்து பூசப்பட் டிருந்த இரண்டு பக்கங்களில் ஒன்றைக் கிழித்தெடுத்துக்கொண்டு, மற்றதை சமய சஞ்சீவியிடம் கொடுத்தார். இருவரும் பிராகாரத்தின் இரண்டு பக்கங்களிலும் போய் நின்றுகொண்டு, நெருப் புக் குச்சிகளைக் கிழித்துப் பிடித்தபடி நடக்க வாரம்பித்

தனர். அப்போது பிராகாரத்தி லிருந்த மனிதன் கர்ப்ப கிரகத்தின் பின்புறத்தில் போய் மறைந்து நின்றபடி அவர்களிடம் அகப்படாமல் எப்படித் தப்புவது என் பதைப் பற்றி யோசிக்கலானுன்.

அப்போது, "பிராகாரத்தில் யாரையா இருக் கிறது?" என்று ஒரு குரலோசை முன் புறத்தில் உண் டாயிற்று. உடனே சமயசஞ்சீவி திரும்பிப் பார்க்க, அவ்வாறு கேட்டவன் அந்தக் கோவிலின் பூசாரி என் பது தெரிந்தது. விநாயகம் பிள்ளையும் அங்கே வந்து அவனைப் பார்த்தார். பூசாரி அவருக்குத் தெரிந்தவ ஞதலால், அவர் தங்களுடைய கருத்தை அவனிடம் கூற, தான் இரண்டு விளக்குகளைக் கொளுத்தித் தருவ தாய் பூசாரி கூறி உள்ளே இருந்த இரண்டு விளக்குகளை ஏற்றிக் கொணர்ந்து அவர்களிடம் கொடுத்தான். பூசாரி யும் சமயசஞ்சீவியும் ஒரு பக்கமும், விநாயகம் பிள்ளை இன்னொரு பக்கமும் பிராகாரத்திற்குள் நுழைந்தனர்.

அவ்வாறு அவர்கள் சிறிது தூரம் செல்ல, எதிரில் அந்த மனிதன் வந்ததைக் கண்ட சமயசஞ்சீவி, "நில் அப்படியே!" என்ருர். உடனே அந்த மனிதன் புன் சிரிப்புடன், "நீங்க ளிருவரும் அப்படியே நில்லுங்கள். நிற்காவிட்டால், என்னிட மிருக்கும் ரிவால்வருக்கு நீங்கள் இரையாவீர்கள். நான் உங்களிடம் இரக்கம் காட்டினுலும், என்னிடமிருக்கும் ரிவால்வர் காட்டாது" என்று கூறியபடி அதுவரையில் தொங்கவிட் டிருந்த தன் வலது கையை முன்புறம் நீட்டிக்கொண்டு அவர் களுக் கருகில் நெருங்கினுன். உண்மையிலேயே அவனு டைய கையில் ஒரு ரிவால்வர் காணப்பட்டது. அவர்க ளுக் கருகில் வந்த அந்த மனிதன், "சரி, நீங்கள் சுவரோர மாய் நகருங்கள்" என்ருன். அவர்கள் அப்படியே

நகர்ந்தனர். அந்த மனிதன் ஜாக்கிரதையாக நடந்து போய் கோவிலின் முன்புறத்தில் நின்றுகொண்டு, "வாகனத்தை வாரையில் கட்டுவதற்கு உபயோகப் படுத்தும் கயிறு அதோ இருக்கிறது. டேய் பூசாரி, அதை எடுத்து அந்த மனிதரைக் கட்டு; பிராகாரத்தின் இன்னொரு பக்கத்தால் வரும் இன்னொருவரை இங்கே இழுத்துவா" என்றான் பூசாரி பயந்துகொண்டு சமய சஞ்சீயைக் கட்டி உருட்டிவிட்டு, விநாயகம் பிள்ளையை இழுத்து வந்து நிறுத்தினான்.

உடனே அந்த மனிதன், "ஏனையா! நீர் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரல்லவா? இந்த நாராயணசாமிக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்?" என்றான். அவனிடம் தாம் உண்மையைக் கூறாமல் மறைத்துவிட வேண்டுமென்று முடிவு செய்துகொண்ட விநாயகம் பிள்ளை, "அவருக் கும் எனக்கும் எந்த சம்பந்த மிருந்தால் உனக்கென்ன? நீ யாரை இப்படி மிரட்டுகிறாய் என்பது நினைவிருக்கட் டும் இந்த நிலைமை எப்படியும் மாறும்; நீ வசமாய் எங்களிடம் மாட்டிக் கொள்வாய். நீ யார் என்று உண்மையைச் சொல். இல்லாவிட்டால் நான் எப்படியும் உன்னை தண்டித்தே தீருவேன். உனக்கு இந்த ரிவால் வர் எங்கிருந்து கிடைத்தது?" என்றார்.

மற்றவர்:-நீர் நாராயணசாமி என்பவனோடு சேர்ந்து கொண்டு இங்கே வரவேண்டிய காரண மென்ன? அதை முதலில் சொல்லும்.

விநாயகம் பிள்ளை:—அதை நீ கேட்பது அனாவசியம்.

மற்றவர்:— அப்படிச் சொன்னால், நான் உம்மை சுட்டு விடுவேன். ஜாக்கிரதை. நீர் ஒரு காரியம் செய்ய வேண்டும். நாராயணசாமி என்னும் இந்த மனிதன்

அயோக்கிய னென்று நம்புவதற்கு இடமிருக்கிறது. இந்த மனிதனுடன் நீர் இருப்பதையும், இங்கே வந்ததையும் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடும்.

விநாயகம் பிள்ளை:— எதற்காக அப்படி எழுதச் சொல்லுகிறாய்?

மற்றவன்:—நீர் ஆரம்பம் முதல் இடக்காகவே பேசிக்கொண்டு வருகிறீர். நான் சொன்னபடி எழுதப் போகிறீரா? என்னுடைய ரிவால்வரை உபயோகப் படுத்த வேண்டுமா?—என்று கூறிவிட்டு ரிவால்வரை அவருடைய மார்பிற்கு சரியாகப் பிடித்துக்கொண்டு குறி பார்ப்பதுபோல் நடித்தான். உடனே விநாயகம் பிள்ளை, "இரப்பா; கோபிக்காதே; தருகிறேன்" என்று கூறி, தம்முடைய சட்டைப் பையிலிருந்த ஒரு காகிதத்தையும் பௌண்டன் பேனாவையு மெடுத்து வைத்துக் கொண்டு அந்த மனிதன் சொன்னபடி எழுதினார். அந்த மனிதன் அதைத் தனக்கருகில் எறியச் செய்து, எடுத்துக்கொண்டு அவரையும் கட்டிப் போடும்படி பூசாரிக்கு உத்தரவிட்ட பிறகு விநாயகம் பிள்ளையை நோக்கி, "நீர் கண்ணியமான சப் - இன்ஸ்பெக்ட ரென்பது எனக்குத் தெரியும். உம்மைக் கட்டிப் போடுவதைப் பற்றி வருத்தப்பட மாட்டீ ரென்று நம்புகிறேன். நான் புறப்பட்டுப் போகும்போது, பின்னால் நீங்கள் வராம லிருக்கவே இம்மாதிரி செய்கிறேன்" என்றார். அதற்குள் பூசாரி விநாயகம் பிள்ளையையும் கட்டி உருட்டிவிட்டான்.

உடனே அந்த மனிதன், பூசாரியும் தன்னுடைய கால்களைத் தானே கட்டிக்கொள்ளும்படி செய்து அவனுடைய கைகளைக் கட்டி அவனையும் கீழே உருட்டி

விட்டு சமயசஞ்சீவியின் சட்டைப் பைகளை சோதனை செய்தார். அப்போது இருவரும் நெருங்கி இருக்க நேரவே, சமயசஞ்சீவி அவனுடைய அடையாளத்தைக் கண்டுகொண்டு, "ஓஹோ! டாக்டர் சுந்தரம் பிள்ளையா! யாரோ திருடன் என்றல்லவா நினைத்துவிட்டேன். ஐயா, உம்மை இனி நாங்கள் துடரமாட்டோம். எங்களுடைய கட்டுகளை அவிழ்த்துவிடும்" என்றார். அதற்கு டாக்டர் சுந்தரம் பிள்ளை, "வாயைத் திறக்க வேண்டாம். (மற்ற இருவர்களையும் நோக்கி) உங்களுக்கும் அதே புத்திமதி" என்று கூறிவிட்டு சமயசஞ்சீவியின் சட்டைப் பையி லிருந்த சாமான்களை வெளியில் எடுத்தார். கந்தசாமி கொடுத்த வாக்குமூலம் அவருடைய சட்டைப்பையி லகப்பட்டது. அதை யெடுத்துப் படித்தபிறகு, டாக்டர் சுந்தரம் பிள்ளை அவருடைய சட்டைப் பையிலேயே முன்போல வைத்துவிட்டு விநாயகம் பிள்ளையி னருகில் சென்றார். அப்போது கோவில் வேலைக்காரி அங்கே வரவே, அவளுடைய காலடி யோசையைக் கேட்ட டாக்டர் சடக்கென்று எழுந்திருந்து அவளுக் கருகில் சென்று, "பூசாரி உனக்காகத்தான் காத்திருக்கிறார். அந்தப் பக்கம் போ" என்று கூறி அவளை பிராகாரத் தின் இன்னொரு பக்கத்திற்கு அனுப்ப, வேலைக்காரி அந்த வழியால் போய்விட்டாள். அவள் சுற்றிக் கொண்டு மற்றவர்க ளிருந்த இடத்தை அடைவதற்குள் டாக்டர் வெளியில் போய்விட்டார்.

அவர் போனவுடன் சமயசஞ்சீவி. "யாரம்மா அது? அந்த மனிதன் பெருத்த அயோக்கியன். அவன் மூன்று பேர்களை இங்கே கட்டிப் போட்டுவிட்டு ஓடுகிறான். நீ இங்கே வந்து எங்களுடைய கட்டுகளை அவிழ்த்து விடு" என்றார்.

வேலைக்காரி உடனே அங்கே வந்து பூசாரியின் கட்டுகளை அவிழ்த்துவிட, அவன் மற்ற இருவருடைய கட்டுகளையும் நீக்க, அவர்கள் இருவரும் வெளியில் வந்து இரண்டு பக்கங்களிலும் வெகு தூரம் வரையில் சென்று தேடிப்பார்த்தன ராலும், டாக்டர் சுந்தரம் பிள்ளை மாயமாய் மறைந்து போய்விட்டார்.

பிறகு அவர்க ளிருவரும் திரும்பிவந்து ஓரிடத்தில் சந்தித்தனர்.

சமயசஞ்சீவி:-டாக்டர் சுந்தரம் பிள்ளை யென்பவன் உம்மிடம் கடிதம் எழுதி வாங்கினது ஆச்சரியமா யிருக்கிறது. அவன் பேசிய தோரணையைப் பார்த்தீரா?

விநாயகம் பிள்ளை:— அவன் மரியாதையாகவே நடந்து கொண்டான். என்னைக் கட்டுவதற்குக் காரணத்தையும் சொன்னான். அவன் யாரென்பது தெரியவில்லையே!

சமயசஞ்சீவி:—(சற்று யோசித்து) எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. அதன்படி செய்வோம். அவன் என்னுடைய சட்டைப்பையி லிருக்கும் காகிதத்தை எடுத்துப் படித்துவிட்டு திரும்பவும் வைத்துவிட்டான். அப்போது அவனுடைய கைரேகை அடையாளம் அதில் விழுந்திருக்கு மல்லவா? ஆகையால் அதை ஆபீஸிற்கு எடுத்துக்கொண்டு போய் நம்முடைய கைரேகை நிபுணருக்குக் காட்டி, அதிலுள்ள கைரேகைகளைப் பரீட்சித்துப் பார்க்கச் செய்தால், டாக்டர் சுந்தரம் பிள்ளை யென்பவன் பழைய கேடியா அல்லவா என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

விநாயகம் பிள்ளை:—அது நல்ல யுக்திதான்.

சமயசஞ்சீவி:—அப்படிச் செய்தால் அவன் யாரென்பது வெளியாகும். என்னை அயோக்கியனென்று அவன் சொல்ல வேண்டிய காரண மென்ன வென்பதும் எனக்கு விளங்கவில்லை. அவன் உம்மை சப்-இன்ஸ்பெக்டர் என்று தெரிந்துகொண் டிருக்கிருன். அதனுல் அவன் உம்மைப் பார்த்திருக்கிருன் என்பது அர்த்தமாகிறது. அவன் யாரென்பது உமக்குத் தெரியவில்லையா?

சப்-இன்ஸ்பெக்டர்:— அவன்தான் ஸ்டேஷனுக்கு வந்து உங்களைத் தேடியவன். அவன் யாரென்பதை நான் விசாரித்தேன். அவன் சரியான மறுமொழி கொடுக்கவில்லை.

சமயசஞ்சீவி:—என்னை அவன் எதற்காகத் தேடியிருப்பானே தெரியவில்லையே! அவன் மறுபடியும் ஸ்டேஷனுக்கு வந்தால், அவன் யாரென்பதையும் அவனுடைய மற்ற விஷயங்களையும் தெரிந்து கொள்ளாமல் அவனை விடக்கூடாது—என்ருர்.

அவ்வளவோடு அவர்கள் தமது யூகத்தை நிறுத்திக் கொண்டு, அங்கே நடந்த விஷயங்களை யாரிடத்திலும் சொல்ல வேண்டாமென்று பூசாரியிடம் கூறி திட்டப்படுத்திய பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கேயிருந்த ஜெவான்களிடம் அந்த மனிதன் வந்தால் அவனைப் பிடித்து வைத்திருக்கும்படி சொல்லிவிட்டு கமிஷனருடைய கச்சேரியை யடைந்தனர்.

டிப்டி கமிஷனர் சமயசஞ்சீவியைப் பார்த்துவிட்டு அவரை வேறு டிவிஷனுக்கு தற்காலீகமாய் மாற்றியிருக்கும் உத்தரவைக் கொடுத்தார். அதை அவர் பெற்றுக்கொண்ட பிறகு விநாயகம் பிள்ளையுடன்

ரிகார்டு இலாகாவை யடைந்து தம்மிட மிருந்த கடி தத்தை ரேகை நிபுணரிடம் கொடுத்துவிட்டு, முடிவைத் தெரிந்து கொள்வதற்காக அங்கேயே காத்திருந்தார். கடிதத்தி லிருந்த ரேகைக் குறிகள் பளிச்சென்று தெரியும்படி செய்யப்பட்ட பின், போட்டோ எடுக்கப் பட்டது. ஷி காகிதத்தில் நான்கு மனிதர்களுடைய கைரேகைக ளிருந்தன. அவைகளைப் பார்த்த பிறகு ரேகை நிபுணர் வியப்புடன் சமயசஞ்சீவியை நோக்கி, "இந்தக் காகிதம் ஏது?" என்றார்.

சமயசஞ்சீவி:—நாங்கள் இதை ஒருவரிடம் எழுதி வாங்கினோம். நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?

ரேகை நிபுணர்:—இந்தக் கடிதத்தில் ஒரு பெரிய விநோத மிருக்கிறது. ரங்கசாமி என்ற கேடியின் கை ரேகை அடையாளம் இதி லிருக்கிறது.

சமயசஞ்சீவி:—(வியப்புடன்)என்ன! ரங்கசாமியின் கைரேகை அடையாளமா! அது இருக்காதே! நீங்கள் தவறுதலாகச் சொல்லுகிறீர்கள்போ லிருக்கிறது.

ரேகை நிபுணர்:—நிச்சயமாக ரங்கசாமியின் ரேகை அடையாள மிருக்கிறது.

சமயசஞ்சீவி:—மறுபடியும் நன்றாகப் பாருங்கள்.

ரேகை நியுணர்:—நான் நன்றாகப் பார்த்தே சொல்லு கிறேன்.

சமயசஞ்சீவி:—நீங்கள் சொல்வது எனக்கு நம்பிக் கைப் படவில்லை. ஏனெனில் ரங்கசாமி இந்தக் கடிதத் தைத் தொடவே இல்லை.

ரேகை நிபுணர்:—நீங்கள் சொல்வதை நான் நம்ப மாட்டேன். அவன் நிச்சயமாய் இதைத் தொட்டிருக்

கிறன். அவன் தொடாவிட்டால் அவனுடைய கைரேகை அடையாளம் இதில் எப்படி விழுந்திருக்கும்?

சமயசஞ்சீவி:—நான், விநாயகம் பிள்ளை, கந்தசாமி, டாக்டர் சுந்தரம் பிள்ளை ஆகிய நால்வர் மாத்திரம்தான் இதைத் தொட்டிருக்கிறேம். கந்தசாமி என்பவரும், டாக்டரும், ரங்கசாமியல்லவென்பது எனக்கு நன்றாகத் தெரியும். நாலுவது விநாயகம் பிள்ளையாவது ரங்கசாமியாக இருக்கவேண்டுமென்கிறீர்களா? நான் கொடுத்த கடிதத்திலுள்ள ரேகைகளைத்தான் நீங்கள் பரீட்சை செய்து பார்த்தீர்களா அல்லது வேறு எதையாவது பார்த்தீர்களா என்று நான் சந்தேகிக்கும்படி இருக்கிறது.

ரேகை நிபுணர்:—நான் அப்படிச் செய்ய அவ்வளவு முட்டாள் அல்ல.

சமயசஞ்சீவி:—நீங்கள் முட்டாள் என்று நான் சொல்லவில்லை.

ரேகை நிபுணர்:—நான் சொன்னது தவறு என்று நீங்கள் நிரூபித்தால் நான் என்னுடைய வேலையை இப்போதே விட்டு விடுகிறேன். இதோ இங்கே வந்து பாருங்கள்—என்று கூறி, கந்தசாமியிடம் எழுதி வாங்கப்பட்ட கடிதத்தையும் ஒரு பெரிய நோட்டுப் புஸ்தகத்தையும் கொண்டு வந்து, "இந்தக் கடிதத்திலிருந்த கைரேகை அடையாளங்களை போட்டோ பிடிப்பதற்காக அவைகள் பளிச்சென்று தெரியும்படி செய்திருக்கிறேன். இந்த நோட்டுப் புஸ்தகத்தில், தண்டனையடைந்த கேடிகளுடைய கைரேகை யடையாளங்கள் இருக்கின்றன" என்று கூறி நோட்டுப் புஸ்தகத்தைப் பிரித்து அதில் ஒரு பக்கத்தில் காணப்பட்ட கைரேகை

யடையாள மொன்றைக் காட்டி, "இதுதான் ரங்கசாமி என்ற கேடியி னுடையது. இதே மாதிரியான கைரேகை யடையாளம் கடிதத்தி லிருக்கிறதா இல்லையா என்று பாருங்கள்" என்றார்.

சமயசஞ்சீவி பார்க்க, ரங்கசாமியின் கைரேகை யடையாளம் காகிதத்தில் காணப்பட்டது. அவர் அபார மான ஆச்சரிய மடைந்தவராய், "அடாடா! அப்படியே இருக்கிறதே! நீங்கள் தவருய்ச் சொல்லுவதா யல்லவா நினைத்து விட்டேன். நான் சொன்னதைப் பற்றி வருத் தப்பட வேண்டாம்" என்று கூறியபடி காகிதத்தை எடுத்துக்கொண்டு விநாயகம் பிள்ளையுடன் வெளியில் சென்று, "இது பெரிய கண்கட்டு வித்தையாய்த்தா னிருக்கிறது. இந்தக் காகிதம் என்னுடையது. ஆகை யால் கந்தசாமியிடம் கொடுப்பதற்கு முன் ரங்கசாமியின் கைரேகை யடையாளம் இதில் எப்படிப் பதிந்திருக் கும்" என்றார்.

விநாயகம் பிள்ளை:— இதை வைத்துக்கொண்டு பார்த்தால், கந்தசாமியோ, அல்லது, டாக்டர் சுந்தரம் பிள்ளையோதான் ரங்கசாமியா யிருக்கவேண்டும். ஆனல் அவர்க ளிருவரும் அவனைப்போல் இல்லவே இல்லை.

சமயசஞ்சீவி:—நம் நால்வரைத் தவிர வேறு யரா வது நம்மையு மறியாமல் இதைத் தொட்டிருக்க வேண்டும்.

விநாயகம் பிள்ளை —நீங்கள் ஒரு முக்கியமான விஷ யத்தை மறந்துவிட்டீர்களே! அதாவது ரேகை நிபுணரை நீங்கள் மறந்துவிட்டீர்களே! அவரும் முதலில் இதைத் தம்முடைய கையால் தொட்டுத்தானே வாங்கினுர்.

ஒருவேளை அவருடைய ரேகைதான் இதுவோ என்னவோ?

சமயசஞ்சீவி:—சே! அப்படியானால் அவரா ரங்க சாமி! அவர் பத்து வருஷ காலமாய் இங்கே உத்தியோகத்தி லிருக்கிறார். ரங்கசாமி ஜெயிலி லிருந்தபோது இவர் இங்கேயே இருந்தார். அப்படி யிருக்க இவர் எப்படி ரங்கசாமியா யிருக்க முடியும். ரங்கசாமியும் இவரும் வெவ்வேறு ஆசாமிக ளென்பது பார்க்கும் போதே தெரிகிறதே! அதுவுமன்றி தாம் திருடரென்று இவரே விளம்பரப் படுத்திக் கொள்வாரா?

விநாயகம் பிள்ளை:—இது பெரிய மாயமாய்த்தா னிருக்கிறது.

சமயசஞ்சீவி:—(யோசித்து) அடாடா! நான் இது வரையில் இந்த முக்கியமான விஷயத்தை கவனிக்காமல் இருந்துவிட்டேனே!—என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார்.

விநாயகம் பிள்ளை:—(வியப்புடன் அவருடைய முகத்தைப் பார்த்து) எந்த விஷயத்தை?

சமயசஞ்சீவி:—முன்னர் வழிப்பறி நடந்த பிறகு மோட்டாரில் ரங்கசாமியின் கைரேகை அடையாளம் அகப்பட் டிருக்கிறது. அதைப் பற்றி நான் ஏற்கெனவே உம்மிடம் பேசி ரங்கசாமி மோட்டாரி னருகில் வராமலேயே கைரேகை அடையாளம் எப்படியோ வந்திருக்க முடியுமென்று சொல்லிக்கொண் டிருந்தே னல்லவா! இப்போது அது நிச்சயமாய் விட்டது. எப்படியெனில் கந்தசாமி எழுதிக் கொடுத்த இந்தக் காகிதத்தில் ரங்கசாமி இல்லாமலே அவனுடைய கைரேகை வந்திருக்கிறது. ஆகையால் நான் முன்னர் சந்தேகப்பட்டுக்

கொண் டிருந்த விஷயம் இப்போது ஊர்ஜிதமாய்விட்டது. அதாவது ஒரு மனித னில்லாமலேயே அவனுடைய கைரேகை அடையாளத்தை வரவழைக்க ஏதோ ஒரு வழி யிருக்கிறது.

விநாயகம் பிள்ளை:—அந்த யுக்தியை யாரோ உபயோகப் படுத்தியதால் நமக்கு இப்போது இந்தக் குழப்பம் ஏற்பட் டிருக்கிறது.

சமயசஞ்சீவி:—இப்போது விஷயம் விளங்கிவிட்டது. இந்த ரேகை அடையாளத்தை இப்போது உபயோகப் படுத்தியதுதான் அவன் செய்த முதல் தவறு. இதனாலேயே உண்மையான குற்றவாளி அகப்பட்டுக் கொள்ளப் போகிறான்.

விநாயகம் பிள்ளை:—அப்படியானால் யாரோ ஒருவர் வேண்டுமென்றே இந்தக் கைரேகை அடையாளம் இதிலிருக்கும்படி செய்திருக்கிறா ரென்று சொல்லுகிறீர்களா?

சமயசஞ்சீவி:—இந்த ரேகை அடையாளம் வேண்டுமென்றே யாராலோ சிருஷ்டிக்கப் பட்டதா அல்லவா என்பதை இப்போது நாம் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. இதுவரையில் உண்மையான குற்றவாளியைப் பிடிக்க சரியான உளவு எதுவும் அகப்படவில்லை; இப்போது அகப்பட் டிருப்பது மிகவும் முக்கியமானது. எப்படி யென்றால், இந்த ரேகை அடையாளம் வர வேண்டுமானால், அம்மாதிரி வரும்படி செய்வதற்கு யாராவது மனிதர் சம்பந்தப்பட் டிருக்க வேண்டும். கந்தசாமியிடம் வாக்குமூலம் வாங்குவதற்காக இந்தக் காகிதத்தை நான் உம்மிடம் கொடுத்தேன். நீர் அவனிடம் கொடுத்து எழுதி வாங்கிக் கொண்டீர். பிறகு அது

என்னுடைய சட்டைப்பையி லிருந்தபோது டாக்டர் சுந்தரம் பிள்ளை அதை எடுத்துப் பார்த்து வைத்து விட்டார். கைரேகை நிபுணர் பிறகு இந்தக் கடிதத்தைப் பரீட்சித்தார். ஆகவே அவர்கள் மூவருக்குள் யாரோ ஒருவரே ரங்கசாமியின் கைரேகை அடையாளம் விழும் படி செய்திருக்க வேண்டும். ஆகையால் இந்த நிமிஷம் முதல் நாம் இந்த மூன்று பேர்களையும் கண்காணிக்க வேண்டும். டாக்டர் சுந்தரம் பிள்ளை யாரென்பதோ, எங்கிருப்பவ ரென்பதோ நமக்குத் தெரியா தாகையால் நாம் அவரை விட்டுவிட்டு மற்ற இருவரையும் முதலில் கவனிப்போம். நீர் கந்தசாமியை கவனியும். நான் ரேகை நிபுணரை கவனித்துக் கொள்ளுகிறேன். இவர்க ளிரு வரும் குற்றவாளி இல்லை யென்பது வெளியாகுமானால், பிறகு நாம் சுந்தரம் பிள்ளையைத் தொடரலாம்.

விநாயகம் பிள்ளை:—சரி. அப்படியே செய்கிறேன் —என்று கூறிப் புறப்பட்டுப் போய்விட்டார். உடனே சமயசஞ்சீவி கமிஷனருடைய அறையை அடைந்தார்.

கமிஷனர்:—(புன்சிரிப்புடன்) வாருங்கள்; கொஞ்ச நேரத்திற்கு முன் மன்னார்குடி திகம்பரசாமியார் இங்கே வந்துவிட்டுப் போனாரே! அவரை நீங்கள் பார்த்தீர் களோ?

சமயசஞ்சீவி:— (வியப்புடன்) ஹா! அப்படியா! அவர் வந்த விசேஷம் என்ன?

கமிஷனர்:—அவர் ஏதோ ஒரு வழக்கில் ஆராய்ச்சி செய்கிறாராம். யாரோ ஒருவனுடைய கைரேகை அடை யாளத்தைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்; என் னோடு சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்த பிறகு

ரிகார்டு இலாகாவிற்குப் புறப்பட்டுப் போய்ப் பார்த்தார்; பிறகு வெளியில் போய்விட்டார்.

சமயசஞ்சீவி:—யாருடைய ரேகை அடையாளத்தைப் பார்த்தார்?

கமிஷனர்:—அவர் அதை என்னிடம் சொல்லவில்லை. அதிருக்கட்டும். வேறு டிவிஷனுக்கு மாற்ற வேண்டுமென்று டிப்டி கமிஷனரிடம் கேட்டீர்களாமே; எதற்காக?

சமயசஞ்சீவி:—நான் ஒரு வழக்கில் ஆராய்ச்சி செய்கிறேன். அது வேறு டிவிஷன்களில் சம்பந்தப் பட்டது. அதை ஆராய்வதற்குத் தோதா யிருக்குமென்று எண்ணி மாற்றச் சொன்னேன்.

கமிஷனர்:—அந்த டிவிஷனி லிருக்கும் இன்ஸ்பெக்டருக்கு உடம்பு அசௌக்கியப்பட் டிருப்பதால், ஒரு மாதம் ரஜா வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டே இருந்தார். இந்த சமயத்தில் நீங்கள் அந்த டிவிஷனுக்குப் போக விரும்பவே உங்களை சுலபமாய் மாற்றிவிட்டோம். அவர் ரஜாவில் போய்விட்டார். உங்கள் வேலையையும் விநாயகம் பிள்ளையே இந்த ஒரு மாதத்திற்கு சேர்த்துப் பார்க்கும்படி உத்தரவனுப்ப எண்ணியிருந்தேன். இந்த சமயத்தில் அவர் ஒரு வாரத்திற்கு ரஜா வேண்டுமென்று எழுதிப் போட்டுவிட்டார். எதற்காக அவர் ரஜா கேட்கிறுர்?

சமயசஞ்சீவி:—அவரும் எனக்கு உதவியா யிருந்து இந்த வழக்கில் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறுர்; அதனுல் தான் ரஜாவிற்கு எழுதி அனுப்பினுராம்.

கமிஷனர்:—அது முடியாத காரியம். ரஜாக் கடிதத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்று எழுதி அவ

ருக்கு ஒரு கடிதம் அனுப்பிவிட்டோம். நீங்களும் அவரிடம் சொல்லுங்கள்.

சமயசஞ்சீவி:— அப்படியே செய்கிறேன்—என்று கூறிவிட்டு வெளியில் சென்றார்.

அப்போது அங்கு டிப்டி கமிஷனர் வந்து சேர்ந் தார். அவரைக் கண்ட கமிஷனர் "இதென்ன பெரிய தொல்லையா யிருக்கிறதே! சமயசஞ்சீவி எங்கே போனா லும் அவருக்குக் கீழே இருக்கிறவர்கள் அவரோடு கூடவே போய்விட விரும்புகிறார்கள்" என்றார். அதைக் கேட்ட டிப்டி கமிஷனர் புன்னகை செய்தார். மறுபடி யும் கமிஷனர் பேசத் துடங்கி, "முன்பு சமயசஞ்சீவி சப்-இன்ஸ்பெக்டரா யிருந்தபோது, அவருக்குக் கீழ் பொன்னுசாமி பிள்ளை யென்பவன் ஏட்டா யிருந்தான். இவரை வேறு டிவிஷனில் சர்க்கிள் இன்ஸ்பெக்டராய் நியமித்து, அவனை சப்-இன்ஸ்பெக்டராய் நியமித்தோம். அவன் தன்னையும் இவருடைய டிவிஷனுக்கு மாற்றும் படி கேட்டுக்கொண்டான். இந்த ஊரிலிருந்தால் இம் மாதிரி தகராறு ஏற்படுமென்று அவனை வெளியூருக்கு அனுப்பிவிட்டேன். இப்போது விநாயகம் பிள்ளை என்னும் சப்-இன்ஸ்பெக்டரும் அதே மாதிரி செய்ய ஆரம்பித்திருக்கிறார். அவரையும் வெளியூருக்கு அனுப்ப வேண்டியதுதான்போ லிருக்கிறது" என்றார்.

இது நிற்க, வெளியில் சென்ற சமயசஞ்சீவி ரேகை நிபுணருடைய இடத்தை யடைந்தார். அவர் மறுபடி யும் வந்ததைக் கண்ட ரேகை நிபுணர் அதன் கார ணத்தை யறிய விரும்பி அவருடைய முகத்தைப் பார்த்தார்.

சமயசஞ்சீவி:— திகம்பரசாமியார் இங்கே வந்து விட்டுப் போனாராமே! என்ன விசேஷம்?

ரேகை நிபுணர்:—யாரோ ஒரு பழைய கேடியின் கைரேகை அடையாளத்தைப் பார்க்க அவர் வந்திருந் தார்.

சமயசஞ்சீவி:— அந்தக் கேடியி னுடைய பெய ரென்ன?

ரேகை நிபுணர்:-பெயரை அவர் என்னிடம் சொல்ல வில்லை.

சமயசஞ்சீவி:—நீங்கள் சொல்வது எனக்கு விளங்க வில்லையே! அவர் எதையும் பார்க்காமல் திரும்பிப் போய்விட்டாரா?

ரேகை நிபுணர்:— இல்லை. அவர் பார்த்துவிட்டுத் தான் போனார்.

சமயசஞ்சீவி:—யாருடைய கைரேகை அடையாளத் தைப் பார்த்துவிட்டுப் போனார்?

ரேகை நிபுணர்:— யாருடைய கைரேகை அடை யாளத்தைப் பார்த்தா ரென்பது எனக்கு எப்படித் தெரியும்? என்னிடம்தான் அவர் பெயரெதையும் சொல்லவில்லையே!

சமயசஞ்சீவி:— நீங்கள் யாருடைய கைரேகையை அவருக்குக் காட்டினீர்கள்?

ரேகை நிபுணர் :—நான் யாருடைய ரேகையையும் அவருக்குக் காட்ட வில்லை. இரண்டு வருஷங்களுக் குள் தண்டனை அநுபவித்து விடுதலையான குற்றவாளி களின் கைரேகைகள் அடங்கிய புஸ்தகத்தைப் பார்க்க வேண்டுமென்று அவர் சொன்னார். நான் புஸ்தகத் தைக் கொடுத்தேன். அவர் அதை வாங்கிக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்து பக்கங்களைப் புரட்டி எதையோ பார்த்தபின் புஸ்தகத்தை என்னிடம் திருப்

பிக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார். அவ்வளவே நடந்தது.

சமயசஞ்சீவி:— முதலிலேயே நீங்கள் இதைச் சொல்லி யிருந்தால் பேச்சு இவ்வளவு தூரம் வளராதல்லவா. இதை விசாரிப்பதற்கே நான் இங்கே வந்தேன்—என்ருர்.

அப்போது ரேகை நிபுணர் மூலையில் மாட்டப்பட்டிருந்த தமது சட்டையை எடுத்து அணிந்து கொண்டார். அப்போது சமயசஞ்சீவி அவரைப் பார்க்க, ரேகை நிபுணர் அதன் கருத்தை யறிந்துகொண்டு, "நான் கோர்ட்டில் சாட்சி சொல்லப் போக வேண்டும்; நேரமாய் விட்டது; அதற்காக வேஷத்தை யாட்டிக் கொண்டேன்" என்று கூறி, மேஜையின் மேல் சாவியோடு வைக்கப்பட் டிருந்த பூட்டைக் கையி லெடுத்துக் கொண்டார். சமயசஞ்சீவி உடனே வெளியில் சென்ருர். ரேகை நிபுணர் கதவைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டார்.

சமயசஞ்சீவி புறப்பட்டு அப்பால் சென்றதைப் போல் போக்குக் காட்டி ரேகை நிபுணர் மறைந்தவுடன் நேராக டிப்டி கமிஷனரிடம் போய் நிகழ்ந்த விஷயங்களைக் கூறி, தாம் ரேகை நிபுணரின் அறைக்குள் நுழைந்து சோதனை போட விரும்புவதாகக் கூறி தம்மோடு அவரையும் அழைத்துக் கொண்டு சென்று அவரை அருகில் நிறுத்திக் கொண்டு பூட்டை மறு சாவியால் சாமர்த்தியமாகத் திறந்தார். பூட்டு திறந்து கொண்டது. சமயசஞ்சீவியும் டிப்டி கமிஷனரும் உள்ளே நுழைந்தனர். உள் புறத்தில் டிப்டி கமிஷனர் அருகில் நின்று பார்த்துக்கொண் டிருக்க, சமயசஞ்சீவி சோதனை போடத் தொடங்கினுர்.

———

4

ஓர் ஊரில் இரண்டு சுந்தரங்கள்

கமிஷனரது காரியாலயத்தை விட்டு விநாயகம் பிள்ளை தெருவை யடைந்தார். அப்போது அவருக்கு ஓர் எண்ண முண்டாயிற்று. டாக்டர் சுந்தரம் பிள்ளை யென்பவருடைய இருப்பிடத்தை யறியக் கூடாமையி ஞலேயே, மற்ற இருவரையும் கவனிக்கும்படி சமய சஞ்சீவி கூறினு ரென்பது நன்ருக விளங்கிய தாகை யால், தாம் கந்தசாமியை கவனிப்பதுடன் டாக்டர் சுந் தரம் பிள்ளையைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டு மென்ற எண்ண முண்டாயிற்று. அவர் உண்மையி லேயே டாக்டர்தான் என்று வைத்துக் கொண்டு அவ ரைத் தேடினுல், அவர் அகப்படுகிருரா வென்று பார்க்க வேண்டு மென்றும், அவர் அகப்படா விட்டால், வேறு ஏதாவது யுக்தி செய்ய வேண்டு மென்றும் அவர் முடிவுசெய்து கொண்டார். ஆகையால் அவர் முதலில் ஒருவித யுக்தியை உபயோகிக்க எண்ணி, கடைத்தெரு விலிருந்த ஒரு மருந்து டிஸ்பென்ஸரிக்குப் போய்ச் சேர்ந்தார். வைத்தியர்கள் நோயாளிகளுக்குத் தேவை யான மருந்துகளை ஒரு சீட்டில் குறித்துக் கொடுப்ப தும், மருந்து விற்கும் இடத்தில் இருப்பவர் அந்தச் சீட்டைப் பார்த்து, ஏற்கெனவே தயாராக இருக்கும் மருந்தையோ, அல்லது, தயாரிக்க வேண்டிய மருந் தைத் தயாரித்தோ கொடுப்பது வழக்கம். டாக்டர்க ளுடைய விலாசம் அவரால் கொடுக்கப்படும் சீட்டில் கொடுக்கப்பட் டிருக்கும. அதனுல் கடைக்காரர்களுக்கு

டாக்டர்களுடைய விலாசம் தெரியும்; அதோடு பல டாக்டர்களுக்கும் நேரில் அவர்கள் மருந்துகளை விற்பது வழக்கம். அந்த விதத்திலும் டாக்டர்களை அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

ஆகவே, விநாயகம் பிள்ளை அந்த டிஸ்பென்சரியை யடைந்து டாக்டர் சுந்தரம்பிள்ளை யென்பவர் எங்கிருக்கிறார் என்று விசாரித்தார். அங்கிருந்தவர் டாக்டர் சுந்தரம் பிள்ளை அதே தெருவிலேயே 25-ம் நம்பர் வீட்டில் இருப்பதாகத் தெரிவித்தார். அதைக் கேட்ட விநாயகம் பிள்ளை சந்தோஷ மடைந்தவராய் அங்கிருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் 25-நெம்பர் கட்டிடத்தைக் கண்டு பிடித்து அவ் விடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அது ஒரு மாடிக் கட்டிடமாகக் காணப் பட்டது. அவர் கட்டிடத்திற்குள் நுழைந்தார். உட்புறத்தில் யாரோ ஒருவர் மாத்திரம் காணப் பட்டார். அவரிடம் விநாயகம் பிள்ளை சுந்தரம் பிள்ளையைப் பற்றி விசாரிக்க, அது நோயாளிகளை டாக்டர் பரிசோதிக்கும் இட மென்றும், அவருடைய இருப்பிடம் அடுத்த தெருவி லிருந்த 12-ம் நம்பர் வீடென்றும், அவர் பகல் 2-மணிக்கே அங்கு வருவா ரென்றும் அந்த மனிதர் கூற, பிள்ளை அங்கிருந்து புறப்பட்டு அடுத்த தெருவை யடைந்து டாக்டருடைய இருப்பிடத்தில் நுழைந்தார். அங்கு அவர் மறுபடியும் விசாரிக்க, ஒரு ஸ்திரீ வெளியில் வந்து, டாக்டரை மூன்ருவது தெருவி லிருந்த அவருடைய சிநேகிதரான சங்கர ஐயர் என்னும் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் தம்முடைய வீட்டிற்கு ஏதோ காரியமாய் அழைத்துக் கொண்டுபோ யிருப்பதாய்க் கூற, விநாயகம் பிள்ளை அங்கிருந்து புறப்பட்டு சங்கர ஐயருடைய வீட்டை யடைந்தார்.

அந்த வீட்டில் சங்கர ஐயர் மாத்திரம் காணப்பட்டார். அவரிடம் விநாயகம் பிள்ளை டாக்டரைப் பற்றி விசாரிக்க, டாக்டர் அருகி லிருந்த குப்புசாமி என்னும் நாடகக் கொட்டகைக்காரருடைய வீட்டிற்குப் போய் விட்டு, அதன் பிறகு அவருடைய வீட்டிற்குப் போவ தாய்த் தம்மிடம் சொல்லி விட்டுப் போனதாய் சங்கர ஐயர் கூற, விநாயகம் பிள்ளை அப்போதும் பொறுமை யோடு குப்புசாமியுடைய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்.

அப்போது கவிராயர் வீட்டின் உட்புறத்தி லிருந்து வெளியில் வந்தார். அவரிடம் விநாயகம் பிள்ளை டாக்டரைப் பற்றி விசாரிக்க, அவர் அந்தப் பெயருள்ள டாக்டர் யாரையும் தமக்குத் தெரியா தென்றும், ஆனல் அப்போது யாரோ ஒருவர் குப்புசாமியோடு பேசிக் கொண் டிருப்பதாகவும் கூறியபின் வெளியில் போய் விட்டார். விஞயகம் பிள்ளை நடையை யடைந்து உட் புறத்தில் எட்டிப் பார்த்தார். உட்புறத்தில் யாரோ ஒரு மனிதரும் குப்புசாமியும் பேசிக்கொண் டிருந்தனர். அவர்கள் சம்பாஷித்தது விநாயகம் பிள்ளையின் காதில் விழுந்தது.

குப்புசாமி:— வேறெரு சினிமாக்காரர் வந்து வீட் டுப்போ யிருக்கிறர். அவர் ஒவ்வொன் றிற்கும் பதினைந் தாயிரம் ரூபா கொடுப்பதாய்ச் சொல்லுகிறர். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

மற்றவர்:—அது நல்ல விலையாயிற்றே. அவரிடமே நாடகங்களைக் கொடுத்து விடலாமே!

குப்புசாமி:— அந்த விலைக்குக் கொடுக்க விரும்ப வில்லை யாகையால் நான் கொடுக்க வில்லை. அப்படி யானல் உங்களுக்குத் தேவை யில்லையா?

மற்றவர்:—தேவைதான். நீங்கள் பிடி கொடாமல் பேசுகிறீர்களே. இவைகளை எழுதினவருடைய பெயரைக் கூட சரியானபடி நீங்கள் சொல்லமாட்டேனென்கிறீர்களே.

குப்புசாமி:—அதை எதற்காகக் கேட்கிறீர்கள்?

மற்றவர்:— எங்களுக்கு இன்னம் ஏதாவது நாடகம் வேண்டுமானால், அவரைக் கொண்டு எழுதச் சொல்லுவதற்காகக் கேட்கிறேன்.

குப்புசாமி:—நான்தான் எழுதினேன்,

மற்றவர்:—ஓகோ! நீங்களேதான் ஆசிரியரா! அப்படியானல், சரிதான்.

குப்புசாமி:— நீங்கள் எங்கே ஜாகை வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்?

மற்றவர்:—எனக்குப் பல வருஷங்களாய்ப் பழக்கமான ஒரு சிநேகிதர் இந்த ஊரில் இருக்கிருர். அவருடைய வீட்டில் இருக்கிறேன்.

குப்புசாமி:—அவருடைய பெயர் என்னவோ?

மற்றவர்:—அவரை உங்களுக்குத் தெரிந்திருக்காது.

குப்புசாமி:— பெயரைத்தான் சொல்லுங்களேன்? அவர் எனக்குத் தெரிந்தவரா இல்லையா என்று பார்க்கலாம்.

மற்றவர்:—அவருடைய பெயர் கதிரேசன் பிள்ளை.

குப்புசாமி:— (திடுக்கிட்டு) யார்! கதிரேசன் பிள்ளையா! டாக்டர் கதிரேசனைப் பற்றியா சொல்லுகிறீர்கள்?

மற்றவர்:—ஆம். அவரைப் பற்றித்தான் சொல்லு கிறேன். அப்படியானால், அவரை உங்களுக்குத் தெரியுமோ?

குப்புசாமி:— தெரியும். அவரும் நானும் அன்னி யோன்னியமான நண்பர்கள். அவர் என்னைப் பற்றி உங்களிடம் பிரஸ்தாபிக்க வில்லையா?

மற்றவர்:—இல்லையே!

குப்புசாமி:— நானும் அவரை ஒரு காரியமாய்ப் பார்க்க எண்ணி யிருந்தேன். நல்ல வேளையாக நீங்க ளும் அங்கே போகிறீர்கள். நான் ஒரு கடிதம் தருகி றேன். தயவுசெய்து அதை அவரிடம் கொடுக் கிறீர்களா?

மற்றவர்:—ஓ, அவசியம் கொடுக்கிறேன். நீங்கள் நாடகங்களுக்குக் கேட்கும் தொகை நிரம்பவும் அதிகமா யிருக்கிறது. நான் இன்றிரவு யோசனை செய்து நாளைய தினம் காலையில் வந்து என்னுடைய முடிவைத் தெரி விக்கிறேன்.

குப்புசாமி:—அப்படியே செய்யுங்கள். இதோ கடி தம் எழுதித் தருகிறேன்—என்று கூறிவிட்டு ஒரு கடி தம் எழுதினார்; எழுதி முடித்தவுடன் அதை அவர் மற்றவரிடம் கொடுக்க, அவர் அதைப் பெற்றுக் கொண்டார். அப்போது விநாயகம் பிள்ளை அந்த மனி தரை உற்றுப் பார்த்து, தாம் தேடியது அவரையே என்று நிச்சயம் செய்துகொண்டு அங்கிருந்து புறப் பட்டு போலீஸ் கமிஷனருடைய கச்சேரிக்கு வேகமாகப் போய்ச் சேர்ந்து சமயசஞ்சீவியைத் தேடினார்.

அப்போது சமயசஞ்சீவியும் டிப்டி கமிஷனரும் ரேகை நிபுணருடைய அறையி லிருந்தனர். சமயசஞ்

சிவி அந்த அறையை சோதனை செய்து முடித்தார். ரேகை நிபுணரின்மேல் குற்றம் சுமத்துவதற்குரிய எவ் வித உளவும் அகப்பட வில்லை யாகையால், டிப்டி கமி ஷனர் சமயசஞ்சீவியைக் கண்டித்து, அவசரப்படாமல் மிக ஜாக்கிரதையாக வேலை செய்யும்படி கூறி எச் சரித்து விட்டு தமது காரியாலயத்திற்குச் சென்றார். அப்போது அங்கே வந்த விநாயகம் பிள்ளையைக் கண்ட சமயசஞ்சீவி, "என்ன செய்தி? கந்தசாமியை கவனித் தீரா?" என்று விசாரித்தார். உடனே விநாயகம் பிள்ளை, தாம் டாக்டர் சுந்தரம் பிள்ளையினுடைய இருப்பிடத் தைக் கண்டு பிடித்து விட்டதாய்க் கூற, சமயசஞ்சீவி சந்தோஷ மடைந்தார். இருவரும் அங்கிருந்து புறப் பட்டு சிறிது நேரத்தில் டாக்டர் சுந்தரம் பிள்ளையின் வீட்டை யடைந்தனர். அப்போது தெருவின் கதவு மூடித் தாளிடப்பட் டிருந்ததாகையால் விநாயகம் பிள்ளை கதவை இடித்தார்.

உடனே ஒருவர் கதவைத் திறந்து, "யார் நீங்கள்? என்ன வேண்டும்?" என்று வினவினார்.

சமயசஞ்சீவி:— டாக்டர் சுந்தரம் பிள்ளையைப் பார்க்க வேண்டும், அவர் வெளியி லிருந்து வந்து விட்டாரா?

மற்றவர்:-(வியப்பைத் தோற்றுவித்த முகத்துடன்) நான் வெளியில் போயிருந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் இல்லாத சமயத்தில் வந்து என்னைத் தேடியது நீங்கள்தானோ?

சமயசஞ்சீவி:— (திடுக்கிட்டு) அப்படியானால், நீங் கள்தான் டாக்டர் சுந்தரம் பிள்ளை யென்று அர்த்த மாகிறது. நீங்கள்தான் டாக்டர் சுந்தரம் பிள்ளையா?

மற்றவர்:-ஆம்; நான்தான் டாக்டர் சுந்தரம் பிள்ளை.

சமயசஞ்சீவி:— (விநாயகம் பிள்ளையை நோக்கி) இது பெரிய வேடிக்கையா யிருக்கிறதே! இவரைப் பார்த்துவிட்டா நீர் வந்து என்னிடம் அப்படிச் சொன்னீர்?

விநாயகம் பிள்ளை:—இவர் டாக்டர் சுந்தரம் பிள்ளையில்லை..

மற்றவர்:— (கோபத்தோடு) யாரையா நீங்கள்? நான் என்னுடைய தகப்பனுருக்கு பிள்ளை அல்ல என்று சொல்வதுபோல் பேசுகிறீர்களே! நான் டாக்டர் சுந்தரம் பிள்ளை யில்லையென்று நீங்கள் எதனுல் சொல்லுகிறீர்கள்?

விநாயகம் பிள்ளை:—நீங்கள் சுந்தரம் பிள்ளையாகவே இருங்கள்; அதிருக்கட்டும். இன்று வீட்டை விட்டு வெளியில் போன நீங்கள் எங்கெந்த இடங்களுக்குப் போனீர்கள்?

மற்றவர்:—நீங்க ளிருவரும் யாரென்பது எனக்குத் தெரியவில்லை; அப்படி இருக்க, உங்களுடைய கேள்விகளுக்கு எதற்காக நான் பதில் சொல்ல வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை.

விநாயகம் பிள்ளை:—நான் இந்த ஊர்ப் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர். டாக்டர் சுந்தரம் பிள்ளை யென்பவரை நான் பார்க்க வேண்டும்.

மற்றவர்:-நீங்கள் என்னைத் தேட வேண்டிய காரணமென்ன?

விநாயகம் பிள்ளை:—நாங்கள் உங்களைத் தேடவில்லை. உங்கள் பெயரை வைத்துக்கொண்டு திரியும் இன்னொரு நபரைப் பார்க்க வேண்டும்.

மற்றவா:— (வியப்போடு) என் பெயரை வேறு யார் வைத்துக்கொண் டிருக்கிருர்கள்! நீங்கள் சொல்வது வேடிக்கையா யிருக்கிறதே!

விநாயகம் பிள்ளை:—நாங்கள் உள்ளே வந்து பார்க்கலா மல்லவா?

மற்றவர்:—ஓ, பார்க்கலாம்—என்று கூறி கதவை நன்ருகத் திறந்து வைத்தார்.

உடனே போலீஸார் இருவரும் உள்ளே சென்று பார்க்க, அவர்கள் தேடிய மனிதர் அங்கு காணப்படவில்லை. தெருவுக் கதவை திறந்துவிட்ட மனிதரும், அவருடைய மனைவியுமே அங்கு இருந்ததை அறிந்து, டாக்டரை நோக்கி சமயசஞ்சீவி, "நீங்கள் இன்று எங்கெங்கு போனீர்கள்?" என்ருர்.

டாக்டர்:—அடுத்த தெருவி லிருக்கும் என்னுடைய சிநேகிதரான சங்கரையருடைய வீட்டிற்குப் போனேன்; அதன் பிறகு இந்த ஊரில் உள்ள நாடகக் கொட்டகையின் சொந்தக்காரரான குப்புசாமி என்பவருடைய வீட்டிற்குப் போனேன்; அதன் பிறகு சில நோயாளிகளின் வீட்டிற்குப் போய்விட்டு கால் மணிக்கு முன்பு தான் இங்கே வந்து சேர்ந்தேன்—என்ருர்.

சமயசஞ்சீவி:— அப்படியா! இந்த ஊரில் ஓர் அயோக்கியன் உங்களுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு திரிகிருன். அதனுல்தான் இவ்வளவு குழப்பம் ஏற்பட் டிருக்கிறது. சரி; இருக்கட்டும். நாங்கள் அவனைக் கண்டுபிடிக்கிருேம். உங்களுக்கு அசௌகரியம் உண்டாக்கியதைப் பற்றி ஆயாசப்பட வேண்டாம்—என்று உபசார வார்த்தை கூறிய பிறகு அங்கிருந்து விநாயகம் பிள்ளையுடன் புறப்பட்டு வெளியில் சிறிது

தூரம் சென்ற காலத்தில், "எனக்கு இப்போதுதான் உண்மை விளங்குகிறது. இந்த டாக்டர் குப்புசாமியைப் பார்த்துவிட்டுப் போனபிறகு, நாம் தேடும் அயோக்கியன் அங்கே வந்திருக்கிறுன். அவன் அங்கே இருந்த சமயத்தில் நீங்கள் போய் அவனைப் பார்த்துவிட்டு, அவன்தான் டாக்டர் சுந்தரம் பிள்ளை என்று எண்ணிக் கொண்டு வந்துவிட்டீர்கள்" என்ருர்.

விநாயகம் பிள்ளை:-(விசனகரமானகுரலில்) அடாடா! அப்போது இந்த சந்தேகம் என் புத்திக்கு எட்டாமல் போய்விட்டது! நான் முட்டாள் காரியம் செய்துவிட்டேன். நான் அவனுக்குப் பின்னுலேயே போயிருக்க வேண்டும்.

சமயசஞ்சீவி:-இப்போதும் ஒன்றும் முழுகிப் போகவில்லை. அந்த டாக்டர் கதிரேசன் எங்கே இருக்கிருர் என்று நாம் விசாரித்துக்கொண்டு அவருடைய இருப்பிடத்திற்குப் போனுல், அந்த அயோக்கியனை அங்கே கண்டு பிடித்துக் கொள்ளலாம். டாக்டர் கதிரேசனைப் பற்றி மருந்துக் கடையில் விசாரிப்போம்—என்ருர்.

உடனே அவர்கள் இருவரும் புறப்பட்டு முன்னர் குறிப்பிட்ட மருந்துக் கடைக்கு சிறிது நேரத்தில் வந்து சேர்ந்தனர்.

அங்கிருந்த வேலைக்காரர் விநாயகம் பிள்ளையைக் கண்ட உடன், "என்ன ஸார்! டாக்டர் சுந்தரம் பிள்ளை அகப்பட்டாரா?" என்ருர்.

சமயசஞ்சீவி:-அவருடைய வீட்டில் விசாரித்தோம். அவர் டாக்டர் கதிரேசன் பிள்ளை என்பவருடைய வீட்டிற்குப் போயிருப்பதாய்ச் சொன்னுர்கள். கதிரேசன்

பிள்ளையின் விலாசம் தெரியவில்லை. அதை உங்களிடம் விசாரித்துக்கொண்டு போவதற்காக வந்தோம்.

மற்றவன்:— (வியப்புடன்) டாக்டர் கதிரேசன் பிள்ளையா! (சற்று யோசித்து) அந்த மாதிரி பெயருள்ள மனிதர் யாரும் இந்த ஊரில் இருப்பதாகத் தெரிய வில்லையே! உங்களிடம் அம்மாதிரி சொன்னது யார்?

சமயசஞ்சீவி:— (தமது ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டு) சுந்தரம் பிள்ளையின் வீட்டில்தான் ஓர் அம்மாள் சொன்னார்கள்.

மற்றவன்:—இது பெரிய வேடிக்கையா யிருக்கிறதே! இந்த ஊரிலுள்ள டாக்டர்களின் பெயர்கள் எல்லாம் எனக்குத் தெரியும். அந்தப் பெயருள்ள டாக்டர் இந்த ஊரில் இருக்கிறார் என்பது இதுவரையில் எனக்குத் தெரியாது. ஒருவேளை வெளியூரி லிருந்து சமீப காலத்தில்தான் வந்தாரோ என்னவோ! நீங்கள் சுந்தரம் பிள்ளையின் வீட்டிற்கே போய், அவர் வரும் வரையில் அங்கேயே காத்திருங்கள். அதைத் தவிர வேறு எதுவும் செய்வதற் கில்லை—என்றார். அதைக் கேட்ட சமயசஞ்சீவியும், விநாயகம் பிள்ளையும் அந்த இடத்தை விட்டுச் சென்றனர்.

சென்ற சமயத்தில், சமயசஞ்சீவி, "நாம் கதிரேசன் பிள்ளையின் விலாசத்தைக் கண்டுபிடிக்க ஒரே வழிதான் இருக்கிறது. நாம் குப்புசாமியிடம் போய்த்தான் அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

விநாயகம் பிள்ளை அதை ஆமோதித்தார். சிறிது நேரத்தில் இருவரும் குப்புசாமியின் வீட்டை அடைந்தனர். விநாயகம் பிள்ளை உள்ளே செல்ல, சமயசஞ்சீவி வெளியில் நின்றுகொண் டிருந்தார்.

உள்ளே சென்ற விநாயகம் பிள்ளை, ஒரு சாய்மான நாற்காலியில் குப்புசாமி படுத்திருந்ததைக் கண்டார். குப்புசாமி எழுந்து உட்கார்ந்துகொண்டு அவரை வர வேற்று, அவர் தம்மைத் தேடிக்கொண்டு வரவேண்டிய காரண மென்ன வென்று விசாரித்தார்.

விநாயகம் பிள்ளை:— நான் போலீஸ் சப்-இன்ஸ் பெக்டர். டாக்டர் சுந்தரம் பிள்ளை என்னும் ஒருவரை நான் தேடிக்கொண் டிருக்கிறேன். அவர் டாக்டர் கதிரேசன் பிள்ளை என்பவருடைய வீட்டி லிருப்பதாய்த் தெரிகிறது. கதிரேசன் பிள்ளையின் விலாசம் உங்களுக் குத் தெரியுமென்று சிலர் சொன்னார்கள். அதை நீங்கள் சொல்ல வேண்டும்.

குப்புசாமி:— (திடுக்கிட்டு) டாக்டர் கதிரேசனா? அந்தப் பெயருள்ள மனிதரை நான் அறியேனே! அவ ருடைய விலாசம் எனக்குத் தெரியுமென்று உங்களிடம் புளுகினது யார்?

விநாயகம் பிள்ளை:—என்ன ஐயா! ஒரே புரட்டாய்ப் புரட்டுகிறீரே! கொஞ்ச நேரத்திற்கு முன் ஒரு சினிமாக் காரர் இங்கே வந்து உம்மோடு பேசிக்கொண் டிருந்த போது கதிரேசனுக்கு நீர் ஒரு கடிதம் எழுதி அதை அவரிடம் கொடுத்தனுப்பினீரே! இப்போது கதிரேசன் என்றால் பாம்பா தேளா என்று நாடகம் செய்கிறீரே!

குப்புசாமி:—இங்கே சினிமாக்காரர் வந்தது உங்க ளுக்கு எப்படி தெரிந்தது?

விநாயகம் பிள்ளை:— அவனைத்தான் நான் தேடிக் கொண்டு வந்தேன். நீரும் அவனும் பேசியபோது நான் நடையில் நின்று உங்களுக்குள் நடந்த சம்பாஷணை முழுதையும் கேட்டேன்.

குப்புசாமி:—அப்படியானல் அவனை நீங்கள் அப்போதே பிடித்துக் கொள்ளாமல் தும்பை விட்டு வாலைப் பிடிக்க வேண்டிய தென்ன? டாக்டர் கதிரேசன் பிள்ளையின் இருப்பிடத்தை நான் தெரிவிக்கமாட்டேன். நீங்கள் வேறு யாரிடத்திலாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

விநாயகம் பிள்ளை:— நான் யாரென்பதை மறந்து பேசுகிறீரா? விலாசத்தைக் கொடுக்கப் போகிறீரா, இல்லையா?

குப்புசாமி:— கொடுக்காவிட்டால்?

விநாயகம் பிள்ளை:—ஒரு குற்றவாளி மறைந்திருக்க உதவிய உடந்தைக் குற்றத்திற்காக உம்மை நான் சார்ஜ் செய்திருக்கிறேன். நீர் என்னோடு ஸ்டேஷனுக்கு வாரும்.

குப்புசாமி:— கோபிக்க வேண்டாம். கொஞ்சம் பொறுங்கள். அந்த ஆளை இங்கேயே அழைத்துக் கொண்டு வரும்படி நான் கதிரேசன் பிள்ளைக்கு டெலிபோன் மூலம் தெரிவிக்கிறேன்.

விநாயகம் பிள்ளை:—கதிரேசன் பிள்ளையின் இருப்பிடத்திற்கு நான் ஏன் போகக்கூடா தென்கிறீர்? கதிரேசன் பிள்ளையின் வீட்டை நான் பார்க்கக்கூடா தென்பது உம்முடைய எண்ணமா? இல்லாவிட்டால் அவரையே நான் பார்க்கக் கூடாதா?

குப்புசாமி:—நீங்கள் இந்த மாதிரி தாறுமாறுய்க் கேட்பதற் கெல்லாம் நான் சமாதானம் சொல்ல முடியாது. இதுவரையில் என்னிடம் இந்த மாதிரி யாரும் மரியாதைக் குறைவாகப் பேசினதில்லை. நீங்கள் சப்-இன்ஸ்பெக்டர் என்பதால் நான் பொறுத்தேன். வேறு

எவரா யிருந்தாலும் இந்நேரம் சரியான மரியாதை நடத்தி அவரை வெளியில் அனுப்பி இருப்பேன். நீங்கள் மரியாதையாக வெளியில் போகலாம். டாக்டர் கதிரேசனுடைய விலாசம் எனக்குத் தெரியாது.

விநாயகம் பிள்ளை:—(எழுந்திருந்து) சரி; அப்படியே போகிறேன் ஐயா. நீரே கதறிக்கொண்டு என்னிடம் வந்து விலாசத்தைச் சொல்லும்படி ஒரே நிமிஷத்தில் செய்கிறேன்—என்று கூறியபடி முறைப்பாக நடந்து தெருவிற்குப் போய்விட்டார்.

விநாயகம் பிள்ளை படபடப்புட னிருந்ததையும், அவருடைய முகம் கோபத்தினால் கருத்திருந்ததையும் பார்த்த சமயசஞ்சீவி, அவருக்கும் குப்புசாமிக்கும் ஏதோ தகராறு நடந்திருக்க வேண்டு மென்றும், விநாயகம் பிள்ளை குப்புசாமியின் மேல் கோபித்துக்கொண்டு வந்திருக்க வேண்டு மென்றும் யூகித்துக் கொண்டார். அதனால் அவர் மௌனமாகப் புறப்பட்டுச் செல்ல வாரம்பித்தார். விநாயகம் பிள்ளை சிறிது தூரம் சென்றவுடன், நிகழ்ந்த விஷயங்களை சமயசஞ்சீவியிடம் கூறினார்.

சமயசஞ்சீவி, "இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதனால்தான் டாக்டர் கதிரேசனுடைய விலாசத்தை குப்புசாமி சொல்லமாட்டே னென்கிறார். அந்த டாக்டருடைய விலாசத்தை அறிவதற்கு இன்னொரு வழி இருக்கிறது. அந்த வழியில் நான் முயற்சிக்கிறேன். நீர் மற்ற காரியத்தை விட்டு, இந்தக் குப்புசாமியைக் கண் காணித்துக்கொண்டிரும்; ஏனென்றால் நீர் இங்கே வந்துவிட்டுப்போன விஷயத்தை கதிரேசனுக்கு எந்த விதமாயாவது அவர் தெரியப்படுத்துவார். அதிலிருந்து

நீர் அவருடைய இருப்பிடத்தைக் கண்டுபிடியும்" என்றார்.

விநாயகம் பிள்ளை:—நீங்கள் என்ன முயற்சி செய்யப் போகிறீர்கள்?

சமயசஞ்சீவி:— துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள வைத்தியர்கள் ஜாப்தா ஒன்று இருக்கிறது. அதில், இந்த மாகாணத்திலுள்ள எல்லா வைத்தியர்களுடைய பெயர்களும் விலாசங்களும் இருக்கும்.

விநாயகம் பிள்ளை:—சரி; அதை நீங்கள் பாருங்கள். ஆனால், உங்களைவிட எனக்கு சீக்கிரமாய் அந்த விலாசம் தெரிந்து விடுமென்று நம்புகிறேன்.

சமயசஞ்சீவி:—நமக்கு விலாசம் தெரியவேண்டுமே யன்றி யார் முதலில் அதைக் கண்டுபிடித்த தென்பது முக்கியமான தல்ல. நான் போகிறேன்—என்று சொல்லி, அவரை அங்கேயே நிறுத்திவிட்டு, தாம் மாத்திரம் புறப்பட்டு தமக்குத் தெரிந்த ஒருவருடைய வீட்டிற்குப் போய் ஷை ஜாப்தாவை சம்பாதித்து ஆராய்ந்தார். அதே வருஷத்தில் வெளியிடப்பட்ட ஷை ஜாப்தாவில் கதிரேசன் பிள்ளை யென்ற பெயர் காணப்படவில்லை. அவர் தொடர்ச்சியாகப் பழைய வருஷங்களின் ஜாப் தாக்களையும் வாங்கிப் பார்த்துக்கொண்டே போக, சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு வெளியான ஜாப்தா வில் அந்தப் பெயர் காணப்பட்டது. அவர் உடனே அந்த விலாசத்தை எழுதிக்கொண்டார். அந்த விலாசம் வெளியூர் விலாசமா யிருந்தது. அதனால் மருந்துக் கடையி லிருந்தவர் சொன்னபடி கதிரேசன் பிள்ளை இந்த ஊருக்குப் புதியவரா யிருக்கவேண்டு மென்று யூகித்துக்கொண்டு தபாலாபீஸை அடைந்து, மறு

மொழிக்குப் பணம் கட்டி அந்த டாக்டர் தற்சமயம் வெளியூரில் இருக்கும் விலாசம் தமக்கு உடனே தெரிய வேண்டுமென்று அந்த ஊர்ப் போலீஸாருக்குத் தந்தி அனுப்பிவிட்டு அங்கேயே காத்திருந்தார்.

சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு மறு தந்தி வந்து சேர்ந்தது. டாக்டர் கதிரேசன் பிள்ளை என்பவர் அந்த விலாசத்தில் இல்லையென்றும், அவர் வெளியூரில் எங்கே இருக்கிறார் என்பது தெரியாதென்று அந்த விலாசத்தி லுள்ளவர்கள் தெரிவித்தார்க ளென்றும் அந்த ஊர்ப் போலீஸார் எழுதியிருந்தனர். அவர் அதை சட்டைப் பையில் வைத்துக்கொண்டு யோசனையி லாழ்ந்தார் டாக்டர் கதிரேசன் பழைய ஊரை விட்டு பல வருஷங்களுக்கு முன்பே வெளியேறி இருக்க வேண்டு மென்றும், இந்த ஊரில் யாருக்கும் அவர் இருந்தது தெரியவில்லை யாதலால், அவர் வைத்திய தொழில் நடத்தாமல் இருக்க வேண்டு மென்றும் யூகித்தார்.

டாக்டர் கதிரேசன் தமது தொழிலை நடத்தாததற்கு அவர் தொழில் நடத்தக்கூடாது என்று துரைத்தனத் தார் சொல்லிவிட்டார்களோ, அல்லது, வேறு ஏதாவது காரணத்தினால் அவர் தமது தொழிலை நடத்த வில்லையோ வென்பதை தாம் எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டுமென்று சமயசஞ்சீவி முடிவு செய்து கொண்டு கமிஷனருடைய கச்சேரியை அடைந்து பழைய கேடிகளுடைய ஜாப்தாவைப் பார்த்தார். முந் தைய பல வருஷங்களுடைய புஸ்தகங்களைப் பார்த்த பிறகு கடைசியாக ஒரு பக்கத்தில் டாக்டர் கதிரேசன் பிள்ளை, கொள்ளுமண்டி குப்புசாமி, கோபாலசாமி, வைத்தியநாதன் என்னும் நான்கு பேர்களும் கள்ள

நோட்டுகளைத் தயாரித்து செலாவணி செய்த குற்றத்திற்காக தண்டனை யடைந்த தகவலும், தாம் அப்போது மாற்றப்பட் டிருந்த புதிய டிவிஷனின் சப்-இன்ஸ்பெக்டரே அந்த சமயத்தில் அவர்களுடைய ஊரில் இருந்து அவர்களை தண்டனைக்குக் கொண்டுபோனார் என்னும் தகவலும் காணப்பட்டன. அப்போது 'புதிய டிவிஷன் சப்-இன்ஸ்பெக்டர் ஏதோ ஒரு காரியமாய் ஆபீஸிற்கு வந்திருந்தா ராகையால், அவரிடம் விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு புஸ்தகத்தை மூடி வைத்த பிறகு சமயசஞ்சீவி சப்-இன்ஸ்பெக்டரிருந்த இடத்தை அடைந்தார். தம்முடைய புதிய மேலதிகாரியான சமயசஞ்சீவியைக் கண்டவுடன் ஷை சப்-இன்ஸ்பெக்டர் அவருக்கு சலாம் வைத்தார்.

சமயசஞ்சீவி:— மிஸ்டர் பராங்குச முதலியார்! நீர் இதற்கு முன் ஈரோட்டில் வேலை பார்த்துக்கொண்டிருந்தீ ரல்லவா? அங்கே சுமார் பத்து வருஷங்களுக்கு முன் டாக்டர் கதிரேசன் பிள்ளை, கொள்ளுமண்டி குப்புசாமி, கோபாலசாமி, வைத்தியனாதன் ஆகிய நான்கு பேர்களை கள்ள நோட்டு தயாரித்து செலாவணி செய்த குற்றத்திற்கு தண்டனை செய்துவைத்தீ ரல்லவா?

பராங்குச முதலியார்:—ஆம். செய்து வைத்தேன்.

சமயசஞ்சீவி:— அந்த டாக்டர் கதிரேசன் பிள்ளை இப்போது இந்த ஊரில் இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அவனுடைய விலாசம் உமக்குத் தெரியுமோ?

பராங்குச முதலியார்:— (வியப்புடன்) அவன் இப்போது இந்த ஊரிலா இருக்கிறான். அது எனக்குத் தெரி

யாதே! உங்களுக்கு அந்தப் பழைய தகவல் எப்படித் தெரிந்தது?

சமயசஞ்சீவி :— ரிகார்டைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். அந்த டாக்டரின் விலாசம் எனக்கு அவசரமாகத் தெரியவேண்டும். கொள்ளுமண்டி குப்புசாமியும் இப்போது இந்த ஊரில்தா னிருக்கிறுன். மற்ற இருவரும் இங்கே இருக்கிறுர்களோ இல்லையோ என்பது தெரியவில்லை.

பராங்குச முதலியார்:— குப்புசாமி கூடவா இந்த ஊரில் இருக்கிறுன்.

சமயசஞ்சீவி:—ஆம். அவனுக்கு இப்போது இந்த ஊரில் ஒரு நாடகக் கொட்டகை சொந்தமா யிருக்கிறது.

பராங்குச முதலியார்:-அடேடே! இவன் நம்முடைய பழைய கோள்ளுமண்டிக் குப்பனு!

சமயசஞ்சீவி:—ஆம். ஆம் ஆம். அவரேதான் இவர்! நால்வரில் இருவர் இங்கே யிருக்கின்றனர். இருவரும் இப்போதும் அன்னியோன்னிய நேசர்களாய்த்தா னிருக்கின்றனர்.

பராங்குச முதலியார்:-அப்படியாளுல் நீங்கள் இங்கேயாவது நம்முடைய ஸ்டேஷனிலாவது இருங்கள். நான் போய் விலாசத்தைத் தெரிந்துகொண்டு வருகிறேன்.

சமயசஞ்சீவி:—நான் ஸ்டேஷனி லிருக்கிறேன்-என்றுர்.

சப்-இன்ஸ்பெக்டர் பராங்குச முதலியார் புறப்பட்டு வெளியில் சென்று சிறிது நேரத்தில் குப்புசாமி

---

*இதன் விவரத்திற்கு டாக்டர் சோணுசலம் என்னும் நாவலைப் பார்க்கவும்.

யின் வீட்டண்டை போய்ச் சேர்ந்தார். சப்-இன்ஸ்பெக்டர் விநாயகம் பிள்ளை அந்த வீட்டை கவனித்துக்கொண்டிருந்ததை முதலியார் கண்டாராஞலும், அது சமயசஞ்சீவி ஐயருடைய ஏற்பாடா யிருக்கவேண்டு மென்றும், பழைய குற்றவாளிகள் நால்வருமோ, இருவர்மாத்திரமோ மறுபடி ஏதோ குற்றம் செய்திருக்க வேண்டுமென்றும், அதற்காகவே சமயசஞ்சீவி கதிரேசன்பிள்ளையின் விலாசத்தைக் கேட்கிருர் என்றும் அநுமானித்துக்கொண்டு, விநாயகம் பிள்ளையை கவனிக்காதவர் போல் உள்ளே சென்ருர்.

அவரைக் கண்டவுடன் குப்புசாமி, "யாரையா நீங்கள்? என்ன வேண்டும்?" என்று சிடுசிடுப்பாக வினவிஞர்.

பராங்குச முதலியார்:— (தாமே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு) என்னுடைய அடையாளம் மறந்துபோய் விட்டதுபோ லிருக்கிறது! சுமார் பத்து வருஷங்கள் ஆகவில்லையா! உங்கள் நண்பர்கள் எல்லோரும் க்ஷேமந்தானே?

குப்புசாமி:—நீர் யார்? யாரைப்பற்றிப் பேசுகிறீர்?

பராங்குச முதலியார்:— உங்களைப் பற்றியே தான் பேசுகிறேன்.

குப்புசாமி:—(வியப்புடன் அவருடைய முகத்தைப் பார்த்து) நீர் யார் என்ற கேள்விக்கு மறுமொழி இல்லையே!

பராங்குச முதலியார்:-இன்னுமா என் அடையாளம் தெரியவில்லை. நீங்கள் ஈரோடு கொள்ளுமண்டி குப்புசாமி யல்லவா! டாக்டர் கதிரேசன் பிள்ளை, கோபால

சாமி, வைத்தியனுதன் ஆகிய மூன்று பழைய நண்பர்கள் இப்போது என்ன செய்துகொண் டிருக்கிருர்கள்?

குப்புசாமி:—(திகிலுடன்) நீர் யார் ஐயா?

பராங்குச முதலியார்:— நான் தான் ஐயா பழைய பராங்குச முதலியார். உங்கள் நால்வரையும் ஜார்ஜ் மன்னருடைய சத்திரத்தில் விருந்து சாப்பிட அனுப்பி னேனே! அந்த நன்றியை நீங்கள் எப்போதாவது மறக்க முடியுமா!

குப்புசாமி:—என்ன ஐயா உளறுகிறீர்?

பராங்குச முதலியார்:— உளறவில்லை, கிளருகிறேன். திருடனுக்குக் கையில் எப்போதும் தினவு எடுத்துக் கொண்டே இருக்கும் என்றும் சொல்லுவார்கள். அது போல் நீரும் கதிரேசனும் இப்போதும் ஏதோ கூட்டு வர்த்தகம் நடத்துகிறீர்கள் என்பது தெரிந்துபோய் விட்டது. இனி இந்த அபிநய நாடகம் உபயோகப்படப் போகிறதில்லை. உண்மையை ஒப்புக்கொண்டால், நீதி பதி தயாளமாய் சொற்ப தண்டனையோடு உங்களை விடு வார். இல்லாவிட்டால், அநர்த்தம் நேரிடுவது நிச்சயம்.

குப்புசாமி:— என்னைப்போல் யோக்கியமானவர்கள் இந்த உலகத்தில் யாரும் இருக்கமாட்டார்களே! அப்படி இருக்க, எனக்கு அநர்த்தம் ஏன் உண்டாகும்.

பராங்குச முதலியார்:— அதிருக்கட்டும்; இப்போது கதிரேசன் பிள்ளை என்ன செய்துகொண் டிருக்கிருர்?

குப்புசாமி:—அது உங்களுக்குத் தெரியாதா?

பராங்குச முதலியார்:—என்னுடைய கருத்து உமக்கு விளங்கவில்லை. சிலர் எல்லோருக்கும் தெரியும்படி வெளிக்கு ஒரு தொழிலை வைத்துக்கொண்டு, இரகசியத்

தில் வேருெரு தொழிலைச் செய்கிருர்கள். அவர் அந்த மாதிரியான தொழில் எதையாவது செய்கிருரா என்றல்லவா, நான் கேட்கிறேன். அவர் வெளிப்படையாகச் செய்யும் தொழில் இன்னதென்பது எனக்குத் தெரியும். அதை நான் உம்மிடம் கேட்கவில்லை.

குப்புசாமி:—அவர் இப்போது எந்தத் தொழிலையும் செய்யவில்லை. அப்படி யிருக்க அவர் வெளிப்படையாக ஏதோ செய்வதாய்ச் சொல்வதிலிருந்து நீர் என்னை ஆழம் பார்க்கிறீர் என்பது நிச்சயமாய்த் தெரிகிறது.

பராங்குச முதலியார்:—நான் சொன்னதற்கு அர்த்த மென்ன வென்ருல், அவர் இப்போது ஏதாவது தொழில் செய்துகொண் டிருந்தாலும் அந்த விஷயம் எனக்குத் தெரிந்துவிடு மென்பதுதான். அவர் இப்போது இரகசியத்தில் என்ன தொழில் செய்கிருர் என்பதை நீர் சொல்ல மாட்டீரா?

குப்புசாமி:—அதை அவரிட மல்லவா கேட்க வேண்டும்; என்னிடம் எதற்காகக் கேட்க வேண்டும்.

பராங்குச முதலியார்:—அவரிடம் கேட்டால் அவர் ஒழுங்காய் உத்தரம் சொல்ல மாட்டார். அதை உத்தேசித்துத்தான் அவருடைய பழைய சிநேகிதரான உம்மிடம் கேட்கிறேன்.

குப்புசாமி:—எனக்குத் தெரிந்த வரையில் அவர் வேறு எந்த விதமான தொழிலையும் வைத்துக்கொண் டிருக்கவில்லை.

பராங்குச முதலியா:—அவரைப் பற்றி நீர் இப்படிச் சொல்லுகிறீர். அவர் உம்மைப் பற்றி என்ன சொல்லு கிருர் தெரியுமா?

குப்புசாமி:—அவர் என்னைப் பற்றி சொல்லுவதற்கு என்ன இருக்கிறது.

பராங்குச முதலியார்:—அப்படியானல் நீர் அவரிடம் பூர்த்தியான நம்பிக்கை வைப்பவராகவோ, அல்லது, நீர் செய்வது பாசாங்காகவோ இருக்க வேண்டும்.

குப்புசாமி:—(கோபத்துடன்) இதெல்லாம் விளையாட்டுப் பேச்சு.

பராங்குச முதலியார்:—நான் விளையாடவில்லை, உண்மையைச் சொல்லுகிறேன். அதை விளக்குகிறேன். அதோ டெலிபோனிருக்கிற தல்லவா? அதன் மூலம் அவரைக் கூப்பிட்டு அவர் என்னிடம் என்ன சொன்னர் என்று கேளும்.

குப்புசாமி:—(கோபத்துடன்) சரி; அப்படியே செய்கிறேன்—என்று கூறியபடி அருகிலிருந்த டெலிபோனுக் கருகில் சென்று, ரிஸீவரைக் கையிலெடுத்து, 5030, என்ற நம்பரைக் கூப்பிட்டார்.

உடனே பராங்குச முதலியார் சரேலென்று நாற்காலியைவிட் டெழுந்திருந்து, "குப்புசாமி! நானே பேசுகிறேன்" என்று கூறியபடி குப்புசாமிக் கருகில் சென்று ரிஸீவரைப் பிடுங்கிக் கொண்டார்.

இது இங்ஙனமாக, தெருவில் நின்ற சப்-இன்ஸ்பெக்டர் விநாயகம் பிள்ளை, அந்த வீட்டிற்குள் சப்-இன்ஸ்பெக்டர் பராங்குச முதலியார் நுழைந்ததையும், அவர் தம்மை கவனித்தும் கவனியாதவர்போல் வேகமாய் உள்ளே போனதையும் கவனித்து, வியப்படைந்தவராய், அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்து நடையையடைந்து பராங்குச முதலியாருக்கும் குப்புசாமிக்கும் நடந்த சம்பாஷணை முழுதையும் கேட்டுக்கொண்

டிருந்து, என்ன காரணத்தினுலோ பராங்குச முதலியார் டாக்டர் கதிரேசன் பிள்ளையைப் பற்றி விசாரிக்கிருரென்று அநுமானித்துக் கொண்டார். குப்புசாமி 5030-ம் நம்பரைக் கூப்பிட்டதும், அது செல்லப்பா பிள்ளையின் பங்களாவிலுள்ள டெலிபோனுடைய நம்பர் என்பதை அவர் ஏற்கெனவே தெரிந்துகொண்டிருந்தா ராதலால், பராங்குச முதலியார் டெலிபோன் மூலம் என்ன பேசப் போகிருர் என்பதை அறிய ஆவலோடு காத்திருந்தார். ஆனுல் அவர் எதிர்பாரா விதமாக அவ்விடத்தில் ஒரு விநோத சம்பவம் நடந்ததை அவர் கண்டார். குப்புசாமியின் கையிலிருந்து பராங்குச முதலியார் ரிஸீவரைப் பிடுங்கியவுடன் அது கம்பியை விட்டுப் பிரிந்து வேருக வந்துவிட்டது.

உடனே பராங்குச முதலியார், "அடாடா! இது தனியாய் வந்துவிட்டதே! ஒரு குறடு எடுத்துக்கொண்டு வாரும். இதை சரிப்படுத்துகிறேன்" என்ருர்.

குப்புசாமி முணுமுணுத்தபடி அப்பால் சென்று ஒரு குறட்டை எடுத்து வந்து அவரிடம் கொடுக்க, அவர் அதைப் பெற்றுக் கொண்டவுடன் ஒரு திருப்புளியும் வேண்டுமென்று கூற, குப்புசாமி மறுபடியும் அப்பால் போக, உடனே முதலியார் டெலிபோன் யந்திரத்திற்கு அப்பால் மறைவான ஓர் இடத்திலிருந்த ஷை டெலிபோன் கம்பியை குறட்டினுல் வெட்டி வைத்துவிட்டு, ஒன்றையு மறியாதவர்போல் நின்று குப்புசாமியின் வருகைக்காகக் காத்திருந்தார். சிறிது நேரத்தில் குப்புசாமி ஒரு திருப்புளியுடன் வந்து சேர்ந்தார். பராங்குச முதலியார் அதை வாங்கி வைத்துக் கொண்டு டெலிபோன் யந்திரத்தை ஒழுங்கு படுத்த முயலுகிறவர்போல் சற்று நேரம் நடித்த பிறகு, "இதை

சரிப்படுத்த அதிக நேரம் பிடிக்கும்போ லிருக்கிறது! இது இப்போது ஆகும் காரியமாய்த் தோன்றவில்லை. நான் ஓர் இடத்திற்கு அவசரமாய்ப் போக வேண்டும். ஆகையால் நான் போய் இதை சரிப்படுத்தும் ஆளை அனுப்புகிறேன்'' என்று சொல்லிய பிறகு, அங்கிருந்த டெலிபோன் விலாசப் புஸ்தகத்தைக் கையி லெடுத்துப் புரட்டிப் பார்த்து, 5030-ம் நம்பருக்கு சரியாக செல்லப்பா பிள்ளை என்பவருடைய விலாசம் கொடுக்கப்பட்டிருந்ததைப் பார்த்த பிறகு அதை அங்கேயே வைத்து விட்டு, வெளியில் வந்தார். அப்போது விநாயகம் பிள்ளை தெருவில் காணப்படவில்லை. அவர் அங்கிருந்த வீட்டுத் திண்ணைகளைப் பார்த்து, விநாயகம் பிள்ளை எவ்விடத்திலும் இல்லை யென்பதை நிச்சயம் செய்துகொண்டு அங்கிருந்து சென்று சிறிது நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார்.

அங்கிருந்த ஒரு ஜெவான் சமயசஞ்சீவி வந்து காத்துக்கொண் டிருந்ததாகவும், சிறிது நேரத்திற்கு முன் விநாயகம் பிள்ளை வந்து அவரிடம் பேசிக்கொண் டிருந்ததாகவும், இருவரும் புறப்பட்டு வெளியில் போனதாகவும் கூறினன். ஆகவே, பராங்குச முதலியார் அவர்களுடைய வருகைக்காக ஸ்டேஷனிலேயே காத் திருந்தார்.

அப்போது சமயசஞ்சீவியும், விநாயகம் பிள்ளையும் செல்லப்பா பிள்ளையின் பங்களாவிற்குச் சென்று அதன் முன் புறத்தை அடைந்தனர். அப்போது டாக்டர் சுந்தரம் பிள்ளை என்பவன் உள்ளே இருக்கிருன் என்பதையும், செல்லப்பா பிள்ளைதான் டாக்டர் கதிரேசன் பிள்ளையா என்பதையும் அறிந்து வரும்படி விநாயகம் பிள்ளையை சமயசஞ்சீவி உள்ளே அனுப்பினுர். உட்

புறத்தில் அப்போது செல்லப்பா பிள்ளை முதல் நாளைய பத்திரிகையைப் படித்தவண்ண மிருந்ததை விநாயகம் பிள்ளை கவனித்தார். செல்லப்பா பிள்ளை விநாயகம் பிள்ளை வந்ததைக் கண்டு, "என்னப்பா! மறுபடியும் எங்கே வந்தாய்?" என்றார்.

விநாயகம் பிள்ளை:—கந்தசாமி வந்தானு? பக்கத்து பங்களாவில் விழுந்த மோதிரத்தைத் தேடினனு?

செல்லப்பா பிள்ளை:—அவன் இங்கே வரவில்லையே! நான்கூட அவனை வரச்சொல்லி இருந்தேன். அவன் வரவில்லையே!

விநாயகம் பிள்ளை:— அவனுக்கு ஏதாவது அவசர வேலை இருக்கும்; அதை கவனித்துக்கொண் டிருக்கிறான் போலிருக்கிறது. எனக்கு குப்புசாமி என்ற பெயருள்ள இன்னொரு சிநேகித ரிருக்கிறார். இங்கே டாக்டர் சுந்தரம் பிள்ளையென்று யாரோ ஒருவர் இருக்கிறரென்றும், அவரைக் கொண்டு தேடச் சொல்லுவதாகவும் குப்புசாமி என்னிடம் சொன்னுர். இந்த பங்களாவி லிருக்கும் டாக்டர் கதிரேசன் பிள்ளை என்பவரையும் அவருக்கு நன்ருய்த் தெரியுமாமே!

செல்லப்பா பிள்ளை:— (வியப்புடன்) நீ சொல்வது வேடிக்கையா யிருக்கிறதே! எந்தக் குப்புசாமி அந்த மாதிரி சொன்னுர்?

விநாயகம் பிள்ளை:— நாடகக் கொட்டகை வைத்திருக்கிறரே! அவர்தான் சொன்னுர், அவர் உங்களுக்கும் சிநேகிதர்தானே?

செல்லப்பா பிள்ளை:— அவரா சொன்னுர்! அவர் அந்த மாதிரி பொய் சொல்லமாட்டாரே. நீங்கள் குறித்த

இரண்டு மனிதர்களும் இங்கே இல்லை என்பது அவருக்குத் தெரியுமே. ஆனால் டாக்டர் கதிரேசன் பிள்ளை மாத்திரம் அடிக்கடி இங்கே வந்து போய்க்கொண் டிருப்பது வழக்கம். அவர் வேறு இடத்தி லல்லவா இருக்கிறார்.

விநாயகம் பிள்ளை:—எங்கே இருக்கிறார்? பக்கத்தில் தானே இருக்கிறார்.

செல்லப்பா பிள்ளை:—அவர் பக்கத்திலில்லை; தூரத்தில்தான் இருக்கிறார். குப்புசாமியை நான் கூப்பிட்டு இதைப்பற்றி விசாரிக்கிறேன்-என்று கூறிவிட்டு அருகிலிருந்த டெலிபோன் யந்திரத்தண்டை போய் குப்புசாமியின் நம்பரைக் கூப்பிட்டார்.

எக்ஸ்சேஞ்சி லிருந்தவர் உடனே, "டெலிபோன் கெட்டுப் போயிருக்கிறது. ஆகையால் நீங்கள் கேட்டுக் கொண்ட நம்பரை உங்களோடு சேர்க்க முடியவில்லை" என்று கூறினார். செல்லப்பா பிள்ளை ரிஸீவரைக் கொக்கியில் மாட்டிவிட்டு, "குப்புசாமியுடைய டெலிபோன் கெட்டுப்போ யிருக்கிறதாம். ஆகையால் அவருடன் பேச முடியவில்லை. எனக்கு இப்போதுதான் விஷயம் விளங்க வாரம்பிக்கிறது. இங்கே டாக்டர் கதிரேசன் பிள்ளை அடிக்கடி வருவா ராகையால் அவர் இங்கே இருப்பாரென்று நினைத்து குப்புசாமி அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் இப்போது இங்கே என்னைத் தவிர யாருமில்லை" என்றார்.

விநாயகம் பிள்ளை:— அப்படியானால் சரி தான். கோபாலசாமியும் வைத்தினாதனும் அவரோடுதான் இருக்கிறார்களோ?

செல்லப்பா பிள்ளை:—(வியப்புடன்) அவர்களைக்கூட உனக்குத் தெரியுமா?

விநாயகம் பிள்ளை:—ஓ நன்ருய்த் தெரியுமே! டாக்டர் கதிரேசன் பிள்ளை எங்கே குடியிருக்கிருர் ?

சேல்லப்பா பிள்ளை:-ஓகோ! மோதிரக்கதையிலிருந்து நீ இப்போது இந்தப் புதுக் கதையை ஆரம்பித்திருக்கிருயா!

விநாயகம் பிள்ளை:—என்ன புதுக் கதை ?

சேல்லப்பா பிள்ளை:—நீ பெரிய புரட்டன் என்பது தான் உன் கதை—என்று கூறியபடி அருகில் ஒருமேஜையின்மேலிருந்த ஒரு கத்தியை சரேலென்று எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "உண்மையைச் சொல்லிவிடு; இங்கே இதோடு இரண்டு தடவைகள் நீ வந்துவிட்டாய். எதற்காக நீ இங்கே வந்து அவர்களைப்பற்றி விசாரிக்கிருய்? என்ருர்.

விநாயகம் பிள்ளை உடனே விழித்துக் கொண்டார். தாம் ஏதோ தவறு செய்துவிட்டதாயும், அதனுலேயே செல்லப்பா பிள்ளை தம்மை அப்படி பயமுறுத்தியதாயும் யூகித்துக் கொண்டா ராளுலும், செல்லப்பா பிள்ளை எதற்காகக் கத்தியைக் கையில் வைத்துக்கொண் டிருக்கிருரென்பதை தாம் உணராதவர் போல், "நான்தான் அடுத்த பங்களாவி லிருப்பவர்களை கவனிக்கும் பொருட்டு இங்கே வந்ததாய் ஏற்கனவே சொன்னேனே!" என்ருர்.

செல்லப்பா பிள்ளை, "நான் நம்பவில்லை. நீ......" என்று கூறி, மேலே ஏதோ கூற யத்தனித்த சமயத்தில் தெருவில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்ற ஓசை கேட்டது. செல்லப்பா பிள்ளை அதற்குமேல் பேசாமல் நிறுத்திவிட்டு, யார் வந்தார்களென்பதை கவனித்தார். அடுத்த நிமிஷம் அங்கே சப்-இன்ஸ்பெக்டர் பராங்குச

முதலியார் வந்து சேர்ந்து, "அடேடே! கோபால சாமியா! என்ன கோபாலசாமீ, நீ இங்கேதா னிருக்கி ருயா?" என்று விசாரித்தபடி செல்லப்பாவிற் கெதிரில் சிறிது தூரத்தி லிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

உடனே விநாயகம் பிள்ளை தமது தவறை உணர்ந்து கொண்டார்.

பராங்குச முதலியார் :— (செல்லப்பா பிள்ளையை நோக்கி) கோபாலசாமீ உன்னுடைய பழைய கூட்டாளி களும் நீயும் சௌக்கியமா யிருக்கிறீர்களா? என்ன நீ நம்மை கவனிக்கிறதில்லை?

செல்லப்பா பிள்ளை:—(வியப்புடன்) நீர் யார்? என் னுடைய பெயர் செல்லப்பா பிள்ளையல்லவா? வேறு எங்கேயாவது போவதற்கு பதிலாக இங்கே வந்துவிட் டீரா?

பராங்குச முதலியார்:—நம்முடைய டாக்டர் கதிரே சன் என்ன செய்கிருர்? முன்போல் இப்போதும் சுலப மாக நோட்டுகளை வரவழைக்கிருரா இல்லாவிட்டால் சிரமப்பட்டு சம்பாதிக்கிருரா?

செல்லப்பா பிள்ளை:-என்ன ஐயா தாறுமாருய் உளறு கிறீர்? உமக்கென்ன சித்த ஸ்வாதீன மில்லையா?

பராங்குச முதலியார்:-என்ன கோபாலசாமீ, உனக்கு கோபம் அசாத்தியமாய் வருகிறதே! டாக்டர் சோணு சலம் தயாரித்த பிளாக்குகள் உங்கள் புத்தியைக் கெடுத் தனவே. அந்த சமயத்தில் நான் சப்-இன்ஸ்பெக்டரா யிருந்தது உனக்கு நினைவிற்கு வரவில்லையா! நான் டாக் டர் கதிரேசன் பிள்ளையை அவசரமாய்ப் பார்க்கவேண்டு மப்பா. கொஞ்சம் சொல்லப்பா. அவர் இந்த பங்களா

விற்குள் இருக்கிறரா? இல்லாவிட்டால் வேறே எங்கே யாவது இருக்கிறரா?

விநாயகம் பிள்ளை:— என்ன ஐயா, என்னிடம் நீர் இதுவரையில் உம்முடைய பெயர் செல்லப்பா பிள்ளை என்று சொல்லி என்னை ஏமாற்றிய காரணமென்ன? என்னை அந்தக் கத்தியால் குத்தப் போகிறீரா? ஏன் அதைக் காட்டி பயமுறுத்தினீர்?

செல்லப்பா பிள்ளை:—நான் பயமுறுத்த வில்லையே. இந்தக் கத்தியால் விரல்களின் நகத்தை அறுத்துக் கொண் டிருந்தேன். அப்போது நீர் வந்தீர். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடி போடுகிறீரே! சரி. அப்படியே வைத்துக் கொள்ளுவோம்.

விநாயகம் பிள்ளை:— டாக்டர் கதிரேசன் பிள்ளை எங்கே இருக்கிறர்? அதை சொல்லப்போகிறயா? இல்லா விட்டால் உன்னை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் அம்மியில் வைத்து நசுக்கி சார் பிழிய வேண்டுமா?

செல்லப்பா பிள்ளை:—அவர் இருக்கும் இடம் எனக் குத் தெரியாதே!

விநாயகம் பிள்ளை:—இது நிஜந்தானு?

செல்லப்பா பிள்ளை:—நிஜமில்லாமல் பொய்யையா சொல்லுகிறேன்.

விநாயகம் பிள்ளை:—இது பொய் யென்பதை நான் நிரூபிக்கிறேன்.

செல்லப்பா பிள்ளை:—எதனுல் பொய் என்கிறீர்கள்?

பராங்குச முதலியார்:— கோபாலசாமீ, வேண்டா மப்பா; முன் தடவையிலும் நீங்கள் கடைசி வரையில்

இப்படிப் பேசியே கெட்டீர்கள்; பிடிவாதம் முடக்கு வாதமாய் முடியும்.

செல்லப்பா பிள்ளை:—அப்படியானால் டாக்டர் கதிரேசன் பிள்ளை இருக்கு மிடத்தை சொல்லட்டுமா?—என்றார்.

அப்போது சமயசஞ்சீவியும் அங்கே வந்து தோன்றினார். அவரைக் கண்டவுடன் செல்லப்பா பிள்ளையின் முகம் விகாரமாக மாறியது.

சமயசஞ்சீவி:—இப்போது இங்கே நடந்த சம்பாஷணை முழுதையும் நான் கேட்டுக்கொண் டிருந்தேன். (விநாயகம் பிள்ளை, பராங்குச முதலியார் ஆகிய இருவர் பக்கமும் பார்த்து) என்னை ரங்கசாமி என்று சொல்லு வார்கள். கோபாலசாமிக்கும் அந்தப் பெயர் தெரியும் —என்று கூறிய பிறகு செல்லப்பா பிள்ளையை நோக்கி, "என்ன, கோபாலசாமீ, நான் சொன்னது சரிதானா! டாக்டர் கதிரேசன் பிள்ளை எங்கே இருக்கிறார் என்பதை சொல்லிவிடக் கூடாதா? ஏன் அநாவசியமான உபத்திரவத்தை விலைக்கு வாங்கிக்கொள்ள முயலுகிறாய்" என்றார்.

செல்லப்பா பிள்ளை:—நீர் யார்?

சமயசஞ்சீவி:—என்னையே மடக்க ஆரம்பித்துவிட்டாயே! சரி! அதிருக்கட்டும். நான் ஒரு ஜோசியம் சொல்லப் போகிறேன். அதைக் கேட்டு நீ நடுங்கப் போகிறாய்! உன் மேஜைக்குள் ஒரு ரகஸியம் இருந்தது.

செல்லப்பா பிள்ளை:-என் மேஜையில் என்ன ரகஸிய மிருந்தது?

சமயசஞ்சீவி:—டாக்டர் கதிரேசன் எழுதிய கடித மொன்று இருந்தது.

செல்லப்பா பிள்ளை:—என்ன, அவரை நான் பார்த்து எத்தனையோ வருஷங்களாய் விட்டனவே!

சமயசஞ்சீவி:— கடிதத்தை நான் என் கண்ணுல் பார்த்தே னப்பா!

செல்லப்பா பிள்ளை:—இராதே!

சமயசஞ்சீவி:—இருந்ததே! வண்டி எங்கெந்த வழியாய்ப் போகும் என்னும் விவரத்தை கதிரேசன் அதில் எழுதியிருந்தாரே!

செல்லப்பா பிள்ளை:—அது உனக்கெப்படித் தெரியும்?

சமயசஞ்சீவி:—நான் படித்துப் பார்த்தேன் என்று இப்போதுதானே சொன்னேன்.

பராங்குச முதலியார்:— எந்த வண்டியைப் பற்றி எழுதப்பட் டிருந்தது?

சமயசஞ்சீவி:—இரண்டரை வருஷங்களுக்கு முன்பு இரண்டு பேர்கள் ஒரு வண்டியை மறித்து வழிப்பறி நடத்தினுர்க ளல்லவா. அப்போது அந்த வண்டி எங்கெந்த வழியாய்ப் போக வேண்டு மென்பது அதில் எழுதப்பட் டிருந்தது. அந்தக் கடிதம் இப்போது பந்தோபஸ்தான ஓர் இடத்தி லிருக்கிறது.

செல்லப்பா பிள்ளை:—இது பெரிய அண்டப் புரட்டு.

சமயசசீஞ்வி:—சரி; அப்படித்தான் சொல்ல வேண்டும். உன்னையும் மானேஜரையும் அன்றைய தினம் வழிப்பறி நடந்த இடத்திற் கருகில் பார்த்ததாய் கந்தசாமி சொல்லுகிருன். அது முதலாவது விஷயம்; இரண்டாவது நீங்க ளிருவரும் வழிப்பறி நடத்தியதைப்

பார்த்ததாக இன்னொருவர் சொல்லுகிறார். மானேஜரும் உண்மையை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்து விட்டார். அந்த வாக்குமூலம் இப்போது போலீஸாரிட மிருக்கிறது. அவரும் லாக்கப்பில் இருக்கிறார். உம்மைப் பிடித்துக்கொண்டு போவதற்காக நான் வந்திருக் கிறேன்.

செல்லப்பா பிள்ளை:—குற்றங்களை யெல்லாம் அவரே செய்தவர்; அதை அவர் ஒப்புக்கொள்ளுகிறார்; என்னை ஏன் சேர்க்கிறார்?

பராங்குச முதலியார்:—குற்றங்களை அவரே செய்த தாக நீ சொல்வதால் நீ அவருக்கு உடந்தை என்பது தெரிகிறது. ஆகையால் நீயும் உண்மையை ஒப்புக் கொள். அதுவே நல்லது.

செல்லப்பா பிள்ளை:— நான் ஒப்புக்கொண்டால், எனக்கு என்ன கிடைக்கும்?

சமயசஞ்சீவி:—கிடைக்க வேண்டியதைவிடக் குறை வாகவே கிடைக்கும்.

செல்லப்பா பிள்ளை:— எனக்கு எதுவும் கிடைக்க வேண்டியதே இல்லாதபோது, அதைவிடக் குறைவென் றால் அதற்கு அர்த்தமில்லை.

சமயசஞ்சீவி:— அப்படியானால் உமக்கு தண்டனை கிடைக்காது. குற்றவாளியைப் பிடித்துக் கொடுத்த தற்கு சன்மானம் கிடைக்கும். உமக்குத் தெரிந்த உண்மையை வெளியிடும்.

செல்லப்பா பிள்ளை:—அப்படியானால் நான் உண்மை யைச் சொல்லுகிறேன். டாக்டர் கதிரேசன் பிள்ளையும், குப்புசாமியுமே அந்த வழிப்பறியை நடத்தியவர்கள்.

ஆனால் அந்த விஷயம் எனக்கும் வைத்தினாதனுக்கும் தெரியும். ஆனால் நாங்க ளிருவரும் அதில் சம்பந்தப் படவில்லை.

சமயசஞ்சீவி:— அதிருக்கட்டும். அந்த வழிப்பறி நடந்த இடத்திற்கு சமீபத்தில் நீரும் வாரப்பத்திரிகை மானேஜரும் காணப்பட வேண்டிய காரணமென்ன?

செல்லப்பா பிள்ளை:— நாங்கள் சிறிது தூரத்தில் மறைவில் நின்று, வழிப்பறி நடத்தியவர்கள் என்ன செய்கின்றனர் என்று பார்த்துக்கொண் டிருந்தோம்.

சமயசஞ்சீவி:—நீர் சொல்வது உண்மை யென்றே வைத்துக் கொள்ளுவோம். அந்த வண்டியில் ரங்கசாமியி னுடைய கைரேகை அடையாளம் எப்படி வந்தது?— என்றார்.

அதற்கு செல்லப்பா பிள்ளை மறுமொழி சொல்லா மல் சிறிது நேரம் ஏதோ யோசித்தபடி மௌனமா யிருக்க, சமயசஞ்சீவி மறுபடியும் பேசத் துடங்கி, "அதிருக்கட்டும். இன்னொரு கேள்வி. அப்போது கந்த சாமி அங்கே வரவேண்டிய காரண மென்ன? ரங்கசாமி யின் வழக்கின் விசாரணை நடந்தபோது, கந்தசாமி, தான் உங்களைப் பார்த்ததை ஏன் சொல்லவில்லை?" என்றார்.

செல்லப்பா பிள்ளை:—அதை அவனிடம்தான் கேட்க வேண்டும்.

சமயசஞ்சீவி:—அப்படியா! அவனிடம் கேட்காமல் கூட இங்கே வந்திருப்போம் என்று நினைத்தீரா? அவ னுடைய வாக்குமூலம் இதோ இருக்கிறது பாரும்— என்று கூறி தமது சட்டைப்பையில் இருந்து கந்தசாமி

யின் காகிதத்தை வெளியில் எடுத்து மேல் பாகம் முழுதையும் மறைத்துக்கொண்டு, அடிபாகத்தைக் காட்டினார். அதில் அடியிலிருந்த இரண்டொரு வரிகளும், கையெழுத்தும் காணப் பட்டன. அதைக் கண்ட செல்லப்பா பிள்ளை திடுக்கிட்டு, "உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கையில் என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்" என்றான்.

உடனே சமயசஞ்சீவி அந்தக் கடிதத்தை மடித்து சட்டைப் பையில் முன்போலவே வைத்துக்கொண்டு, "இப்போது உம் வாயால் நிஜத்தைச் சொல்லும்" என்றார்.

செல்லப்பா பிள்ளை:—நானும் டாக்டர் கதிரேசன் பிள்ளையுமே வழிப்பறி நடத்தினோம். வைத்தினாதனும் குப்புசாமியும் அங்கே வந்து மறைந்திருக்க வேண்டு மென்றும், சமயம் நேர்ந்தால் எங்களுடைய உதவிக்கு வரவேண்டு மென்றும் ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் அதை அவர்க ளிருவரும் ஒப்புக்கொள்ளவில்லை. எங்களைப் போலீஸாரிடம் ஒப்புவித்து விடுவதாக அவர்கள் பயமுறுத்தினார்கள். அதனால் நாங்கள் எங்களுடைய எண்ணத்தை மாற்றிக் கொண்டதைப்போல் அவர்களிடம் காட்டிக்கொண்டோம். நாங்கள் வழிப்பறியை நடத்திவிட்டு வந்துகொண் டிருக்கும்போது கந்தசாமியைப் பார்த்தோம்.

பராங்குச முதலியார்:— (சரேலென்று) கந்தசாமி என்பது யார்?

சமயசஞ்சீவி:— (உதட்டைக் கடித்துக்கொண்டு) தான் யாரென்பதை அவனே இந்த வாக்கு மூலத்தில்

எழுதி யிருக்கிருனே! மறுபடியும் நீர் எதற்காக அந்தத் தகவலை விசாரிக்க வேண்டும்?

விநாயகம் பிள்ளை:— எழுதித்தான் கொடுத்திருக் கிருன். இருந்தாலும் கோபாலசாமியும் தன் வாயால் இன்னெரு தடவை சொல்லட்டுமே!

சமயசஞ்சீவி:—சரி. கந்தசாமி யார் என்பது இவர் களுக்குத் தெரிய வேண்டுமாம். உம்முடைய வாயால் சொல்லும்.

செல்லப்பா பிள்ளை:—அவன்தான் வைத்திஞதன்.

சமயசஞ்சீவி:—மானேஜர் யார்?

செல்லப்பா பிள்ளை:— மானேஜர்தான் டாக்டர் கதிரேசன் பிள்ளை.

சமயசஞ்சீவி:— சரி. நீர் பங்களாவைப் பூட்டிக் கொண்டு எங்களோடு வாரும்.

செல்லப்பா பிள்ளை:-எங்கே வரச் சொல்லுகிறீர்கள்?

சமயசஞ்சீவி:—எங்களோடு வந்தால் போகுமிடம் தாஞகவே தெரிகிறது—என்ருர்.

செல்லப்பா பிள்ளை என்ற கோபாலசாமி உடனே புறப்பட்டான். அவர்களெல்லோரும் சிறிது நேரத்தில் பத்திரிகாலயத்தை யடைந்து பார்க்க, மானேஜர் காணப்படவில்லை. அவர் தம்முடைய வீட்டிலிருந்து அப்போதும் வரவில்லை யென்பது தெரிந்தது.

5

இரட்டையர் வலைகளில் திரட்டிய மீன்கள்

உடனே சமயசஞ்சீவி மற்றவர்களுடன் தெருவை யடைந்து கோபாலசாமியை நோக்கி, "இன்னொரு கேள்வி. ரங்கசாமியின் கைரேகை அடையாளங்கள் அந்த வண்டியில் எப்படி வந்தது?" என்று விசாரித்தார். கோபாலசாமி உடனே சிந்தனையி லாழ்ந்தான். அதைக் கண்ட சமயசஞ்சீவி, "நீர் இதற்குமுன் சொன்ன சங்கதிகளை நான் நம்பவில்லை. இந்த மானேஜர் டாக்டர் கதிரேசன் பிள்ளை என்றது பொய்" என்றார். அதே சமயத்தில் அவர்களுக் கருகில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மானேஜர் வந்திறங்கினார். அவரைக் கண்டதும் சமயசஞ்சீவி பராங்குச முதலியாரை நோக்கி, "இவர்தான் இந்த ஆபீஸ் மானேஜர். இவர் பழைய குற்றவாளிகள் நால்வரில் யாரென்பது தெரிகிறதா?" என்றார்.

பராங்குச முதலியார் மானேஜரை சிறிது நேரம் நன்றாகப் பார்த்தார். அதற்குள் மானேஜர் காரியாலயத்திற்குள் போய்விட்டார். பராங்குச முதலியார் சமய சஞ்சீவியை நோக்கி, "இவர் யாரென்பது தெரியவில்லையே! இது புது முகமா யிருக்கிறது. இவர் பழைய குற்றவாளிகள் நால்வரில் ஒருவ ரன்று" என்றார்.

சமயசஞ்சீவி, "கோபாலசாமியை விநாயகம் பிள்ளை ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போகட்டும். பராங்குச முதலியார் என்னோடு வரட்டும்" என்றார். அதற்கிணங்க, கோபாலசாமி ஸ்டேஷனுக்கு நடத்தப் பட்டான். முதலியாரும் சமயசஞ்சீவியும் கந்தசாமியி னுடைய வீட்டை அடைந்தனர். கதவு முன்புறம் தாளிடப்பட் டிருந்தது. சமயசஞ்சீவி கதவை இடித் தார். அப்போது அவர்க ளிருவரும் சமீபத்தில் காணப் பட்ட ஜன்னலிற் கப்பால் கந்தசாமியைப் பார்த்தனர். அவனைக் கண்ட பராங்குச முதலியார், "என்ன வைத்தி ஞதா! நீ இங்கேதா னிருக்கிறாயா?" என்றார். கந்தசாமி அப்பால் போய்விட்டான். அடுத்த நிமிஷம் வேறொரு முகம் ஜன்னலில் தெரிந்தது. அந்த முகத்தைக் கண்ட சமயசஞ்சீவி அந்த மனிதர் ரேகை நிபுணர் என்று கண்டுகொண்டார். அப்போது பராங்குச முதலியார் திடுக்கிட்டு, "ஓ! நீரும் இங்கேதா னிருக்கிறீரா? கதவைத் திறவும் ஐயா" என்றார்.

ரேகை நிபுணரும் உடனே அப்பால் சென்று மறைந்து கொண்டார். முன்புறக் கதவு திறக்கப்பட வில்லை. சமயசஞ்சீவி உடனே, "ரேகை நிபுணர் இந்த வீட்டில் என்ன செய்கிறார்? கோர்ட்டில் சாட்சி சொல் லப் போவதாகச் சொன்னாரே!" என்றார்.

பராங்குச முதலியார் திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு, "ஓகோகோ! இந்த ரேகை நிபுணர் தான் டாக்டர் கதிரேசன்போல் இருக்கிறது! முகத்தில் மீசை இருப்பதால், கொஞ்சம் வித்தியாசம் காட்டு கிறது. அடாடா! இதற்குமுன் கமிஷனருடைய ஆபீஸில் இவரை நான் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். எனக்கு பழைய நினைவு உண்டாகவில்லையே!" என்றார்.

சமயசஞ்சீவி அபாரமான வியப்போடு, "அடே! இவரா டாக்டர் கதிரேசன்" என்றார். அப்போது உட்புறத்தில் படாரென்று ஒரு வெடியோசை கேட்டது. உடனே சமயசஞ்சீவி, "உள்ளே ஏதோ உபத்திரவம் ஆரம்பமாயிருக்கிறது. இவர்கள் செய்த குற்றங்களுக்காக நாம் இவர்களைப் பிடிக்க வந்திருக்கிறோமென்று நினைத்து தற்கொலை செய்து கொள்ளுகிறார்களோ என்னவோ தெரியவில்லையே!" என்று படபடப்போடு கூற, பராங்குச முதலியார் கதவை தடதடவென்று இடித்தார். உட்புறத்தில் சாமான்கள் அப்பால் இப்பால் நகர்த்தப்பட்டது போலவும், யாரோ சண்டை செய்வது போலவும் பலவித ஓசைகள் உண்டாயின.

அவைகளைக் கேட்டுத் துடிதுடித்த இருவரும் பக்கத்திலிருந்த வீடுகளுக்குச் சென்று, கோடாலி முதலிய ஆயுதங்களைக் கொணர்ந்து தெருவுக் கதவை உடைத்துத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தனர். உட்புறத்தில் மூன்று மனிதர்கள் காணப்பட்டனர். அவர்களில் டாக்டர் சுந்தரம் பிள்ளையும் ஒருவராய் நின்றார். சமயசஞ்சீவியும் பராங்குச முதலியாரும் வந்ததைக் கண்டவுடன் ரேகை நிபுணரும், கந்தசாமியும் அங்கிருந்து ஓடினர். அவர்களைத் துரத்திக்கொண்டு ஓடஆரம்பித்த டாக்டர் சுந்தரம் பிள்ளையை சமயசஞ்சீவி சட்டென்று பிடித்துக் கொண்டு மற்ற இருவரையும் நோக்கி, "ஓடாதீர்கள்! நில்லுங்கள்! நில்லுங்கள்" என்றார்.

சுந்தரம் பிள்ளை உடனே திமிறியபடி, "என்னை விடுமையா! அவர்களிருவரும் பின்பக்கத்து வழியாய் ஓடிப்போகப் போகிறார்கள்; முதலில் அவர்களைப் பிடியுங்கள்" என்றார். சமயசஞ்சீவி, "உன்னுடைய தந்திரங்

களை நான் அறிவேன். நீயும் அவர்களுடன் ஓட நினைக்கிருய்!" என்ருர். அதற்குள் பராங்குச முதலியார் மற்றவர்களைத் துரத்திக் கொண்டு ஓடினுர். டாக்டர் சுந்தரம் பிள்ளை சமயசஞ்சீவியை நோக்கி, "நீர் யார்?" என்று வினவினுர். சமயசஞ்சீவி, "நீ நினைத்திருக்கிறபடி நான் நாராயணசாமியல்ல. நான் போலீஸ் இன்ஸ்பெக்டர். உன்னை நான் கைதியாக்கி இருக்கிறேன்" என்ருர்.

சுந்தரம் பிள்ளை:—என்னைக் கைதியாக்க உங்களால முடியுமா?

சமயசஞ்சீவி:—ஏன் முடியாது! நீர் என்ன பெரிய பயில்வானு! டில்லி பாச்சாவானுலும் தல்லிக்கு பச்சா என்பதுபோல், குற்றவாளி எவனுயிருந்தாலும், போலீஸாருக்குக் கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும்.

சுந்தரம் பிள்ளை:—உங்கள் பெயரென்ன?

சமயசஞ்சீவி:— அது உனக்குத் தெரியவேண்டிய அவசியம் என்ன? உன்னுடைய நிஜமான பெயர் இப்போது எனக்குத் தெரிய வேண்டும்.

சுந்தரம் பிள்ளை:—என் பெயரா தெரிய வேண்டும்? என்னை திகம்பர சாமியார் என்று சொல்லுவார்கள்.

சமயசஞ்சீவி:— (திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்து) ஹா! யார்! மன்னுர்குடி சாமியாரா! அடாடா! நீங்களா இப்படி வேலை செய்கிறீர்கள்! என்ன முட்டாள் காரியம் செய்து விட்டேன். (சமயசஞ்சீவி அவரை விட்டுவிடுகிருர்)

திகம்பர சாமியார்:—ஐயரவாள்! யாரும் சில சமயங்களில் தவருக நடந்துகொள்வது இயற்கையே! ஆகை

யால் கவலைப்பட வேண்டாம். நீங்கள் நல்ல புத்திமான் என்பது எனக்குத் தெரியும்; அது மற்றவர்களுக்கும் தெரியும். நீங்கள் முட்டாள் என்று சொல்லிக்கொண்டால் அதை யாரும் இலட்சியம் செய்யமாட்டார்கள். நான் இந்தக் கதிரேசனைப் பிடிக்க, பின்பக்கத்தால் வந்தேன். நீங்கள் முன் பக்கத்தால் வந்தீர்கள். அவ்வளவே வித்தியாசம், அதோ பின்னுல் சண்டை நடக்கிறது. நாமும் போவோம் வாருங்கள்'' என்ருர்.

உடனே இருவரும் பின்புறத்திற்கு ஓடினர். பின்னுலிருந்த தெருவில் பராங்குச முதலியாரும் டாக்டர் கதிரேசனும் ஒருவரையொருவர் கட்டிப் புரண்டதையும், வைத்தியனுதன் ஓடியதையும் அவர்கள் பார்த்தனர்.

எவ்வித குற்றமும் செய்யாதிருந்தால் வைத்தினுதன் ஓடமாட்டானுதலால், சமயசஞ்சீவி விரைவாக அவனைத் துடர்ந்தோடி, ''வைத்தியனுதா! ஓடாதே! நில்; ஓடினுல் ரிவால்வரால் சுட்டுவிடுவேன்'' என்று அதட்டி ரிவால்வரை கையில் எடுத்தார். வைத்தியனுதன் உடனே நின்று திரும்பிவரத் தொடங்கினுன். சமயசஞ்சீவி அவனைப் பிடித்துக் கொண்டார். அதற்குள் டாக்டர் கதிரேசன் பிள்ளையை பராங்குச முதலியாரும், சாமியாரும் பிடித்து அடக்கி வீட்டிற்குள் இழுத்து வந்தனர். அப்போது வீட்டிற்குள் திரளாக வந்திருந்த ஜனங்களைப் போலீஸார் வெளியில் அனுப்பினர். அந்த சமயத்தில் விநாயகம் பிள்ளையும் அங்கே வந்து சேர்ந்தார். அடுத்த நிமிஷம் இரண்டு கைதிகளும் விலங்கிடப் பெற்றனர்.

சாமியார்:-(சமயசஞ்சீவியை நோக்கி) நீங்கள் இதில் ஆராய்ச்சி செய்வது தெரிந்திருந்தால் நான் என்னுடைய

மற்ற வேலைகளை யெல்லாம் கெடுத்துக்கொண்டு அநாவசியமாய் இதில் பிரவேசித்திருக்க மாட்டேன். நாம் இருவரும் போட்டிக் கடைகள் வைக்கும் செட்டிகள் ஆய்விட்டோம்.

சமயசஞ்சீவி:—(சிரித்துக்கொண்டு) ஆம்; சஞ்சீவி செட்டியும், சோக்கன் செட்டியும் போட்டிக் கடைகள் வைத்தது நல்லதாய்த்தான் முடிந்தது. சொக்கன் செட்டிக்குமுன் சஞ்சீவி செட்டி எம்மாத்திரம்! எத்தனையோ தடவைகள் நீங்கள் என்னை எத்திவிட்டீர்களே! இதிலிருந்து நான் உங்களிடம் அநேக தந்திர வித்தைகளைக் கற்றுக் கொண்டேன். இந்த நன்றியை நான் மறக்க மாட்டேன். இதில் பல விஷயங்கள் எனக்கு இன்னம் தெளிவு படவில்லை. ரங்கசாமி ஆஸ்பத்திரியி லிருந்து ஏன் ஓடினு னென்பது தெரியவில்லை. அதை யெல்லாம் விளக்க வேண்டும்.

சாமியார்:—இந்தக் கதிரேசன் பிள்ளையும் இவனுடைய கூட்டாளிகளுமே ரங்கசாமியைக் கொண்டுபோய் ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டு, வழிப்பறிகள் நடத்துவ தென்றும், அப்போது அவனுடைய கை ரேகை அடையாளங்கள் பல இடங்களில் அகப்படும்படி செய்து அவனைப் போலீஸார் தேடும்படி செய்துவிட்டால் உண்மையான குற்றவாளிகளான தங்களை யாரும் தேடமாட்டார்கள் என்றும் இவர்கள் உத்தேசித்தார்கள். அப்படியே இவர்கள் ரங்கசாமியை ஆஸ்பத்திரியிலிருந்து சாமர்த்தியமாய் ஒரு மோட்டார் வண்டியில் வைத்துக்கொண்டு போனபோது எதிரில் வந்த என்னுடைய மோட்டார் வண்டியில் இவர்களுடைய வண்டி மோதியது. உடனே இவர்கள் வண்டியைவிட்

டிறங்கி ஓடிவிட்டார்கள். நான் ரங்கசாமியின் மயக்கத்தைத் தெளிய வைத்து அவருடைய வரலாற்றை விசாரித்தேன். அவர் தமது வரலாற்றை உண்மையாகவே வெளியிட்டார். அவருடைய போட்டோப் படத்தை நான் ஏற்கெனவே அவர் தண்டனை யடைந்த சமயத்தில் பத்திரிகையில் பார்த்தேனுதலால் அவருடைய பெயர் ரங்கசாமி யல்லவென்று கருதி விசாரிக்க, அவர் அதை ஒப்புக்கொண்டார். தாம் நிரபராதியென்றும், தம்மை அநியாயமாய்த் தண்டித்தார்களென்றும் அவர் முறையிடவே, எனக்கு இரக்கமுண்டாகி விட்டது. இதை ஆராயவேண்டுமென்று நான் தீர்மானித்துக் கொண்டேன். ஆகவே நான் அவரை ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டு, இந்த வேலையில் ஈடுபட்டேன். இப்போது சமீபத்தில் வழிப்பறி நடந்த சமயத்தில் மோட்டார் வண்டியில் அவருடைய கைரேகை அடையாளங்கள் இருந்த தென்பதை கமிஷனர் சொல்லத் தெரிந்து கொண்டேன். வழிப்பறி நடந்த சமயத்தில் ரங்கசாமி என்னுடிருந்திருக்கிறு ராதலால், அவருடைய கை ரேகை அடையாளங்கள் வண்டியில் காணப்பட்டன வென்பது எனக்கு அபாரமான ஆச்சரியத்தை உண்டாக்கியது. ஆகையால் நான் பலவகைகளில் முயற்சி செய்தேன்; நடு நடுவே நாமிருவரும் சந்தித்தோம். நீங்கள் டாக்டர் கதிரேசன் பிள்ளையைச் சேர்ந்தவரா யிருக்க வேண்டுமென்று எண்ணி உங்களிட மிருந்த கடிதங்களை எடுத்து சங்கதிகளைத் தெரிந்து கொண்டேன். அது நிற்க, கமிஷனர் சொன்னதிலிருந்து எனக்கு ஒரு விதத்தில் விஷயம் விளங்க வாரம்பித்தது. ரங்கசாமி சம்பந்தப்படாம லிருந்தும் அவருடைய கை ரேகைகள் அந்த இடத்தில் காணப்

பட்டதிலிருந்து, ஏதோ ஒருவித தந்திரத்தினால் யாரோ அவருடைய கைரேகை அடையாளங்களை உற்பத்தி செய்திருக்கிறார்களென்று நான் யூகித்துக் கொண்டேன். நான் சினிமா கம்பெனிக்காரனாக நடித்து குப்புசாமியிட மிருந்த பாதுகா பட்டாபிஷேகத்தின் கைப்பிரதியை சாமர்த்தியமாய் எடுத்துக் கொண்டுபோய் ரங்கசாமி யிடம் காட்ட, அது தம்முடையதுதான் என்று அவர் ஒப்புக்கொண்டார். சினிமாக் கம்பெனி சம்பந்தமாய் பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்திருப்பதையும் பார்த் தேன். உடனே நான் பத்திரிகாலயத்திற்குப் போய் சினிமாக் கம்பெனிக்காரர் என்னை அனுப்பினதாகச் சொல்லி பத்திரிகாலயத்தி லிருந்து விண்ணப்பக் கடிதங் களை வாங்கிக்கொண்டு போய்ப் பார்க்கவேண்டுமென்று முடிவு செய்துகொண்டேன். அந்த விளம்பரத்தைப் பார்த்தவுடன் அது கபடமான கருத்தோடு வெளியிடப் பட்டிருக்குமென்றும், குப்புசாமி முதலியோர் ரங்கசாமி யின் இருப்பிடத்தை யறியவே அம்மாதிரி யுக்தி செய் திருக்கிறார்களென்றும் நான் எண்ணிக் கொண்டேன். நான் கடிதங்களை வாங்கிக்கொண்டு போய்விட்டால், அதை வெளியிட்டவர்கள் என்ன செய்கிறார்கள் என் பதைப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய எண் ணம். ஆனால் நான் அம்மாதிரி செய்ய வேண்டிய அவசி யம் நேராமல் போய்விட்டது.

சமயசஞ்சீவி:—ரங்கசாமியின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று நான்தான் விளம் பரத்தை வெளியிட்டேன்.

சாமியார்:-ஓ! அப்படியா! அது என் புத்திக்கு எட்ட வில்லை.

சமயசஞ்சீவி:—நாம் எல்லோரும் மனிதர்கள் தானே! நாம் கடவுளா யிருந்தால் எல்லாம் கண்ணுடியில் தெரிவதுபோல் அப்படியே தெரியும். நீங்கள் கண்டுபிடித்த வரையில்கூட நான் கண்டுபிடிக்கவில்லை. நாங்கள் மூவர்; நீங்கள் ஏகாங்கி.

சாமியார்:—நாம் ஒருவரை யொருவர் புகழ்வதைப் பின்னுக்கு வைத்துக் கொள்வோம். இப்போது நாம் மற்ற இருவரையும் பிடிக்க வேண்டும். இவர்கள் நால்வரும் ஏற்கெனவே கள்ள நோட்டுகள் சம்பந்தமாய் தண்டனை யடைந்தவர்கள். இரண்டு வழிப்பறிகளிலும் இவர்கள் நால்வரும் சம்பந்தப் படுகிறார்கள்.

சமயசஞ்சீவி:— இவர்கள் ஏற்கெனவே தண்டனை யடைந்தது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

சாமியார்:—இதைத் தெரிந்து கொள்ளுவதற்காகத் தான் நான் கமிஷனருடைய கச்சேரிக்கு வந்திருந்தேன்.

சமயசஞ்சீவி:— இவர்கள் இதில் சம்பந்தப்படுவது தெரியாம லிருந்தபோதே இவர்களைப் பற்றி அங்கே பார்க்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு எப்படி உண்டாயிற்று?

சாமியார்:—மோட்டார் விபத்து நடந்தபோது, ரங்கசாமியோடு மோட்டாரில் வந்தவர்களில் ஒருவனை நான் நெருங்கிப் பார்த்து அவனுடைய அடையாளத்தை நன்ருய்த் தெரிந்துகொண் டிருந்தேன். பழைய கேடிகளின் படங்களில் அவனுடைய படமு மிருக்கிறதா என்று பார்த்து அதிலிருந்து அவனுடைய பெயரைத் தெரிந்து கொண்டு, அவன் சம்பந்தப்பட்ட வழக்கில், அவனோடு இன்னும் மூவர் தண்டனை யடைந்தனர் என்பதைத்

தெரிந்து கொண்டேன். ரேகை நிபுணருடைய படமும் அவைகளிலொன்று என்பதை நான் அப்போது கண்டு கொண்டேன், அவருடைய பழைய பெயர் டாக்டர் கதிரேசன் பிள்ளை என்பதையும் நான் தெரிந்து கொண்டேன். எப்படியோ இவர் தந்திரம் செய்து ரேகை நிபுணர் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டு, அதில் நிரம்பவும் தேர்ச்சி பெற்றதுடன், ரங்கசாமியின் கை ரேகையை எப்படியோ சம்பாதித்து வைத்துக் கொண்டு ஏதேனும் யுக்திகள் செய்திருக்கலாமென்ற சம்சயம் எனக்குண்டாயிற்று. அதனால் நான் ரேகை நிபுணரை கவனிக்கத் தொடங்கினேன்; பல தடவைகளில் ரேகை நிபுணர் இங்கே வந்ததை நான் பார்த்தேனாதலால், இங்கே வந்து ஆராயவேண்டுமென்று நினைத்து, வேறோர் இடத்திற்குப் போய்விட்டு இந்த வீட்டின் பின்புறத்தால் உள்ளே வந்தேன். நீங்கள் அதே சமயத்தில் முன் பக்கத்தால் வரவே, இவர்கள் உங்களைக் கண்டு பின் பக்கத்தால் வெளியில் போய்விட எண்ணி என்மேல் பாய்ந்தனர். நான் தடுத்தேன். கதிரேசன் என்னைப் பார்த்துச் சுட்டார். குறி தவறிவிட்டது. நான் சரேலென்று பாய்ந்து ரிவால்வரைப் பிடுங்கிக் கொண்டேன்.

சமயசஞ்சீவி:—அப்படியானால் தயிர்காரனைப்போல வந்ததும் நீங்கள் தானே?

சாமியார்:—ஆம். அப்படியானால் உடுக்கடித்த குறிகாரனும் நீங்களாய்தா னிருக்க வேண்டும்.

சமயசஞ்சீவி:—(வியப்போடு) அப்போது எனக்கு நீங்கள் மை போட்டுப் பார்க்கும் தந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தீர்கள்; ஆனால் நீங்கள் என்னை உள்ளே அனுப்பிவிட்டு காகிதத்தை மாற்றி வைத்துவிட்டீர்கள்.

எப்படியும் குரு குருதான்; சிஷன் சிஷன்தான். சரி இருக்கட்டும். ஐயா விநாயகம் பிள்ளை, நீர் போய் குப்புசாமியை அழைத்து வாரும். அதற்குள் நாங்கள் இந்த வீட்டை சோதனை போடுகிறோம்—என்று கூறி. விநாயகம்பிள்ளையை அனுப்பிவிட்டு, வீட்டை சோதனை செய்யத் தொடங்கினார். சில தினங்களுக்கு முன் நடந்த கொள்ளையில் சம்பந்தப்பட்ட பல பொருள்கள் அந்த வீட்டில் அகப்பட்டன. சமயசஞ்சீவி அவைகளை எடுத்து வைத்துக்கொண்டு, மேன்மேலும் ஆராய்ந்தார். ஒரு மேஜையின் சொருகு பெட்டிக்குள் ரப்பர் கையுறைகள் அநேகம் காணப்பட்டன. அவைகளைத் தவிர அதில் வேறு பொருள் எதுவும் இல்லையாதலால், அவர் சொருகு பெட்டியை முன்போல் உள்ளே தள்ளி வைத்துவிட்டு வந்து, டாக்டர் கதிரேசனை நோக்கி, "ஏனையா! நிபுணரே! ரங்கசாமியின் கைரேகை அடையாளங்களை மோட்டார் வண்டிகளில் எப்படி வரவழைத்தீர்? உண்மையைச் சொல்லும்" என்றார்.

டாக்டர் கதிரேசன்:— இத்தனை விஷயங்களையும் கண்டுபிடித்தவரான நீரே அதையும் கண்டுபிடியும். போதாக் குறைக்கு இந்தப்பண்டாரமும் உமக்குத் துணையாக வந்திருக்கிறார். இருவரும் கண்டுபிடியுங்களேன்.

சமயசஞ்சீவி:— அதைக் கண்டுபிடிக்க முடியாதென்று எண்ண வேண்டாம். ஆனால் அதை நான் கண்டுபிடிக்க இன்னும் சில நாட்கள் பிடிக்கும் அவ்வளவே. அதற்குள் நீயே சொல்லி விடலாமே என்று கேட்டேன்.

டாக்டர் கதிரேசன்:—நான் எதையும் சொல்ல முடியாது. அதை நீங்கள் என்னிடம் கற்றுக்கொள்ள விரும்

பினுல், அதற்கு லக்ஷம் ரூபாய் கிரயம் கொடுக்க வேண்டும்.

சமயசஞ்சீவி:—ஓ! இன்னம் ஆசை லக்ஷத்தில்தான் இருக்கிறது. மீசை நரைத்துப் பேச்சே கிழவா ஆசை நரைக்க வில்லையா என்பார்கள். அதுபோல், கள்ள நோட்டுகள் அடித்தீர்; வழிப்பறி நடத்தினீர்; ரேகை நிபுணர் உத்தியோகம் பார்த்தீர். அப்படியும் இன்னம் அந்த லக்ஷம் ரூபாய் ஆசை வந்து போராடுகிறது. ஜெயி லில் நுழையும்போது கூடவா பணப்பித்து—என்ருர்.

அதைக் கேட்ட சாமியார் சமயசஞ்சீவியை நோக்கி மகிழ்ச்சியோடு சிரித்து, "நன்ருய்ச் சொல்லுகிறீர்கள். இருக்கட்டும், அந்த மேஜையை நான் இன்னொரு தடவை ஆராய்ச்சி செய்து பார்க்கிறேன்" என்று கூறிய படி மேஜையையும், அதன் சொருகு பெட்டியையும் கவனிப்பதுபோல் நடித்தார். ஆனுல் கடைக்கண் பார்வையால் அவர் டாக்டருடைய முக மாறுதல்களை கவனித்தார்; தாம் மேஜையின் சொருகு பெட்டியை இழுத்த சமயத்தில் டாக்டர் தம்மை வியப்போடு பார்த்ததை கவனித்த சாமியார் சொருகுபெட்டியில் ஏதோ விசேஷ மிருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண்டு, அவருக்குத் தெரிந்த உடனே சொருகு பெட்டியை இழுத்து உள்ளே பார்த்தார். சில கையுறை கள் அதற்குள் ளிருந்ததையும், அவைகளைத்தவிர வேறு எதுவும் இல்லை யென்பதையும் கண்டு, கையுறைகளை எடுத்து மேஜையின்மேல் வைத்த பிறகு, சொருகு பெட்டியையும் வெளியில் எடுத்து மேஜையின்மேல் வைத்துவிட்டு குனிந்து பார்த்தார். சம்சயமான அம்சம் எதுவும் காணப்படவில்லை. எனவே, அவர் சொருகு

பெட்டியை முன்போல் மேஜைக்குள் சொருகித் தள்ளி விட்டார்; கையுறைகளை எடுத்து உற்றுப் பார்த்து அவைகளை மேஜையின் மேலேயே வைத்துவிட்டு டாக்டரிடம் வந்து, "ஐயா, நிபுணரே, உம்முடைய இரகசியத்தை எங்களுக்குக் கற்றுக் கொடுக்க லக்ஷம் ரூபாய் கேட்டீரே; நாம் உமக்கு இனமாகவே அதைக் கற்றுக் கொடுக்கிறேன்! தெரிந்து கொள்ளுகிறீரா?" என்றார்.

டாக்டர் கதிரேசன்:—நீர் பழம்புளி என்பது தெரிந்ததுதானே! உமக்குத் தெரியாத சங்கதிகூட உண்டா! எங்கே சொல்லும் பார்க்கலாம்.

சாமியார்:—ஓகோ, நான் பழம் புளியா! அப்படியானால் நீர் புதுப் புளியா! புதுப் புளியை நசுக்கி மர்த்தனம் செய்து கொட்டையை எடுக்க வேண்டு மல்லவா. போலீஸார் அதை அவசியம் செய்வார்கள். அவசரப் படவேண்டாம், கொஞ்சம் பொறும்—என்று கூறியபடி மேஜை னருகில் சென்று, அதன்மே லிருந்த கையுறைகளை எடுத்து வைத்துக்கொண்டு இரண்டொரு நிமிஷ நேரம் அவைகளை உற்றுப் பார்த்தார்.

டாக்டர் கதிரேசன்:—அதற்குள் பூச்சாண்டி இருக்கிறதென்று பார்க்கிறீரா? பூச்சாண்டி உம்மை விழுங்கி விடும்; கீழே வைத்துவிடும்.

சாமியார்:—உம்முடைய பூச்சியெல்லாம் இதில்தானிருக்கிறது—என்று கூறி, ஷை உறைகளில் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு, அருகி லிருந்த மைப்புட்டியி லிருந்து, மையை எடுத்து, அந்த உறையின் கட்டை விரலில் தடவி உறையைக் கையில் மாட்டிக் கொண்டு ஒரு காகிதத்தில் கட்டை விரலை வைத்தழுத்

றினர். அதில் ஒரு கட்டை விரலின் ரேகை யடையாளம் பதிந்து காணப்பட்டது. அவர் செய்ததை யெல்லாம் கவனித்துக்கொண்டே யிருந்த டாக்டர் கதிரேசன் பிள்ளை தமது முகத்தை வேறு திக்கில் திருப்பிக் கொண்டு, எதையும் கவனியாதவர்போல் நின்றார். அதைத் தெரிந்துகொண்ட சாமியார் கதிரேசனை நோக்கி ஏளனமாகப் புன்னகை செய்தபடி தமது சட்டைப் பையில் வைத்திருந்த ரங்கசாமியின் கைரேகை யடையாளத்தை எடுத்து வைத்துக்கொண்டு இரண்டையும் ஒத்திட்டுப் பார்த்தார். இரண்டும் ஒரே மாதிரியா யிருந் தன. ஒரே மனிதர் இரண்டிலும் தம்முடைய கட்டை விரலை ஒற்றியதைப் போலவே அவை காணப்பட்டன். சாமியார் சந்தோஷ முகமலர்ச்சியுடன் டாக்டரைப் பார்த்து, "ஐயா, நிபுணரே, இதோ பாரும். இந்த உறையி லிருந்து ரங்கசாமியின் கைரேகை யடையாளம் பதிந்திருக்கிறது. நிபுணரே, இந்த உறையை வைத்துக் கொண்டே நீர் இரண்டு வழிப்பறி வழக்குகளிலும், ரங்கசாமியின் கைரேகை யடையாளங்களை உற்பத்தி செய்து காட்டி இருக்கிறீர். உம்முடைய மூளைத் திறத்தை நீர் நல்ல வழியில் பயன்படுத்தி யிருந்தால் நீர் பெரும் புகழை யடைந்திருப்பீர். நீர் தண்டனை யடைந்த பிறகும் உமக்கு நல்ல உத்தியோகம் கிடைத்திருக்க, நாணயமா யிருந்து அதைக் காப்பாற்றிக் கொள் ளாமல் பழைய வழியிலேயே நீர் திரும்பியது நிரம்பவும் பரிதாபகரமான விஷயமா யிருக்கிறது. ஐயா, இப்போ தாவது உண்மையைச் சொல்லும். உமக்கு ரங்கசாமி யின் கைரேகை எங்கிருந்து கிடைத்தது? அதை ஏன் இப்படி ரப்பருக்கு மாற்றி அதை வைத்துக்கொண்டு அவரைக் கெடுக்க முயன்றீர்?" என்றார்.

டாக்டர் கதிரேசன்:—உண்மையில் நீர் இந்த இன்ஸ்பெக்டரைவிட சாமர்த்தியசாலிதான். உறையின் இரகசியத்தைக் கண்டுபிடித்த நீர் இன்னும் மற்ற விஷயங்களையும் ஏன் கண்டுபிடிக்கக்கூடாது! என்னிடம் எதையும் கேட்க வேண்டிய அவசியமே இல்லை.

சாமியார்:—சுமார் 1½ வருஷங்களுக்கு முன்னர் ரங்கசாமிக்கு மயக்க மருந்தைக் கொடுத்து அவருடைய கட்டை விரலில் மெழுகை வைத்தழுத்தி, அதில் பதிந்த ரேகை அடையாளத்தை ரப்பருக்கு மாற்றி, அந்த ரப்பர் துண்டை கையுறையில் உள்ள கட்டை விரலில் ஒட்டவைத்துக்கொண் டிருக்கிறீர்! அதை கையில் மாட்டிக்கொண்டு, கட்டை விரல் ரேகை அடையாளம் எடுத்தால், ரப்பரில் உள்ள ரங்கசாமியின் கைரேகை யடையாளம் பதியுமன்றி, கையுறையைப் போட்டுக் கொண் டிருப்பவருடைய கட்டை விரலின் ரேகை யடையாளம் விழாது. இந்தக் கையுறையை வைத்துக் கொண்டு எத்தனை தரம் வேண்டுமானாலும் அழுத்தி ஒரே மாதிரியான ரேகை அடையாளங்களை எடுக்கலாம். இதை உபயோகித்தே நீர் இரண்டு வழிப்பறிகளிலும் அடையாளங்களை எடுத்து ரங்கசாமியை சம்பந்தப் படுத்தி இருக்கிறீர்.

சமயசஞ்சீவி:-இரண்டு வழிப்பறிகளிலும் இரண்டு பேர்கள் வந்ததாகச் சொன்னார்கள். அவர்க ளிருவரும் வண்டியின் இரு பக்கங்களிலும் கையை வைத்ததாகத் தெரிகிறது. அப்படி யிருக்க, ரங்கசாமியி னுடைய கை ரேகை யடையாளங்கள் மாத்திரம் அகப்பட்டதால் ஒருவன் சாதாரணக் கையுறையையும், மற்றவன் ரங்கசாமியின் கைரேகையுட னிருக்கும் கையுறையையும்

தங்கள் கைகளில் மாட்டிக்கொண்டு வந்திருக்க வேண்டு மென்பது இப்போது நன்றாக விளங்குகிறது—என்றார்.

சாமியார்:—ததாஸ்து—என்றார்.

அதோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந் தது. கைதிக ளிருவரும், சமயசஞ்சீவியும், சாமியாரும் புறப்பட்டு நேராகக் கமிஷனருடைய கச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தனர். கைரேகை நிபுணர் அந்த ஆபீஸ் சிப்பந்தி யாதலால், அவரையும் அங்கே அழைத்துச் சென்றனர். விவரங்களைத் தெரிந்துகொண்ட கமிஷனர் சமயசஞ்சீவியை நோக்கி, "நீங்கள் குறிக்கும் நால்வரும் குற்றவாளிக ளென்று ருசுப்படுத்த சாட்சிகள் திருப்தி கரமாக இல்லையே!" என்றார்.

சாமியார்:—நான் சில வார்த்தைகள் சொல்லு கிறேன். இரண்டரை வருஷங்களுக்குமுன் மானேஜரும், கோபாலசாமியும் வழிப்பறி நடந்த இடத்திற்கு சமீபத் தில் காணப்பட்டார்கள். அது முதலாவது விஷயம். இரண்டாவது மானேஜருக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்த மென்பது தெரியவில்லை. மூன்றாவது அவர்க ளிருவரையும் வைத்தினாதன் அங்கே பார்த்ததைப் பற்றி சிலரிடம் ஏன் பிரஸ்தாபம் செய்தா னென்பது தெரியவில்லை. நான்காவது ரங்கசாமியினுடைய கை ரேகையை எடுத்து யார் கையுறை தயார் செய்தது என்பது தெரியவில்லை. ஐந்தாவது, அப்படித் தயார் செய்யவேண்டிய காரணம் என்ன என்பது தெரிய வில்லை. ஆறாவது, ரங்கசாமி என்னப் படுபவருடைய உண்மையான பெயர் அதுவேதானா, அல்லது வேறேயா என்பது தெரியவில்லை. ஏழாவது, வாரப் பத்திரிகை

யின் ஆசிரியர் ரங்கசாமி எழுதிய நாடகங்களை வாங்கி வைத்துக்கொண்டு, ஏன் பணம் கொடுக்காமல் ஏமாற்றினரென்பது விளங்கவில்லை. எட்டாவது, நான்கைந்து நாட்களுக்கு முன்பு ஆசிரியரை எதற்காகக் கொள்ளையடித்தார்கள் என்பதும், அது வேண்டுமென்றே செய்யப்பட்டதா, அல்லது தற்செயலாய் நடந்ததா என்பதும் தெரியவில்லை.

கமிஷனர்:—இத்தனை விஷயங்கள் நமக்கே இன்னும் விளங்காமலிருக்கையில், நீதிபதி இதில் எப்படித் தீர்ப்புச் சொல்வார். இவைகளை விளக்கினலன்றி நாம் இவர்கள்மேல் நடவடிக்கை எடுப்பது ஒழுங்கல்ல.

சமயசஞ்சீவி:—ஆம். முதல் விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். மானேஜரும் கோபாலசாமியும் முதல் வழிப்பறி நடந்தபோது அருகில் ஏன் காணப்பட்டனரென்றால், அவர்கள் உடந்தையா யிருந்து ஆள் பார்த்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள்.

சாமியார்:— மானேஜர் இவர்களைச் சேர்ந்தவரா யிருந்தால், இவர்களை எதற்காக அவர் காட்டிக்கொடுக்க வேண்டும்? இவர்களைக் காட்டிக் கொடுத்தால், இவர்கள் அவரையும் மாட்ட வைத்து விடுவார்க ளல்லவா? ஆகையால் அது சரியான சமாதானமல்ல. மானேஜர் இவர்களுடன் சம்பந்தப்படாத மனிதரா யிருக்கவேண்டும்; கோபாலசாமி இவர்களுடன் சம்பந்தப்பட்டிருந்தபடி, தான் சம்பந்தப் படாதவன்போல் தன்னுடைய நண்பரான மானேஜரிடம் நடித்திருக்க வேண்டும்.

சமயசஞ்சீவி:—எதற்காக அப்படி செய்தான்.

சாமியார்:—பின்னால் தன்னை யாராவது பிடித்துக் கொண்டால், தனக்கும் இவர்களுக்கும் சம்பந்த மில்லை யென்பதை மானேஜரைக் கொண்டு மெய்ப்பிக்கலாம் என்பதே கோபாலசாமியின் எண்ணம். அதற்காக மானேஜரை வேறு ஏதோ காரியமாய் வரவழைப்பது போல் அங்கே வரவழைத்திருக்க வேண்டும். வழிப்பறி நடத்தின பிறகு கோபாலசாமி மானேஜரை சந்தித் திருக்கிறான். அதற்கு ஆதார மிருக்கிறது. வழிப்பறி நடந்த சமயத்தில் வண்டியோட்டியை அவர்கள் அடிக்கவே, வண்டியோட்டிக்கு ஸ்மரணை தப்பிப் போய்விட்டது. வழிப்பறி நடந்தபோது மணி சரியாக எட்டே முக்கால்தான். வண்டியோட்டி தன் கையில் கட்டியிருந்த கடிகாரத்தில் கால் மணி முன்னுக்குத் தள்ளி 9 மணி என்று வைத்து கடிகாரம் ஓடாதபடி அதை ஒடித்துவிட்டுப் போய்விட்டார். தங்களை யாரும் பின் தொடராம லிருக்க வேண்டுமென்னும் எண்ணத் துடன் டாக்டர் கதிரேசனும் கோபாலசாமியும் ரஸ்தா வில் இரண்டு திக்குகளிலும் சென்றனர். கோபாலசாமி ரஸ்தாவின் கோடியை யடைந்து மானேஜரை சந்தித்து அப்போது மணி என்னவென்று கேட்டான். அவர் மணி எட்டே முக்கால் என்று தெரிவிக்க, அவன் தன் கையிலிருந்த ஒரு கடிகாரத்தைத் திருத்துவதுபோல பாசாங்கு செய்தான். போலீஸார் வழிப்பறி நடந்த ஸ்தலத்திற்குச் சென்று பார்த்தபோது, வண்டியோட்டி யின் கைக்கடிகாரம் 9 மணியில் நின்றுபோய், உடைந்து கிடந்த தாகையால் அதே நேரத்தில்தான் வழிப்பறி நடந்திருக்க வேண்டுமென்று போலீஸ் ரிகார்டில் குறிக் கப்பட் டிருக்கிறது. இதுவே இந்த வழக்கின் மிகவும் முக்கியமான அம்சம். பின்னால் வழிப்பறி விஷயம்

வெளியானபோது மானேஜர் கோபாலசாமியை விசாரிக்க, தான் வழிப்பறி நடந்ததற்கு கால்மணி முன்ன விருந்தே அதாவது எட்டேமுக்கால் மணியி லிருந்து ஒன்பதரை மணி வரையில் அவருடன் பேசிக்கொண் டிருக்க, 9 மணிக்கு நடந்த வழிப்பறியில் தான் எப்படி சம்பந்தப்பட் டிருக்க முடியுமென்று கேட்க, மானேஜர் அதை நம்பிவிட்டார். அதுவன்றி, கோபாலசாமிக்கும் ரங்கசாமிக்கும் விரோத மிருந்த தென்பது மானேஜருக்குத் தெரியா தாகையால், ரங்கசாமியே ஆசிரியரைத் தாக்கியதாக மானேஜர் கருதி கோபாலசாமியிடம் ஏதோ தெரிவித்தார்.

சமயசஞ்சீவி:—ஓகோ! இப்படி யெல்லாமா நடந்திருக்கிறது! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

சாமியார்:—இந்த வழக்குக் கட்டுக்களில் 9 மணி என்று குறிக்கப்பட் டிருக்கிறது. நான் தயிர்க்காரனுய் வந்து கந்தசாமி என்னும் வைத்தியுதன் கொடுத்த கடிதத்தை வாங்கிக் கொண்டுபோய்ப் பார்க்க, அதில் எட்டேமுக்கால் மணிக்கு அவர்களிருவரையும் தான் பார்த்ததாய் அவன் எழுதி யிருந்தான். முதல் வழிப்பறி நடந்த சமயத்தில் வண்டியிலிருந்தவர்கள் கோபாலசாமியின் அடையாளத்தைச் சொன்னுர்கள். ஆனல் அது யாரென்பதை அப்போது யாராலும் கண்டுபிடிக்கமுடியவில்லே. இப்போது சமீபத்தில் பழைய கட்டுகளேப் பார்த்து, கோபாலசாமியையும் பார்த்ததில், அவனே அந்த ஆசாமி என்பதை நான் கண்டு கொண்டேன், அதனுல் இவன் கடிகாரத்தின் முள்களே மாற்றி யிருக்க வேண்டுமென்னும் சந்தேகம் எனக்கு உண்டாயிற்று.

மானேஜரிடத்திலும் நான் தந்திரமாய் ஒரு கடிதம் எழுதி வாங்கி வைத்திருக்கிறேன். அதில் அவர் தம்முடைய பெயர் வடிவேலனென்றும், தமக்கும் கோபாலசாமிக்கும் சிநேக மென்றும் எழுதியிருக்கிறார்.

கமிஷனர்:—சரி; இப்போது முதல் சந்தேகம் தீர்ந்தது.

சாமியார்:—மற்ற சந்தேகங்களையும் விளங்குகிறேன். மானேஜருக்கும் கோபாலசாமிக்கும் பழக்கமுண்டென்பதைத் தவிர, மானேஜர் வழிப்பறிகளில் சம்பந்தப்படவில்லை யென்பது முதல் விஷயத்திலிருந்தே விளங்கி விட்டது. இனி மூன்றாவது விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். வைத்தியநாதன் மானேஜரையும் கோபாலசாமியையும் பார்த்தானல்லவா. தான் மானேஜருடன் பேசியபோது தங்களை வைத்தியநாதனும் பார்த்தானென்பது வெளியானால், தான் குற்றமற்றவன் என்பது அதிகமாய் உறுதிப்படுமென்று கருதி கோபாலசாமி அதைக் குறிப்பிடும்படி மானேஜரிடம் கேட்டுக் கொள்ள, அதை மானேஜர் கவனத்தில் வைத்திருந்தாராதலால், ரங்கசாமிக்கு அது வைத்தியநாதன் சொல்லியதால் தெரிந்திருக்க வேண்டும் என்று மானேஜர் தவறாக எண்ணிக் கொண்டார்.

சமயசஞ்சீவி:– அதை வைத்துக்கொண்டுதான் நான் முதலில் ரங்கசாமி என்று நடித்து படிப்படியாய் மற்ற விஷயங்களை யெல்லாம் கண்டுபிடித்தேன்.

சாமியார்:— ஆம். அதை நானும் கவனித்தேன். கோபாலசாமியும் நீங்களும் பேசியபோது நான் ஒளிந்திருந்து கவனித்தேன்; பிறகு தயிர்க்காரனாக மாறித்

துடர்ந்தேன். கந்தசாமியிடம் நீங்கள் போய்க் குறி காரன்போல் நடித்து பயமுண்டாக்கி விஷயத்தை யறிய முயன்ற காலத்தில், நான் உங்களை இன்னாரென் தெரிந்துகொள்ளவில்லை யாகையால் தந்திரமாகக் க தம் எழுதி வாங்கச் செய்து அதை எடுத்துக்கொண்டு போய்விட்டேன். நீங்களாக அவனிடம் அவன் மற்ற இருவரையும் சந்தித்ததைப் பற்றி விசாரத்தீர்களே யன்றி, அவனாக யாரிடத்திலும் அதை வெளியிடவில்லை. ஆகவே வைத்தியனுதன் காட்டிக் கொடுத்ததாகச் சொல்வது சரியல்ல. இப்போது நான்காவது விஷ யத்தை எடுத்துக் கொள்ளுவோம். ரங்கசாமியினுடைய வவதுகை கட்டை விரலின் ரேகை யடையாளத்தை இவர்கள் எப்படியோ சாமர்த்தியமாக எடுத்திருக்கின்ற னர். இவர்கள் நால்வரில் அந்த வேலையைச் செய்யக் கூடியவர் டாக்டர் கதிரேசன் பிள்ளை ஒருவர்தான் என் பது நன்ருக விளங்குகிறது. அதோடு இவர்தான் இந்தக் கையுறைகளை வாங்கியவர் என்பதை கம்பெனிக் கார னும் ரூபிப்பான். இரண்டாவது இதை இவர் தயாரித் திருப்பது பற்றி கோபாலசாமிக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிருர். அந்தக் கடிதம் என்னிட மிருக்கிறது. அதுவும் ஒழுங்கான ஆதாரம்.

சமயசஞ்சீவி:—அந்தக் கடிதத்தை நீங்கள் எப் போது எடுத்தீர்கள்? நான் அங்கே சோதனை போட்ட போது என்னிடம் ஒரு கடித மகப்பட்டது. நீங்கள் குறிக்கும் கடித மகப்படவில்லையே!

சாமியார்:—நீங்கள் அங்கே எப்போது போனீர்கள் —என்ருர்.

சமயசஞ்சீவி தாம் டெலிபோன் நம்பரை சாமர்த் தியமாய்த் தெரிந்துகொண்டு அங்கே போனதையும்,

கோபாலசாமியும் மற்றவரும் தம்மை அங்கே அடைத்து வைத்ததையும், தாம் தப்பித்து வெளியில் வந்ததையும், டாக்டர் சுந்தரம் பிள்ளை தம்மைத் துடர்ந்து வந்ததையும் கூறினர்.

உடனே சாமியார், "நீங்கள் அறைக்குள் அடைபட்டிருந்தபோது, உள்ளே வந்தவன் நான்தானே. நான் அங்கிருந்த மேஜையை ஆராய்ந்து பார்த்துவிட்டு, வெளியில் போய் கதவை மூடிய சமயத்தில் கதவை நீங்கள் உட்புறத்திலிருந்து பிடித்திழுக்கவே உள்ளே யாரோ இருக்க வேண்டுமென்று யூகித்துக்கொண்டு கதவை விட்டுவிட்டு வேகமாய் அப்பால் சென்று ஒரு மறைவான இடத்தில் நின்றுகொண்டு கவனித்தேன். நீங்கள் அந்தக் கட்டிடத்தை விட்டு வெளிப்பட்ட சமயத்தில் நான் துடர்ந்தேன். பிறகு நான் உங்களுடைய சட்டைப்பையிலிருந்து எடுத்துக்கொண்ட கடிதத்தில் பின்புறத்தில் இந்தத் தகவல் எழுதப்பட்டிருந்தது" என்றார்.

சமயசஞ்சீவி:—அடாடா! நான் ஒரு பக்கத்தைத் தான் பார்த்தேன். இன்னொரு பக்கத்தைத் திருப்பிப் பார்க்கவில்லை. திருப்பிப் பார்த்திருந்தால், இந்த சூது எனக்கும் விளங்கி யிருக்கும். என்ன முட்டாள்தனம்!

சாமியார்:—இவர்கள் ஏன் இப்படியெல்லாம் செய்தார்களென்பது ஐந்தாவது விஷயம். இவர்கள் இயற்கையிலேயே பணப்பேய் பிடித்தவர்கள்; இவர்களுடைய செலவுக்கு ஏராளமாய்ப் பணம் தேவையாயிருந்தது. அதனால், வழிப்பறி நடத்தினர். இவர்களுக்கு ஏற்கெனவே ஒரு விரோதி இருந்தார். அந்த

விரோதியைத் துலைத்துவிட எண்ணி அவரை ஷெ வழிப்பறிகளில் சம்பந்தப் படுத்தினர்.

சமயசஞ்சீவி:—ஒரே கல்லால் இரண்டு பட்சிகள் அடித்தார்கள்போ லிருக்கிறது. அப்படியானல் ரங்க சாமிதான் இவர்களுடைய விரோதிபோ லிருக்கிறது. அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது.

சாமியார்:— நம்முடைய ஆருவது சந்தேகத்தை விளக்குகிறேன். அநியாயமாய் தண்டனை யடைந்தவ ருடைய உண்மையான பெயர் ரங்கசாமி யல்ல. அவ ருடைய உண்மையான பெயர் டாக்டர் சோணசல மென்பது. அவரேதான் இவர்களை முதலில் தண்டனைக் குக் கொண்டு வந்தார். அதனுல் அவர்மேல் இவர்களுக் குப் பகை ஏழாவது சந்தேகம் பாதுகா பட்டாபிஷேக நாடகத்தை டாக்டர் சோணசலம் முதலில் குப்புசாமி யிடம் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிருர். பிறகு அவருடைய நண்பரான வாரப்பத்திரிகை யாசிரியரிடம் வேறு பிரதிகளை எடுத்துப் போகவே, குப்புசாமியுடைய தூண்டுதலினுல் அவர் பணம் கொடுக்கவில்லை. இனி எட்டாவது விஷபத்தைக் கவனிப்போம். வாரப்பத்தி ரிகை யாசிரியர் சம்பளம் வாங்கிய தினத்தில் வழிப்பறி நடத்தப்பட்ட தாகையால், இவர்கள் வேண்டுமென்றே அம்மாதிரி செய்தன ரென்பது நன்ருக விளங்குகிறது.

கமிஷனர்:-குப்புசாமியும், வைத்திஞதனும் இந்தக் கேசில் அதிகமாய் சம்பந்தப்பட வில்லைபோ லிருக் கிறதே.

சாமியார்:—இவர்க ளிருவரும் பலரை சிநேகம் செய்துகொண்டு உணவு சேகரிப்பதும், மற்ற இருவரும் கொள்ளை யடிப்பதும் வழக்கம். அதோடு குப்புசாமி

ரங்கசாமிக்குப் பாதுகா பட்டாபிஷேக நாடகத்திற்குப் பணம் கொடுக்காமலும், அவருடைய உத்தரவைப் பெறாமலும் நாடகம் ஆடியதற்கு ரங்கசாமி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறார்—என்றார்.

அதைக் கேட்ட கமிஷனரும் மற்றவர்களும் திருப்தி யடைந்தனர்.

சில தினங்களுக்குப் பிறகு அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. கோபாலசாமிக்கும், டாக்டர் கதிரேசன் பிள்ளைக்கும் கடுமையான தண்டனை கிடைத்தது. மற்ற இருவருக்கும் மும்மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது. விசாரணையின்போது கதிரேசன் பிள்ளை தம்முடைய பெயரை மாற்றி வைத்துக்கொண்டு துரைத்தனத்தாரை ஏமாற்றி உத்தியோகம் சம்பாதித்த குற்றத்திற்காக அதிக தண்டனை பெற்றார்.

சாமியாருடனிருந்த டாக்டர் சோணசலம் குப்புசாமியின்மீது ஐயாயிரம் ரூபாய்க்கு நஷ்ட ஈட்டுப் பிராது செய்ய அது அவருக்கு அநுகூலமாக முடிந்தது. அதோடு முதல் வழிப்பறி வழக்கில் அவர் அநியாயமாய் தண்டனை யநுபவித்ததற்காக துரைத்தனத்தார் அவருக்கு நஷ்ட ஈடு கொடுத்தனர். வாரப் பத்திரிகையாசிரியர் தாம் பெற்றுக்கொண்ட இரண்டு கையெழுத்துப் பிரதிகளுக்கும் கௌரதையாகப் பணம் கொடுத்துவிட்டார்.

ரங்கசாமி தமக்குக் கிடைத்த பெருந் தொகையை வைத்துக்கொண்டு மறுபடியும் ஒரு பெரிய டிஸ்பென்சரி வைத்து வைத்திய தொழிலை நடத்த ஆரம்பித்து முன் போல் டாக்டர் சோணசலமாக விளங்குகிறார். சாமியார்

தம்முடைய வேலை முடிவடைந்து போனவுடன் கமிஷனர், சமயசஞ்சீவி, டாக்டர் சோணசலம் முதலியோரிடம் விடை பெற்றுக்கொண்டு தம்முடைய ஆஸ்தானத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி தமது இரண்டு சகாக்களின் உதவியால் ஜனோபகாரமான பல அரிய காரியங்களைச் செய்து, ஜனங்களுக்கு உண்மையிலேயே அமிர்த சஞ்சீவி மருந்துபோல் உயிருக்குயிராய் இருந்து உதவிகள் புரிந்து வருகிறார்.

முற்றிற்று.